விஞ்ஞான சோஷலிச நூலகம்

# லெனின்

# ஏகாதிபத்தியம் – முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்



விஞ்ஞான சோஷலிச நூலகம்

ML 39

# வி. இ. லெனின்

# ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்[1]

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ · 1970

**В. И. ЛЕНИН**

ИМПЕРИАЛИЗМ, КАК ВЫСШАЯ СТАДИЯ КАПИТАЛИЗМА

*на тамильском языке*

## பொருளடக்கம்

முகவுரை . . . . . . . . . . . . . . 7
பிரெஞ்சு, ஜெர்மன் பதிப்புகளுக்கு எழுதப்பட்ட முகவுரை . . . . . . . . . . . . . 9
I . . . . . . . . . . . . . . . 9
II . . . . . . . . . . . . . . . 10
III . . . . . . . . . . . . . . . 12
IV . . . . . . . . . . . . . . . 13
V . . . . . . . . . . . . . . . 15
I. உற்பத்திக் குவிதலும் ஏகபோகங்களும் . . . 20
II. பாங்குகளும் அவைகள் ஆற்றும் புதிய பங்கும் . 44
III. நிதி மூலதனமும் நிதி ஆட்சிக் குழுவும் . . . 71
IV. மூலதன ஏற்றுமதி . . . . . . . . . . 95
V. முதலாளிகளின் கூட்டமைப்புக்களுக்கிடையில் உலகப் பங்கீடு . . . . . . . . . . . 104
VI. பெரு வல்லரசுகளுக்கிடையில் உலகப் பங்கீடு . 119
VII. முதலாளித்துவத்தின் ஒரு விசேஷக் கட்டம் என்ற வகையில் ஏகாதிபத்தியம் . . . . . 138
VIII. முதலாளித்துவத்தின் ஒட்டுண்ணித் தனமும் மக்குதலும் . . . . . . . . . . . 156
IX. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம் . . . 172
X. வரலாற்றில் ஏகாதிபத்தியம் வகிக்கும் இடம் 195
குறிப்புகள் . . . . . . . . . . . . 205

■
## முகவுரை
■

இங்கு வாசகர்களுக்கு அளிக்கப்படுகிற இந்தச் சிறு புத்தகம் 1916ம் ஆண்டு வசந்த காலத்தில் என்னுல் சூரிச்சில் எழுதப்பட்டது. அங்கு நான் வேலை செய்ய வேண்டியிருந்த நிலைமைகளில், பிரெஞ்சு, ஆங்கில இலக்கியங்களின் ஓரளவு பற்ருக் குறையினுலும், ருஷ்ய இலக்கியங்கள் மிக அதிகப் போதாமையினுலும் இயற்கையாகச் சிரமப்பட்டேன். ஆயினும், ஜோ. ஆ. ஹாப்ஸன் ஏகாதிபத்தியத்தைப் பற்றி எழுதிய தலையாய ஆங்கில நூலை, அது எனது அபிப்பிராயத்தின்படி எவ்வளவு கவனத்துடன் உபயோகப்படுத்தத் தகுதியுடையதோ அவ்வளவு கவனத்துடன், பயன்படுத்தினேன்.

ஜாராட்சித் தணிக்கை முறையைக் கருத்தில் கொண்டே இச் சிறு நூலை நான் எழுதினேன். ஆகவே, முழுக்க முழுக்கத் தத்துவ, குறிப்பாகப் பொருளாதார உண்மைகளைப் பகுத்தாராய்வதோடு என்னைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது மட்டுமின்றி, அரசியல் சம்பந்தமான சில அத்தியாவசியமான கருத்துக்களை மிக மிக ஜாக்கிரதையுடன், சிறு ஜாடைகள் மூலமாக, ஈசாப் பாணியில்—எல்லாப் புரட்சிவாதிகளையும், அவர்கள் ‘‘சட்டத்துக்கு உட்பட்ட’’ ஒரு நூலை எழுதுவதற்காகப் பேனவை எடுக்கும்பொழுது, எம்முறையைப் பின்பற்றும்படி ஜார் ஆட்சி நிர்ப்பந்தப்படுத்தியதோ, அந்தச் சாபக்கேடான ஈசாப் பாணியில்—உருவாக்க வேண்டியிருந்தது.

ஜார் ஆட்சித் தணிக்கையாளர் காரணமாகத் திரித்து, இரும்புக் கிடுக்கியில் வைத்து நெருக்கி, சுருக்கி எழுதப்பட்ட இச்சிறு நூலின் பகுதிகளைச் சுதந்திரமான இந்த நாட்களில் மீண்டும் படிப்பது வேதனையாக இருக்கிறது. சோஷலிஸப் புரட்சியின் முன் நேரமே ஏகாதிபத்தியம்; சோஷல்-ஷோவினிஸம் (சொல்லில் சோஷலிஸமும் செயலில் தேச வெறியும்) சோஷலிஸத்துக்குச் செய்யப்படும் பெருந் துரோகமும், பூர்ஷ்வாக்களின் அணி

யில் ஒரேயடியாக ஓடிச் சேர்ந்து கொள்வதும் ஆகும்; தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்ட இந்தப் பிளவு ஏகாதிபத்தியத்தின் புறநிலைகளுடன் இணைந்தது ஆகும் என்னும் இவற்றையும் இப்படிப்பட்ட பிற உண்மைகளையும் நான் ''அடிமை'' பாஷையில் சொல்ல வேண்டியிருந்தது; ஆகவே, இந்த விஷயத்தில் ஈடுபாடுடைய வாசகரை, 1914-1917ல் வெளிநாடுகளில் நான் எழுதிய, ஒரு புதிய பதிப்பில் சீக்கிரம் வெளிவரவிருக்கிற கட்டுரைகளைப் படிக்கும் படிக் கேட்டுக்கொள்கிறேன். பக்கங்கள் 119-20ல்* உள்ள ஒரு பகுதியில் விசேஷ கவனத்தைச் செலுத்தவேண்டும்: நாடு சேர்க்கும் பிரச்சினையைப் பற்றி முதலாளிகளும் அவர்களது பக்கத்திற்கு ஓடிவிட்ட சோஷல்-ஷோவினிஸ்டுகளும் (இவர்களைத்தான் காவுட்ஸ்கி முற்றிலும் ஒத்திசைவின்றி எதிர்க்கிறார்) எப்படி வெட்கமின்றிப் புளுகுகிறார்கள் என்பதையும் தங்களது முதலாளிகள் நாடு சேர்த்தலை அவர்கள் எப்படி வெட்கமில்லாமல் திரையிட்டு மறைக்கிறார்கள் என்பதையும் தணிக்கையாளருக்கு ஏற்புடைய முறையில் வாசகர்களுக்குக் காட்ட வேண்டி நான் ஒரு நாட்டை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டேன் — அதுதான்... ஜப்பான்! கவனத்துடன் படிக்கும் வாசகர் ஜப்பானின் இடத்தில் ருஷ்யாவையும், கொரியாவின் இடத்தில் பின்லாந்து, போலந்து, கூர்லந்து, உக்ரேனியா, கீவா, பொக்காரா, எஸ்த்லந்து அல்லது ருஷ்யர் அல்லாதார் வசிக்கும் இதரப் பிரதேசங்களையும் எளிதாக மாற்றி வைத்துக்கொள்வார்.

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகிய ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாராம்சத்தைப் பற்றிய பிரச்சினையை வாசகர்கள் புரிந்து கொள்ள இச்சிறு நூல் உதவும் என்று நம்புகிறேன்; ஏனெனில், இப்பிரச்சினையை ஆராய்ந்து தெரிந்து கொண்டாலொழிய, தற்கால யுத்தத்தையும் நவீன அரசியலையும் புரிந்து கொள்ளவும், மதிப்பிடவும் முடியாது.

ஆசிரியர்

*பெட்ரோகிராத், ஏப்ரல் 26, 1917*

---

*இப்புத்தகத்தில் 193ம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

## பிரெஞ்சு, ஜெர்மன் பதிப்புகளுக்கு எழுதப்பட்ட முகவுரை[2]

I

ருஷ்யப் பதிப்புக்கு எழுதப்பட்ட முகவுரையில் குறிப்பிடப்பட்டதைப் போல, ஜாராட்சித் தணிக்கையைக் கருத்தில் கொண்டு இச்சிறு புத்தகம் 1916ல் எழுதப்பட்டது. இப்பொழுது, இந்நூலின் வாசகம் முழுவதையும் என்னுல் திருத்த முடியவில்லை; அப்படிச் செய்வதும் ஒருவேளை உசிதமாகாது; ஏனென்ருல் மறுக்க முடியாத தொகுக்கப்பட்ட பூர்ஷ்வாப் புள்ளி விவரங்கள், எல்லா நாடுகளையும் சேர்ந்த பூர்ஷ்வா அறிஞர்களும் ஒப்புக்கொண்ட உண்மைகள் ஆகியவற்றின் அடிப்படையின்பேரில், முதல் உலக ஏகாதிபத்திய யுத்தத்திற்குச் சற்று முன்பு, இருபதாவது நூற்ருண்டின் ஆரம்பத்தில், அதனது சர்வதேச உறவுகளுடன் உலக முதலாளித்துவ அமைப்பின் தொகுப்புச் சித்திரம் ஒன்றைத் தருவதுதான் இந்நூலின் அன்றைய மிக முக்கியமான நோக்கம் ஆகும்; அதுவே இன்றைய மிக முக்கியமான நோக்கமாகவும் இருக்கிறது.

கம்யூனிஸ்டுகளுக்கு, உதாரணமாக இன்றைய அமெரிக்காவிலும் பிரான்சிலும் சமீபத்தில் கிட்டத்தட்ட எல்லாக் கம்யூனிஸ்டுகளும் மொத்தமாகக் கைது செய்யப்பட்ட பின்பும் எஞ்சியுள்ள சட்டபூர்வமான அற்ப வாய்ப்புக்களை, ''உலக ஜனநாயகம்'' பற்றிய சோஷல்-பசிபிஸ்டுகளின் கருத்துக்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் முற்றிலும் தவருன தன்மையை விளக்குவதன் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்வது சாத்தியம், இன்றியமையாதது என்பதை ஜாராட்சித் தணிக்கையின் கருத்துப்படிச் சட்டபூர்வமான இச்சிறு நூலின் உதாரணத்தைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்வது முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளிலுள்ள பல கம்யூனிஸ்டுகளுக்கு ஓரளவு பயனுள்ளதாகக் கூட

இருக்கும். தணிக்கை செய்யப்பட்ட இச்சிறு நூலில் மிக மிக அத்தியாவசியமாக என்ன சேர்க்கப்பட வேண்டுமோ, அதை இந்த முகவுரையில் அளிக்க முயற்சி செய்கிறேன்.

## II

1914-18ம் வருடத்திய யுத்தமானது இரு தரப்பாருக்கும் ஓர் ஏகாதிபத்திய (அதாவது, நாடு பிடிக்கிற, சூறையாடுகிற, கொள்ளையடிக்கிற) யுத்தம் என்பதும் அது உலகைத் துண்டுபோடுவதற்கும், காலனிகள், நிதி மூலதனத்தின் ''செல்வாக்கு மண்டலங்கள்'' முதலியவற்றைப் பங்கிடுவதற்கும் மீண்டும் பங்கிடுவதற்கும் புரியப்பட்ட யுத்தம் என்பதும் இந்நூலில் நிரூபிக்கப்படுகின்றன.

யுத்தத்தின் உண்மையான சமூக, அல்லது இன்னும் சரியாக, உண்மையான வர்க்கக் குணத்தின் நிருபணத்தை, யுத்தத்தின் ராஜதந்திர வரலாற்றில் அல்ல, ஆனால், போரிட்ட எல்லா நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் யதார்த்த நிலையைப் பகுத்து ஆராய்வதில்தான் காண முடியும் என்பது கூறாமலே விளங்கும். இந்தப் புறநிலையைத் தீட்டிக் காட்டுவதற்கு உதாரணங்களையோ, தனித்தனியான புள்ளிவிவரங்களையோ எடுத்துக் கொள்ளக் கூடாது (சமூக வாழ்வின் மிகவும் சிக்கலான நிகழ்ச்சிகளின் காரணமாக, எந்த வாதத்தையும் நிரூபிப்பதற்குப் பல உதாரணங்களையோ அல்லது தனித்தனியான புள்ளி விவரங்களையோ தேர்ந்தெடுப்பது எப்பொழுதுமே சாத்தியமாகும்); போரிட்ட எல்லா நாடுகளினுடையவும், உலகம் முழுவதினுடையவும், பொருளாதார வாழ்வின் அடிப்படைகள் சம்பந்தப்பட்ட எல்லாப் புள்ளிவிவரங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய, மறுக்க முடியாத, தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களைத்தான், 1876லும் 1914லும் உலகப் பங்கீட்டைப் பற்றியும் (அத்தியாயம் 6),1890லும் 1913லும் உலக முழுவதிலுமுள்ள ரயில் பாதைகளின் பங்கீட்டைப்பற்றியும் (அத்தியாயம் 7) வர்ணித்தபொழுது எடுத்தாண்டேன். நிலக்கரி, இரும்பு, எஃகு ஆகிய மிக முக்கிய முதலாளித்துவத் தொழில்களின் ஒட்டுமொத்தமாகும் ரயில்வேக்

கள்; அவைகளே, உலக வாணிகத்தின் வளர்ச்சியையும், பூர்ஷ்வா-ஜனநாயக நாகரிகத்தின் வளர்ச்சியையும் மிகவும் துலக்கமாகக் காட்டும் அட்டவணைகளும் அவைகளின் ஒட்டு மொத்தமும் ஆகும். ரயில்வேக்கள் பெருந்தொழில்களுடனும், ஏகபோகங்களுடனும், சின்டிகேட்டுகளுடனும், கார்ட்டல்களுடனும், ட்ரஸ்டுகளுடனும், பாங்குகளுடனும், நிதியாட்சிக் குழுவுடனும் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பது இப்புத்தகத்தின் முந்திய அத்தியாயங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. ரயில் பாதைகள் உலக நாடுகளிடையில் சமமில்லாமல் பங்கிடப்பட்டிருப்பது, அவைகளின் சமமில்லாத வளர்ச்சி ஆகியவை ஒரு வகையில் உலக ரீதியில் தற்கால ஏகபோக முதலாளித்துவத்தின் ஒட்டுமொத்தம் ஆகும். இந்த ஒட்டுமொத்தமானது அப்படிப்பட்ட ஒரு பொருளாதார அடிப்படையில், உற்பத்திச் சாதனங்களில் தனிச் சொத்துரிமை நீடிக்கும்வரை ஏகாதிபத்திய யுத்தங்கள் கண்டிப்பாகத் தவிர்க்க முடியாதவை என்பதை நிரூபிக்கிறது.

ரயில் பாதைகள் போடுவது ஒரு சர்வ சாதாரணமான, இயற்கையான, ஜனநாயகமான, கலாச்சார, நாகரீகத்தை வளர்க்கக் கூடிய ஒரு முயற்சி என்று தோன்றுகிறது: இப்படித்தான் முதலாளித்துவ அடிமை வாழ்வை அலங்காரமாக வர்ணிப்பதற்காகக் கூலி கொடுக்கப்படுகிற பூர்ஷ்வா பேராசிரியர்களும், குட்டி பூர்ஷ்வா பிலிஸ்டைன்களும் கருதுகிறார்கள். ஆனால், உண்மையில், ஆயிரக்கணக்கான பல்வேறு வலைப்பின்னல்களால், பொதுவாக உற்பத்திச் சாதனங்களிலுள்ள தனியார் சொத்துக்களுடன் இந்த ஸ்தாபனங்களைப் பிணைத்துக் கட்டுகின்ற முதலாளித்துவ நூல்கள், நூறு கோடி மக்களை (காலனிகளும், அரைக் காலனிகளும்), அதாவது ஆதீன நாடுகளில் வாழும் உலகின் பாதிக்கும் மேற்பட்ட ஜனத்தொகையினரையும், ''நாகரீகமடைந்த'' நாடுகளிலுள்ள மூலதனத்தின் கூலி அடிமைகளையும் நசுக்குவதற்கேற்ற கருவியாக ரயில் பாதைகள் போடுவதை மாற்றிவிட்டன.

தொழிலாளிகளையும் விவசாயிகளையும் ஏமாற்றுவதற்காக முதலாளிகளும் அவர்களது பத்திரிகைச் சாதனங்களும் கையாளுகின்ற மயக்குச் சொற்களாகிய, சிறு உடைமைக்காரனது உழைப்பை அடிப்படையாகக் கொண்ட தனி

யுடைமை, கட்டுப்பாடற்ற போட்டி, ஜனநாயகம் ஆகிய எல்லாம் மிகவும் இறந்த காலத்தைச் சேர்ந்தவை. உலகின் மிகப் பெரும் பகுதி மக்களை ஒரு சில ''முன்னேறிய'' நாடுகள் காலனியாட்சி ஒடுக்கு முறைக்கும் நிதித்துறை நசுக்கலுக்கும் உள்ளாக்கி வைத்துள்ள உலக அமைப்பாக முதலாளித்துவம் வளர்ந்து விட்டது. தங்களது கொள்ளைப் பொருள்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ஏற்படும் தங்களது யுத்தத்தில் அகில உலகையும் இழுத்துவிடுகின்ற, கழுத்து வரை ஆயுதந்தரித்த இரண்டு அல்லது மூன்று வலிமைமிக்க உலகக் கொள்ளைக்காரர்களுக்குள் (அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், ஜப்பான்) இந்தக் ''கொள்ளைப் பொருட்கள்'' பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றன.

## III

முடியாட்சி ஜெர்மனி திணித்த பிரேஸ்ட்-லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையும்,[3] ''ஜனநாயக''க் குடியரசுகளாகிய அமெரிக்காவும் பிரான்சும், ''சுதந்திர'' இங்கிலாந்தும் திணித்த, மேற்கூறிய உடன்படிக்கையை அடுத்த, அதைக் காட்டிலும் மிகவும் மிருகத்தனமானதும் வெறுக்கத்தக்கது மான வெர்சேல் உடன்படிக்கையும்[4] மிகவும் பயனுள்ள ஒரு தொண்டை மனித இனத்திற்குச் செய்திருக்கின்றன; அதாவது, தங்களைப் பசிபிஸ்டுகள் என்றும் சோஷலிஸ்டுகள் என்றும் கூறிக் கொண்டிருக்கின்ற, ''வில்சனிசத்''தின்[5] புகழ் பாடிய, சமாதானமும் சீர்திருத்தங்களும் ஏகாதிபத்தியத்தின்கீழ் சாத்தியமே என்று வலியுறுத்திக் கூறிய ஏகாதிபத்தியக் கூலி எழுத்தாளர்கள், பிற்போக்கான பிலிஸ்டைன்கள் ஆகியவர்களின் சுயசொரூபத்தையும் இவை வெளிப்படுத்தின.

நிதிக் கொள்ளைக்காரர்களில், அதிகக் கொள்ளைப்பொருட்களைப் பெறுவது பிரிட்டிஷ் குழுவினரா அல்லது ஜெர்மானியக் குழுவினரா என்பதை முடிவு செய்வதற்காக யுத்தம் நடந்தது; இந்த யுத்தத்தில் இறந்துபோன, முடமாகிவிட்ட கோடிக்கணக்கான மக்களும் முன்பு கூறப்பட்ட

அந்த இரண்டு ''சமாதான உடன்படிக்கைகளும்'', பூர்ஷ்வாக்களால் மிதிக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு, முட்டாள்களாக்கப்பட்டுக் கிடக்கும் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களின் கண்களை இதுவரை என்றும் காணாத அதிவேகத்துடன் திறந்து கொண்டிருக்கின்றன. இப்படியாக, யுத்தத்தின் காரணமாக எங்கும் ஏற்பட்ட நாசத்தினால் உலக முழுவதிலும் பரந்த ஒரு புரட்சி நெருக்கடி வளர்ந்து கொண்டிருக்கிறது; அதனுடைய கட்டங்கள் எவ்வளவு தான் நீண்டவையாகவும் கடினமானவையாகவும் இருப்பினும், ஒரு பாட்டாளிப் புரட்சியிலும் அதன் வெற்றியிலும் தவிர வேறு எவ்விதத்திலும் அது முற்றுப்பெற முடியாது.

1912ல் இரண்டாவது இன்டர்நேஷனல் பாஸில் அறிக்கையை வெளியிட்டது; அந்த அறிக்கை, யுத்தத்தைப் பற்றிப் பொதுவாகக் கூறாமல் (யுத்தங்கள் பலவகைப்பட்டவை, புரட்சி யுத்தங்களும் உள்ளன), 1914ல் தொடங்கிய அந்த யுத்தத்தைப் பற்றியே தனது மதிப்பீட்டைத் தந்தது; அந்த அறிக்கை, இரண்டாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த வீரர்களது சுத்த அவமானகரமான தோல்வியையும், துரோகத்தையும் வெட்ட வெளிச்சமாக்கும் ஒரு சின்னமாக எஞ்சி இருக்கிறது.

ஆகவேதான், அந்த அறிக்கையை இப்பதிப்பின் அனுபந்தமாக நான் மீண்டும் வெளியிடுகிறேன்[6]; வந்துகொண்டிருந்த இந்த யுத்தத்திற்கும் பாட்டாளிப் புரட்சிக்கும் இருந்த சம்பந்தத்தைத் துல்லியமாகவும், தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கூறுகிற அந்த அறிக்கையின் பகுதிகளை, தான் களவு செய்த இடத்தை ஒரு திருடன் தவிர்ப்பது போல, இரண்டாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த வீரர்களும் மிகவும் ஜாக்கிரதையுடன் தவிர்க்கிறார்கள் என்பதைக் கவனிக்கும்படி நான் வாசகர்களை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறேன்.

## IV

''காவுட்ஸ்கியவாதத்தை''ப் பற்றிய விமர்சனத்துக்கு இந்த நூலில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது; உலகின் எல்லா நாடுகளிலும் ''மிகவும் பிரபலமான தத்துவ

நிபுணர்களாலும்'', இரண்டாவது இன்டர்நேஷனலின் தலைவர்களாலும் (ஆஸ்திரியாவில் ஆட்டோ பௌவர் கோஷ்டியினரும் இங்கிலாந்தில் ராம்சே மக்டொனுல்டும் மற்றவர்களும், பிரான்சில் ஆல்பேர் தாமாவும், இன்னும் இதரர்களும்) மற்றும் மிகப் பல சோஷலிஸ்டுகள், சீர்திருத்தவாதிகள், பசிபிஸ்டுகள், பூர்ஷ்வா ஜனநாயகவாதிகள், மதகுருக்கள் ஆகியவர்களாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சர்வதேசத் தத்துவப் போக்காகும் இது.

இந்தத் தத்துவப் போக்கானது, ஒரு புறம் இரண்டாவது இன்டர்நேஷனலின் சிதைவினுலும் சீரழிவினுலும் உண்டானதாகவும், மறுபுறம் தங்களது வாழ்க்கையினது சகல நிலைகளின் காரணமாக பூர்ஷ்வாக்குரிய விருப்பு வெறுப்புகளுக்கும், ஜனநாயகத்தைப் பற்றிய விருப்பு வெறுப்புகளுக்கும் அடிமைகளாகி விட்ட குட்டி பூர்ஷ்வாக்களின் தத்துவத்தின் தவிர்க்க முடியாத விளைவாகவும் இருக்கிறது.

காவுட்ஸ்கியும் அவரைப் போன்றவர்களும் கொண்டிருக்கும் இத்தகைய கருத்துகள், அந்த எழுத்தாளர் பல பத்தாண்டுகளாகப் போற்றிக் காத்து வந்த, குறிப்பாக (பேர்ன்ஷ்டைன், மில்யேரான், ஹைன்ட்மன், கோம்பர்ஸ், முதலானவர்களது) சோஷலிஸ்ட் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துத் தாம் செய்து வந்த போராட்டத்தின் வாயிலாகக் காத்து வந்த, மார்க்ஸீயத்தின் அதே புரட்சிகர அடிப்படைக்கோட்பாடுகளை அறவே கைவிடுவதாகும். ஆகவே, உலக முழுவதிலும்,''காவுட்ஸ்கியர்கள்'' நடைமுறை அரசியலில் (இரண்டாவது அல்லது தரங்கெட்ட இன்டர்நேஷனல்[7] மூலம்) தீவிர சந்தர்ப்பவாதிகளுடனும், (சோஷலிஸ்டுகள் பங்கு கொள்ளும் பூர்ஷ்வாக் கூட்டு அரசாங்கங்கள் மூலம்) பூர்ஷ்வா அரசாங்கங்களுடனும் இணைந்துவிட்டது தற்செயலான சம்பவமல்ல.

பொதுவாக உலக முழுவதிலும் வளர்ந்துவரும் பாட்டாளி வர்க்கப்புரட்சி இயக்கமும், குறிப்பாகக் கம்யூனிஸ்ட் இயக்கமும் ''காவுட்ஸ்கியவாதத்''தின் தத்துவத் தவறுகளைப் பகுத்து ஆராய்வதையும் அம்பலப்படுத்துவதையும் விட்டுவிட முடியாது. எவ்வகையிலும் மார்க்ஸீயத்துடன் உறவு கொண்டாடாத, ஆயினும், காவுட்ஸ்கி கோஷ்டியினரைப்

போன்று, ஏகாதிபத்தியத்தினுடைய முரண்பாடுகளின் ஆழத்தையும், அது உண்டாக்குகின்ற தவிர்க்க முடியாத புரட்சி நெருக்கடியையும் மறைத்து மழுப்புகின்ற பொதுவாக பசிபிஸமும், ''ஜனநாயகமும்'' இன்னும் உலகமெங்கும் மிகப் பரந்திருக்கின்ற காரணத்தினுல், முக்கியமாக, இக்காரியத்தைக் கைவிட முடியாது. இப்போக்குகளை எதிர்த்துப் போரிடுவது, பூர்ஷ்வாக்களால் முட்டாள்களாக்கப்படுகின்ற சிறு உடைமைக்காரர்களையும், ஏறக்குறையக் குட்டி பூர்ஷ்வா வாழ்க்கை நிலைகளில் வைக்கப்பட்டுள்ள கோடிக் கணக்கான உழைப்பாளிகளையும், பூர்ஷ்வாக்களிடமிருந்து தன் பக்கம் கவர வேண்டிய பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலையாய கடமையாகும்.

## V

''முதலாளித்துவத்தின் ஒட்டுண்ணித் தனமும் மக்குதலும்'' என்ற தலைப்புடைய அத்தியாயம் VIII ஐப் பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டியிருக்கிறது. இந்நூலின் வாசகத்தில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருப்பது போன்று, மாஜி ''மார்க்ஸிஸ்டும்'', இப்பொழுது காவுட்ஸ்கியின் கூட்டாளியும், ''ஜெர்மானிய சுயேச்சை சோஷல்-டெமாக்ரடிக் கட்சி''யில்[8] பூர்ஷ்வா, சீர்திருத்தக் கொள்கையின் பிரதானப் பிரதிநிதிகளில் ஒருவருமான ஹில்பர்டிங், வெளிப்படையான பசிபிஸ்டும் சீர்திருத்தவாதியுமான இங்கிலீஷ்காரர் ஹாப்ஸனுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, ஓரடி பின்னுல் சென்றிருக்கிருர். தொழிலாளர் இயக்கம் அனைத்தும் சர்வதேச ரீதியில் பிளவுண்டிருப்பது (இரண்டாவது, மூன்ருவது என்று இரண்டு இன்டர்நேஷனல்கள் இருப்பதிலிருந்தே) இன்று முற்றிலும் புலனுகிறது. இவ்விரண்டு போக்குகளுக்கிடையிலும் ஆயுதமேந்திய போராட்டமும் உள்நாட்டுப் போரும் நடந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மையும் புலனுகின்றது: ருஷ்யாவில் போல்ஷெவிக்குகளுக்கு எதிராக, கோல்ச்சாக்குக்கும் டெனீகினுக்கும் மென்ஷெவிக்குகளும் ''சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும்'' தருகின்ற உதவியும்; ஜெர்மனியில் ஸ்பார்ட்டாகிஸ்டுகளுக்கு[9] எதிராக

ஷைடெமான்னியர்களும், நோஸ்கேயும் அவரது சகாக்களும் முதலாளிகளுடன் இணைந்து நடத்திய சண்டையும்; பின்லாந்து, போலந்து, ஹங்கேரி முதலிய இடங்களிலும் இதே போன்று சண்டைகள் நடந்திருப்பதும் இதற்கு உதாரணங்கள். இந்த உலக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினுடைய பொருளாதார அடிப்படை என்ன?

முதலாளித்துவ வளர்ச்சியின் மிக உயர்ந்த சரித்திரக் கட்டத்தின், அதாவது ஏகாதிபத்தியத்தின், குணும்சங்களாகிய ஒட்டுண்ணித்தனமும் சீரழிவுமே சரியாக அந்த அடிப்படையாகும். இந்நூலில் நிரூபிக்கப்பட்டுள்ளதுபோல ''கூப்பன் கத்தரித்தே'' உலகமனைத்தையும் கொள்ளையடிக்கின்ற, விரல்விட்டு எண்ணக்கூடிய (பூமியில் வாழும் மக்களில் பத்தில் ஒன்றுக்கும் குறைந்தவர்கள்; மிகமிகத் ''தாராளமான'', மிகைப்படுத்தப்பட்ட கணக்கின்படி ஐந்தில் ஒன்றுக்கும் குறைந்தவர்கள்) ஒரு சில அதி பணக்கார, பலம் படைத்த நாடுகளை முதலாளித்துவம் இப்போது தனியாகப் பிரித்துக் காட்டுகிறது. போருக்கு முந்திய பூர்ஷ்வாப் புள்ளி விவரங்களின்படி முதலின் ஏற்றுமதியானது போருக்கு முந்திய விலைகளின்படி ஆண்டுதோறும் 800—1,000 கோடி பிராங்கு வரும்படியை அளித்தது. இப்பொழுது, நிச்சயமாக, அது மேலும் அதிக வரும்படியை அளிக்கிறது.

தெளிவாக, இத்தகைய ஏராளமான உபரிலாபங்களைக் கொண்டு (தங்களது ''சொந்த'' நாட்டுத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிவதன் மூலம் முதலாளிகட்குக் கிடைக்கின்ற லாபங்களுக்கு இவை உபரியானவையாதலால்) தொழிலாளர் தலைவர்களுக்கும், தொழிலாளிகளிடையிலேயே வக்கும் வசதியும் படைத்தவர்களில் மேல்தட்டில் உள்ளவர்களுக்கும் கைக்கூலி கொடுப்பது சாத்தியமாகிறது. அவர்களுக்கு ''முன்னேறிய'' நாடுகளின் முதலாளிகள் கைக்கூலி கொடுக்கிறார்கள்; அவர்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் திருட்டுத்தனமாகவும், ஆயிரம் வெவ்வேறு வழிகளில் அவர்களுக்குக் கைக்கூலி கொடுக்கிறார்கள்.

தங்களது வாழ்க்கை முறையிலும், சம்பாதித்தியத்தின் அளவிலும், கண்ணோட்டம் முழுவதிலும் குறுகிய நோக்

குள்ள பூர்ஷ்வா மனப்பான்மையைக் கொண்ட தொழிலாளர்களின் இந்தப் பகுதியினர், அல்லது ''தொழிலாளிகளுக்குள்ளேயே வக்கும் வசதியும் படைத்தவர்கள்'' தான் இரண்டாவது இன்டர்நேஷனலின் பிரதானத் தூண்களாவர்; மேலும், அவர்களே, தற்காலத்தில் பூர்ஷ்வாக்களின் தலையாய சமூகத் தூண்கள் (ராணுவத் தூண்கள் அல்ல) ஆவர். ஏனெனில், அவர்கள்தாம் தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் பூர்ஷ்வாக்களது உண்மையான கையாட்களாகவும் முதலாளித்துவ வர்க்கத்தின் தொழிலாளித் துணையாட்களாகவும் (labor lieutenants of the capitalist class) சீர்திருத்தவாதமும், ஷோவினிஸமும் பாய்வதற்கு ஏற்ற உண்மையான கால்வாய்களாகவும் இருக்கின்றனர். பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வாக்களுக்கும் இடையில் நடக்கிற உள்நாட்டுப் போரில், அவர்கள் பெருந்தொகையாக, தவருமல் பூர்ஷ்வாக்களின் பக்கத்திலேயே, ''கம்யூன்காரர்களை'' எதிர்த்துப் போரிடுகின்ற ''வெர்சேலர்கள்''[10] பக்கத்திலேயே சேருகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியின் பொருளாதார வேர்களைத் தெரிந்து கொண்டாலொழிய, இதன் அரசியல், சமுதாய முக்கியத்துவத்தை மதிப்பிட்டாலொழிய, கம்யூனிஸ்ட் இயக்கம், வரவிருக்கிற சமூகப் புரட்சி இவற்றின் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விஷயத்தில் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது.

பாட்டாளி வர்க்கச் சமூகப் புரட்சியின் முன்னேரமே ஏகாதிபத்தியமாகும். 1917க்குப் பின் உலக ரீதியில் இது அழுத்தந்திருத்தமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது.

நி. லெனின்

ஜூலை 6, 1920

கடந்த பதினைந்து, இருபது ஆண்டுகளாக, குறிப்பாக ஸ்பானிஷ்-அமெரிக்க யுத்தத்துக்கும் (1898), ஆங்கிலேய-போயர் யுத்தத்துக்கும் (1899-1902) பிறகு, பூமியின் இரு கோளார்த்தங்களிலும் பொருளாதார இலக்கியம், அரசியல் இலக்கியமுங்கூட, இன்றைய காலக் கட்டத்தை வருணிப்பதற்கு ''ஏகாதிபத்தியம்'' என்ற சொல்லை மேலும் மேலும் அடிக்கடி கையாண்டு வந்திருக்கிறது. ஆங்கிலேயப் பொருளாதார எழுத்தாளரான ஜே. ஆ. ஹாப்ஸன் எழுதிய ''ஏகாதிபத்தியம்'' என்ற புத்தகம் 1902ல் லண்டனிலும் நியூயார்க்கிலும் பிரசுரிக்கப்பட்டது. மாஜி மார்க்ஸீயவாதியாகிய கா.காவுட்ஸ்கியின் தற்கால நோக்கைச் சாராம்சத்தில் ஒத்திருக்கின்ற, பூர்ஷ்வா சோஷல்-சீர்திருத்தவாத, பசிபிச நோக்கு கொண்ட இந்நூலாசிரியர், ஏகாதிபத்தியத்தின் அடிப்படைப் பொருளாதார, அரசியல் சிறப்பியல்புகளைப் பற்றிய ஒரு நல்ல முழுமையான வர்ணனையைத் தந்தார். ஆஸ்திரிய மார்க்ஸீயவாதி ருடோல்ப் ஹில்பர்டிங் என்பவரின் ''நிதி மூலதனம்'' என்ற நூல் (ருஷ்ய மொழி பெயர்ப்பு, மாஸ்கோ, 1912) 1910ல் வியன்னுவில் வெளியாயிற்று. பணத்தைப் பற்றிய தத்துவத்தில் இந்நூலாசிரியர் தவறு செய்திருப்பினும், சந்தர்ப்பவாதத்துடன் மார்க்ஸீயத்தைச் சமரசப்படுத்தும் போக்கு அவரிடம் ஓரளவு இருந்த போதிலும், அவரது நூல் தனது உப தலைப்பாகிய ''முதலாளித்துவ வளர்ச்சியின் நவீன கட்டம்'' என்பதைப் பற்றிய ஒரு மிகவும் சிறந்த தத்துவ ஆராய்ச்சியைத் தருகிறது. சென்ற சில ஆண்டுகளாக, குறிப்பாக, சஞ்சிகைகளிலும் செய்தித்தாள்களிலும் வெளியான மிக ஏராளமான கட்டுரைகளிலும், தீர்மானங்களிலும், உதாரணமாக, 1912ம் ஆண்டில் இலையுதிர் காலத்தில் ஹெம்னிட்சிலும், பாஸிலிலும் நடந்த காங்கிரஸ்களில் இயற்றப்பட்ட தீர்மானங்களிலும்,

ஏகாதிபத்தியத்தைப் பற்றி நிறையக் கூறப்பட்டிருக்கின்றது; உண்மையில், அவைகளில் கூறப்பட்ட எதுவும் இந்த இரண்டு ஆசிரியர்களாலும் எடுத்து விளக்கப்பட்ட, அல்லது, இன்னும் பொருத்தமாகக் கூறப்போனால், தொகுத்துரைக்கப் பட்ட கருத்துக்களைவிடக் கொஞ்சமும் மேலே செல்ல வில்லை....

ஏகாதிபத்தியத்தின் அடிப்படையான பொருளாதாரச் சிறப்பியல்புகளுக்கிடையில் உள்ள உறவுகளையும் பரஸ்பரத் தொடர்பையும் சுருக்கமாகவும், முடிந்த அளவு எளிதில் விளங்கும் வகையிலும் காட்ட நாம் பிறகு முயற்சி செய்வோம். இப்பிரச்சினையின் பொருளாதார சம்பந்தமில்லாத அம்சங்களைப்பற்றி, அவை எவ்வளவு தான் கவனத்திற்கு உரியவையாக இருப்பினும், நம்மால் கவனிக்க இயலாது. எல்லா வாசகர்களுக்கும் சுவைப்பட மாட்டாத இலக்கிய மூலங்களையும், மற்றக் குறிப்புக்களையும் இந்நூலின் கடைசியில் கொடுத்திருக்கிறோம்.[11]

# I. உற்பத்திக் குவிதலும் ஏகபோகங்களும்

தொழிலின் ஏராளமான வளர்ச்சியும், என்றும் வளர்ந்து கொண்டேயிருக்கின்ற ஸ்தாபனங்களில் உற்பத்திக் குவிதலின் குறிப்பிடத்தக்க துரிதமான போக்கும் முதலாளித்துவத்தின் மிகமிக முக்கியமான குணும்சங்களில் ஒன்ருகும். உற்பத்தியைப் பற்றிய தற்காலக் கணக்கெடுப்புகள் இந்தப் போக்கைப் பற்றிய மிகவும் முழுமையானவையும், மிகவும் துல்லியமானவையுமான புள்ளி விவரங்களைத் தருகின்றன.

உதாரணமாக, ஜெர்மனியில், ஒவ்வொரு 1,000 தொழில் ஸ்தாபனங்களிலும், பெரும் ஸ்தாபனங்கள், அதாவது 50க்கு மேற்பட்ட தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்தியுள்ளவை, 1882ல் மூன்ருகவும், 1895ல் ஆருகவும், 1907ல் ஒன்பதாகவும் இருந்தன. ஒவ்வொரு 100 தொழிலாளிகளிலும், இந்த ஸ்தாபனங்களில் 22, 30, 37 தொழிலாளிகள் மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் முறையே வேலையில் அமர்த்தப்பட்டிருந்தனர். பெரும் தொழிலகங்களில் உழைப்பின் உற்பத்தித் திறன் மிக உயர்வாக இருப்பதனுல், உற்பத்திக் குவியல் தொழிலாளிகளின் குவியலைவிட மிகமிக அதிகமாக இருக்கிறது. நீராவி எஞ்சின்களைப் பற்றியும் மின்சார மோட்டார்களைப் பற்றியும் உள்ள புள்ளிவிவரங்கள் இதைக் காண்பிக்கின்றன. ஜெர்மனியில் தொழிலை, அச்சொல்லின் மிக விரிந்த பொருளில் எடுத்துக்கொண்டால்—அதாவது வாணிகம், போக்குவரத்து முதலியவைகளையும் உள்ளிட்ட தொழிலை எடுத்துக்கொண்டால்—கீழ்க் காணப்படும் ஒரு சித்திரம் நமக்குக் கிடைக்கிறது. மொத்தம் 32, 65, 623 ஸ்தாபனங்களில் பெரும் ஸ்தாபனங்கள் 30, 588, அதாவது 0.9 சதவிகிதம் ஆகும். மொத்தம் 144 லட்சம் தொழிலாளர்களில் இந்த ஸ்தாபனங்கள் 57 லட்சம் பேர்களை, அதாவது 39.4 சதவிகிதத்தினரை வேலையில் அமர்த்தியுள்ளன; மொத்

தம் 88 லட்சம் நீராவிக் குதிரைத் திறனில் இவை 66 லட்சம் குதிரைத் திறனே, அதாவது 75.3 சதவிகிதத்தை உபயோகிக்கின்றன; மொத்தம் 15 லட்சம் கிலோவாட் மின்திறனில் 12 லட்சம் கிலோவாட்களை, அதாவது 77.2 சதவிகிதத்தைப் பயன்படுத்துகின்றன.

மொத்த ஸ்தாபனங்களின் எண்ணிக்கையில் நூறில் ஒன்றுக்கும் குறைந்தவை, மொத்த நீராவி, மின்திறனில் முக்காலுக்கும் மேற்பட்டதை உபயோகிக்கின்றன! மொத்தத்தில் 91 சதவிகிதமாகிய இருபத்தொன்பது லட்சத்து எழுபதாயிரம் சிறு தொழிலகங்கள் (ஒவ்வொன்றும் ஐந்து தொழிலாளர்கள் வரை கொண்டவை) மொத்த நீராவி, மின்திறனில் 7 சதவிகிதத்தை மட்டுமே உபயோகிக்கின்றன! சில பத்தாயிரக் கணக்கான மிகப் பெரிய ஸ்தாபனங்களே சர்வ முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன; பத்து லட்சக் கணக்கான சிறு ஸ்தாபனங்கள் ஒரு முக்கியத்துவமும் இன்றிப் போய்விட்டன.

1907ல், ஜெர்மனியில் ஒவ்வொன்றும் ஆயிரம், அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளிகளை அமர்த்தியுள்ள 586 ஸ்தாபனங்கள் இருந்தன. தொழிலில் வேலைக்கமர்ந்திருந்த ஆட்களின் மொத்த எண்ணிக்கையில் கிட்டத்தட்டப் பத்தில் ஒரு பங்கினரையும் (13,80,000) மொத்த நீராவி, மின்திறனில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கையும் (32 சதவிகிதம்) அவை பயன்படுத்தின.* நாம் பிறகு பார்க்கப் போவதைப் போன்று, விரல் விட்டு எண்ணக் கூடிய மிகப் பெரிய ஸ்தாபனங்களின் இந்த மேல்நிலையை நிதி மூலதனமும் பாங்குகளும் உண்மையில் மேலும் அதிக வன்மையுடையதாக ஆக்குகின்றன; அதாவது, லட்சக்கணக்கான சிறிய, நடுத்தரமான ''எஜமானர்களும்'' இன்னும் சில பெரிய ''எஜமானர்களும்'' சில நூறு நிதி மூலதனக் கோடீஸ்வரர்களுக்கு உண்மையில் முழுதும் அடங்கிய நிலையில் இருக்கிறார்கள்.

---

* புள்ளிவிவரங்கள் கீழ்க்கண்டதிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன: *Annalen des deutschen Reichs*, 1911, Zahn (''ஜெர்மன் அரசின் வரலாற்றுக் குறிப்புகள்'', 1911, த்ஸான்.—ப-ர்.)

தற்கால முதலாளித்துவத்தின் கீழுள்ள இன்னொரு முன்னேறிய நாடாகிய அமெரிக்க ஐக்கிய நாடுகளில், உற்பத்திக் குவிதலின் வளர்ச்சி இன்னும் அதிகமாக இருக்கிறது. இங்கு புள்ளிவிவர நூல் தொழிலை, அதன் குறுகிய பொருளில், பிரித்து அவைகளது ஆண்டு உற்பத்தியின் மதிப்புப்படி ஸ்தாபனங்களை வகைப்படுத்துகிறது. 1904ல், பத்துலட்சம் டாலர், அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தியைக் கொண்ட பெரும் ஸ்தாபனங்கள் எண்ணிக்கையில் 1,900 இருந்தன (மொத்தம் 2,16,180ல் இது 0.9 சதவிகிதமாகும்); இவை 14 லட்சம் தொழிலாளிகளை அமர்த்தியிருந்தன (மொத்தம் 55 லட்சத்தில் இது 25.6 சதவிகிதமாகும்); அவைகளின் உற்பத்தி 560 கோடி டாலராக இருந்தது (மொத்த உற்பத்தியாகிய 1,480 கோடி டாலரில் இது 38 சதவிகிதமாகும்). ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1909ல், அவைகளின் புள்ளி விவரங்கள் முறையே கீழ்க்கண்டவாறு இருந்தன: 3,060 ஸ்தாபனங்கள் (மொத்தம் 2,68,491ல் இது 1.1 சதவிகிதம்); வேலை செய்த தொழிலாளிகள் 20 லட்சம் (மொத்தம் 66 லட்சத்தில் இது 30.5 சதவிகிதம்); உற்பத்தி 900 கோடி டாலர் (மொத்தம் 2,070 கோடி டாலரில் இது 43.8 சதவிகிதம்).*

அந்நாட்டிலுள்ள எல்லா ஸ்தாபனங்களின் மொத்த உற்பத்தியில் ஏறக்குறையப் பாதியை, அவைகளில் நூறில் ஒரு பங்கு ஸ்தாபனங்கள் செய்தன! இந்த 3,000 ராக்ஷஸ ஸ்தாபனங்கள், 258 தொழிற் கிளைகளை உள்ளடக்கியிருந்தன. தனது வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் குவிதலே நேராக ஏகபோகத்தில் கொண்டு விடும் போலிருக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஏனெனில், சில பத்து ராக்ஷஸ ஸ்தாபனங்கள் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொள்வது எளிது; அதே சமயத்தில், அடுத்த பக்கம், வியாபாரப் போட்டிக்குத் தடை, ஏக போகத்திற்குக் கொண்டுசெல்லும் போக்கு, ஸ்தாபனங்களின் ராக்ஷஸ அளவிலிருந்தே தோன்றுகிறது. போட்டியா

---

* *Statistical Abstract of the United States*, 1912, p. 202 (''அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவரச் சுருக்கம்'', 1912, பக்கம் 202.—ப-ர்.).

னது ஏகபோகமாக மாறுவது, நவீன முதலாளித்துவப் பொரு ளாதாரத்தின் மிகமிக முக்கியமான ஒரே நிகழ்ச்சியாக இல்லாவிட்டாலும், யாவற்றிலும் முக்கியமான நிகழ்ச்சி களில் ஒன்ருகும்; ஆகவே, இதைப்பற்றி இன்னும் விரிவாக நாம் கவனிக்க வேண்டும். ஆனல் தோன்றக் கூடிய ஒரு தவருன எண்ணத்தை நாம் முதலாவதாகக் களைய வேண்டும்.

250 தொழிற் கிளைகளில் 3,000 ராக்ஷஸத் தொழில் நிலையங்கள் உள்ளன என்று அமெரிக்கப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து, ஒவ்வொரு தொழிற்கிளையிலும் ஏதோ ஒரு டஜன் மிகப் பெரிய ஸ்தாபனங்கள்தான் இருக் கின்றன என்ற எண்ணம் தோன்றுகிறது.

ஆனல் உண்மை இதுவல்ல. பெரும் ஸ்தாபனங்கள் ஒவ்வொரு தொழிற்கிளையிலும் இருக்கவில்லை; மேலும், அதனது வளர்ச்சியின் உச்ச கட்டத்தில் முதலாளித்துவத் தின் மிக முக்கியமான அம்சமானது உற்பத்தியின் கூட் டமைப்பு என்று அழைக்கப்படுகிற ஒன்ருகும்: அதாவது, கச்சாப் பொருள்களைப் பதன்படுத்துதலில் அடுத்தடுத்த கட்டங்க ளைச் செய்கின்ற (உதாரணமாக, இரும்புக் கனியை உருக்கி வார்ப்பு இரும்பாகச் செய்தல், வார்ப்பு இரும்பை எஃகாக மாற்றுதல், பிறகு, ஒருவேளை, எஃகுச் சாமான்கள் செய்தல்), அல்லது ஒன்றுக்கொன்று துணையாக அமைந்த (உதாரண மாக, கழிபொருள்களை அல்லது உப-பொருள்களைப் பயன் படுத்துதல், பார்சல் செய்யும் சாமான்களை உற்பத்தி செய் தல் முதலியன) வேறு வேருன தொழிற்கிளைகளை ஒரே ஸ்தா பனத்தில் கூட்டுதலாகும்.

''கூட்டமைப்பானது வர்த்தகத்தின் எழுச்சி வீழ்ச்சி களைச் சமப்படுத்துகிறது; ஆகையால், கூட்டமைந்த தொ ழில் நிலையங்களுக்கு மேலும் நிலையான லாப விகிதத்தை உத்தரவாதம் செய்கிறது. இரண்டாவதாக, வர்த்தகத்தை வேண்டாமற்செய்யும் நிலைக்கு அது இட்டுச் செல்கிறது. மூன்ருவதாக, தொழில் நுணுக்க அபிவிருத்திகளையும், விளை வாக, 'தூய' (அதாவது கூட்டமைப்பற்ற) தொழில் நிலை யங்களுக்குக் கிடைப்பதைவிட மேற்பட்ட உபரி லாபங்களைப் பெறுதலையும் அது சாத்தியமாக்குகிறது. நான்காவதாக,

'தூய' ஸ்தாபனங்களின் நிலையுடன் ஒப்பிடும்பொழுது, கூட்டமைந்த தொழில் நிலையங்களின் நிலையை அது பலப்படுத்துகிறது; கடுமையான பொருளாதார மந்தம் (தொழில்களில் இடர்ப்பாடுகள், நெருக்கடிகள்) ஏற்படும் காலங்களில் சச்சாப் பொருள்களின் விலைச் சரிவு, செய்பொருட்களின் விலைச் சரிவை விடக் குறைவாயிருக்கிறபொழுது, போட்டிப்போரில் கூட்டமைந்த ஸ்தாபனங்களின் நிலையைப் பலப்படுத்துகிறது''* என்று ஹில்பர்டிங் எழுதுகிறார்.

ஜெர்மானிய இரும்பு, எஃகுத் தொழிலில் உள்ள ''கலந்த'', அதாவது கூட்டமைந்த, தொழில் நிலையங்களைப் பற்றி விசேஷமான நூல் ஒன்று எழுதிய ஹெய்மன் என்ற ஜெர்மன் முதலாளித்துவப் பொருளாதார எழுத்தாளர் கூறுகிறார்: ''தூய தொழில் நிலையங்கள் அழிந்து போகின்றன; அவை, கச்சாப் பொருள்களின் உயர்ந்த விலைக்கும், தயாரித்து முடிந்த பொருள்களின் குறைந்த விலைக்கும் இடையில் நசுக்கப்படுகின்றன.'' ஆகவே, நமக்குக் கீழ்க்கண்ட சித்திரம் கிடைக்கிறது:

'' ஆண்டு தோறும் பத்து லட்சக் கணக்கான டன்கள் உற்பத்தி செய்கிற, தங்களது நிலக்கரி சின்டிகேட்டில் ஸ்தாபன ரீதியில் பலமாக அமைக்கப்பட்ட பெரிய நிலக்கரிக் கம்பெனிகள் ஒரு பக்கமும், அவற்றுடன் நெருக்கமாக இணைக்கப்பட்ட, தங்களுக்குச் சொந்தமான எஃகு சின்டிகேட்டைக் கொண்ட பெரிய எஃகுத் தொழில் நிலையங்கள் ஒரு பக்கம் அங்கு இருக்கின்றன. ஆண்டு தோறும் 4 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்கிற, பிரம்மாண்டமான அளவு கனியத்தையும் நிலக்கரியையும் வெட்டி எடுக்கிற, எஃகுப் பொருள்களைத் தயாரிக்கிற, கம்பெனிக்குச் சொந்தமான வீடுகளில் வசிக்கும் 10,000 தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்தியுள்ள, தங்களுக்குச் சொந்தமான ரயில்வேக்களையும், துறைமுகங்களையும் சில சமயங்களில் பெற்றிருக்கிற இந்த ராக்ஷஸ ஸ்தாபனங்கள், ஜெர்மானிய இரும்பு, எஃகுத் தொழிலின் எடுத்துக்காட்டான மாதிரிகளாகும். குவிதலா

---

*''நிதி மூலதனம்'', ருஷ்ய மொழிபெயர்ப்பு, பக்கங்கள் 286-287.

னது மேலும்மேலும் முன்னே செல்கிறது. தனித்தனி ஸ்தாபனங்கள் மேலும் மேலும் பெரியவையாக வளர்கின்றன; ஒன்று அல்லது பல்வேறு தொழில் கிளைகளிலுள்ள, எண்ணிக்கையில் எப்பொழுதும் அதிகமாகிக் கொண்டே இருக்கின்ற ஸ்தாபனங்கள், அரை டஜன் பெரிய பெர்லின் பாங்குகளால் தாங்கப்பட்டும், செலுத்தப்பட்டும் ராக்ஷஸ ஸ்தாபனங்களில் ஒன்று சேர்கின்றன. ஜெர்மானியச் சுரங்கத் தொழில் விஷயத்தில் குவிதலைப்பற்றிய கார்ல் மார்க்ஸின் போதனைகள் சரி என்பது திட்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது; காப்பு வரிகளாலும் சரக்குகளின் சத்தக் கூலிகளாலும் பாதுகாக்கப்படுகிற தொழிலையுடைய ஒரு நாட்டிற்கு இது பொருந்துகின்றது என்பது உண்மையே. ஜெர்மானியச் சுரங்கத் தொழில் பறிமுதல் செய்யப்படுவதற்கு ஏற்றதாகக் கனிந்திருக்கிறது.''*

விதிவிலக்காக மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட, ஒரு முதலாளித்துவப் பொருளாதார எழுத்தாளர் இத்தகைய முடிவுக்கு வர நேர்ந்திருக்கிறது. ஜெர்மனியில் தொழில்கள் உயர்ந்த காப்பு வரிகளால் பாதுகாக்கப்படுவதால் அந்நாட்டை ஒரு தனிப்பட்ட வகையில் அவர் வைக்கிறார்போல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆனால், இச்சூழ்நிலை குவிதலையும் தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டமைப்புக்கள், கார்ட்டல்கள், சின்டிகேட்டுகள் முதலியவை அமைக்கப்படுவதையும் துரிதப்படுத்தவே முடியும். கட்டுப்பாடற்ற வர்த்தகத்தைக் கொண்ட இங்கிலாந்தில் கூட குவிதல் ஏகபோகத்திற்கே இட்டுச் செல்கிறது என்பது மிக மிக முக்கியமாகும்; ஆனால், அங்கு அது சிறிது பிந்தியும், ஒருவேளை வேறு உருவத்திலும் அப்படிச் செய்கிறது. பேராசிரியர் ஹெர்மான் லெவி, பிரிட்டிஷ் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய ''ஏகபோகங்களும் கார்ட்டல்களும் ட்ரஸ்டுகளும்''

---

* Hans Gideon Heymann, *Die gemischten Werke im deutschen Grosseisengewerbe*, Stuttgart 1904 (SS.256,278-279)(ஹன்ஸ் கிடியோன் ஹெய்மன், ''ஜெர்மன் பெரிய இரும்புத் தொழிலில் கூட்டமைந்த தொழில் நிலையங்கள்'', ஷ்டுட்கார்ட், 1904 (பக்கங்கள் 256, 278-279.)—ப-ர்.)

என்ற விசேஷ ஆராய்ச்சி நூலில் கீழ்க்கண்டவாறு எழுது கிருர்:

''கிரேட்பிரிட்டனில், ஸ்தாபனங்களின் பேரளவும் அவற்றின் உயர்ந்த தொழில்நுட்பத் தரமுமே ஓர் ஏகபோகப் போக்குக்கு இடந்தருகின்றன. ஒரு புறம், குவிதலின் விளைவாக ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் பிரம்மாண்டமான தொகை முதலீடு செய்யப்படுவது இன்றியமையாததாயிருக்கிறது; எனவே புதிய ஸ்தாபனங்களுக்கு அவசியமான மூலதனத்தின் அளவு வடிவில் முன்னிலும் பெரிய தேவைகள் எதிர்ப்படுகின்றன. இதன் மூலம், புதிய ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்படுவது அதிகக் கடினமாகிறது. மறு புறம் (இது இன்னும் முக்கியமான விஷயமாக நமக்குத் தோன்றுகிறது), குவிதல் மூலம் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான ஸ்தாபனங்களுடன் சமமாக நடைபோட விரும்புகிற ஒவ்வொரு புதிய ஸ்தாபனமும் ஏராளமான அளவு சரக்குகளை உபரியாக உற்பத்தி செய்ய வேண்டும்; கிராக்கியில் உண்டாகும் ஏராளமான அதிகரிப்பின் விளைவாக லாபத்துடன் விற்கும் நிலையில் இருப்பதன் மூலமே அந்த ஸ்தாபனம் இச்சரக்குகளை விற்றுத் தீர்க்க முடியும்; இல்லையேல், இந்த உபரிச் சரக்கானது, புதிய ஸ்தாபனம், ஏகபோகக் கூட்டமைப்புக்கள் ஆகிய இரண்டுக்கும் லாபமில்லாத அளவு விலையைக் குறைத்துவிடும்.'' கார்ட்டல்கள் அமைக்கப்படுவதை எளிதாக்கும் காப்புவரிகள் உள்ள இதர நாடுகளைப் போலல்லாமல், இங்கிலாந்தில் முக்கியமான போட்டி ஸ்தாபனங்களின் எண்ணிக்கை ''ஓரிரண்டு டஜன்களாக''க் குறைந்துவிடும் பொழுதுதான், தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டணிகளாகிய கார்ட்டல்களும், ட்ரஸ்டுகளும் பெரும்பாலும் தோன்றுகின்றன. ''பெரிய தொழில் துறையில் ஏகபோகங்கள் அமைக்கப்படுவதன்மீது குவிதல் இயக்கத்தின் செல்வாக்கு இங்கு பளிங்கு போலத் தெளிவுடன் துலங்குகிறது.''*

---

* Hermann Levy, *Monopole, Kartelle und Trusts*, Jena, *1909*, SS. *286, 290, 298 (ஹெர்மான் லெவி, ''ஏகபோகங்களும் கார்ட்டல்களும் ட்ரஸ்டுகளும்'', யேஞ. 1909, பக்கங்கள் 286,290,298.*—ப-ர்.*)*.

அரை நூற்றுண்டுக்கு முன்னர், மார்க்ஸ் ''மூலதனத்தை'' எழுதிக் கொண்டிருந்தபொழுது, கட்டுப்பாடற்ற போட்டி ''இயற்கையான விதி'' என்று மிகப் பெரும்பான்மையான பொருளாதாரவாதிகளுக்குத் தோன்றியது. கட்டுப்பாடற்ற போட்டி உற்பத்திக் குவிதலைத் தோற்றுவிக்கிறது என்றும், அடுத்தபடியாக அது தனது வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஏகபோகத்திற்கு இட்டுச் செல்கிறது என்றும் முதலாளித்துவத்தைப்பற்றித் தத்துவரீதியானதும் சரித்திர பூர்வமானதுமான ஆராய்ச்சியின் வாயிலாக நிரூபித்த மார்க்ஸின் நூலை, அதைப்பற்றி ஒன்றும் கூருமல் மௌனமாக இருப்பதன் மூலமாக ஒரு சதி செய்து அழித்துவிட அரசாங்கச்சார்புள்ள விஞ்ஞானம் முயற்சி செய்தது. இன்று ஏகபோகம் ஒரு நடைமுறை உண்மை ஆகிவிட்டது. பொருளாதாரவாதிகள் மலைகளாகப் புத்தகங்கள் எழுதிக் குவிக்கிருர்கள்; அவைகளில், அவர்கள் ஏகபோகத்தின் தனித் தனித் தோற்றங்களை வர்ணிக்கிருர்கள்; ''மார்க்ஸீயம் பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது'' என்று கோஷ்டிகானமாகத் தொடர்ந்து பிரகடனம் செய்கிருர்கள். ஆங்கிலப் பழமொழி ஒன்று கூறுவதுபோல, உண்மைகள் பிடிவாதமானவை; நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, அவைகளை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டாக வேண்டும். தனிப்பட்ட முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் உள்ள வித்தியாசங்கள், உதாரணமாகக் காப்பு அல்லது கட்டுப்பாடற்ற வர்த்தகம் ஆகிய விஷயத்தில், ஏகபோகங்களின் உருவிலும், அவைகள் தோன்றும் காலத்திலும் முக்கியமற்ற மாறுதல்களையே உண்டாக்குகின்றன என்றும் உற்பத்திக் குவிதலின் விளைவாக ஏகபோகங்கள் தோன்றுவதானது முதலாளித்துவ வளர்ச்சியின் இன்றைய கட்டத்தின் பொதுவான, அடிப்படையான விதியாகும் என்றும் நடைமுறை உண்மைகள் காட்டுகின்றன.

ஐரோப்பாவில் புதிய முதலாளித்துவம் பழைய முதலாளித்துவத்தை இறுதியாக அகற்றி நிலை பெற்ற காலத்தைப் போதிய அளவு துல்லியமாக நிர்ணயிக்க முடியும்: இருபதாம் நூற்றுண்டின் தொடக்கமே அக்காலமாகும். ''ஏகபோகங்கள் அமைக்கப்படுதலின்'' வரலாற்றைப் பற்றிய

புத்தம்புதிய தொகுப்பு நூல்களில் ஒன்றில் கீழ்க் கண்ட வாறு நாம் படிக்கிறோம்:

''முதலாளித்துவ ஏகபோகத்தின் தனித்தனியான உதா ரணங்களை 1860க்கு முந்திய கால கட்டத்திலிருந்தே எடுத் துக்காட்ட முடியும்; இவைகளில் இன்று எங்கும் சாதாரண மாக இருக்கிற அந்த வடிவங்களின் கருக்களை நாம் கண்டுகொள்ள முடியும்; ஆனால் இது எல்லாம், கார்ட்டல் களின் வரலாற்றுக்கு முந்திய காலத்தையே சந்தேகமின்றி சுட்டிக்காட்டுகிறது. தற்கால ஏகபோகத்தின் உண்மையான ஆரம்பம், மிக முன்னதாக வைத்துக்கொண்டாலும், 1860-69 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தையே சேர்ந்தது. ஏகபோகத்தின் முதல் முக்கியமான வளர்ச்சிக்காலம், 1870-79 காலகட்டத்தில் ஏற்பட்ட சர்வதேசத் தொழில் மந்தத் துடன் ஆரம்பித்து, சுமார் 1890-99 ஆண்டுகளின் தொடக் கம் வரை நீடித்தது''. ''இந்தப் பிரச்சினையை ஐரோப்பிய ரீதியாக நாம் பரிசீலனை செய்து பார்த்தால், கட்டுப்பாடற்ற போட்டியின் வளர்ச்சி 1860-1879க்கு இடைப்பட்ட ஆண்டு களில் தனது உச்ச வரம்பை எட்டியிருப்பதைக் காண் போம். தனது பழைய பாணி முதலாளித்துவ அமைப்பை இங்கிலாந்து கட்டிமுடித்தது அப்பொழுதுதான். ஜெர்மனி யில் இந்த அமைப்பானது கைத்தொழிலுடனும் குடிசைத் தொழிலுடனும் கடுமையான போரில் இறங்கி, ஜீவித் திருப்பதற்காகத் தனக்கே உரிய வடிவங்களைச் சிருஷ்டிச் செய்யத் தொடங்கியிருந்தது.''

''1873ல் ஏற்பட்ட முறிவுடன், அல்லது இன்னும் பொ ருத்தமாகக் கூறினால், அந்த முறிவைத் தொடர்ந்து வந்த பொருளாதார மந்தத்துடன் அப்பெரும் திருப்பம் தொடங் கியது; அந்தப் பொருளாதார மந்தமானது, 1880-89 காலகட்டத்தின் முன் பகுதியில் சிரமத்துடனேயே கண்டு ணரக் கூடிய இடையீடுகளுடனும், அசாதாரணமாகக் கடு மையான, ஆனால் குறுகிய காலமே நிலைத்திருந்த 1889 வாக்கில் தோன்றிய கொழிப்புடனும், ஐரோப்பியப் பொரு ளாதார வரலாற்றின் இருபத்திரண்டு ஆண்டுகளைக் குறிக் கின்றது.'' ''1889-90ல் உண்டான குறுகிய கொழிப்புக்

காலத்தில், அனுகூலமாக இருந்த வியாபார நிலைமைகளைக் கொண்டு பயனடைவதற்காக கார்ட்டல் முறை விரிந்த அளவில் கைக் கொள்ளப்பட்டது. நன்கு ஆய்ந்தோர்ந்து பார்க்கப்படாத கொள்கை விலைகளை, கார்ட்டல்கள் இல்லாமலிருந்தால் ஏற்பட்டிருப்பதைவிட அதிகத் துரிதமாகவும் கடுமையாகவும் உயர்த்தியது; அதனால், கிட்டத்தட்ட எல்லாக் கார்ட்டல்களும் அந்த முறிவில் அவகேடான முறையில் அழிந்து போயின. இன்னோர் ஐந்தாண்டுக் காலம் மந்தமான வியாபாரமும், குறைந்த விலைகளும் தொடர்ந்து வந்தன; ஆயினும், தொழிலில் ஒரு புது மனநிலை ஆட்சி புரிந்தது; பொருளாதார மந்தமானது இயல்பாக நடக்கக் கூடிய ஒன்றாக அப்போது கருதப்படவில்லை; அது இன்னொரு கொழிப்புக்கு முன்னால் வரும் இடைக்காலமே தவிர வேறில்லை என்று கருதப்பட்டது.

''கார்ட்டல் இயக்கம் தனது இரண்டாவது காலகட்டத்தில் அடிவைத்தது: மாறிவிடுகின்ற ஒரு தோற்றமாக இல்லாமல், பொருளாதார வாழ்வு அனைத்தினதும் அடிப்படைகளில் ஒன்றாகக் கார்ட்டல்கள் ஆகிவிட்டன. ஒரு தொழில் துறைக்குப்பின் இன்னொன்றாக, முக்கியமாகக் கச்சாப் பொருள்களைப் பதன்படுத்தும் தொழில், கார்ட்டல்களில் சேர்க்கப்படுகிறது. 1890-99 ஆண்டுகளின் தொடக்கத்தில் கார்ட்டல்கள் சுட்டகரி சின்டிகேட்டை அமைத்ததில் ஒரு கார்ட்டல் செயல் முறையை உருவாக்கியிருந்தன; பிற்பாடு நிலக் கரி சின்டிகேட் இதையே முன்மாதிரியாகக் கொண்டு நிறுவப்பட்டது. இம்முறை, உண்மையில், மேலும் அபிவிருத்தி செய்யப்படவே இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பெரிய கொழிப்பும், 1900-03ல் ஏற்பட்ட நெருக்கடியும்—சுரங்க, இரும்புத் தொழில்களில் மட்டுமாவது—முதல் தடவையாக முழுதும் கார்ட்டல்களின்கீழ்தான் ஏற்பட்டன. அப்பொழுது அது ஏதோ புதியதாகத் தோன்றியது; ஆனால் இப்பொழுது, பொருளாதார வாழ்வின் பெரும் பகுதிகள், ஒரு பொது விதியாக, கட்டுப்பாடற்ற போட்டியின் துறையிலிருந்து விலக்கப்பட்டு

விட்டன என்பது பொது மக்களுக்குத் தானே விளங்கும் உண்மை ஆகிவிட்டது.''*

இவ்வாருக, ஏகபோகங்களது வரலாற்றின் முக்கிய கட்டங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன: 1) 1860-80, கட்டுப்பாடற்ற போட்டியின் வளர்ச்சியில் உச்ச கட்டம், யாவற்றிலும் மேலான நிலே. ஏகபோகங்கள் அரிதாகவே தென்படும் கருநிலேயில் உள்ளன. 2) 1873ன் பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, கார்ட்டல்கள் வளர்ச்சியுறும் நீண்ட காலப் பகுதி; ஆயினும், அவை இன்னும் விதிவிலக்காகவே இருக்கின்றன. அவை இன்னும் நிலே பெறவில்லே. அவைகள் இன்னும் மாறுகின்ற நிகழ்ச்சியாகவே இருக்கின்றன. 3) பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் உண்டாகிய கொழிப்பும், 1900-03ல் ஏற்பட்ட நெருக்கடியும்: பொருளாதார வாழ்வு முழுவதற்குமான அடிப்படைகளில் ஒன்ருகக் கார்ட்டல்கள் ஆகிவிடுகின்றன. முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாற்றப்பட்டு விட்டது.

விற்பனேயின் நிபந்தனேகள், பணம் செலுத்துவதற்கான கெடுக்கள் முதலியவைகள் பற்றி கார்ட்டல்கள் ஒப்பந்தத்திற்கு வருகின்றன. மார்க்கெட்டுகளேத் தங்களுக்கிடையில் அவை பகிர்ந்து கொள்கின்றன. உற்பத்தி செய்யப்படவேண்டிய சரக்குகளின் அளவை அவை நிர்ணயிக்கின்றன. விலேகளே நிர்ணயிக்கின்றன. தனித்தனி ஸ்தாபனங்களுக்கிடையில் லாபங்களேப் பிரித்துக் கொள்கின்றன. இன்னும் இப்படிப் பலவற்றைச் செய்கின்றன.

---

* Th. Vogelstein, *Die finanzielle Organisation der kapitalistischen Industrie und die Monopolbildungen. Grundriss der Sozialökonomik*, *VI Abt.*, *Tübingen, 1914* (தி. போகல்ஷ்டைன், ''முதலாளித்துவத் தொழிலின் நிதி ஸ்தாபன அமைப்பும் ஏகபோகங்கள் அமைக்கப்படுதலும்.'' ''சமுதாயப் பொருளாதாரத்தின் அடிப்படைகள்'', பாகம் 6, ட்யூபிங்கன் 1914.— ப-ர்.), என்பதிலிருந்து. இதே ஆசிரியரின் கீழ்க்கண்ட நூலேயும் பார்க்க: *Organisationsformen der Eisenindustrie und Textilindustrie in England und Amerika*, *Bd. I*, *Lpz. 1910* (''இங்கிலாந்து, அமெரிக்கா ஆகியவைகளின் இரும்பு, ஜவுளித் தொழில்களின் ஸ்தாபன அமைப்பு வடிவங்கள்'', தொகுதி 1, லேப்ஸிக், 1910.—ப-ர்.).

ஜெர்மனியில் கார்ட்டல்களின் எண்ணிக்கை 1896ல் சுமார் 250 என்றும் 1905ல் 385 என்றும் மதிப்பிடப்பட்டது; சுமார் 12,000 ஸ்தாபனங்கள் அவைகளில் பங்கெடுத்துக் கொண்டன.* ஆனால், இந்த எண்ணிக்கைகள் குறைவான மதிப்பீடுகள் என்று பொதுவாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. நாம் முன்பு எடுத்துக்காட்டிய ஜெர் மானியத் தொழிலின் 1907ம் வருடத்திய புள்ளிவிவரங்களி லிருந்து, அந்நாட்டில் உபயோகிக்கப்படுகின்ற நீராவி, மின் திறனில் நிச்சயமாகப் பாதிக்கு மேற்பட்டதை இந்த 12,000 மிகப் பெரும் ஸ்தாபனங்கள்கூடத் தங்கள் கையில் குவித்து வைத்திருக்கின்றன என்பது புலனாகிறது. அமெரிக்க ஐக் கிய நாடுகளில் ட்ரஸ்டுகளின் எண்ணிக்கை 1900ல் 185 என்றும், 1907ல் 250 என்றும் மதிப்பிடப் பட்டிருந்தது. எல்லாத் தொழில் ஸ்தாபனங்களையும், தனியார்களுக்கு உரி யவை, தனி நிறுவனங்களுக்கு உரியவை, கார்ப்பொரேஷன் களுக்கு உரியவை என்று அமெரிக்கப் புள்ளிவிவரங்கள் பிரிக் கின்றன. கடைசியாகக் கூறப்பட்டவை [கார்ப்பொரேஷன் கள்] 1904ல் 23.6 சதவிகிதத்தையும், 1909ல் 25.9 சத விகிதத்தையும், அதாவது அந்நாட்டின் மொத்தத் தொழில் ஸ்தாபனங்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்டதைக் கொண்டிருந்தன. இவை, 1904ல் 70.6 சதவிகிதத்தினரை யும், 1909ல் 75.6 சதவிகிதத்தினரையும், அதாவது மொத் தத் தொழிலாளர்களில் நான்கில் மூன்று பங்குக்கு அதிக மானவர்களை வேலையில் அமர்த்தியிருந்தன. அவைகளது உற்பத்தியின் தொகை முறையே 1,090 கோடி டாலராகவும்

* Dr. Riesser, *Die deutschen Grossbanken und ihre Konzentration im Zusammenhange mit der Entwicklung der Gesamtwirtschaft in Deutschland*. 4 Aufl., 1912, S. 149 (டாக்டர் ரீசர், ''பெரிய ஜெர்மன் பாங்குகளும் ஜெர்மனியில் பொதுப் பொருளாதாரத்தின் வளர்ச்சி சம்பந்தமாக அவைகளின் குவிதலும்''. 4வது பதிப்பு, 1912, பக்கம் 149. — ப-ர்.); R. Liefmann, *Kartelle und Trusts und die Weiterbildung der volkswirtschaftlichen Organisation*. 2 Aufl. 1910, S. 25 (ரா. லீப்மன், ''கார்ட்டல்களும், ட்ரஸ்டுகளும், பொருளா தார ஸ்தாபனங்களின் மேற்கொண்ட வளர்ச்சியும்''. 2வது பதிப்பு, 1910, பக்கம் 25.—ப-ர்.)

1,630 கோடி டாலராகவும், அதாவது மொத்தத்தில் 73.7 சதவிகிதமாகவும், 79.0 சதவிகிதமாகவும் இருந்தது.

ஒரு குறிப்பிடப்பட்ட தொழிலினது கிளையின் மொத்த உற்பத்தியில் பத்தில் ஏழு அல்லது எட்டு பங்கைக் கார்ட்டல்களும் ட்ரஸ்டுகளும் தங்கள் கையில் அடிக்கடி குவித்து வைத்திருக்கின்றன. ரைன்-வெஸ்ட்பேலிய நிலக்கரி சின்டிகேட், 1893ல் அது ஆரம்பிக்கப்பட்டபொழுது அப்பிரதேசத்தின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் 86.7 சதவிகிதத்தையும், 1910ல் ஏற்கனவே 95.4 சதவிகிதத்தையும் குவித்து வைத்திருந்தது.* இவ்வாறு உண்டாக்கப்பட்ட ஏகபோகம் ஏராளமான லாபத்தை உத்தரவாதம் செய்கிறது; பயங்கரமான பேரளவு கொண்ட இயந்திரமுறை உற்பத்தி நிலையங்களையும் அமைக்கச் செய்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிரசித்திபெற்ற எண்ணெய் ட்ரஸ்ட் (Standard Oil Company) 1900ல் நிறுவப்பட்டது. "அது 15 கோடி டாலர் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைப் பெற்றிருக்கிறது. 10 கோடி டாலர் பொதுப் பங்குகளும், 10 கோடி 60 லட்சம் டாலர் முன்னுரிமைப் பங்குகளும் வெளியிடப்பட்டன. 1900லிருந்து 1907 வரை ஆண்டுதோறும் இரண்டாவதின் [முன்னுரிமைப் பங்கின்] மீது கீழ்க்கண்ட லாபப் பங்குகள் முறையே கொடுக்கப்பட்டன: 48, 48, 45, 44, 36 40, 40,40 சதவிகிதம், அதாவது மொத்தம் 36 கோடி 70 லட்சம் டாலர்கள். 1882 முதல் 1907 வரை மொத்த நிகர லாபத் தொகையாகிய 88 கோடி 90 லட்சம் டாலர்களில், 60 கோடி 60 லட்சம் டாலர்கள் லாபப் பங்குகளாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டன, மிச்சம் ஒதுக்கிவைத்த மூலதனத்துடன் சேர்க்கப்பட்டது."** "1907ல் எஃகு ட்ரஸ்டின்

---

* Dr. Fritz Kestner, *Der Organisationszwang. Eine Untersuchung über die Kämpfe zwischen Kartellen und Aussenseitern*. Brl., 1912, பக்கம் 11 (டாக்டர் ப்ரிட்ஸ் கெஸ்ட்னர், "கட்டாயக் கூட்டமைப்பு. கார்ட்டல்களுக்கும் வெளியார்களுக்குமிடையிலுள்ள போராட்டத்தைப்பற்றிய ஆராய்ச்சி", பெர்லின்.—ப-ர்.).

** R. Liefmann, *Beteiligungs-und Finanzierungsgesellschaften. Eine Studie über den modernen Kapitalismus und das Effektenwesen*, 1. Aufl., Jena, 1909, பக்கம் 212

(United States Steel Corporation) எல்லாத் தொழில் நிலையங்களும் 2,10,180க்குக் குறையாத தொழிலாளிகளையும் இதர ஊழியர்களையும் வேலையில் அமர்த்தியிருந்தன. ஜெர்மன் சுரங்கத் தொழிலில் மிகப் பெரிய ஸ்தாபனமான கெல்செங்கிர்ஹென் சுரங்கக் கம்பெனி (Gelsenkirchener Bergwerksgesellschaft) 1908ல் 46,048 தொழிலாளிகளையும் அலுவலக ஊழியர்களையும் கொண்டிருந்தது.''* 1902ல் எஃகு ட்ரஸ்ட் ஏற்கனவே 90 லட்சம் டன் எஃகை உற்பத்தி செய்தது.** அதனுடைய உற்பத்தி, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த எஃகு உற்பத்தியில், 1901ல் 66.3 சதவிகிதமாகவும், 1908ல் 56.1 சதவிகிதமாகவும் இருந்தது,*** கனியத்தின் உற்பத்தி முறையே 43.9 சதவிகிதமாகவும், 46.3 சதவிகிதமாகவும் இருந்தது.

ட்ரஸ்டுகளைப் பற்றிய அமெரிக்க அரசாங்கக் கமிஷனின் அறிக்கை கூறுகிறது: ''போட்டியாளர்களுக்கு மேல் அவைகளுக்கு உள்ள மேன்மையானது, அவைகளது ஸ்தாபனங்களின் பெரிய அளவு, அவைகளின் மிகச் சிறந்த இயந்திரக் கருவிகள் ஆகியவைகளின் காரணத்தாலேயேயாகும். உடல் உழைப்புக்குப் பதில் இயந்திர உழைப்பைப் பரந்த அளவிலும் எங்கும் புகுத்துவதில் புகையிலை ட்ரஸ்டு தனது தொடக்கம் முதல் எல்லா முயற்சிகளையும் செய்து வந்தது. இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, புகையிலை உற்பத்தியுடன் எவ்வகையிலாவது சம்பந்தப்பட்ட எல்லா உரிமைக் காப்புகளையும் [patents] விலை கொடுத்து வாங்கியது. இந்தக் காரியத்திற்காக ஏராளமான தொகைகளைச் செலவிட்டது. இந்த உரிமைக் காப்புகளில் பல, முதலில் ஒன்றுக்கும் உதவாதவைகளாக இருந்தன. அந்த ட்ரஸ்டில்

---

(ரா. லீப்மன், ''ஹோல்டிங் கம்பெனிகளும், நிதிக் கம்பெனிகளும். தற்காலத்திய முதலாளித்துவத்தைப்பற்றியும் பத்திரங்களைப் பற்றியும் ஓர் ஆராய்ச்சி'', 1ம் பதிப்பு, யேனா.—ப-ர்.).

* அதே புத்தகம், பக்கம் 218.

** Dr. S. Tschierschky, *Kartell und Trust*, Gött., 1903, பக்கம் 13, (டாக்டர் ஸி. சீர்ஷ்கி, ''கார்ட்டலும் ட்ரஸ்டும்'', கட்டிங்கன்.—ப-ர்.).

*** Th. Vogelstein, *Organisationsformen*, பக்கம் 275.

வேலைக்கு அமர்ந்திருந்த எஞ்சினீயர்களால் அவை திருத்தப் பட வேண்டியிருந்தன. 1906ன் இறுதியில், உரிமைக் காப்பு களை வாங்குவதற்காக மட்டுமே இரண்டு துணைக் கம்பெனி கள் அமைக்கப்பட்டன. இதே நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, தனக்கே உரிய பட்டறைகள், இயந்திர உற்பத் திச் சாலைகள், ரிப்பேர் செய்யும் சாலைகள் ஆகியவைகளை அந்த ட்ரஸ்டு கட்டியது. புரூக்ளினில் இருக்கின்ற இத்த கைய ஸ்தாபனங்களில் ஒன்று சராசரியில் 300 தொழிலாளி களை வேலைக்கு அமர்த்தியுள்ளது; சிகரெட்டுகள், சுருட்டு கள், மூக்குப்பொடி, பாக்கிங் செய்வதற்கான ஈயத்தாள், பெட்டிகள் முதலியவைகளின் உற்பத்தி சம்பந்தமான கண்டு பிடிப்புக்களைப் பற்றிப் பரிசோதனைகள் இங்கு நடத்தப் படுகின்றன. இங்கு கண்டுபிடிப்புக்களும் செம்மைப்படுத்தப் படுகின்றன.''* ''அபிவிருத்தி எஞ்சினீயர்கள் எனப் படுபவர்களை இதர ட்ரஸ்டுகளும் அமர்த்தியுள்ளன. உற் பத்தியில் புது முறைகளைக் கண்டுபிடிப்பதும், இயந்திர நுட்பச் சாதனங்களின் அபிவிருத்திகளைச் சோதனை செய்வ தும் இவர்களது வேலையாகும். அமெரிக்க ஐக்கிய நாடு களின் எஃகுக் கார்ப்பொரேஷன், தொழில் நுட்பத் திற மையை உயர்த்துவதற்கு, அல்லது உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு ஏற்ற எல்லாக் கண்டுபிடிப்புக்களுக்காகவும் தனது தொழிலாளர்களுக்கும் எஞ்சினீயர்களுக்கும் பெரிய போனசுகள் அளிக்கிறது.''**

ஜெர்மனியில், பெருந்தொழிலில், உதாரணமாகக் கடந்த சில பத்தாண்டுகளில் மிகப் பெரிய அளவில் அபிவிருத்

---

* *Report of the Commissioner of Corporations on the Tobacco Industry*. Washington, 1909, பக்கம் 266 (''புகையிலைத் தொழில் பற்றிய கார்ப்பொரேஷன்களின் கமிஷனரது அறிக்கை'', வாஷிங்டன்.—ப-ர்.)—கீழ்க்கண்ட நூலில் மேற்கோள் காட்டப்பட்டபடி: Dr. Paul Tafel, *Die nordamerikanischen Trusts und ihre Wirkungen auf den Fortschritt der Technik*, Stuttgart, 1913, பக்கம் 48, (டாக்டர் பாவுல் டாபல், ''வட அமெரிக்க ட்ரஸ்டுகளும், தொழில் நுட்ப வளர்ச்சி மீது அவைகளின் விளைவும்'', ஷ்டுட்கார்ட்.—ப-ர்.).

** அதே புத்தகம், பக்கம் 48-49.

தியடைந்துள்ள இரசாயனத் தொழிலில், இயந்திர நுட்ப அபிவிருத்தியின் வளர்ச்சியானது இதே முறையில்தான் ஒழுங்கமைக்கப்பட்டது. 1908 வாக்கில் உற்பத்திக் குவிதலின் நிகழ்முறை இந்தத் தொழிலில் ஏற்கனவே இரண்டு முக்கியக் ''குழுக்களை''த் தோற்றுவித்துவிட்டது. இக்குழுக்கள், தங்களது விதத்தில், ஏகபோகங்களின் தன்மையையே ஒத்திருந்தன. முதலாக, ஒவ்வொன்றும் இரண்டு கோடி முதல் இரண்டு கோடியே பத்து லட்சம் மார்க்கு வரை மூலதனத்தையுடைய இரண்டு ஜோடி பெரிய தொழிற்சாலைகளைக் கொண்ட ''இரு கூட்டணிகளாக'' இக்குழுக்கள் இருந்தன: ஹோஹ்ஸ்ட்டிலுள்ள முன்னுள் மைஸ்டர் தொழிற்சாலையும், பிராங்பர்ட் ஆம் மைனிலுள்ள காசெல்லா தொழிற்சாலையும், ஒரு புறம்; லுட்விக்ஸ்ஹாபனிலுள்ள அனிலேன், சோடா தொழிற்சாலையும் எல்பர்பெல்டிலிருக்கும் முன்னுள் பாயர் தொழிற்சாலையும், மறுபுறம். பிறகு, 1905ல் இக்குழுக்களில் ஒன்றும், 1908ல் மற்றதும், இன்னுமொரு பெரிய தொழிற்சாலையுடன் ஒவ்வொன்றும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. இதன் விளைவு, ஒவ்வொன்றும் நான்கு முதல் ஐந்து கோடி மார்க்குகள் வரை மூலதனத்தைக் கொண்ட இரண்டு ''முக்கூட்டணிகள்'' அமைக்கப்பட்டதாகும்; இந்தக் ''கூட்டணிகள்'' ஏற்கனவே ஒன்றோடொன்று ''நெருங்கி'' வரவும், விலை முதலியவைகளைப் பற்றிய ''உடன்படிக்கைகளை''ச் செய்து கொள்ளவும் ஆரம்பித்திருக்கின்றன.*

போட்டியானது ஏகபோகமாக மாற்றமடைந்து வருகிறது. இதன் விளைவு, உற்பத்தி சமுதாய ரீதியாக்கப்படுவதில் ஏற்பட்டுவரும் மிகப் பெரிய முன்னேற்றமாகும். பகுதியளவில், தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள், அபிவிருத்திகள் ஆகியவைகளின் நிகழ்முறை சமுதாய ரீதியாக ஆகின்றது.

இது, அங்குமெங்கும் சிதறி ஒருவரைப்பற்றி ஒருவர் ஏதும் அறியாமல், திட்டமாகத் தெரியாத ஒரு மார்க்கெட்

---

* Riesser, மேற்குறிப்பிட்ட நூல், 3ம் பதிப்பு, பக்கங்கள் 547ம் அடுத்தவையும். ஜெர்மனியின் இரசாயனத் தொழிலை ஒன்று சேர்த்த புதிய பிரம்மாண்டமான ட்ரஸ்டு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதைச் செய்தித்தாள்கள் (ஜூன் 1916) அறிவிக்கின்றன.

டுக்காக உற்பத்தி செய்து கொண்டிருந்த உற்பத்தியாளர்களுக்கு இடையில் நிலவிய முந்தைய கட்டுப்பாடற்ற போட்டியிலிருந்து முற்றிலும் வேறான ஒன்றாகும். ஒரு நாட்டின், ஏன், நாம் கவனிக்கப் போகிற மாதிரி, பல நாடுகளின், அல்லது உலக முழுவதின் கச்சாப் பொருள்களின் எல்லா ஊற்றுக்கண்களையும் (உதாரணமாக, பூமிக்கடியில் இரும்புக்கனி இருப்பை) ஏறத்தாழ மதிப்பிடக் கூடிய அளவு குவிதல் முறை வளர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட மதிப்பீடுகள் செய்யப்படுவதோடு மட்டுமின்றி, அவ்வூற்றுக்கண்கள் பிரமாண்டமான ஏகபோகக் கூட்டமைப்புக்களால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. மார்க்கெட்டுகளின் கொள்ளளவைப் பற்றிய ஒரு சுமாரான மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கின்றது; ஏகபோகக் கூட்டமைப்புக்கள் இவைகளைத் தங்களுக்குள் ஒப்பந்தத்தின்மூலம் ''பங்கிட்டுக்கொள்கின்றன''. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களும் ஏகபோகமாக்கப்பட்டுள்ளனர்; தலைசிறந்த எஞ்சினீயர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர்; போக்கு வரத்துச் சாதனங்கள்—அமெரிக்காவில் ரயில்வேக்கள், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கப்பல் கம்பெனிகள்—கைப்பற்றப்பட்டிருக்கின்றன. தனது ஏகாதிபத்திய கட்டத்தில் முதலாளித்துவம் உற்பத்தி மிகமிக வரிவான அளவில் சமுதாய ரீதியாக்கப்படுவதை மிகவும் நெருங்கி விடுகிறது; இது, முதலாளிகளை, அவர்களது விருப்பத்துக்கும் உணர்வுக்கும் மாறாக, ஒரு விதமான புதிய சமுதாய அமைப்பில், அறவே கட்டுப்பாடற்ற போட்டியிலிருந்து முழுவதும் சமுதாய ரீதியாக்கப்படுதலுக்கு மாறும் நிலையிலுள்ள ஓர் அமைப்பில் இழுத்து விடுகிறது என்று கூறலாம்.

உற்பத்தி சமுதாய ரீதியாக அமைகிறது; ஆனால் அதைச் சொந்தமாக்கிக்கொள்ளலோ தனிநபரிடமே இருந்து விடுகிறது. சமுதாய உற்பத்திச் சாதனங்கள் ஒரு சிலரது தனிச் சொத்தாகவே இன்னும் இருக்கின்றன. சம்பிரதாயரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடற்ற போட்டியின் பொது வடிவம் அப்படியே இருக்கிறது; ஒரு சில ஏகபோகக்காரர்களால் இதர மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நுகம் நூறு மடங்கு மேலும் கனமானதாகவும், சுமையுள்ளதாகவும், பொறுக்க முடியாததாகவும் ஆகிறது.

கெஸ்ட்னர் என்ற ஜெர்மன் பொருளாதார எழுத்தாளர், ''கார்ட்டல்களுக்கும் வெளியார்களுக்குமிடையில் நடைபெறும் போராட்டத்''தைப் பற்றியே பிரத்தியேகமாக ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிருர். வெளியார்கள் என்பார் கார்ட்டல்களில் சேராமலிருக்கும் முதலாளிகள். அவர் தமது நூலுக்குக் ''கட்டாயக் கூட்டமைப்பு'' என்று தலைப்பிட்டிருக்கிருர்; ஆயினும், முதலாளித்துவத்திற்கு மூலாம் பூசாதிருப்பதானுல், ஏகபோகக் கூட்டமைப்புக்களுக்குக் கட்டாயமாக அடிபணிவதைப் பற்றி நிச்சயமாக எழுதியிருக்க வேண்டும். ஏகபோகக் கூட்டமைப்புக்கள், ''ஸ்தாபன அமைப்புக்''கான தற்காலத்திய, மிக நவீன, நாகரீகமான போராட்டத்தில் கையாளுகிற முறைகளின் பட்டியலை மட்டுமாவது மேற்போக்காக நோக்குவது நமக்குச் சில படிப்பினைகளைத் தரும். அவையாவன: 1) கச்சாப் பொருள்களின் சப்ளைகளை நிறுத்துதல் (...''கார்ட்டல்களில் சேர்ந்திருப்பதைக் கட்டாயப்படுத்துவதற்கான மிக முக்கியமான முறைகளில் ஒன்று''); 2) ''கூட்டணிகள்'' மூலம் தொழிலாளர் சப்ளையை நிறுத்துதல் (அதாவது, முதலாளிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் ஒப்பந்தங்கள் மூலம் கார்ட்டலாகக் கூட்டுச் சேர்ந்துள்ள ஸ்தாபனங்களில் மட்டுமே வேலை செய்யத் தொழிற்சங்கங்கள் தங்களது அங்கத்தினர்களை அனுமதிக்கும்); 3) வினியோகத்தை நிறுத்துதல்; 4) விற்பனை வாய்ப்புக்களை அடைத்தல்; 5) வாங்குபவர்களுடன் ஒப்பந்தங்கள். இவற்றின்படி, வாங்குபவர்கள் கார்ட்டல்களுடன் மட்டுமே வியாபாரம் செய்வதாக வாக்குக் கொடுக்கிருர்கள்; 6) திட்டமிட்டு விலைகளைக் குறைத்தல் (''வெளி'' ஸ்தாபனங்களை, அதாவது, ஏகபோகவாதிகளுக்குப் பணிய மறுப்பவைகளை, நாசம் செய்வதற்காகச் சரக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவைகளது அடக்க விலைக்குக் கீழாக விற்பதற்கென்று கோடிகள் செலவிடப்படுகின்றன; பென்சைனின் விலை இவ்வாறு 40 லிருந்து 22 மார்க்குகளுக்கு, அதாவது, அனேகமாகப் பாதிவரை குறைக்கப்பட்டதற்குப் பல உதாரணங்கள் இருந்தன); 7) பாங்குப் பற்றுக்கடன்களை நிறுத்துதல்; 8) பகிஷ்காரம்.

இங்கு, சிறிய ஸ்தாபனங்களுக்கும் பெரியவைகளுக்கும், தொழில் நுட்பத்தில் வளர்ச்சியுற்ற ஸ்தாபனங்களுக்கும் பின்தங்கியவைகளுக்கும் இடையில் போட்டியை நாம் காண வில்லே. தங்களுக்கும், தங்களது கட்டுத்தளேக்கும், தங் களது எதேச்சாதிகாரத்துக்கும் பணியாதவர்களே ஏகபோகக் காரர்கள் மூச்சை நெரித்துக் கொண்டிருப்பதை நாம் இங்கு காண்கிருேம். இந்த நிகழ்முறை ஒரு முதலாளித் துவப் பொருளியலறிஞரின் உணர்வில் இவ்வாறு தான் பிரதி பலிக்கிறது:

''முழுக்க முழுக்கப் பொருளாதாரத் துறையில்கூடப் பழைய அர்த்தத்தில் கொள்ளப்படுகிற வர்த்தக நடவடிக் கையிலிருந்து ஸ்தாபன ரீதியான-ஊகவாணிக நடவடிக்கை யை நோக்கி ஒருவித மாறுதல் நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதெல்லாம், மாபெரும் வெற்றி, தனது தொழில் நுட்ப, வாணிக அனுபவத்தின் உதவியினுல் எல்லோரைக் காட்டிலும் சிறந்த முறையில் வாங்குபவனின் தேவைகளே மதிப்பிடுகின்ற, மறைந்து கிடக்கும் தேவையைக் கண்டு பிடிக்கவும், ஒரு வகையில் சொன்னுல், அதை 'வெளிக் கொணரவும்' திறமையுள்ள வியாபாரிக்குக் கிடைப்பதில்லே; ஸ்தாபன அமைப்பின் வளர்ச்சியையும், தனி ஸ்தாபனங் களுக்கும் பாங்குகளுக்குமிடையிலுள்ள சில தொடர்புகளின் சாத்தியப்பாடுகளேயும் மதிப்பிடுவது எவ்வாறு என்பதைத் தெரிந்துள்ள, அல்லது அதைமுன்கூட்டி உணர்வதற்கு மட் டும் தெரிந்திருக்கிற ஊக வாணிக மேதைக்கு (?!) அது செல்கின்றது...'' என்று எழுதுகிருர் கெஸ்ட்னர்.

இதைச் சாதாரணமாக எல்லோருக்கும் புரியக் கூடிய முறையில் மொழிபெயர்த்தால், முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஒரு கட்டத்தை அடைந்து விட்டது என்பதை இது கூறுகிறது. அக்கட்டத்தில் பண்ட உற்பத்தி இன்னும் ''ஆட்சி புரிந்தாலும்'', பொருளாதார வாழ்வின் அடிப்படை யெனத் தொடர்ந்து கருதப்பட்டாலும், அதன் அஸ்திவாரம் உண்மையில் பறிக்கப்பட்டுவிட்டது; லாபங்களில் பெரும் பகுதி நிதித் தில்லுமல்லுக்கார ''மேதை''களுக்குச் செல்கிறது. இந்தத் தில்லுமல்லுகளுக்கும் மோசடிகளுக்கும் அடிப்படையில் உற்பத்தி சமுதாய ரீதியாக்கப்படுதல் உள்

ளது; ஆனுல், இந்தச் சமுதாய ரீதியாக்கப்படுதலைச் சாதித்த மனித சமூகத்தின் மிகப் பெரிய வளர்ச்சியால் நன்மையுண்டாவது.... ஊக வாணிகக்காரர்களுக்குத்தான். முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை விமர்சனம் செய்யும் பிற்போக்கு-பிலிஸ்டைன் விமர்சகர்கள் எவ்வாறு ''இந்தக் காரணங்களிஞல்'' ''கட்டுப்பாடற்ற'', ''அமைதியான'', ''நாணயமான'' போட்டிக்கு மீண்டும் செல்லக் கனவு காண்கிருர்கள் என்பதைப் பிறகு நாம் காண்போம்.

கெஸ்ட்னர் கூறுகிருர்: ''கார்ட்டல்கள் அமைக்கப்படுவதிலிருந்து விளையும் நீடித்த விலையேற்றம், மிகமிக முக்கியமான உற்பத்திச் சாதனங்களின், குறிப்பாக நிலக்கரி, இரும்பு, பொட்டாஷியம் ஆகியவைகளின் விஷயத்தில் மட்டுமே இதுவரை காணப்பட்டது; ஆனுல், செய்பொருள்களின் விஷயத்தில் இது எப்பொழுதுமே காணப்பட்டதில்லை. அதைப் போன்றே, இந்த விலை யேற்றத்திலிருந்து விளைந்த லாபங்களின் அதிகரிப்பு, உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்கிற தொழில்களுடனேயே நின்று விட்டது. இந்தக் கருத்துடன் கீழ்க்கண்டதையும் நாம் சேர்க்க வேண்டும்: கச்சாப் பொருள்களை (அரைகுறைச் செய்பொருள்களையல்ல) பதனிடும் தொழில், கார்ட்டல்கள் அமைக்கப்படுவதிலிருந்து, செய்பொருள் உற்பத்தித் தொழிலுக்குப் பாதகமாக, உயர்ந்த லாபங்கள் என்ற வடிவில் சாதகங்களைப் பெறுவது மட்டுமின்றி, செய்பொருள் உற்பத்தித் தொழிலின் மேல் ஆதிக்கம் செலுத்தும் நிலையையும் அடைகின்றன. இந்நிலை கட்டுப்பாடற்ற போட்டியின்கீழ் இருக்கவில்லை.''*

நாம் அழுத்தம் கொடுத்துள்ள வார்த்தைகள், இவ்விஷயத்தின் சாராம்சத்தை வெளிப்படுத்துகின்றன; இந்தச் சாராம்சத்தை, முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் மிக்க தயக்கத்துடனும் மிக அபூர்வமாகவும் ஒத்துக்கொள்கிருர்கள். கா. காவுட்ஸ்கியின் தலைமையில் இயங்கும் சந்தர்ப்பவாதத்தின் இன்றையப் பாதுகாவலர்கள் அதைத் தட்டிக் கழிக்கவும், ஒதுக்கித்தள்ளவும் மிகுந்த சிரத்தையுடன் முயல்கிருர்கள். ஆதிக்கம், அதனுடன் சம்பந்தப்பட்ட

---

* கெஸ்ட்னர், மேற் குறிப்பிட்ட நூல், பக்கம் 254.

பலாத்காரம்—இப்படிப்பட்டவை தான் ''முதலாளித்துவ வளர்ச்சியின் நவீன கட்டத்தின்'' எடுத்துக்காட்டான உறவுகள்; சகல சக்தியும் வாய்ந்த பொருளாதார ஏகபோகங்கள் அமைக்கப்படுவதிலிருந்து தவிர்க்க முடியாதபடி விளையக் கூடியதும், விளைந்திருப்பதும் இதுதான்.

கார்ட்டல்களினுல் கையாளப்படும் முறைகளுக்கு இன்னுமோர் உதாரணத்தை நாம் தருவோம். எங்கு கச்சாப் பொருள்களின் எல்லா, அல்லது முக்கிய ஊற்றுக்கண்களைக் கைப்பற்றிக் கொள்வது சாத்தியமாகிறதோ, அங்கு கார்ட்டல்களின் எழுச்சியும் ஏகபோகங்கள் அமைக்கப்படுதலும் மிக மிக எளிதாக இருக்கின்றன. ஆயினும், கச்சாப் பொருள்களின் ஊற்றுக்கண்களை மடக்கிக் கொள்வது சாத்தியமில்லாத இதரத் தொழில்களில் ஏகபோகங்கள் தோன்றுவதில்லை என்று நினைப்பது தவருகும். உதாரணமாக, சிமென்ட் தொழிலுக்கான கச்சாப் பொருள்கள் எங்கும் கிடைக்கும். என்ருலும், ஜெர்மனியில் இத்தொழில்கூட, பலமாகக் கார்ட்டல்மயமாக்கப்பட்டுள்ளது. சிமென்ட் உற்பத்தியாளர்கள் பிராந்திய சின்டிகேட்டுகளை அமைத்திருக்கிருர்கள்: தென் ஜெர்மானிய, ரைன் வெஸ்ட்பேலிய, முதலியன. நிர்ணயிக்கப்பட்ட விலைகள் ஏகபோக விலைகள்: ஒரு ரயில் வாகன் சிமென்டின் அடக்கவிலை 180 மார்க்குகளாய் இருக்கிற பொழுது, அதன் விற்பனை விலை 230 முதல் 280 மார்க்குகள்! ஸ்தாபனங்கள், 12 சதவிகிதம் முதல் 16 சதவிகிதம் வரை லாபப் பங்குகள் கொடுக்கின்றன. தாங்கள் லாபப் பங்குகளாகப் பெறுவதைத் தவிர, மேற்கொண்டு பெருத்த லாபங்களை அடைவது நவீன ஊக வாணிக ''மேதைகளுக்கு'' முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது. இப்படிப்பட்ட லாபகரமான தொழிலில் போட்டியைத் தடுப்பதற்கு, ஏகபோகவாதிகள் பற்பல தந்திரங்களைக் கூடக் கையாளுகிருர்கள்: தங்களது தொழிலின் மோசமான நிலையைப் பற்றித் தவருன வதந்திகளை அவர்கள் பரப்புகிருர்கள்; கீழ்க்கண்டவாறு, அநாமதேயமான எச்சரிக்கைகள் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படுகின்றன: ''முதலாளிகளே, சிமென்டுத் தொழிலில் உங்களது மூலதனத்தைப் போடாதீர்கள்!''; கடைசியாக, ''வெளியார்

களின்'' (சின்டிகேட்டுகளில் சேராத) ஸ்தாபனங்களை அவர்கள் விலைக்கு வாங்கி அவர்களுக்கு 60,000, 80,000, இன்னும் 1,50,000 மார்க்குகளும் கூட ''நஷ்ட ஈடு'' தருகிறார்கள்.* ஏகபோகம், ஒரு ''சொற்ப''த் தொகையைக் கொடுத்துப் போட்டித் தொழில் நிலையங்களை விலைக்கு வாங்குவது முதல், அவைகளுக்கு எதிராக வெடி குண்டை ''உபயோகிக்கும்'' அமெரிக்க முறை வரை, எல்லா முறைகளையும் பயன்படுத்திக் கொண்டு தனக்கென்று ஒரு பாதையை எங்கும் போட்டுக்கொள்கிறது.

கார்ட்டல்கள் நெருக்கடிகளைப் போக்கடித்து விட முடியும் என்ற கூற்றானது, முதலாளித்துவத்தை நல்லதாகக் காட்டுவதற்கு எவ்வகையாலும் முயல்கின்ற பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகளால் பரப்பப்படும் ஒரு கட்டுக்கதையாகும். அதற்கு மாறாக, சில தொழிற்கிளைகளில் உண்டாக்கப்பட்டுள்ள ஏகபோகம், முதலாளித்துவ உற்பத்தி முழுவதிலும் இயற்கையாய் அமைந்துள்ள அராஜகத்தை அதிகமாக்குகிறது, தீவிரமாக்குகிறது. பொதுவாக முதலாளித்துவத்தின் குணும்சமாகிய விவசாய வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் உள்ள ஏற்றத்தாழ்வு அதிகமாக்கப்படுகிறது. மிக மிக அதிகமாகக் கார்ட்டல்மயமாக்கப்பட்ட கனத் தொழில் எனப்படுவதன், விசேஷமாக நிலக்கரி, இரும்புத் தொழில்களின், சலுகைமிக்க நிலையானது தொழிலின் இதர கிளைகளில் ''மேலும் அதிகமாக இணைப்பின்மையை'' உண்டாக்குகிறது—இதை, ''ஜெர்மானியப் பெரிய பாங்குகளுக்குத் தொழிலுடன் உள்ள உறவு'' பற்றிய மிகச் சிறந்த நூல்களில் ஒன்றின் ஆசிரியராகிய எய்டல்ஸ் ஒப்புக்கொள்ளுகிறார்.**

''ஒரு பொருளாதார அமைப்பு எவ்வளவு அதிகமாக வளர்ச்சியுற்றிருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக அது அபாய

---

*L. Eschwege, *Zement* in *Die Bank*, 1909, 1, பக்கங்கள் 115ம் அடுத்தவையும், (''பாங்கு'' என்ற சஞ்சிகையில் லூ. எஷ்வேகெ, ''சிமென்ட்''.—ப-ர்.).

** Jeidels, *Das Verhältnis der deutschen Grossbanken zur Industrie mit besonderer Berücksichtigung der Eisenindustrie*, Lpz.,1905, பக்கம் 271 (எய்டல்ஸ், ''ஜெர்மானியப் பெரிய பாங்குகளுக்குத் தொழிலுடன், விசேஷமாக இரும்புத் தொழிலுடன், உள்ள உறவு'', லைப்ஸிக்.—ப-ர்.).

கரமான தொழில் முயற்சிகளில் அல்லது வெளிநாட்டுத் தொழில் முயற்சிகளில், வளருவதற்கு அதிக காலம் தேவைப்படுகிறவைகளில், அல்லது, கடைசியாக, ஓர் இடத்திற்கு மட்டுமே முக்கியமானவைகளில், புகுகிறது'' என்று முதலாளித்துவத்தின் வெட்கமில்லாத பாதுகாவலரான லீப்மன் எழுதுகிருர்.* அதிகமான அபாயமானது, மூலதனத்தின் அபரிமிதமான வளர்ச்சியுடன் முடிவில் சம்பந்தப்பட்டுள்ளது; இந்த அபரிமிதமாக வளர்ச்சியுற்ற மூலதனம், ஒரு வகையில் சொன்னுல், விளிம்புக்குமேல் வழிந்தோடுகிறது, வெளிநாடுகளுக்குப் பெருகுகிறது, இப்படிப் பலவற்றைச் செய்கிறது. அதே சமயத்தில், தொழில் நுட்பத்தின் மிகமிக துரிதமான வளர்ச்சி தேசீயப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளைக் காட்டும் அம்சங்களை வளர்ப்பதையும், அராஜகத்தையும், நெருக்கடிகளையும் மேலும் மேலும் அதிகமாகத் தோற்றுவிக்கிறது. லீப்மன் அதை ஒப்புக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்: ''எல்லாச் சாத்தியப்பாடுகளையும் கணக்கில் கொண்டு பார்க்கிறபொழுது, பொருளாதார முறையின் அமைப்பைக்கூட'' ...மின்சாரத்தையும் விமானப் பறப்பையும்... ''பாதிக்கின்ற மேலும் முக்கியமான தொழில் நுட்பப் புரட்சிகளைச் சீக்கிரம் மனிதகுலம் காணும். தீவிரப் பொருளாதார மாறுதல் ஏற்படும் அத்தகைய காலங்களில் வழக்கமாக, விதியாக, ஒரு பொது ஊகவாணிகம் பெரிய அளவில் வளருகிறது...''**

எல்லா வகையான நெருக்கடிகளும்—பொருளாதார நெருக்கடிகள் மிகமிக அடிக்கடியும், ஆனுல் இவைகள் மட்டுமல்ல — தங்களது முறையாக, உற்பத்திக் குவிதலை உண்டாக்கும் போக்கையும் ஏகபோகம் ஏற்படும் போக்கையும் பிரம்மாண்டமான அளவில் வளர்க்கின்றன. இது சம்பந்தமாக நாம் முன்பு ஏற்கனவே கண்டபடி, நவீன ஏகபோகத்தின் வரலாற்றின் ஒரு திருப்பு மையத்தைக் குறித்த 1900ம் வருடத்திய நெருக்கடியினது முக்கியத்துவத்தைப் பற்றிய எய்டல்

* Liefmann, *Beteiligungs-etc. Ges.*, பக்கம் 434.

** Liefmann, *Beteiligungs-etc. Ges.*, பக்கங்கள் 465-466.

ஸின் கீழ்க்கண்ட கருத்துகள் மிகவும் அறிவூட்டக் கூடியன:

''1900ம் வருடத்திய நெருக்கடி மூலத் தொழில் கிளைகளைச் சேர்ந்த பிரம்மாண்டமான தொழில் நிலையங்களின் பக்கத்திலேயே, இன்று பழசுபட்டவை என்று கருதப்பட்டிருக்கும் முறைகளின்படி அமைக்கப்பட்டிருந்த பல தொழில் நிலையங்களையும், 'தூய' (அதாவது, கூட்டமையாத) தொழில் நிலையங்களையும் மேலும் கண்டது. இத்தொழில் நிலையங்கள் தொழில் கொழிப்பின் காரணமாக எழுந்தன. விலைகளின் வீழ்ச்சியும் கிராக்கியில் ஏற்பட்ட வீழ்ச்சியும், இந்தத் 'தூய' ஸ்தாபனங்களை ஒரு நிச்சயமில்லாத நிலையில் வைத்தன. ஆனால், இவைகள் கூட்டமைந்த பிரம்மாண்டமான ஸ்தாபனங்களைக் கொஞ்சமும் பாதிக்கவே இல்லை, அல்லது மிகக் குறுகிய காலமே பாதித்தன. இதன் விளைவாக, 1900ம் வருடத்தில் நெருக்கடியானது 1873ம் ஆண்டின் நெருக்கடியைக் காட்டிலும், தொழிலில் மிகவும் அதிகமான குவிதலை ஏற்படுத்தியது. பிந்திய நெருக்கடியானது, சிறந்த ஸ்தாபனங்களை ஒரு விதமாகத் தேர்ந்தெடுத்தலைச் செய்தது. ஆயினும், தொழில் நுட்ப வளர்ச்சியின் அக்காலத்திய தரத்தின் காரணமாக, நெருக்கடியிலிருந்து வெற்றிகரமாக மேலெழுந்த ஸ்தாபனங்களை ஏகபோக நிலையில் வைக்க இந்தத் தேர்ந்தெடுப்பினால் முடியவில்லை. நெடுங்காலம் இருக்கக் கூடிய இத்தகைய ஏகபோகமானது, நவீன இரும்பு, எஃகு, மின்சாரத் தொழில்களில், அவைகளின் மிகவும் சிக்கலான தொழில் நுட்பம், பேரளவிலான ஸ்தாபன அமைப்பு முறை, மூலதனத்தின் பெருமை ஆகியவை காரணமாகப் பெரிய அளவிலும், இயந்திர நிர்மாணத் தொழில், உலோகத் தொழிலின் சில கிளைகள், போக்குவரத்து முதலியவைகளில் கொஞ்சம் சிறிய அளவிலும் நிலவுகிறது.''*

ஏகபோகம்! ''முதலாளித்துவ வளர்ச்சியின் நவீன கட்டத்தில்'' இதுதான் முடிவான விஷயம். ஆனால், பாங்குகளின் பங்கை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டால் தற்காலத்திய ஏகபோகங்களின் உண்மையான சக்தியையும் முக்கியத்துவத்தையும் பற்றிக் கொஞ்சமும் போதாத, முழுமையற்ற, குறையான கருத்தையே நாம் கொண்டிருப்போம்.

---

* Jeidels, பக்கம் 108.

## II. பாங்குகளும் அவைகள் ஆற்று புதிய பங்கும்

பாங்குகளின் தலையாய தொழிலும், ஆரம்பத் தொழிலும் பணங்கள் செலுத்துவதில் தரகர்களாகப் பணிபுரிவதாகும். அப்படிச் செய்வதனுல், இயக்கமற்ற பண மூலதனத்தை இயக்கமுள்ளதாக, அதாவது லாபத்தைத் தருகின்ற மூலதனமாக, அவை மாற்றுகின்றன; சகல விதமான பண வருவாய்களேயும் அவை வசூலிக்கின்றன; பிறகு அவைகளை முதலாளித்துவ வர்க்கத்தின் கையில் கொடுக்கின்றன.

பாங்குத் தொழில் வளர்ந்து சிறிய எண்ணிக்கையுள்ள நிறுவனங்களில் அத்தொழில் குவிகிற பொழுது, அடக்கமுள்ள தரகர்கள் நிலையிலிருந்து சர்வ சக்திவாய்ந்த ஏக போகங்களாகப் பாங்குகள் வளருகின்றன; அப்பொழுது, எல்லா முதலாளிகளுடையவும் சிறு உடைமைக்காரர்களுடையவுமான பண மூலதனத்தில் கிட்டத்தட்ட முழுவதையும் தங்களது அதிகாரத்தில் பெறுகின்றன; மேலும் ஒரு குறிப்பிட்ட நாட்டினுடையவும், பல நாடுகளிலுள்ளவையுமான உற்பத்திச் சாதனங்களின் பெரும் பகுதியையும், கச்சாப் பொருள் மூலங்களின் பெரும் பகுதியையும் தங்களது அதிகாரத்தில் பெறுகின்றன. மிகப்பல அடக்கமுள்ள தரகர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய சில ஏகபோகக்காரர்களாக இப்படி மாற்றமடைவதானது, முதலாளித்துவம் முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக வளர்வதற்கான அடிப்படையான நிகழ்முறைகளில் ஒன்றைக் குறிக்கிறது; இக்காரணத்தினுல், பாங்குத் தொழிலின் குவிதலைப்பற்றி நாம் எல்லாவற்றிலும் முதலாகக் கவனிக்க வேண்டும்.

1907-08ல், ஒவ்வொன்றும் பத்து லட்சம் மார்க்குகளுக்கு அதிகமாக மூலதனத்தைக் கொண்ட ஜெர்மன் ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகளினுடைய மொத்த டெபாசிட்டுகள் 700 கோடி மார்க்குகளாக இருந்தன. 1912-13ல் இந்த டெபாசிட்டுகள் ஏற்கனவே 980 கோடி மார்க்குகளாக

ஆகிவிட்டன. ஐந்து ஆண்டுகளில் 40 சதவிகித உயர்வு, உயர்வாகிய 280 கோடியில் 275 கோடி மார்க்குகள், ஒவ்வொன்றும் 1 கோடி மார்க்குகளுக்கும் அதிகமான மூலதனத்தையுடைய 57 பாங்குகளுக்கிடையில் பங்கிடப்பட்டன. பெரிய பாங்குகளுக்கும் சிறிய பாங்குகளுக்குமிடையில் டெபாசிட்டுகள் பங்கிடப் பட்டது கீழ்க்கண்டவாறு இருந்தது:*

மொத்த டெபாசிட்டுகளின் சதவிகிதம்

| | 9 பெரிய பெர்லின் பாங்குகளில் | 1 கோடி மார்க்குகளுக்கு மேல் மூலதனத்தையுடைய இதர 48 பாங்குகளில் | 10 லட்சம் முதல் 1 கோடி மார்க்குகள் வரை மூலதனத்தையுடைய 115 பாங்குகளில் | (10 லட்சம் மார்க்குகளுக்குக் குறைந்த மூலதனத்தைக் கொண்ட) சிறிய பாங்குகளில் |
|---|---|---|---|---|
| *1907—08* | *47* | *32.5* | *16.5* | *4* |
| *1912—13* | *49* | *36* | *12* | *3* |

சிறிய பாங்குகள் பெரிய பாங்குகளால் நெருக்கித் தள்ளப்படுகின்றன; பெரிய பாங்குகளில் ஒன்பது மட்டும், மொத்த டெபாசிட்டுகளில் கிட்டத்தட்டப் பாதியைத் தங்கள் கையில் குவித்து வைத்திருக்கின்றன. ஆனால், பல முக்கியமான விவரங்களை, உதாரணமாக, அநேகச் சிறிய பாங்குகள் யதார்த்தத்தில் பெரிய பாங்குகளின் கிளைகளாக மாற்றப்பட்டது முதலியவை இக்கணக்கில் விட்டு விடப்பட்டுள்ளன; இதைப்பற்றி நாம் பிறகு கூறுவோம்.

*1913*ன் இறுதியில், மொத்தம் டெபாசிட்டுகளாகிய சுமார் *1,000* கோடி மார்க்குகளில், ஒன்பது பெரிய பெர்லின்

---

* Alfred Lansburgh, *Fünf Jahre d. Bankwesen* in *Die Bank*, *1913*, இதழ் *8*, பக்கம், *728*, (ஆல்ப்ரட் லன்ஸ்பர்க், ''ஜெர்மன் பாங்குத் தொழிலின் ஐந்தாண்டுகள்'', ''பாங்கு'' என்ற சஞ்சிகையில்.—ப-ர்.).

பாங்குகளின் டெபாசிட்டுகள் 510 கோடி மார்க்குகள் என்று ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் மதிப்பிட்டார். டெபாசிட்டுகளை மட்டுமின்றி, மொத்த பாங்கு மூலதனத்தையும் கணக்கிலெடுத்துக்கொண்டு, இந்த நூலாசிரியர் எழுதினார்: ''1909ன் இறுதியில், ஒன்பது பெரிய பெர்லின் பாங்குகளும், அவைகளுடன் இணைக்கப்பட்ட பாங்குகளுடன் சேர்த்து, 1,130 கோடி மார்க்குகளின் மேல் ஆதிக்கம் செலுத்தின, அதாவது மொத்த ஜெர்மன் பாங்கு மூலதனத்தில் சுமார் 83 சதவிகிதத்தை ஆண்டன. தனது இணைக்கப்பட்ட பாங்குகளுடன் சேர்ந்து ஏறக்குறைய 300 கோடி மார்க்குகளை ஆளுகின்ற ''ஜெர்மானிய பாங்கு'' (Deutsche Bank), பிரஷ்ய அரசாங்க ரயில்வே நிர்வாகத்துக்குச் சமமாக, பழைய உலகத்தின் மிகமிகப் பெரிய, அதே சமயம் பேரளவில் மையப்பாட்டற்ற மூலதனக் குவியலாக விளங்குகிறது.''*

''இணைக்கப்பட்ட'' பாங்குகளைப் பற்றிக் குறிப்பிட்டதை நாம் வலியுறுத்தியுள்ளோம்; ஏனெனில், இது நவீன முதலாளித்துவக் குவிதலின் மிகமிக முக்கியமான பிரத்தியேகமான குணும்சங்களில் ஒன்ருகும். பெரிய ஸ்தாபனங்கள், குறிப்பாகப் பாங்குகள், சிறியவைகளை நேரடியாக உட்கிரகித்துக் கொள்ளுவது மட்டுமின்றி, மேலும் அவைகளைச் ''சேர்த்துக் கொள்கின்றன''; அவைகளின் மூலதனத்தில் 'ஹோல்டிங்' பெறுவதன் மூலமாகவும், பங்குகளை வாங்குவது அல்லது பரிமாறிக் கொள்வது மூலமாகவும், கடன் உறவுகளின் முறை ஒன்றின் மூலமாகவும், இவ்வாறு பலவழிகள் மூலமாகவும் அவற்றை அடிமைப்படுத்துகின்றன, அவைகளைத் தங்களது ''சொந்த''க் குழுவில் அல்லது, கலைச் சொல்லில் கூறினல், ''கன்சர்னில்'' கொண்டு வருகின்றன. நவீன ''ஹோல்டிங் கம்பெனிகளும் நிதிக் கம்பெனி

---

* Schulze-Gaevernitz, *Die deutsche Kreditbank*, *Grundriss der Sozialökonomik*, Tüb., *1915*, பக்கங்கள் 12, 137. (ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், ''ஜெர்மானியக் கிரெடிட் பாங்குகள்'' ''சமுதாயப் பொருளாதாரத்தின் அடிப்படைகள்'' என்ற வெளியீட்டில், ட்யூபிங்கன்.—ப-ர்.).

களும்''* ஆகியவைகளை வர்ணித்துச் சுமார் 500 பக்கங்கள் கொண்ட, பெருத்த ''படைப்பை''ப் பேராசிரியர் லீப்மன் இயற்றியிருக்கிறார்—துரதிர்ஷ்டவசமாக அடிக்கடி சரியாகக் கிரகித்துக் கொள்ளாத அடிப்படை விவரங்களுடன் மிகவும் மோசமான தரத்தையுடைய ''தத்துவரீதியான'' கருத்துக்களையும் சேர்த்துள்ளார். இந்த ''ஹோல்டிங்'' முறை குவிதல் சம்பந்தமாக எந்த விளைவுகளுக்கு இட்டுச் செல்கிறது என்பது, தாமே பாங்குத் தொழிலில் ''ஈடுபட்டிருப்பவராகிய'' ரீசர் என்பவர் பெரிய ஜெர்மன் பாங்குகளைப் பற்றி எழுதிய நூலில் மிகமிக நன்றாக விளக்கப்படுகிறது. ஆனால், அவரது புள்ளிவிவரங்களைப் பரிசீலனை செய்வதற்கு முன்பு, ''ஹோல்டிங்'' முறையின் ஒரு நிதர்சனமான உதாரணத்தை மேற்கோள் காட்டுவோம்.

''ஜெர்மானிய பாங்கு''க் ''குழு'' பெரிய பாங்குக் குழுக்களில் எல்லாம் மிகமிகப் பெரிதானதாக இல்லாவிட்டாலும், மிகப் பெரியவைகளில் ஒன்றாகும். இந்தக் குழுவிலுள்ள எல்லா பாங்குகளையும் இணைக்கின்ற முக்கியமான கயிறுகளைக் கண்டுபிடிப்பதற்கு, முதலாவது, இரண்டாவது, மூன்றாவது தரமான ''ஹோல்டிங்குகளை''த் தெரிந்துகொள்வது அவசியமாகும், அல்லது இதையே வேறுவிதமாகக் கூறினால், முதலாவது, இரண்டாவது, மூன்றாவது தரமான (''ஜெர்மானிய பாங்கின்'' மேல் சிறிய பாங்குகளின்) சார்பைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். அப்பொழுது கீழ்க்காணும் சித்திரம் நமக்குக் கிடைக்கிறது:**

---

* R. Liefmann, *Beteiligungs-und Finanzierungsgesellschaften. Eine Studie über den modernen Kapitalismus und das Effektenwesen*. 1. Aufl., Jena, 1909, பக்கம் 212.

** Alfred Lansburgh, *Das Beteiligungssystem im deutschen Bankwesen* in *Die Bank*, 1910, 1, பக்கம் 500, (ஆல்ப்ரட் லன்ஸ்பர்க், ''ஜெர்மன் பாங்குத் தொழிலில் 'ஹோல்டிங்' முறை'', ''பாங்கு'' என்ற சஞ்சிகையில்.—ப-ர்.).

| ''ஜெர்மானிய பாங்கு'' ஹோல்டிங்குகளைப் பெற்றிருக்கிறது: | முதல் தரமான சார்பு | இரண்டாந் தரமான சார்பு | மூன்றாந் தரமான சார்பு |
|---|---|---|---|
| நிரந்தரமாக | 17 பாங்குகளில் | அவைகளில் 9 பாங்குகள் 34ல் | அவைகளில் 4 பாங்குகள் 7ல் |
| நிச்சயமற்ற காலத்திற்கு | 5 பாங்குகளில் | — | — |
| சிற்சில சமயங்களில் | 8 பாங்குகளில் | அவைகளில் 5 பாங்குகள் 14ல் | அவைகளில் 2 பாங்குகள் 2ல் |
| **மொத்தம்:** | 30 பாங்குகளில் | அவைகளில் 14 பாங்குகள் 48ல் | அவைகளில் 6 பாங்குகள் 9ல் |

''ஜெர்மானிய பாங்''கின் மீது ''முதல் தரமாக'', ''சிற்சில சமயங்களில்'' சார்ந்துள்ள எட்டு பாங்குகளில் மூன்று அயல்நாட்டு பாங்குகள் சேர்ந்துள்ளன: ஒன்று ஆஸ்திரிய நாட்டினது (வியன்னாவிலுள்ள ''பாங்குகளின் ஐக்கியம்'' — Bankverein), இரண்டு ருஷ்ய நாட்டினவை (''சைபீரிய வர்த்தக பாங்கும்'', ''வெளிநாட்டு வர்த்தகத்திற்கான ருஷ்ய பாங்கும்''). ''ஜெர்மானிய பாங்கு''க் குழு நேரடியாகவும் மறைமுகமாகவும், அரைகுறையாகவும் முழுக்க முழுக்கவும் 87 பாங்குகளைக் கொண்டிருக்கிறது; மொத்த மூலதனம், அதற்குச் சொந்தமானதும், அதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட மற்றவைகளதும்—இருநூறு கோடி மார்க்குகளுக்கும் முந்நூறு கோடி மார்க்குகளுக்கும் இடையில் மதிப்பிடப்படுகிறது.

அத்தகைய ஒரு குழுவுக்குத் தலைமை தாங்கி நிற்கிற ஒரு பாங்கு, அரசாங்கக் கடன்களைத் திரட்டுவது போன்ற அசாதாரணமாகப் பெரியதும் லாபகரமானதுமான நிதி சம்பந்தமான காரியங்களை நடத்துவதற்காகத் தன்னைவிட மிகக்

குறைந்த அளவே சிறிய அரைடஜன் இதர பாங்குகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிற ஒரு பாங்கு, ''தரகர்'' என்கிற பாகத்திற்கு மேலாக ஏற்கனவே வளர்ந்து, விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஏகபோகக்காரர்களது கூட்டமைப்பு ஆகிவிட்டது என்பது வெளிப்படை.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும் ஜெர்மனியில் பாங்குத் தொழிலில் குவிதல் இயக்கம் முன்னேறிய துரிதமானது, கீழ்க்கண்ட புள்ளிவிவரப் பட்டியல் மூலம் காட்டப்படுகிறது. ரீசர் நூலிலிருந்து ஒரு சுருக்கமான வடிவில் இப்பட்டியலை நாம் எடுத்தெழுதுகிறோம்:

**ஆறு பெரிய பெர்லின் பாங்குகள்**

| ஆண்டு | ஜெர்மனியில் கிளைகள் | டெபாசிட்டு பாங்குகளும் நாணய மாற்று பாங்குகளும் | ஜெர்மன் ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகளில் நிரந்தர ஷேறால் பங்குகள் | மொத்த ஸ்தாபனங்கள் |
|---|---|---|---|---|
| 1895 | 16 | 14 | 1 | 42 |
| 1900 | 21 | 40 | 8 | 80 |
| 1911 | 104 | 276 | 63 | 450 |

நாடு முழுவதிலும் பரந்துள்ள கால்வாய்களின் நெருங்கிய வலைப்பின்னல் போன்ற அமைப்பு, எல்லா மூலதனத்தையும் எல்லா வருவாயையும் ஒரே மையத்தில் குவித்து வைத்து, அங்குமிங்கும் சிதறிக் கிடக்கிற ஆயிரமாயிரம் ஸ்தாபனங்களை ஒரே ஒரு தேசீய முதலாளித்துவப் பொருளாதாரமாகவும், பிறகு உலக முதலாளித்துவப் பொருளாதாரமாகவும் மாற்றி அதிவேகத்துடன் வளருவதைப் பார்க்கிறோம். முன்னரே மேற்கோள் காட்டப்பட்ட ஒரு பத்தியில் ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், இன்றைய பூர்ஷ்வா அரசியல் பொருளியலின் தரப்பில் எந்த ''மையப்பாடின்மையை''ப் பற்றிக் கூறுகிறரோ அது, எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டிருக்கிற, ஒப்புநோக்கும்பொழுது முன்பு ''சுதந்திரமான'',

அல்லது மேலும் பொருத்தமாக, ஸ்தல வரம்புக்கு உள்ளடங்கிய பொருளாதாரப் பிரிவுகளை ஒரே ஒரு மையத்திற்குக் கீழ்ப்பட்டதாகச் செய்வதையே உண்மையில் கூறுகிறது. உண்மை நிலையில், அது **மையப்பாடு** ஆகும், ஏகபோக ராக்ஷசர்களின் பங்கையும், முக்கியத்துவத்தையும், அதிகாரத்தையும் அதிகப்படுத்துவதே ஆகும்.

ஒப்புநோக்கில் பழைய முதலாளித்துவ நாடுகளில் இந்த ''பாங்குத் தொழிலின் வலைப்பின்னல்'' மேலும் அதிக நெருக்கமாக இருக்கிறது. கிரேட் பிரிட்டனிலும் அயர்லாந்திலும், 1910ல், மொத்தத்தில் 7,151 பாங்குக் கிளைகள் இருந்தன. நான்கு பெரிய பாங்குகள் தலைக்கு 400 கிளைகளுக்கும் அதிகமாக (447 முதல் 689 வரை) பெற்றிருந்தன; நான்கு பாங்குகள் தலைக்கு 200 கிளைகளுக்கும் அதிகமாகவும், பதினொரு பாங்குகள் தலைக்கு 100க்கும் அதிகமாகவும் பெற்றிருந்தன.

பிரான்சில், **மூன்று** மிகப்பெரிய பாங்குகள், Crédit Lyonnais, Comptoir National, Société Générale* ஆகியவை, தங்களது நடவடிக்கைகளையும், கிளைகளின் வலைப்பின்னலையும் கீழ்க்கண்டவாறு விரித்திருந்தன:**

| | கிளைகள், ஆபீசுகளின் எண்ணிக்கைகள் | | | மூலதனம் கோடி பிராங்குகளில் | |
|---|---|---|---|---|---|
| | மாகாணங்களில் | பாரிசில் | மொத்தம் | சொந்த மூலதனம் | கடன் வாங்கிய மூலதனம் |
| 1870 | 47 | 17 | 64 | 20 | 42.7 |
| 1890 | 192 | 66 | 258 | 26.5 | 124.5 |
| 1909 | 1,033 | 196 | 1,229 | 88.7 | 436.3 |

* ''லியோன் கிரெடிட்'', ''தேசீய டிஸ்கவுண்டு அலுவலகம்'', ''பொது ஸ்தாபனம்''.—ப-ர்.

** Eugen Kaufmann, *Das französische Bankwesen*, Tüb., 1911, பக்கங்கள் 356, 362, (ஒய்கென் கௌப்மன், ''பிரெஞ்சு பாங்கு அமைப்பு'', ட்யூபிங்கன்.—ப-ர்.).

ஒரு பெரிய நவீன பாங்கின் ''தொடர்புகளை''க் காட்டும் பொருட்டு, ''டிஸ்கவுண்டு ஸ்தாபனம்'' ("Disconto-Gesellschaft") என்ற பாங்கினால் அனுப்பப்பட்ட கடிதங்கள், அதற்கு வந்த கடிதங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கையினுடைய கீழ்க்கண்ட புள்ளிவிவரங்களை ரீசர் தருகிறார்; ஜெர்மனியிலும் உலகத்திலும் உள்ள மிகமிகப் பெரிய பாங்குகளில் இது ஒன்றாகும் (1914ல் இதன் மூலதனம் 30 கோடி மார்க்குகளாக இருந்தது):

| | வந்த கடிதங்கள் | அனுப்பப்பட்ட கடிதங்கள் |
|---|---|---|
| 1852 . . . . . . . . . . . . | 6,135 | 6,292 |
| 1870 . . . . . . . . . . . . | 85,800 | 87,513 |
| 1900 . . . . . . . . . . . . | 5,33,102 | 6,26,043 |

''லியோன் கிரெடிட்'' என்ற பெரிய பாரிஸ் பாங்கின் கணக்குகள் 1875ல் 28,535லிருந்து 1912ல் 6,33,539 ஆக உயர்ந்தன.*

மூலதனத்தின் குவிதலும், பாங்கின் மொத்தக் கொடுக்கல் வாங்கல்களும் எவ்வாறு பாங்குகளின் முக்கியத்துவத்தைத் தீவிரமாக மாற்றுகின்றன என்பதை நீண்ட சொற்றொடர்களைவிட இந்த எளிய புள்ளிவிவரங்கள் ஒரு வேளை மேலும் நல்ல முறையில் காண்பிக்கின்றன. சிதறிக்கிடக்கும் முதலாளிகள், மொத்தமாகச் சேர்ந்த ஒரே முதலாளியாக மாற்றப்படுகிறார்கள். ஒரு சில முதலாளிகளின் நடப்புக் கணக்குகளை நிர்வகிக்கிற பொழுது, ஒரு பாங்கு முழுவதும் ஒரு தொழில் நுட்பமான, முழுக்கத் துணை நடவடிக்கையை நடத்துவதுபோல் செய்கிறது. ஆயினும், இந் நடவடிக்கை மிகப்பெரிய அளவில் வளர்ச்சியுறுகிறபொழுது, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஏகபோகக்காரர்கள் வர்த்தக சம்பந்தமானதும் தொழில் சம்பந்தமானதுமான, முதலாளித்துவ சமுதாயம் முழுவதின் எல்லா நடவடிக்கை

---

* Jean Lescure, *L'épargne en France*, P., 1914, பக்கம் 52, (ஜான் லெக்யூர், ''பிரான்சில் சேமிப்புகள்'', பாரிஸ். —ப-ர்.).

களையும் தங்களது ஆதிக்கத்துக்கு உட்படுத்துகிருர்கள் என்பதை நாம் காண்கிறோம்; ஏனெனில், தங்களது பாங்குத் தொழிலின் தொடர்புகள், தங்களது நடப்புக் கணக்குகள், நிதி சம்பந்தமான இதர நடவடிக்கைகள் ஆகியவைகள் வாயிலாக, பல்வேறு முதலாளிகளின் நிதி நிலைமையை முதலில் சரியாகத் தெரிந்து கொள்ளவும், பிறகு அவைகளை அடக்கி நிர்வகிக்கவும் கடன்களைக் கட்டுப்படுத்தி அல்லது விரிவாக்கி, கடன்களைத் திரட்ட வசதி செய்து அல்லது அவைகளைத் தடை செய்து அவர்களைத் தங்களது செல்வாக்குக்கு உள்ளாக்கவும், கடைசியாக அவர்களது விதியை முழுவதும் நிர்ணயிக்கவும், வருவாயை நிர்ணயிக்கவும், மூலதனத்தை அவர்களிடமிருந்து பறிக்கவும் அல்லது அவர்களது மூலதனத்தை விரைவாகவும் மிகப் பெரிய அளவிலும் அதிகரிக்க அவர்களை அனுமதிக்கவும் இன்னும் இவ்வாறு பலவற்றைச் செய்யவும்—வாய்ப்பை அவர்கள் பெறுகிருர்கள்.

பெர்லினிலுள்ள ''டிஸ்கவுண்டு ஸ்தாபனத்தின்'' 30 கோடி மார்க்குகள் மூலதனத்தைப்பற்றி இப்பொழுதுதான் சற்று முன்பு நாம் கூறியிருக்கிறோம். இப்பாங்கினது மூலதனத்தின் இந்த வளர்ச்சியானது, ''ஜெர்மானிய பாங்கு'', ''டிஸ்கவுண்டு ஸ்தாபனம்'' ஆகிய இரண்டு மிகமிகப் பெரிய பெர்லின் பாங்குகளுக்கிடையில் தலைமைக்காக நடக்கின்ற போராட்டத்தின் சம்பவங்களில் ஒன்றேயாகும். 1870ல் முதலில் கூறப்பட்ட பாங்கு ஒரு கற்றுக்குட்டியாகவே இன்னும் இருந்தது; $1^1/_2$ கோடி மார்க்குகள் மூலதனத்தை மட்டுமே அது கொண்டிருந்தது; அதே சமயம், இரண்டாவது பாங்கு 3 கோடி மார்க்குகள் மூலதனத்தைக் கொண்டிருந்தது. 1908ல் முதலாவது 20 கோடி மூலதனத்தையும், இரண்டாவது 17 கோடி மூலதனத்தையும் பெற்றிருந்தன. 1914ல் முதலாவது பாங்கு தனது மூலதனத்தை 25 கோடி ஆக அதிகரித்தது; இரண்டாவதோ, ''ஷாப்ஹாவுஸன் ஐக்கிய பாங்கு'' என்ற இன்னொரு முதல் தரமான பெரிய பாங்குடன் இணைந்து, தனது மூலதனத்தை 30 கோடி ஆக அதிகரித்தது. இயற்கையாக, மேலாதிக்கத்துக்கான இப்போராட்டம் இந்த இரண்டு பாங்குகளுக்குமிடையில் மே

லும் மேலும் அதிகமாக நீடிக்கும் தன்மையுள்ள ''ஒப்பந்தங்கள்'' மேலும் மேலும் அடிக்கடி செய்து கொள்ளப்படுவதோடு கூடவே நடைபெறுகிறது. மிகமிக மிதமான, ஜாக்கிரதையுடன் கூடிய பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதத்தின் வரம்புகளைக் கொஞ்சங்கூட மீறாத ஒரு நோக்கிலிருந்து பொருளாதாரப் பிரச்சினைகளைக் கவனிக்கிற பாங்குத் தொழில் நிபுணர்களைக் கீழ்க்கண்ட ஒரு முடிவை ஏற்றுக்கொள்ளும்படி, பாங்குத் தொழிலின் இந்த வளர்ச்சியானது கட்டுப்படுத்துகிறது.

''டிஸ்கவுண்டு ஸ்தாபனத்தின்'' மூலதனம் 30 கோடி ஆக அதிகரித்ததைப்பற்றி ''பாங்கு'' என்ற ஜெர்மானிய சஞ்சிகை எழுதியது: ''மற்ற பாங்குகளும் இதே பாதையைப் பின்பற்றும். இன்று ஜெர்மனியைப் பொருளாதார ரீதியில் ஆளுகின்ற 300 மனிதர்களில் 50 பெயர், 25 பெயர், அல்லது இன்னும் குறைவானவர்களே நாளடைவில் எஞ்சியிருப்பார்கள். குவிதலை நோக்கிச் செல்லும் இந்த நவீன இயக்கம் பாங்குத் தொழிலுடன் மட்டுமே நின்றுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. தனி பாங்குகளுக்கிடையில் நிலவும் நெருங்கிய உறவுகள், இந்த பாங்குகளால் ஆதரிக்கப்படுகின்ற தொழில் சின்டிகேட்டுகளை இயற்கையாக ஒன்றுபடுத்துகின்றன.... ஒரு நாள் காலையில் நாம் விழித்தெழும் போது ட்ரஸ்டுகளை மட்டுமே கண்டு திகைப்போம். தனியார் ஏகபோகங்களுக்குப் பதிலாக அரசாங்க ஏகபோகங்களை அமைக்க வேண்டியதன் அவசியம் நம் எதிரில் நிற்பதை நாம் காண்போம். ஆயினும், விவகாரங்களின் வளர்ச்சிக்குச் சுயேச்சையான, பங்குகளின் காரணமாகச் சற்றுத் துரிதப்படுத்தப்பட்ட போக்கு விட்டதற்காகத் தவிர, வேறு எதற்காகவும் நாம் நம்மை நிந்தித்துக் கொள்ள வேண்டியதில்லை.''*

பூர்ஷ்வாப் பத்திரிகையியலின் வீரியமின்மைக்கு இது ஓர் உதாரணமாகும்; பூர்ஷ்வா விஞ்ஞானம் பூர்ஷ்வாப் பத்

---

* A. Lansburgh, *Die Bank mit den 300 Millionen* in *Die Bank*, 1914, 1, பக்கம் 426, (ஆ. லன்ஸ்பர்க், ''30 கோடி மூலதனம் கொண்ட பாங்கு'', ''பாங்கு'' சஞ்சிகையில்.—ப-ர்.).

திரிகையியலுக்குக் கீழ்க்கண்ட விஷயத்தில் மட்டும்தான்மாறு படுகிறது: அதாவது, அது பூர்ஷ்வாப் பத்திரிகையியலை விட நேர்மை குறைந்ததாக இருப்பதுடன், விஷயத்தின் சாராம்சத்தை மூடி மறைக்கவும், தனி மரங்களைக் காட்டித் தோப்பை மறைக்கவும் முயற்சி செய்கிறது. குவிதலின் விளைவு களைக் கண்டு ''ஆச்சரியப்படுதல்'', முதலாளித்துவ ஜெர் மனியின் அரசாங்கத்தை அல்லது முதலாளித்துவ ''சமுதா யத்தை'' (''நம்மை'')''நிந்தித்தல்'', ஜெர்மானியக் ''கார்ட் டல்'' நிபுணரான சீர்ஷ்கி அமெரிக்க ட்ரஸ்டுகளைப் பற்றி எப்படி அஞ்சுகிறாரோ அவ்வாறு, ஜெர்மன் கார்ட்டல்களை, அவை ''ட்ரஸ்டுகளைப் போலத் தொழில் நுட்ப, பொருளா தார முன்னேற்றத்தை அதிகமாகத் துரிதப்படுத்த மாட்டா'' என்ற காரணத்தால் அமெரிக்க ட்ரஸ்டுகளைவிடச் ''சிறந்த வை எனத் தேர்ந்தெடுக்கிறாரோ''* அதைப்போன்று, ஸ்டாக்குகளும் பங்குகளும் புகுத்தப்படுதல் குவிதலைத் துரிதப்படுத்தக் கூடும் என்று அஞ்சுதல்—இது வீரியமின்மை இல்லையா?

ஆனால், உண்மைகள் உண்மைகளே. ஜெர்மனியில் ட்ரஸ்டுகள் இல்லை; கார்ட்டல்கள் ''மட்டுமே'' இருக்கின்றன —ஆனால் ஜெர்மனியானது முந்நூறுக்கு மேற்படாத மூல தன அதிபர்களால் ஆளப்படுகிறது. இவர்களது எண்ணிக் கை இடையறாமல் குறைந்து கொண்டே வருகிறது. எவ்வா றாயினும், எல்லா முதலாளித்துவ நாடுகளிலும், அவைகளது பாங்குச் சட்டங்களில் எத்தகைய வித்தியாசங்கள் இருந்த போதிலும், மூலதனக் குவிதலின் போக்கையும் ஏகபோகங் கள் அமைக்கப்படுதலையும் பாங்குகள் மிகவும் தீவிரப் படுத்தவும் துரிதப்படுத்தவும் செய்கின்றன.

''உண்மையில் பாங்குகள் சமுதாய ரீதியாகப் பொது வான கணக்குப் பதிவியல், உற்பத்திச் சாதனங்கள் பங்கிடப் பட்டிருப்பது ஆகியவற்றின் வடிவத்தைக் காட்டுகின் றன; ஆனால், வடிவத்தை மட்டும் தான்'' என்று அரை நூற்றாண்டுக்கு முன் மார்க்ஸ் ''மூலதனத்தில்'' எழுதினார் (ருஷ்ய மொழிபெயர்ப்பு, தொகுதி III, பாகம் II, 144[12]).

---

* S. Tschierschky, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 128.

பாங்கு மூலதனத்தின் வளர்ச்சி பற்றியும், மிகமிகப் பெரிய பாங்குகளின் கிளைகள், அலுவலகங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கையின் அதிகரிப்புபற்றியும், அவைகளின் கணக்குகளின் எண்ணிக்கையின் அதிகரிப்புபற்றியும், இன்னும் சிலவற்றைப் பற்றியும் நாம் எடுத்துக்காட்டியுள்ள புள்ளி விவரங்கள், முதலாளித்துவ வர்க்கம் முழுவதினுடைய இந்தப் ''பொதுவான கணக்குப் பதிவிய''லின் ஸ்தூலமான ஒரு சித்திரத்தைக் கொடுக்கின்றன; முதலாளிகளுடைய கணக்குப் பதிவியலின் சித்திரத்தை மட்டும்கூட அல்ல; ஏனெனில் பாங்குகள் எல்லாவகையான பணவருவாய்களேயும், தாற்காலிகமாகவே ஆயினும், வசூலிக்கின்றன—சிறு உடைமைக்காரர்கள், ஆபீஸ் குமாஸ்தாக்கள், தொழிலாளி வர்க்கத்தின் மிகச் சிறியதொரு மேல் தட்டில் உள்ளவர்கள் ஆகியவர்களுடைய கணக்குப் பதிவியலின் சித்திரத்தையும் அளிக்கின்றன. ''உற்பத்திச் சாதனங்கள் பொதுவாக விநியோகிக்கப்பட்டிருப்பது தான்'', பிரான்சின் மிகமிகப் பெரிய பாங்குகளில் மூன்று முதல் ஆறு வரையும், ஜெர்மனியில் ஆறு முதல் எட்டுவரையும் உள்ளவையும் நூறு, பலநூறு கோடிகளை நிர்வகிப்பவையுமான நவீன பாங்குகளிலிருந்து வடிவவகையில் விளைந்திருப்பதாகும். ஆயினும், சாராம்சத்தில், உற்பத்திச் சாதனங்கள் விநியோகம் எவ்வகையிலும் ''பொதுவாக'' இல்லை; தனிப்பட்ட முறையிலேயே இருக்கிறது: அதாவது, பெரு மூலதனத்தின், முக்கியமாக, மிகப் பெரிய, ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்கு ஏற்றதாகவே இருக்கிறது; இந்தப் பெரிய ஏகபோக மூலதனம், மக்கள் தொகையின் பெரும் பகுதியினர் வறுமையில் வாழுகின்ற, விவசாயத்தின் மொத்த வளர்ச்சியும் தொழில் வளர்ச்சிக்கு மிகமிகப் பின்தங்கியுள்ள, அதே சமயத்தில், தொழிலுக்குள்ளேயேகூடக் ''கனத் தொழில்கள்'' இதரத் தொழிற்கிளைகளிடமிருந்து கப்பம் வசூலிக்கின்ற சூழ்நிலைகளில் இயங்குகிறது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தைச் சமுதாய ரீதியாக்கும் விஷயத்தில், சேமிப்பு பாங்குகளும், தபால் ஆபீசுகளும் பாங்குகளுடன் போட்டியிட ஆரம்பிக்கின்றன, அவை மேலும் அதிகமாக ''மையப்பாடற்றவையாக''

உள்ளன; அதாவது, அவைகளின் செல்வாக்கு இன்னும் அதிக எண்ணிக்கையுள்ள இடங்களுக்கும், மேலும் தூரமான இடங்களுக்கும், மக்கள் தொகையில் மேலும் விரிவான பிரிவினருக்கும் பரவுகிறது. பாங்குகளிலும், சேமிப்பு பாங்குகளிலும் டெபாசிட்டுகளின் ஒப்புநோக்கிய வளர்ச்சியைப் பற்றி ஓர் அமெரிக்கக் கமிஷனால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்கள் இதோ இருக்கின்றன:*

**டெபாசிட்டுகள் (நூறுகோடி மார்க்குகளில்)**

| | இங்கிலாந்து | | பிரான்ஸ் | | ஜெர்மனி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பாங்குகளில் | சேமிப்பு பாங்குகளில் | பாங்குகளில் | சேமிப்பு பாங்குகளில் | பாங்குகளில் | கிரெடிட் சொஸைட்டிகளில் | சேமிப்பு பாங்குகளில் |
| *1880* | *8.4* | *1.6* | ? | *0.9* | *0.5* | *0.4* | *2.6* |
| *1888* | *12.4* | *2.0* | *1.5* | *2.1* | *1.1* | *0.4* | *4.5* |
| *1908* | *23.2* | *4.2* | *3.7* | *4.2* | *7.1* | *2.2* | *13.9* |

சேமிப்பு பாங்குகள் டெபாசிட்டுகளின் பேரில் 4 சதவிகிதம், $4^1/_4$ சதவிகிதம் வீதம் வட்டி செலுத்துவதால், தங்களது மூலதனத்துக்கு ''லாபகரமான'' முதலீடுகளை அவை தேடவேண்டும்; உண்டியல்கள், அடமானப் பத்திரங்கள் முதலியவற்றில் அவை கொடுக்கல் வாங்கல் நடத்த வேண்டும். பாங்குகளுக்கும் சேமிப்பு பாங்குகளுக்கும் இடையிலான எல்லைக் கோடுகள் ''மேலும் மேலும் அழிந்து வருகின்றன''. உண்டியல்களைத் தரகுக்காக மாற்றுதல் போன்ற ''முழுக்க முழுக்க'' பாங்குத் தொழில் சம்பந்தமான வியா

---

* அமெரிக்க *Statistics of the National Monetary Commission*, *Die Bank* (''தேசீயப் பணக் கமிஷனின் புள்ளிவிவரங்கள்'', ''பாங்கு''.—ப-ர்.) சஞ்சிகையில் எடுத்தாளப்பட்டுள்ளன, *1910, 2,* பக்கம் *1200.*

பாரத்தில் சேமிப்பு பாங்குகள் ஈடுபடுவதைத் ''தடை செய்ய வேண்டும்'' என்று (உதாரணமாக, போஹூம், எர்பர்ட் என்ற இடங்களிலுள்ள) வர்த்தகக் கழகங்கள் கோருகின்றன; தபால் ஆபீசுகளின் ''பாங்குத் தொழில்'' நடவடிக்கைகளையும் கட்டுப்பாடு செய்யவேண்டும் என்று அவை கோருகின்றன.* எதிர்பாராத ஒரு திசையிலிருந்து அரசாங்க ஏகபோகம் தங்களுக்கு மேல் இரகசியமாக முன்னேறிவிடும் என்று பாங்குத் தொழிலதிபர்கள் அஞ்சுவது போலத் தெரிகிறது. ஆயினும் இந்த அச்சம், ஒரு வகையில், ஒரே அலுவலகத்தின் இரு இலாக்காத் தலைமையதிகாரிகளுக்கிடையே நடக்கும் போட்டியின் வெளித்தோற்றமே தவிர வேறொன்றுமில்லை என்பது சொல்லாமலே விளங்கும். ஏனெனில், ஒரு புறம் சேமிப்புப் பாங்குகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நூறு கோடிக் கணக்கான தொகைகளும், இறுதியாக, இதே பாங்கு மூலதன அதிபர்களால் தான் உண்மையில் ஆட்சி செய்யப்படுகின்றன; அதே சமயம், மறுபுறம், முதலாளித்துவச் சமுதாயத்தில் அரசாங்க ஏகபோகம், திவாலாகும் நிலையிலுள்ள ஏதோ ஒரு தொழிற்கிளையிலிருந்து கோடீஸ்வரர்களுக்கு வரவேண்டிய வருவாயை அதிகமாக்குகின்ற, உத்தரவாதம் செய்கின்ற ஒரு சாதனமே ஆகும்.

கட்டுப்பாடற்ற போட்டி முதலிடம் வகித்த பழைய முதலாளித்துவத்திலிருந்து, ஏகபோகம் ஆட்சி புரியும் புதிய முதலாளித்துவம் தோன்றிய மாற்றம், மேலும் பல விஷயங்களோடு கூடவே, பங்கு மாற்று நிலையத்தின் முக்கியத்துவத்தின் வீழ்ச்சியினாலும் விளங்குகிறது. ''பாங்கு'' சஞ்சிகை எழுதுகிறது: ''பாங்குகள் புதிய பங்கு வெளியீடுகளில் பெரும்பாகத்தைத் தங்கள் வாடிக்கைக்காரர்களிடையே வினியோகம் செய்ய இயலாமல் முன்பு இருந்த போது, பங்கு மாற்று நிலையம் புழுக்கத்திற்கேற்ற தவிர்க்க முடியாத சாதனமாக இருந்தது. ஆனால், அது நீண்ட காலமாகவே அத்தகைய சாதனமாக இருப்பதை விட்டுவிட்டது.''**

---

* Die Bank என்ற சஞ்சிகையில் அமெரிக்க National Monetary Commission — இன் புள்ளிவிவரங்கள், 1913, பக்கங்கள் 811, 1022; 1914, பக்கம் 713.

** Die Bank, 1914, 1, பக்கம் 316.

" 'ஒவ்வொரு பாங்கும் ஒரு பங்கு மாற்று நிலையம்'—பாங்கு மிகப் பெரிதாக இருக்கும்பொழுது, பாங்குத் தொழிலின் குவிதல் அதிக வெற்றிகரமாக ஏற்படும்பொழுது, இந்தத் தற்கால நீதி மொழி மேலும் உண்மை ஆகிறது.''* ''முன்பு, 1870-79 கால கட்டத்தில், பங்கு மாற்று நிலையம் இளமை மிடுக்கால் பூரித்திருந்த பொழுது'' (1873ல் ஏற்பட்ட பங்கு மாற்று நிலையத்தின் முறிவையும்,[13] கம்பெனி முன்னேற்றப் புரளிகளையும்[14], மற்றவைகளையும், இது ''நுட்பமாக''க் குறிக்கிறது) ''ஜெர்மனியின் தொழில் பெருக்கச் சகாப்தம் தொடங்கியது. ஆனால், இப்பொழுதோ, பாங்குகளும் தொழிலும் 'தாங்களே சுயேச்சையாகச் சமாளித்துக் கொள்ள' முடியும். நம்முடைய பெரிய பாங்குகளுக்குப் பங்கு மாற்று நிலையத்தின் மீதுள்ள ஆதிக்கம்... முழுதும் ஸ்தாபன ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஜெர்மானியத் தொழிலரசின் வெளியீடே தவிர வேறில்லை. இயல்பாக இயங்கும் பொருளாதார விதிகளின் செயற்களத்தை இவ்வாறு குறுக்கிவிட்டால், பாங்குகளின் வாயிலாக உணர்வுபூர்வமான முறைப்படுத்தலின் களத்தைக் கணிசமாக விரிவாக்கி விட்டால், தலைமை தாங்கும் ஒரு சில மனிதர்களின் தேசீயப் பொருளாதாரப் பொறுப்பும் பிரம்மாண்டமான அளவில் அதிகரிக்கிறது.'' இவ்வாறு, ஜெர்மானிய ஏகாதிபத்தியத்தைத் தாங்கிப் பேசுபவரான ஜெர்மானியப் பேராசிரியர் ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் எழுதுகிறார்.** இவர் எல்லா நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளாலும் ஒரு நிபுணராகக் கருதப்படுகிறார். பாங்குகளின் வாயிலாக ''உணர்வுபூர்வமான முறைப்படுத்தல்'' என்பது ''முழுதும் ஸ்தாபனரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள'' சில ஏகபோகக்காரர்களால் பொது மக்கள் கொள்ளையடிக்கப்படுவது தான் என்ற ஒரு ''சிறு விவரத்தை''ப் பூசிமெழுக இவர் முயற்சி

* Dr. Oscar Stillich, *Geld-und Bankwesen*, Berlin, 1907, பக்கம் 169, (டாக்டர் ஆஸ்கார் ஷ்டில்லிஹ், ''பணமும் பாங்கு முறையும்'', பெர்லின்.—ப-ர்.).

** Schulze-Gaevernitz, *Die deutsche Kreditbank, Grundriss der Sozialökonomik* என்ற வெளியீட்டில், Tüb., 1915, பக்கம் 101.

செய்கிருர். பூர்ஷ்வாப் பேராசிரியரின் கடமை, விஷயத்தின் இயந்திரம் முழுவதையும் திறந்து காட்டுவதோ, அல்லது பாங்கு ஏகபோகக்காரர்களின் சூழ்ச்சிகள் அனைத்தையும் அம்பலப்படுத்துவதோ அல்ல; ஆனுல், அவைகளை அழகிய வடிவில் காட்டுவதே யாகும்.

இதே வகையில், மேலும் அதிகம் மதிக்கப்படும் பொருளாதாரவாதியும் தாமே ஒரு பாங்குத் ''தொழிலதிபரும்'' ஆகிய ரீசர் பொருளற்ற சொற்ருெடர்களைக் கொண்டு மறுக்க முடியாத உண்மைகளைத் தட்டிக் கழிக்கிருர்: ''....தேசீயப் பொருளாதாரம் முழுமைக்கும், பத்திரங்களின் புழக்கத்திற்கும் [circulation of securities] மிகமிக அவசியமாக இருக்கிற அந்த அம்சத்தை—தன்னுடன் ஒருங்கு சேருகின்ற பொருளாதார இயக்கங்களின் மிகமிகத் துல்லியமான அளவுகோலாக இருப்பது மட்டுமின்றி, அவைகளை அனேகமாகத் தானுகவே கட்டுப்பாடு செய்கிற கருவியாகவும் இருக்கிற அம்சத்தை, பங்கு மாற்று நிலையம் வரவர அதிகமாக இழந்து கொண்டிருக்கிறது''.*

வேறு வார்த்தைகளில் சொல்லப் போனுல்: பழைய முதலாளித்துவம், கட்டுப்பாடற்ற போட்டியைக் கொண்ட முதளாளித்துவம், தனது தவிர்க்க முடியாத முறைப்படுத்தும் கருவியாகிய பங்கு மாற்று நிலையத்துடன் செத்துக் கொண்டிருக்கிறது. நவீன முதலாளித்துவம், ஏதோ மாற்றமடைகிற, கட்டுப்பாடற்ற போட்டி, ஏகபோகம் ஆகிய இரண்டின் கலப்பைக் கொண்ட வெளிப்படையான அம்சங்கள் உடைய பழைய முதலாளித்துவத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. எதை நோக்கி இந்த நவீன முதலாளித்துவம் ''செல்கிறது'' என்ற கேள்வி இயற்கையாக எழுகிறது; ஆனுல், முதலாளித்துவ அறிஞர்கள் இக்கேள்வியை எழுப்ப அஞ்சுகிருர்கள்.

''முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, கட்டுப்பாடின்றிப் போட்டியிட்டுக் கொண்டிருந்த தொழிலதிபர்கள், 'தொழிலாளிகளின்' உடலுழைப்பைச் சேராத, பொருளாதார

---

* ரீசர், மேற்குறிப்பிட்ட நூல், 4ம் பதிப்பு, பக்கம் 629.

வேலையில் பத்தில் ஒன்பது பங்கைச் செய்தார்கள். தற்காலத்தில், இந்தப் பொருளாதார, மூளை வேலை பத்தில் ஒன்பது பங்கு உத்தியோகஸ்தர்களால் செய்யப்படுகிறது. இந்தப் பரிணும வளர்ச்சியில் பாங்குத் தொழில் முன்னணியில் நிற்கிறது.''* ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் இவ்வாறு ஒப்புக்கொண்டிருப்பது எதை நோக்கி நவீன முதலாளித்துவம், தனது ஏகாதிபத்தியக் கட்டத்திலுள்ள முதலாளித்துவம், செல்கிறது என்ற கேள்விக்கு மீண்டும் இட்டுச் செல்கிறது. — — —

குவிதல் போக்கின் விளைவாக, முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதினுடைய தலைமைப் பீடத்தில் இருக்கிற சில பாங்குகளுக்கிடையில் ஏகபோக உடன்பாட்டை நோக்கிய, பாங்குகளின் ட்ரஸ்ட்டை நோக்கிய போக்கு இயல்பாகவே மேலும் மேலும் துலக்கமாகப் புலனுகிறது, வலுப்பட்டு வருகிறது. அமெரிக்காவில், ஒன்பது பாங்குகள் அல்ல, கோடீஸ்வரர்களான ராக்பெல்லருக்கும் மார்கனுக்கும் சொந்தமான மிகவும் பெரிய இரண்டே பாங்குகள் ஆயிரத்து நூறு கோடி மார்க்குகள் மூலதனத்தை ஆளுகின்றன.** ஜெர்மனியில், நாம் மேலே குறிப்பிட்டபடி, ''டிஸ்கவுண்டு ஸ்தாபனம்'' ''ஷாப்ஹாவுஸன் ஐக்கிய பாங்'' கைத் தன்னுள் அடக்கிக்கொண்டது, பங்கு மாற்று நிலையத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் பத்திரிகையாகிய ''பிராங்பர்ட்டர் ட்ஸைடுங்கினல்''[15] கீழ்க்கண்ட வார்த்தைகளில் விமர்சிக்கப்பட்டது:

''பாங்குகளின் குவிதல் அதிகரித்திருப்பது, பொதுவாகக் கடன்களைப் பெறுவது சாத்தியமாக இருக்கிற ஸ்தாபனங்களின் வட்டத்தைக் குறுகியதாகச் செய்து கொண்டிருக்கிறது; இதன் விளைவாக, சிறிய எண்ணிக்கையுள்ள பாங்குக் குழக்களின்மேல் பெருந் தொழிலின் சார்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தொழிலுக்கும், நிதியாளர்களின் உலகத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு காரணமாக, பாங்கு மூலதனம் தேவைப்படும் தொழிற் கம்பெனிகளின்

---

* Schulze-Gaevernitz, *Die deutsche Kreditbank, Grundriss der Sozialökonomik* என்ற வெளியீட்டில், Tüb., 1915, பக்கம் 151.

** *Die Bank*, 1912, 1, பக்கம் 435.

இயக்கச் சுதந்திரம் கட்டுப்பாடு செய்யப்படுகிறது. இக்காரணத்தால், பாங்குகள் ட்ரஸ்டுகளாக மேலும் மேலும் மாற்றப்படுவதை (ட்ரஸ்டுகளில் ஒன்றிணைவது அல்லது ட்ரஸ்டுகளாக மாறுவதை) பெருந் தொழில் கலப்புணர்வுடன் கவனித்துவருகிறது; போட்டியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், பெரிய பாங்குகளின் தனித்தனியான கன்சர்ன்களுக்கிடையில் சில ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுவதன் ஆரம்பத்தை உண்மையில் நாம் அடிக்கடி கண்டிருக்கிறோம்.''*

பாங்குத் தொழில் வளர்ச்சியில் முடிவான வார்த்தை மீண்டும் மீண்டும் ஏகபோகம் தான்.

பாங்குகளுக்கும் தொழிலுக்கும் இடையில் உள்ள நெருக்கமான தொடர்பைப் பொறுத்தவரையில், சரியாக இந்தத் துறையில் தான் பாங்குகளின் புதிய பங்கானது ஒரு வேளை மிகமிக வன்மையாக உணரப்படுகிறது. ஒரு பாங்கு, ஒரு தொழிலதிபருக்காக ஓர் உண்டியலைக் கழிவு செய்யும் பொழுது ஒரு நடப்புக் கணக்கை ஆரம்பிக்கும் பொழுது, இன்னும் இப்படிச் சிலவற்றைச் செய்யும் பொழுது, இந்நடவடிக்கைகள் தனித்தனியாக எடுத்துப் பார்த்தால், இந்தத் தொழிலதிபரின் சுதந்திரத்தைச் சற்றும் குறைத்து விடுவதில்லை; அந்தப் பாங்கு அடக்கமுள்ள ஒரு தரகன் வேலையைத் தான் செய்கிறது; வேறொன்றையும் அல்ல. ஆனால், இத்தகைய நடவடிக்கைகள் பன்மடங்காகப் பெருகி நிலைத்த பழக்கம் ஆகிவிடும்பொழுது, ஏராளமான மூலதனத் தொகைகளைப் பாங்கு தன் கைகளில் ''குவித்து வைத்துக் கொள்கிற'' பொழுது, குறிப்பிட்ட ஒரு ஸ்தாபனத்தின் நடப்புக் கணக்கு ஒன்றை வைத்திருப்பது, தனது வாடிக்கைக்கார ஸ்தாபனத்தின் பொருளாதார நிலைமையைப் பற்றிய முழுமையான, மேலும் அதிக விளக்கமான விவரங்களை அப்பாங்கு தெரிந்து கொள்வதை—இதுதான் நடக்கிறது—சாத்தியமாக்கும் பொழுது விளைவது என்னவென்றால், தொழில் முதலாளி பாங்கின்மீது மேலும் முழுமையாகச் சார்புடையவனாக ஆகிறான்.

---

* இதை ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் *Grdr. d. S.—Oek.* -இல் மேற்கோள் காட்டுகிறார், பக்கம் 155.

அதே சமயத்தில், பாங்குகளுக்கும் மிகமிகப் பெரிய தொழில், வர்த்தக ஸ்தாபனங்களுக்குமிடையே, ஒரு வகையில் சொன்னுல், சொந்த முறையிலான ஐக்கியம் ஏற்படுகிறது, ஒன்று இன்னென்றுடன் இணைந்து ஒன்று சேர்ந்து விடுவது, பங்குகளை வாங்குவது மூலமாகவும், தொழில், வர்த்தக ஸ்தாபனங்களின் மேற்பார்வை போர்டுகளுக்கும் (அல்லது டைரக்டர்களின் போர்டுகளுக்கும்) பாங்கு டைரக்டர்களை நியமிப்பதன் மூலமாகவும் எதிர் முறையிலும் ஏற்படுகிறது. ஜெர்மானியப் பொருளாதாரவாதியாகிய எய்டல்ஸ், மூலதனத்தின் குவிதல், ஸ்தாபனங்களின் குவிதல் ஆகியவைகளின் இந்த வடிவம் பற்றி மிக மிக விரிவான விவரங்களைத் தொகுத்துள்ளார். ஆறு மிகமிகப் பெரிய பெர்லின் பாங்குகள் 344 தொழிற் கம்பெனிகளில் தங்களது டைரக்டர்களாலும், மற்ற 407ல் தங்களது போர்டு அங்கத்தினர்களாலும், ஆக மொத்தம் 751 கம்பெனிகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. 289 கம்பெனிகளில் அவற்றின் மேற்பார்வை போர்டுகள் ஒவ்வொன்றிலும் அப்பாங்குகள் இரண்டு பிரதிநிதிகளைக் கொண்டிருந்தன, அல்லது அவற்றின் தலைவர் பதவிகளைப் பிடித்திருந்தன, இன்ஷூரன்ஸ், போக்குவரத்து, சிற்றுண்டிச் சாலைகள், தியேட்டர்கள், கலைத் தொழில் முதலிய மிகப் பலவகைப்பட்ட தொழிற் கிளைகளை இந்தத் தொழில், வர்த்தகக் கம்பெனிகளில் நாம் காண்கிருேம். மறு புறம், இந்த ஆறு பாங்குகளின் மேற்பார்வை போர்டுகளில், மிகமிகப் பெரிய தொழிலதிபர்களில், க்ருப் கம்பெனியின் டைரக்டர், பிரம்மாண்டமான கப்பல் ஸ்தாபனமான „Hapag“ (Hamburg-Amerika)* முதலியவைகளின் டைரக்டர்கள் உள்ளிட்ட ஐம்பத்தொரு பேர்கள் (1910ல்) இருந்தார்கள். 1895லிருந்து 1910 வரை, இந்த ஆறு பாங்குகளில் ஒவ்வொன்றும், பல நூற்றுக் கணக்கான (281 முதல் 419 வரை எண்ணிக்கையுள்ள) தொழிற் கம்பெனிகளின் பங்கு வெளியீடுகளிலும் பத்திர வெளியீடுகளிலும் பங்கெடுத்துக் கொண்டது.*

பாங்குகளுக்கும் தொழிலுக்கும் இடையிலுள்ள ‘‘சொந்த

---

* எய்டல்ஸ், ரீசர், மேற்குறிப்பிட்ட நூல்கள்.

முறையிலான ஐக்கியத்துடன்'', இவை இரண்டுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலுள்ள ''சொந்த முறை யிலான ஐக்கியம்'' சேர்க்கப்படுகிறது. எய்டல்ஸ் எழுதுகிறார்: ''அதிகாரிகளுடன் உறவுகள் ஏற்படுவதற்கு வசதி செய்யக்கூடிய(!!) செல்வாக்குள்ள நபர்களுக்கும் மாஜி சிவில் உத்தியோகஸ்தர்களுக்கும் கூட, மேற் பார்வை போர்டுகளில் இடங்கள் தாராளமாக வழங்கப் படுகின்றன''.... ''வழக்கமாக, ஒரு பெரிய பாங்கின் மேற்பார்வை போர்டில், ஒரு பார்லிமென்டு அங்கத்தின ரோ அல்லது பெர்லின் நகரசபை அங்கத்தினர் ஒருவரோ இருக்கிறார்.''

ஆகவே பெரிய முதலாளித்துவ ஏகபோகங்களின், ஒரு வகையில் சொன்னால், நிர்மாணமும் செயல்பாடும் ''இயற் கையானதும்'', ''இயற்கைக்கு மேலானதுமான'' எல்லா வழி களிலும் முழு வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கின் றன. தற்கால முதலாளித்துவச் சமுதாயத்தின் சில நூற்றுக் கணக்கான நிதி மன்னர்களுக்கிடையில் ஒரு வகையான உழைப்புப் பிரிவினை முறையாக அமைந்து வருகிறது:

''தனிப்பட்ட பெரிய (பாங்குகள் முதலியவற்றின் போர்டு களில் அங்கம் வகிப்பவர்களான) தொழிலதிபர்களின் நட வடிக்கையின் எல்லை இவ்வாறு விரிவடைகின்ற அதே சமயத் தில், தனியாகக் குறிப்பிட்ட ஒரே தொழிற் பிரதேசத்துக்கு மாகாணப் பாங்கு டைரக்டர்கள் நியமிக்கப்படுகிற அதே சமயத்தில், பெரிய பாங்குகளின் டைரக்டர்களுக்கிடையில் தனித்துறைப் பாகுபாடு ஒன்று வளருகிறது. பொதுவாகக் கூறினால், பாங்குத் தொழில் முழுவதும் பெரிய அளவில் நடத்தப்படுகிறபொழுது மட்டுமே, குறிப்பாக, தொழி லுடன் விரிந்த தொடர்புகளை அது பெற்றிருக்கிறபொழுது மட்டுமே, இந்தத் தனித்துறைப் பாகுபாடு தோன்றக் கூடும். இந்த உழைப்புப் பிரிவினை இரண்டு நெறிகளில் செல்கிறது: ஒரு புறம், தொழிலுடனான உறவுகள் முழுவதும் ஒரே டைரக்டரிடம், அவரது விசேஷத் தொழிலாக ஒப்படைக் கப்படுகின்றன; மறுபுறம், ஒரே தொழிற் கிளையிலுள்ள அல்லது ஒரே மாதிரியான அக்கறைகளைக் கொண்ட தனிப் பட்ட ஸ்தாபனங்களை அல்லது ஸ்தாபனங்களின் குழு

ஒன்றை மேற்பார்வையிடுதலை ஒவ்வொரு டைரக்டரும் மேற் கொள்கிறார்.''... (தனிப்பட்ட ஸ்தாபனங்கள் ஒழுங்கமைக் கப்பட்ட முறையில் மேற்பார்வையிடப்படும் ஒரு கட்டத்தை முதலாளித்துவம் ஏற்கனவே எட்டியிருக்கிறது.)... ''ஜெர்மன் தொழிலைப் பற்றியும், சில சமயங்களில் மேற்கு ஜெர்மன் தொழிலைப் பற்றி மட்டுமேகூட, ஒருவர் சிறப் பாகப் பயிலுகிறார்'' (மேற்கு ஜெர்மனிதான் ஜெர்மனியின் மிகமிகத் தொழில் பெருக்கமுள்ள பகுதி); ''அன்னிய நாடு கள், அன்னியத் தொழில் ஆகியவைகளுடனான உறவுகள் பற்றியும், தொழிலதிபர்கள், மற்றவர்கள் ஆகியோரின் சகல குணும்சங்கள் பற்றிய செய்திகளைப் பற்றியும், பங்கு மாற்று நிலைய விஷயங்கள் பற்றியும், இன்னும் பலவற்றைப் பற்றியும் மற்றவர்கள் சிறப்பாகப் பயிலுகிறார்கள். மேலும், ஒவ்வொரு பாங்கு டைரக்டரும் ஒரு தனிப்பட்ட இடத்திற்கோ அல்லது ஒரு தனிப்பட்ட தொழிற்கிளைக்கோ அடிக்கடி நியமிக்கப்படுகிறார்; ஒருவர் மின்சாரக் கம்பெனிகளின் மேற் பார்வை போர்டுகளில் முக்கியமாக வேலை செய்கிறார்; இன் னொருவர் இரசாயன, மதுக்காய்ச்சும் அல்லது பீட்சர்க்கரை செய்யும் தொழில் நிலையங்களில் வேலை செய்கிறார், மூன்று மவர் ஒரு சில தனித்தனியான தொழில் ஸ்தாபனங்களில் வேலை செய்கிறார், அதே சமயம் இன்ஷூரன்ஸ் கம்பெனிக ளின் மேற்பார்வை போர்டுகளிலும் வேலை செய்கிறார்.... சுருக்கமாக, பெரிய பாங்குகளின் நடவடிக்கைகளின் அளவு களிலும் பலவகைப்பட்ட தன்மையிலும் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை அடுத்து, அவைகளது தலைவர்களுக்கிடை யில் உள்ள உழைப்புப் பிரிவினையில் அதிகரிப்பு சேருகிறது என்பதைப் பற்றி ஒரு சந்தேகமும் இருக்க முடியாது. அவர் களைத் தூய பாங்கு விவகாரங்களிலிருந்து ஓரளவு விடுவித்து, தொழிலின் பொதுப் பிரச்சினைகளிலும், தனிப்பட்ட தொழிற்கிளைகளின் சிறப்பான பிரச்சினைகளிலும் மேலும் தேர்ந்த நிபுணர்களாகவும், மேலும் தேர்ந்த நிர்ணயகர்த் தர்களாகவும் புரிகின்ற, இவ்வாருக, குறிப்பிட்ட பாங்கி னுடைய தொழில் சம்பந்தப்பட்ட செல்வாக்கு மண்டலத் திற்குள் மேலும் அதிகத் திறமையுடன் அவர்களைச் செயல் படச் செய்கின்ற நோக்கத்துடன் (விளைவுடனும்) இந்த

உழைப்புப் பிரிவினையின் அதிகரிப்பு நடக்கிறது என்று சொல்லலாம். பாங்குகளின் இந்த முறையுடன், தொழிலதிபர்கள், முன்னாள் அதிகாரிகள், விசேஷமாக ரயில்வே ஊழியத்தில் அல்லது சுரங்கத் தொழிலில் முன்பு இருந்தவர்கள் போன்ற, தொழில் துறை விஷயங்களில் நிபுணர்களாக இருக்கிற மனிதர்களைத் தங்களது மேற்பார்வை போர்டுகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கான முயற்சிகளும் உடன் சேர்க்கப்படுகின்றன'', இத்யாதி, இத்யாதி.*

இதே முறையைத் தான் சிறிது வேறு வடிவத்தில் பிரெஞ்சு பாங்குத் தொழிலில் நாம் காண்கிறோம். உதாரணமாக, மிகமிகப் பெரிய மூன்று பிரெஞ்சு பாங்குகளில் ஒன்றான ''லியோன் கிரெடிட்'', ஐம்பதுக்கும் அதிகமான எஞ்சினீயர்கள், புள்ளிவிவரக் கணக்கர்கள், பொருளாதாரவாதிகள், வழக்கறிஞர்கள் முதலியோரை நிரந்தரமாக வேலையில் அமர்த்தியுள்ள நிதி ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை (service des études financières) அமைத்திருக்கிறது. இதற்கு ஆண்டுதோறும் ஆறு முதல் ஏழு லட்சம் பிராங்குகள் செலவாகின்றன. இந்தப் பிரிவு தனக்குள் எட்டு இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது: தொழில் ஸ்தாபனங்களைப் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் ஒன்று விசேஷ கவனம் செலுத்துகிறது, இன்னொன்று பொதுப் புள்ளிவிவரங்களை ஆராய்கிறது; மூன்றாவது ரயில்வே, கப்பல் கம்பெனிகள் பற்றியும், நான்காவது பத்திரங்கள் [securities] பற்றியும், ஐந்தாவது நிதி சம்பந்தமான அறிக்கைகள் பற்றியும், இப்படிப் பலவற்றைப் பற்றியும் சிறப்பாகக் கவனிக்கின்றன.**

ஒரு புறம், பாங்கு மூலதனமும் தொழில் மூலதனமும் மேலும் மேலும் அதிகமாக ஒன்றிணைதலும் அல்லது, நி.இ. புகாரின் பொருத்தமாகக் கூறுவது போல, ஒன்றுகுதலும், மறுபுறம், உண்மையிலேயே ''சர்வ வியாபகமான தன்மையுடைய'' நிலையங்களாகப் பாங்குகள் வளர்தலும். இந்தப் பிரச்சினையைப் பற்றி, இவ்விஷயத்தை மிகமிக நன்றாக

---

* எய்டல்ஸ், மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 156-157.

** *Die Bank*இல் பிரெஞ்சு பாங்குகளைப் பற்றி Eug. Kaufmann எழுதிய ஒரு கட்டுரை, 1909, 2, பக்கம் 851ம் அடுத்த பக்கங்களும்.

ஆராய்ந்துள்ள எழுத்தாளர் எய்டல்ஸ் உபயோகிக்கும் அதே வார்த்தைகளை எடுத்துக் கூறுவது அவசியம் என நாம் நினைக்கிறோம்:

''தொழிலுறவுகளின் ஒட்டு மொத்தத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதன் விளைவாக, தொழில் துறையில் செயல்படுகின்ற நிதி ஸ்தாபனங்களின் **சர்வ வியாபகமான தன்மையை** நாம் பெறுகிறோம். வேறுவகைகளைச் சேர்ந்த பாங்குகளுக்கு மாறாக, தங்கள் ஆதாரம் நழுவிவிடாமல் தடுக்கும் பொருட்டு, பாங்குகள் ஒரு வகையான தொழிலிலோ அல்லது ஒரு தொழிற்கிளையிலோ தனித் தேர்ச்சி பெற வேண்டும் என்று சில சமயங்களில் நூல்களில் வெளியிடப்படும் கோரிக்கைக்கு மாறாக—தொழில் ஸ்தாபனங்களுடன் பிரதேசம், தொழிற்கிளை சம்பந்தமாகத் தங்களுக்கு உள்ள தொடர்புகளை எவ்வளவு இயலுமோ அவ்வளவு பலதரப்பட்டவைகளாக ஆக்குவதற்குப் பெரிய பாங்குகள் முயலுகின்றன; தனி ஸ்தாபனங்களின் சரித்திரரீதியான வளர்ச்சியினால் ஏற்பட்ட, பிரதேசங்களுக்கு இடையில் அல்லது தொழிற் கிளைகளுக்கு இடையில் மூலதனம் விநியோகிக்கப்பட்டிருப்பதில் உள்ள ஏற்றத் தாழ்வை நீக்குவதற்கும் அவைகள் முயலுகின்றன.'' ''தொழிலுடனான தொடர்பைப் பொது நிகழ்ச்சியாக ஆக்குவது ஒரு போக்கு; அதை நிலையானதாகவும் தீவிரமானதாகவும் செய்வது இன்னொரு போக்கு; பெரிய ஆறு பாங்குகளிலும் இந்த இரண்டு போக்குகளும் நிறைவேறியுள்ளன; முழுமையாக அல்ல; ஆனால் ஒரு கணிசமான அளவிலும், ஒரே படியாகவும் நிறைவேறியுள்ளன.''

தொழில் வட்டாரங்களும் வர்த்தக வட்டாரங்களும் பாங்குகளின் ''பயங்கர ஆட்சியை''ப் பற்றி மிக அடிக்கடி புகார் செய்கின்றன. இத்தகைய புகார்களைக் கேள்விப்படுவது ஒன்றும் ஆச்சரியமில்லை; ஏனெனில், கீழ்வரும் உதாரணம் காட்டுவதைப் போல, பெரிய பாங்குகள் ''அதிகாரம் புரிகின்றன''. 1901, நவம்பர் 19ந் தேதி பெர்லினிலுள்ள "D" பாங்குகள் என்று அழைக்கப்படுபவைகளில் (மிகமிகப் பெரிய நான்கு பாங்குகளின் பெயர்கள் "D" என்ற எழுத்துடன் ஆரம்பிக்கின்றன) ஒன்று, ஜெர்மன் மத்திய வடகிழக்கு சிமெண்ட் சின்டிகேட்டின் டைரக்டர்கள் போர்டுக்குக் கீழ்க்

கண்ட கடிதத்தை அனுப்பியது: ''இம்மாதம் 30ந் தேதி நடக்கப் போகிற உங்களது சின்டிகேட்டின் அடுத்த பொதுக் கூட்டம், எங்களுக்குச் சம்மதமில்லாத மாற்றங்களை உங்களது தொழில் நிலையத்தில் உண்டாக்கக் கூடிய திட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கக் கூடும் என்ற சாத்தியப் பாட்டை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இம்மாதம் 18ந் தேதி ஒரு குறிப்பிட்ட செய்தித் தாளில் நீங்கள் வெளியிட்டிருந்த ஒரு நோட்டீஸிலிருந்து இதை நாங்கள் தெரிந்து கொள்கிறோம். இக்காரணத்தால், உங்களுக்கு இது வரை அளிக்கப்பட்ட கடன்களை இப்பொழுதிலிருந்து நிறுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் நாங்கள் இருப்பதற்கு மிகவும் வருந்துகிறோம்.... ஆனால் மேற்கூறப்பட்ட அடுத்த பொதுக்கூட்டம் எங்களுக்குச் சம்மதமல்லாத திட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்காமலிருந்தால், இவ்விஷயமாக எதிர்காலத்திற்கான தகுந்த உத்தரவாதங்களை நாங்கள் பெற்றால், புதிய கடனை அளிப்பது குறித்து உங்களுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு நாங்கள் ஆயத்தமாக இருப்போம்.''*

உண்மையாக, பெரிய மூலதனத்தினால் நசுக்கப்படுவது பற்றிச் சிறிய மூலதனத்தின் பழைய புகார்தான் இது; ஆனால், இந்தச் சம்பவத்தில், ''சிறியவற்றின்'' வரிசைக்கு இழிந்து விட்டது ஒரு சின்டிகேட் முழுவதுமே! சிறிய மூலதனத்துக்கும் பெரிய மூலதனத்துக்கும் இடையிலான பழைய போராட்டம் முன்னேற்றத்தின் புதியதும், அளவிட முடியாதபடி மிக உயர்ந்ததுமான ஒரு கட்டத்தில் மீண்டும் தொடங்கப்படுகிறது. நூறு கோடிக்கணக்கில் செல்வம் படைத்த பெரிய பாங்குகளின் ஸ்தாபனங்கள், முந்தைய கால சாதனங்களுடன் எவ்வகையிலும் ஒப்பிடவே முடியாதவையான சாதனங்களைக் கொண்டு, தொழில் நுட்ப வளர்ச்சியைத் துரிதப்படுத்த முடியும் என்பது புரியக் கூடியதே. உதாரணமாக, பாங்குகள் விசேஷமான தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுகின்றன; ''நட்புடைய'' தொழில் ஸ்தா

---

* Dr. Oscar Stillich, *Geld- und Bankwesen*, Berlin, 1907' பக்கம் 147.

பனங்கள் மட்டுமே இயல்பாக இந்த ஆராய்ச்சிகளின் விளைவுகளால் பயனடைகின்றன. ''மின்சார ரயில்வே ஆராய்ச்சி அசோசியேஷன்'', ''விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சியின் மத்திய பீரோ'' முதலியன இவ்வகையைச் சேர்ந்தவை.

தேசியப் பொருளாதாரத்தின் ஏதோ புதிய நிலைமைகள் உண்டாக்கப்படுகின்றன என்பதைப் பெரிய பாங்குகளின் டைரக்டர்களே பார்க்கத் தவறியிருக்க முடியாது; ஆனால், இந்நிகழ்ச்சிகளின் எதிரில் அவர்கள் வலியற்றிருக்கின்றனர்.

எய்டல்ஸ் எழுதுகிறார்: ''பெரிய பாங்குகளின் மேற்பார்வை போர்டுகளில் அங்கத்தினர் பதவிகளையும், டைரக்டர் பதவிகளையும் வகித்துவருபவர்களின் மாற்றத்தைச் சமீப காலத்தில் கவனித்திருக்கிற எவரும், தொழிலின் பொது வளர்ச்சியில் பெரிய பாங்குகள் தீவிரமாகத் தலையிடுவதானது அவசியமானதும், மேலும் மேலும் அதிகரிக்கும் முக்கியத்துவமுடையதும் ஆகும் என்று கருதுகிற மனிதர்களின் கைகளுக்கு அதிகாரம் சிறிது சிறிதாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதைக் கவனிக்கத் தவறியிருக்க முடியாது. இந்த மனிதர்களுக்கும் பழைய பாங்கு டைரக்டர்களுக்கும் இடையில், தொழில் சம்பந்தமானவையும், அடிக்கடி தனிப்பட்ட தன்மையுள்ளவையுமான கருத்து வேற்றுமைகள் இவ்விஷயத்தைப் பற்றி வளர்ந்து வருகின்றன. தொழிலில் இப்படித் தலையிடுவதினால் பாங்குகள் கிரெடிட் ஸ்தாபனங்கள் என்ற வகையில் பாதிக்கப்படுகின்றனவா என்பதும், கடன்களைத் தவருதில் தரகர்கள் என்ற தங்களது பாத்திரத்துடன் எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத, தொழில் எழுச்சி வீழ்ச்சிகளின் கண்மூடித்தனமான ஆதிக்கத்துக்கு முன்பு எப்பொழுதும் இல்லாதபடி பாங்குகளை உட்படுத்துகின்ற ஒரு செயல் துறையில் புகுவதனால், சிறந்தவை என நிரூபிக்கப்பட்ட கொள்கைகளையும், நிச்சயமான லாபத்தையும் பலியிடுகின்றனவா என்பதும் தான் பிரச்சினை. வயது முதிர்ந்த பல பாங்குத் தலைவர்களின் கருத்து இதுதான்; அதே சமயத்தில், தற்காலப் பெரிய தொழிலுடன் ஒரே நேரத்தில் பெரிய பாங்குகளையும், தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட நவீன பாங்குத் தொழிலையும் தோற்றுவித்த

தேவையைப் போலவே, தொழிலில் தீவிரமாகத் தலையிடு வதும் அவ்வளவு பெரிய ஒரு தேவையாகும் என்று இளைஞர் களில் மிகமிகப் பெரும் பகுதியினர் கருதுகிறார்கள். பெரிய பாங்குகளின் நவீன நடவடிக்கைகளில் திடமான கொள்கை களோ அல்லது நிதர்சனமான குறிக்கோளோ எவையும் இல்லை என்ற ஒரே ஓர் அம்சத்தில் தான் இரண்டு தரப்பின ரும் ஒத்திருக்கின்றனர்.''*

பழைய முதலாளித்துவத்தின் காலம் கடந்து விட்டது. புதிய முதலாளித்துவம் வேறொன்றை நோக்கி மாறிச் செல் வதைக் குறிக்கிறது. ஏகபோகத்தைக் கட்டுப்பாடற்ற போட் டியுடன் ''சமரசப்படுத்தும்'' நோக்கத்துடன் ''திடமான கொள்கைகளையும் நிதர்சனமான குறிக்கோளையும்'' தேடு வது உண்மையில் நம்பிக்கையற்றதாகும். அனுபவமுள்ள மனிதர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்துக்கள், ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், லீப்மன், இன்னும் இவர்களை யொத்த ''தத்துவ ஆசிரியர்கள்'' ''ஸ்தாபன ரீதியில் அமைக் கப்பட்ட'' முதலாளித்துவத்தின் கவர்ச்சிகளைப் பற்றிப் பாடு கின்ற அதிகாரச் சார்புள்ள புகழுரைகளிலிருந்து மிகவும் மாறுபட்ட வகையில் எதிரொலிக்கின்றன.

சரியாக எந்தக் காலகட்டத்தில் பெரிய பாங்குகளின் ''புதிய நடவடிக்கைகள்'' இறுதியாக நிறுவப்பட்டன? இந்த முக்கியமான கேள்விக்குச் சுமாராகப் பொருத்தமான ஒரு விடையை எய்டல்ஸ் தருகிறார்:

''தங்களது புதிய உள்ளுறை, புதிய வடிவங்கள், புதிய உறுப்புகள், அதாவது மத்தியப்படுத்தப்பட்டதும் மத்தியப் படுத்தப்படாததுமான இரண்டு அடிப்படையின் பேரிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பெரிய பாங்குகள் ஆகியவைகளைக் கொண்ட தொழில் ஸ்தாபனங்களுக்கு இடையிலுள்ள தொடர்புகள் அபூர்வமாகவே 1890-1899 ஆகிய காலகட் டத்துக்கு முன்பு ஒரு குணவிசேஷமான தேசீயப் பொருளா தாரத் தோற்றமாக இருந்தன. ஒரு விதத்தில், இந்த ஆரம் பத்தேதி 1897ம் ஆண்டுதான் என்று கூடக் கொள்ளலாம்.

---

* எய்டல்ஸ், மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 183-184.

அப்பொழுதுதான் தொழில் ஸ்தாபனங்களின் பெருத்த 'ஒன்றிணைப்புகள்' நேர்ந்தன; இந்த 'ஒன்றிணைப்புகள்', முதல் தடவையாக, பாங்குகளின் தொழிற் கொள்கைக்கு ஏற்ற வகையில் மையப்பாடற்ற ஸ்தாபன அமைப்பின் புதிய வடிவத்தைப் புகுத்திவிட்டன. இந்தத் துவக்க கட்டத்தை மேலும் பிந்திய தேதியில் வைக்கவும்கூட ஒருவேளை இயலும்; ஏனெனில், 1900ல் உண்டான நெருக்கடிதான், தொழிலின் குவிதல் நிகழ்முறையையும், பாங்குத் தொழிலின் குவிதல் நிகழ்முறையையும் மிகப் பெரிய அளவில் துரிதப்படுத்திற்று, அந்த நிகழ்முறையைப் பலப்படுத்திற்று; தொழிலுடனுன தொடர்பை, பெரிய பாங்குகளின் உண்மையான ஏகபோக மாக முதல் தடவையாக மாற்றிற்று; இத்தொடர்பை மேலும் நெருக்கமானதாகவும், மேலும் தீவிரமானதாகவும் ஆக்கிற்று.''*

இவ்வாருக, பழைய முதலாளித்துவத்திலிருந்து புதிய முதலாளித்துவம் தோன்றிய, பொதுவாக மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து நிதி மூலதனத்தின் ஆதிக்கம் தோன்றிய திருப்பு முனையை இருபதாம் நூற்றுண்டு குறிக்கிறது.

---

* எய்டல்ஸ், மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 181.

## III. நிதி மூலதனமும் நிதி ஆட்சிக் குழுவும்

"தொழில் மூலதனத்தின் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டு வரும் பகுதி, அதை உபயோகிக்கின்ற தொழிலதிபர்களுக்குச் சொந்தமானதல்ல. பாங்குகளின் மூலமாக அவர்கள் அதன் உபயோகத்தைப் பெறுகிருர்கள்; அவர்களுடன் உள்ள உறவுப்படி பாங்குகள்தான் மூலதனத்தின் சொந்தக்காரர்களாக இருக்கின்றன. மறுபக்கம், பாங்கு தனது மூலதனத்தில் மேலும் மேலும் அதிகமான பங்கைத் தொழிலில் போடும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது. இவ்வாருக, பாங்கு முதலாளி மேலும் மேலும் அதிகமான அளவு தொழில் முதலாளியாக மாற்றப்பட்டு வருகிருன். இந்த பாங்கு மூலதனத்தை, அதாவது தொழில் மூலதனமாக உண்மையில் இவ்வாறு மாற்றப்படுகின்ற பணவடிவிலுள்ள மூலதனத்தை, நான் 'நிதி மூலதனம்' என்று கூறுகிறேன்." "நிதி மூலதனம் என்பது, பாங்குகளால் நிர்வகிக்கப்பட்டு, தொழிலதிபர்களால் உபயோகிக்கப்படுகின்ற மூலதனமாகும்" என்று ஹில்பர்டிங் எழுதுகிருர்.*

அதி முக்கியமான ஓர் உண்மையைப் பற்றி இது ஒன்றும் கூருததால் இந்த வரையறுப்பு முழுமையற்றதாகும்: குவிதல் நிகழ்முறை ஏகபோகத்திற்கு இட்டுச் செல்கிற, ஏற்கனவே இட்டுச் சென்றிருக்கிற தீவிர அளவுக்கு உற்பத்தியின் குவிதலிலும் மூலதனத்தின் குவிதலிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி தான் அந்த உண்மையாகும். ஆனல் தனது நூல் முழுவதிலும், உதாரணமாக இந்த வரையறுப்பு எந்த அத்தியாயத்திலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கிறதோ அதற்கு முந்திய இரண்டு அத்தியாயங்களில் **முதலாளித்துவ ஏகபோகங்கள்** ஆற்றும் பங்கை ஹில்பர்டிங் வலியுறுத்துகிருர்.

---

* ரு. ஹில்பர்டிங், "நிதி மூலதனம்", மாஸ்கோ, 1912, பக்கங்கள் 338-339.

உற்பத்திக் குவிதல்; அதிலிருந்து ஏகபோகம் எழுதல்; பாங்குகள் தொழிலுடன் ஒன்றிணைதல் அல்லது ஒன்றுகு தல்—இதுதான் நிதி மூலதன எழுச்சியின் வரலாறு; நிதி மூலதனம் என்ற இப்பதத்தின் சாராம்சம் இப்படிப்பட்டது தான்.

பண்ட உற்பத்தி, தனியார் சொத்து ஆகிய பொது நிலைமைகளின்கீழ், முதலாளித்துவ ஏகபோகங்களின் ''தொழில் நடவடிக்கைகள்'' எவ்வாறு நிதி ஆட்சிக் குழு வின் ஆதிக்கமாகக் கட்டாயம் ஆகிவிடுகின்றன என்பதை நாம் இப்பொழுது வர்ணிக்க வேண்டும். ரீசர், ஷுல்ட்ஸெ-கே வெர்னிட்ஸ், லீப்மன், இன்னும் மற்றைய பூர்ஷ்வா ஜெர் மானிய—ஜெர்மானிய மட்டுமல்ல—விஞ்ஞானத்தின் பிரதி நிதிகள், ஏகாதிபத்தியத்தினுடையவும் நிதி மூலதனத்தி னுடையவும் ஆர்வமிகுந்த ஆதரவாளர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். ஓர் ஆட்சிக் குழு அமைக்கப்படுதலின் ''யந்திர நுட்பம்'', அதனுடைய முறைகள், அதனுடைய ''பாவமற்றதும் பாவமயமானதுமான'' வருவாய்களின் அளவு, பார்லிமெண்டுடன் அதன் தொடர்புகள், இப்படி மேலும் பலவற்றை வெளிக்காட்டுவதற்குப் பதிலாக, அவர் கள் அவைகளை மழுப்பவும், அலங்கரித்து அழகுபடுத்தவும் செய்கிறார்கள். அவர்கள் ஆடம்பரமான, தெளிவற்ற சொற் றொடர்கள் மூலமாகவும், பாங்கு டைரக்டர்களின் ''பொ றுப்புணர்ச்சிக்கு'' விடும் அறைகூவல்கள் மூலமாகவும், பிர ஷ்ய அதிகாரிகளின் ''கடமையுணர்ச்சியை''ப் புகழ்வதன் மூலமாகவும், ''மேற்பார்வை செய்வதற்கும்'', ''ஒழுங்கு படுத்துவதற்கு'' மான சுத்தக் கேலிக்கூத்தான சட்ட மசோ தாக்களின் அற்ப விவரங்களை ஆழ்ந்து பரிசீலிப்பதன் மூல மாகவும், பேராசிரியர் லீப்மன் கண்டுபிடித்துள்ள கீழ்க் கண்ட ''விஞ்ஞான ரீதியான'' வரையறுப்பைப் போலத் தத்துவங்களுடன் விளையாடுவதன் மூலமும் இத்தகைய ''சனி யன்பிடித்த பிரச்சினைகளை''த் தட்டிக்கழிக்கிறார்கள். ''சரக்கு களைத் திரட்டுதல், அவைகளைப் பண்டசாலைகளில் சேர்த்துவைத் தல், வியாபாரத்திற்குக் கிடைக்கும்படிச் செய்தல்—இத்தகைய

நோக்கத்தைக் கொண்ட ஒரு தொழிலே வாணிகமாகும்.''* (பேராசிரியரது கொட்டை எழுத்துக்கள்)... கொடுக்கல் வாங்கலைப் பற்றி ஒன்றுமே தெரியாத ஆதிமனிதன் காலத்தில் வாணிகம் இருந்தது என்பதும், சோஷலிஸத்தின் கீழும் அது நிலவும் என்பதும் இதிலிருந்து பெறப்படும் முடிவாகும்!

ஆனால், நிதி ஆட்சிக் குழுவின் பயங்கர ஆதிக்கத்தைப் பற்றிய பயங்கரமான உண்மைகள் மிகவும் பகிரங்கமாகத் தெரிகின்றன ஆதலால் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும், அமெரிக்காவிலும், பிரான்சிலும், ஜெர்மனியிலும், ஓர் இலக்கியமே எழுந்துள்ளது: அது பூர்ஷ்வாப் பார்வையிலிருந்து எழுதப்பட்டிருந்தாலும் இந்த ஆட்சிக் குழுவைப் பற்றிய ஓரளவு உண்மையான சித்திரத்தையும்—இயற்கையாக பிலிஸ்டைன் ரீதியான—விமர்சனத்தையும் தருகின்றது.

நாம் முன்பு ஏற்கனவே சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ள ''ஹோல்டிங் முறை'' அஸ்திவாரக் கல்லாக ஆக்கப்பட வேண்டும். இவ்விஷயத்திற்கு ஒருவேளை மற்றவர்களைக் காட்டிலும் முன்னதாகக் கவனத்தை இழுத்தவராகிய ஹெய்மன் என்ற ஜெர்மானியப் பொருளாதாரவாதி அதன் சாராம்சத்தைப் பற்றிக் கீழ்க்கண்ட முறையில் வருணிக்கிறார்:

''ஸ்தாபனத் தலைவன் முதன்மையான கம்பெனியை'' (உண்மையில்: ''தாய்க் கம்பெனியை'') ''ஆளுகிறான்; அது தனது முறையாகத் தன்னைச் சார்ந்த கம்பெனிகளின்'' (''பிள்ளைக் கம்பெனிகளின்'') ''மீது ஆட்சி செலுத்துகிறது. இந்தக் கம்பெனிகள் 'பேரப் பிள்ளைக் கம்பெனிகளை' ஆளுகின்றன, இத்யாதி. இம்முறையில், ஓரளவு சிறிய மூலதனத்தைக் கொண்டு உற்பத்தியின் மிகப் பெரிய பகுதிகளை ஆளுவது சாத்தியமாக இருக்கிறது. உண்மையில், மூலதனத்தில் 50 சதவிகிதத்தைப் பெற்றிருப்பது ஒரு ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனியை அடக்கி ஆளுவதற்கு எப்பொழுதுமே போதுமானது என்றால், 'பேரப் பிள்ளைக் கம்பெனிகளில்' எண்பது லட்சம் மூலதனத்தை அடக்கி ஆளுவதற்கு ஸ்தாபனத்தின் தலைவனுக்குப் பத்து லட்சம்தான் தேவைப்படு

* R. Liefmann, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 476.

கிறது. மேலும், இந்தப் பின்னலை விஸ்தரித்தால், பத்து லட்சத்தைக் கொண்டு நூற்று அறுபது லட்சம், முந்நூற்றிருபது லட்சம் முதலியவைகளை அடக்கியாளுவது சாத்தியமாக இருக்கிறது.''*

உண்மையில், ஒரு ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனியின் விவகாரங்களைச் செலுத்துவதற்கு அக்கம்பெனியின் பங்குகளில் 40 சதவிகிதத்தைப் பெற்றிருப்பது போதுமானது** என்று அனுபவம் காட்டுகிறது. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சிறிய, சிதறிக்கிடக்கிற பங்குதாரர்களுக்குப் பொதுக் கூட்டங்களுக்கு வருதல் முதலியன நடை முறையில் சாத்தியமில்லாமற்போகிறது. பங்குகளைப் பெற்றிருக்கும் உரிமை ''ஜனநாயக முறையாக்கப்படுதலி''லிருந்து ''மூலதனம் ஜனநாயக முறையாக்கப்படுதலும்'' சிறிய அளவு உற்பத்தியின் பங்கும் முக்கியத்துவமும் அதிகரித்தலும் விளையும் என்று பூர்ஷ்வாக் குதர்க்கவாதிகளும் சந்தர்ப்பவாதிகளான ''நாமும் சோஷல்-டெமாக்ராட்டுகள்'' என்று அழைக்கப்படுபவர்களும் எதிர்பார்த்த (அல்லது தாங்கள் எதிர் பார்ப்பதாகச் சொன்ன) போதிலும், உண்மையில் அது நிதி ஆட்சிக் குழுவின் சக்தியை அதிகரிக்கும் வழிகளில் ஒன்றாகும். இதனால்தான், மேலும் முன்னேறிய, அல்லது அதிகம் முதிர்ந்த, மேலும் ''அனுபவம் பெற்றுள்ள'' முதலாளித்துவ நாடுகளில் குறைந்த மதிப்புடைய பங்குகளை வெளியிடுவதைச் சட்டம் அனுமதிக்கிறது. ஜெர்மனியில், ஓராயிரம் மார்க்குகளுக்குக் குறைந்த மதிப்புடைய பங்குகளை வெளியிடுவதைச் சட்டம் அனுமதிக்கவில்லை; ஆகவே, ஒரு பவுன் பங்குகள்(=20 மார்க்குகள், சுமார் 10 ரூபிள்கள்) வெளியிடப்படுவதை அனுமதிக்கின்ற இங்கிலாந்தை ஜெர்மானிய நிதியதிபர்கள் பொறாமையுடன் பார்க்கிறார்கள். ''ஒரு பவுன் பங்கு தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதாரம்''*** என்று ஜெர்மனியில் மிகப் பெருந் தொழி

---

* Hans Gideon Heymann, *Die gemischten Werke im deutschen Grosseisengewerbe*, St. 1904, பக்கங்கள் 268-269.

** Liefmann, *Beteiligungsges. etc.* 1வது பதிப்பு, பக்கம் 258.

*** Schulze-Gaevernitz, *Grdr.d.S.-Oek.* என்ற வெளியீட்டில், V, 2, பக்கம் 110.

லதிபர்களில் ஒருவரும், ''நிதி மன்னர்களில்'' ஒருவருமான சீமென்ஸ் 1900ம் ஆண்டு ஜூன் 7ந் தேதி ரைஹ்ஸ்டாக்கில் கூறினர். ருஷ்ய மார்க்ஸீயத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகக் கருதப்படுபவரும், குறிப்பிட்ட ஒரு தேசத்தின் ஒரு கெட்ட பழக்கமே ஏகாதிபத்தியம் என்று நம்புபவருமான மதிப்பிழந்த ஓர் எழுத்தாளரைக்[16] காட்டிலும், இந்த வியாபாரி ஏகாதிபத்தியத்தைப் பற்றி மிகவும் ஆழ்ந்த, மேலும் அதிக ''மார்க்ஸீய ரீதியான'' அறிவைப் பெற்றிருக்கிறர் என்பது புலப்படுகிறது....

ஆனுல், ''ஹோல்டிங் முறை'' ஏகபோகக்காரர்களின் சக்தியை மிக ஏராளமாக அதிகரிப்பதற்கு உதவி புரிவது மட்டுமின்றி, சீர்கேடானவையும், கீழ்த்தரமானவையுமாகிய எல்லா விதமான தந்திரங்களையும் தண்டனையின்றிக் கையாண்டு பொது மக்களை ஏமாற்றுவதற்கும் அது வழி செய்கிறது. ஏனெனில், ''தாய்க் கம்பெனியின்'' டைரக்டர்கள் ''பிள்ளைக் கம்பெனிக்கு''ச் சட்டபூர்வமாகப் பொறுப்பாளிகள் அல்லர். அப்''பிள்ளைக் கம்பெனி'' ''சுதந்திரமானதாக''க் கருதப்படுகிறது; ஆகவே, அதைச் சாதனமாகக் கொண்டு அவர்கள் எதையும் ''சாதித்துக் கொள்ள'' முடியும். ''பாங்கு'' என்ற ஜெர்மானியச் சஞ்சிகையின் மே 1914 இதழிலிருந்து எடுக்கப்பட்ட ஓர் உதாரணம் இதோ இருக்கிறது:

''கேசெலிலுள்ள 'ஸ்பிரிங் எஃகுக் கம்பெனி' ஜெர்மனியிலேயே மிகமிக லாபகரமான நிறுவனங்களில் ஒன்ருகச் சில ஆண்டுகளுக்கு முன்பு கருதப்பட்டது. மோசமான நிர்வாகத்திஞல் அதன் லாபப் பங்குத் தொகைகள் 15 சதவிகிதத்திலிருந்து சூன்யமாகச் சரிந்து போயின. அக்கம்பெனியின் போர்டு, பங்குதாரர்களைக் கலந்து ஆலோசிக்காமல், தனது 'பிள்ளைக் கம்பெனி'களில் ஒன்ருகிய, சில லட்சம் மார்க்குகளே பெயரளவு மூலதனம் கொண்டிருந்த 'ஹாசியா'வுக்கு அறுபது லட்சம் மார்க்குகளைக் கடனுகக் கொடுத்திருந்ததாகத் தெரிகிறது. 'தாய்க் கம்பெனி'யின் மூலதனத்தைப் போல் மூன்று மடங்கு பெரிய தொகையைக் கொண்ட இந்தக் கடனைப் பற்றி அதன் இருப்பு நிலைக் குறிப்பில் ஒன்றுமே கூறப்படவில்லை. இந்த மௌனம் சட்டரீதியானதே; இது

கம்பெனிச் சட்டத்தின் எந்த அம்சத்தையும் மீருத காரணத்திஞல் இரண்டு ஆண்டுகள் முழுவதும் இதை அமுக்கிவைக்க முடிந்தது. பொறுப்பு வாய்ந்தவராக அந்தப் பொய்யான இருப்பு நிலைக் குறிப்பில் கையெழுத்திட்டிருந்த மேற்பார்வை போர்டின் தலைவர் தான் கேசெல் வாணிகச் சங்கத்தின் தலைவராக இருந்தார்; இன்றும் இருக்கிருர். 'ஹாசியா'வுக்குக் கொடுக்கப்பட்ட கடனைப் பற்றி வெகு நாட்களுக்குப் பிறகு, அது ஒரு தவறுதல் என்று நிரூபிக்கப்பட்டுவிட்ட பொழுது''... (தவறுதல் என்ற வார்த்தையை மேற்கோள் குறிகளுக்குள் எழுத்தாளர் வைக்க வேண்டும்)... '' 'ஸ்பிரிங் எஃகுக் கம்பெனியின்' பங்குகள், நிலவரமறியும் நிலையில் இருந்தவர்கள் அப்பங்குகளைத் தொலைத்து ஒழித்துக் கொண்டிருந்த காரணத்தால், கிட்டத்தட்ட 100 சதவிகிதம் சரிந்த பொழுதுதான் பங்குதாரர்கள் கேள்விப்பட்டார்கள்...

...''ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளில் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்ற, இருப்பு நிலைக் குறிப்பு ஜாலவித்தையின் இந்த எடுத்துக்காட்டான உதாரணம் அவைகளின் டைரக்டர்கள் போர்டுகள் தனிப்பட்ட தொழிலதிபர்களைக் காட்டிலும் மிகவும் கவலையற்ற மனதுடன் ஆபத்து நிறைந்த நடவடிக்கைகளை ஏன் மேற்கொள்ளுகின்றன என்பதை விளக்குகிறது. இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கும் நவீன முறைகள், நிச்சயமில்லாத நடவடிக்கைகளைச் சாதாரணப் பங்குதாரரிடமிருந்து மறைப்பதைச் சாத்தியமாக்குவது மட்டுமின்றி, அவைகளோடு முக்கியமாகச் சம்பந்தப்பட்ட மனிதர்கள் உரிய காலத்தில் தங்கள் பங்குகளை விற்பதன் மூலம், வெற்றிதராத ஊக வாணிகத்தின் விளைவிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் இடங் கொடுக்கின்றன; அதே சமயத்தில், தனிப்பட்ட தொழிலதிபனே, தான் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் தானே பிணையாகிருன்...

''அநேக ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளின் இருப்பு நிலைக் குறிப்புகள் மத்திய காலத்தைச் சேர்ந்த பாலிம்ப்செஸ்டுகளை நமக்கு நினைவூட்டுகின்றன. பாலிம்ப்செஸ்டுகளில், பத்திரத்தின் உண்மையான பொருளைக் கொடுக்கும் மூலவாசகத்தைக் கண்டுபிடிப்பதற்கு, அதன் மேல் எழுதப்

பட்டுள்ள வாசகத்தை முதலில் சுரண்டிவிட வேண்டும்.'' (பாலிம்ப்செஸ்டுகள் என்பவை மூலவாசகம் சுரண்டப்பட்டு அதன் மேல் இன்னொரு வாசகம் எழுதப்பட்டுள்ள தோல் பத்திரங்கள்.)

''இருப்பு நிலைக் குறிப்புகளைப் புரியாத புதிராக ஆக்குவதற்கு ஏற்ற மிகமிக எளிமையானதும், எனவே மிகமிக அடிக்கடி கையாளப்படுவதுமான வழிமுறை 'பிள்ளைக் கம்பெனிகள்' நிறுவியும் அல்லது அப்படிப்பட்டவைகளைச் சேர்த்தும் ஒரே நிலையத்தைப் பல பகுதிகளாகப் பிரிப்பதுதான். சட்ட ரீதியானதும் சட்ட விரோதமானதும் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்கு இம்முறையினால் ஏற்படும் அனுகூலங்கள் மிகமிக வெளிப்படை. ஆகவே, தற்காலத்தில் இம்முறையைக் கையாளாத பெரிய கம்பெனிகள் விதிவிலக்காகவே இருக்கின்றன.''*

இம்முறையை விரிவான அளவில் உபயோகப்படுத்துகிற பிரம்மாண்டமான ஏகபோகக் கம்பெனியின் ஓர் உதாரணமாக, பிரசித்தி பெற்ற ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனியை'' (A.E.G. இதைப் பற்றிப் பிறகு நாம் மீண்டும் கூறுவோம்) ஆசிரியர் மேற்கோள் காட்டுகிறார். 1912ல் இந்தக் கம்பெனி **175** முதல் **200** வரையான இதரக் கம்பெனிகளில் பங்குகளைக் கொண்டிருந்ததாகவும், அவைகளை இயற்கையாக அடக்கியாண்டதாகவும், இவ்வாறாகச் சுமார் **150 கோடி மார்க்குகளைக்** கொண்ட மொத்த மூலதனத்தை நிர்வகித்து வந்ததாகவும் கணிக்கப்பட்டது.**

நல்லெண்ணங்கொண்ட பேராசிரியர்களும் அதிகாரிகளும்—அதாவது, முதலாளித்துவத்தைக் காக்கவும் அலங்கரிக்கவும் வேண்டிய நல்லெண்ணம் மனதில் ஊறப் பெற்றவர்கள்—பொது மக்களுக்குப் பிரசங்கம் புரியும் விஷயங்களாகிய கட்டுப்பாட்டு விதிகள், இருப்பு நிலைக் குறிப்புகளைப்

---

* L. Eschwege, *Tochtergesellschaften*, *Die Bank*, 1914, 1, பக்கம் 545, (லூ. எஷ்வேகெ, ''பிள்ளைக் கம்பெனிகள்'', ''பாங்கில்''.—ப-ர்.).

** Kurt Heinig, *Der Weg des Elektrotrusts*, *Neue Zeit*, 1912, 30. Jahrg., 2, பக்கம் 484 (குர்ட் ஹைனிஹ், ''மின்சார ட்ரஸ்ட்டின் பாதை'', ''நோயே ட்ஸைட்''டில், 1912, 30வது ஆண்டு.—ப-ர்.).

பிரசுரித்தல், ஒரு வரையறுக்கப்பட்ட வடிவில் இருப்பு நிலைக் குறிப்புகளைத் தயாரித்தல், கணக்குகளைத் தணிக்கை செய்தல், முதலிய எல்லாம் பயனின்றி இருக்கின்றன. ஏனெனில் தனியார் சொத்து புனிதமானது; பங்குகளை வாங்கவோ, விற்கவோ, பரிவர்த்தனை செய்து கொள்ளவோ அல்லது அடகுவைக்கவோ, முதலிய எதைச் செய்யவும் யாரையும் தடை செய்யக்கூடாது.

பெரிய ருஷ்ய பாங்குகளில் எவ்வளவு தூரம் இந்த ''ஹோல்டிங் முறை'' வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை எ. அகாட் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களைக் கொண்டு முடிவு செய்யலாம். இவர், ருஷ்ய-சீன பாங்கின் ஓர் அதிகாரியாகப் பதினைந்து ஆண்டுகள் இருந்தார்; மே 1914ல் ஒரு புத்தகத்தை வெளியிட்டார்; அப்புத்தகத்துக்குப் ''பெரிய பாங்குகளும் உலக மார்க்கெட்டும்''* என்று ஓரளவு சரியற்ற தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய ருஷ்ய பாங்குகளை இரண்டு முக்கியத் தொகுப்புகளாக ஆசிரியர் பிரிக்கிறார்: அ) ''ஹோல்டிங் முறை''யின்கீழ் அடங்கும் பாங்குகள், ஆ) ''சுதந்திர'' பாங்குகள்—அன்னிய பாங்குகளிலிருந்து சுதந்திரமாக இருப்பதைக் குறிப்பதற்குச் ''சுதந்திரம்'' என்ற வார்த்தை மனம் போன போக்கில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது; சம்பந்தப்பட்ட நாட்டினது மிகப் பெரிய அன்னிய பாங்குகளின் ''ஹோல்டிங்குகளையும்'' ஆதிக்கத்தையும் கருத்தில் கொண்டு, முதல் தொகுப்பை 1) ஜெர்மன் ஹோல்டிங்குகள், 2) பிரிட்டிஷ் ஹோல்டிங்குகள், 3) பிரெஞ்சு ஹோல்டிங்குகள் என மூன்று உப-தொகுப்புகளாகப் பிரிக்கிறார் ஆசிரியர். பாங்குகளின் மூலதனத்தை ''உற்பத்திகரமாக'' முதலீடு செய்யப்பட்டது (தொழில்

---

* E.Agahd, *Grossbanken und Weltmarkt. Die wirtschaftliche und politische Bedeutung der Grossbanken im Weltmarkt unter Berücksichtigung ihres Einflusses auf Russlands Volkswirtschaft und die deutsche-russischen Beziehungen,* Berl., 1914 (எ. அகாட், ''பெரிய பாங்குகளும் உலக மார்க்கெட்டும். உலக மார்க்கெட்டுமீது பெரிய பாங்குகளின் பொருளாதார, அரசியல் முக்கியத்துவம், ருஷ்ய தேசீயப் பொருளாதாரத்தின்மீதும் ஜெர்மானிய-ருஷ்ய உறவுகள் மீதும் அப்பெரிய பாங்குகளின் செல்வாக்கு குறித்து'', பெர்லின்.—ப-ர்.).

*நிறுவனங்களிலும் வாணிக நிறுவனங்களிலும்) என்றும், ''ஊக வாணிக முறையில்'' முதலீடு செய்யப்பட்டது (பங்கு மாற்று நிலையம், நிதி சம்பந்தமான நடவடிக்கைகளிலும்) என்றும் ஆசிரியர் பிரிக்கிறார். முதலாளித்துவத்தின்கீழ் முதல் வகையைச் சேர்ந்த முதலீட்டை இரண்டாவது வகையைச் சேர்ந்த முதலீட்டிலிருந்து வேறுபடுத்துவதும், இரண்டாவது வகையைத் தொலைத்து விடுவதும் சாத்தியமே என்று தனது குட்டி பூர்ஷ்வா-சீர்திருத்தவாதப் பார்வை காரணமாக எண்ணிக் கொண்டு இவ்வாறு அவர் பகுக்கிறார்.*

*அவர் அளித்துள்ள புள்ளிவிவரங்கள் இதோ இருக்கின்றன:*

**பாங்கு உடைமைகள்**
**(அக்டோபர்-நவம்பர், 1913க்கான அறிக்கைகளின்படி)**
**10 லட்சம் ரூபிள்களில்**

| ருஷ்ய பாங்குகளின் தொகுப்புகள் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் | | |
|---|---|---|---|
| | உற்பத்திகரமாக | ஊக வாணிக முறையில் | மொத்தம் |
| அ) 1. நான்கு பாங்குகள்: சைபீரிய வர்த்தக, ருஷ்ய, சர்வதேசீய, டிஸ்கவுண்டு பாங்கு. | 413.7 | 859.1 | 1,272.8 |
| அ) 2. இரண்டு பாங்குகள்: வாணிக - தொழில், ருஷ்ய - பிரிட்டிஷ் . . | 239.3 | 169.1 | 408.4 |
| அ) 3. ஐந்து பாங்குகள்: ருஷ்ய - ஆசிய, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பிரைவேட், அசோவ்-டான், யூனியன் மாஸ்கோ, ருஷ்ய-பிரெஞ்சு வாணிக . . . . . . | 711.8 | 661.2 | 1,373.0 |
| (11 பாங்குகள்) **மொத்தம்:** அ)= | 1,364.8 | 1,689.4 | 3,054.2 |

| ருஷ்ய பாங்குகளின் தொகுப்புகள் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் | | |
|---|---|---|---|
| | உற்பத்தி கரமாக | ஊக வாணிக முறையில் | மொத்தம் |
| ஆ) எட்டு பாங்குகள்: மாஸ்கோ வியாபாரிகள், வோல்கா-காமா, ஜங்கர் அண்ட் கம்பெனி, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் வாணிக (முன்பு வாவெல்பர்க்), மாஸ்கோவின் பாங்கு (முன்பு ரியாபுஷீன்ஸ்கிய்), மாஸ்கோ டிஸ்கவுண்ட், மாஸ்கோ வர்த்தக, மாஸ்கோ பிரைவேட் | 504.2 | 391.1 | 895.3 |
| (19) பாங்குகள் மொத்தம் . . . | 1,869.0 | 2,080.5 | 3,949.5 |

இந்தப் புள்ளிவிவரங்களின்படி, கிட்டத்தட்ட நானூறு கோடி ரூபிள்களைக் கொண்ட பெரிய பாங்குகளின் "நடைமுறை" மூலதனத்தில் முக்காலுக்கும் அதிகமானது, முந்நூறு கோடிக்கும் மேற்பட்டது, அன்னிய பாங்குகளின் "பிள்ளைக் கம்பெனிகளாகவே" உண்மையில் இருக்கின்ற பாங்குகளுக்குச் சொந்தமாயிருந்தன; இவை முக்கியமாக பாரிஸ் பாங்குகளின் (பிரசித்திபெற்ற மும்மூர்த்திகள்: "பாரிஸ் யூனியன்", "பாரிஸ் நெதர்லாந்து", "சொசைட்டி ஜெனரல்") "பிள்ளைக் கம்பெனிகளாகவும்", பெர்லின் பாங்குகளின் (குறிப்பாக "ஜெர்மானிய பாங்கு", "டிஸ்கவுண்டு ஸ்தாபனம்") "பிள்ளைக் கம்பெனிகளாகவும்" இருக்கின்றன. மிகமிகப் பெரிய ருஷ்ய பாங்குகளில் இரண்டான "ருஷ்ய பாங்கும்" ("வெளிநாட்டு வர்த்தகத்திற்கான ருஷ்ய பாங்கு"), "சர்வதேசீய பாங்கும்" ("செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேசீய வர்த்தக பாங்கு") 1906க்கும் 1912க்கும் இடையில் தங்களது மூலதனத்தை 440 லட்சம் ரூபிளி

லிருந்து 890 லட்சம் ஆகவும், தங்களது காப்பு நிதியை 150 லட்சத்திலிருந்து 390 லட்சம் ஆகவும் அதிகரித்தன; இவைகளில் ''முக்கால் பங்கு ஜெர்மன் மூலதனமாக இருந்தது.'' முதல் பாங்கு பெர்லின் ''ஜெர்மானிய பாங்கின்'' ''கன்சர்னேயும்'', இரண்டாவது பெர்லின் ''டிஸ்கவுண்டு ஸ்தாபனத்''தின் ''கன்சர்னேயும்'' சேர்ந்தவையாக இருக்கின்றன. பெரும்பான்மைப் பங்குகளை பெர்லின் பாங்குகள் வைத்திருக்கின்றன என்பதாலும், ஆகவே ருஷ்யப் பங்குதாரர்கள் சக்தியற்று இருக்கிறார்கள் என்பதாலும் மதிப்பிற்குரிய அகாட் அவர்கள் கடுமையாகக் கோபம் கொண்டிருக்கிறார். இயற்கையாகவே, மூலதனத்தை ஏற்றுமதி செய்கிற நாடு அதிகப் பலனைப் பெறுகிறது: உதாரணமாக, பெர்லின் ''ஜெர்மானிய பாங்கு'' ''சைபீரிய வர்த்தக பாங்''கின் பங்குகளை பெர்லின் மார்க்கெட்டில் வைத்ததன் மூலம் அவைகளைத் தனது பைக்குள் ஓராண்டு முழுவதும் வைத்திருந்து, பிறகு அவைகளை 100க்கு 193 என்ற விகிதத்தில், அதாவது அவைகளது பெயரளவு மதிப்பைவிட ஏறத்தாழ இரண்டு மடங்காக விற்று கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபிள்கள் லாபத்தைச் ''சம்பாதித்தது''. இந்த லாபத்தைத் ''தோற்றுவிப்பாளரின் லாபம்'' என்று ஹில்பர்டிங் அழைக்கிறார்.

பிரதான செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பாங்குகளின் ''சக்தியை'' 82,350 லட்சம், சுமார் 825 கோடி ரூபிள்களாக நமது ஆசிரியர் மதிப்பிடுகிறார். மேலும், ''ஹோல்டிங்குகளை'' அல்லது இன்னும் சிறப்பாக, அன்னிய பாங்குகள் ஆதிக்கம் செலுத்தும் அளவை அவர் கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிறார்: பிரெஞ்சு பாங்குகள்—55 சதவிகிதம், இங்கிலிஷ் பாங்குகள்—10 சதவிகிதம், ஜெர்மன் பாங்குகள்—35 சதவிகிதம். மொத்தம் $823^1/_2$ கோடி ரூபிள்களில் செயல்படு மூலதனம் 368 கோடி 70 லட்சம் ரூபிள்கள், அல்லது 40 சதவிகிதத்திற்குமேல், புரோதுகோல், புரோத்மெட் சின்டிகேட்டுகளினுடையவும் எண்ணெய், உலோக சம்பந்தமான, சிமென்ட் தொழில்களின் சின்டிகேட்டுகளினுடையவும் பங்காக இருக்கிறது என்று ஆசிரியர் கணக்கிடுகிறார். இவ்வாறாக, முதலாளித்துவ ஏகபோகங்கள் அமைக்கப்படுவதன் காரணமாக,

பாங்கு மூலதனமும் தொழில் மூலதனமும் ஒன்றிணைதல் ருஷ்யாவில்கூட ஏராளமாக வளர்ச்சியுற்றிருக்கிறது.

சிலரது கைகளில் குவிந்து உண்மையான ஏகபோகம் வகிக்கும் நிதி மூலதனம் கம்பெனிகளைத் தொடங்குதல், பங்குகளை வெளியிடுதல், அரசாங்கக் கடன் முதலியவைக ளிலிருந்து ஏராளமானவையும், மேலும் மேலும் அதிகரிப் பவையுமான லாபங்களைக் கிரகிக்கிறது; நிதி ஆட்சிக் குழுவின் ஆதிக்கத்தை வலுப்படுத்துகிறது; மேலும், ஏகபோகக் காரர்களின் நன்மைக்காகச் சமுதாயம் முழுவதினிடமிருந் தும் கப்பம் வசூலிக்கிறது. அமெரிக்க ட்ரஸ்டுகளின் ''தொழில் முறைகளைப்'' பற்றி மிகுதியான பல உதாரணங் களிலிருந்து எடுக்கப்பட்ட, ஹில்பர்டிங்கினால் மேற்கோ ளாக எடுத்தாளப்பட்ட, ஓர் உதாரணம் இதோ இருக்கி றது: 65 லட்சம் டாலர்கள் மொத்த மூலதனத்தையுடைய பதினைந்து சிறிய நிறுவனங்களை ஒன்றுசேர்த்து 1887ல் ஹா வமெயர் என்பவர் சர்க்கரை ட்ரஸ்டை நிறுவினார். இந்த ட்ரஸ்டின் மூலதனம், அமெரிக்கர்கள் சொல்வதைப் போல ''நீரால் பெருக்கப்பட்டு'' 5 கோடி டாலர்களாகப் பிர கடனப்படுத்தப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எஃகு ட்ரஸ்ட் இரும்புக் கனிப் பிரதேசங்களை முடிந்த அளவு வாங்குவதில் தனது எதிர்கால ஏகபோக லாபங்களை எவ் வாறு எதிர்பார்க்கிறதோ, அதேபோல இந்த ''அதிமூல தனமாக்குதலும்'' ஏகபோக லாபங்களை எதிர்நோக்கியது. உண்மையில், ஏகபோக விலைகளை இந்தச் சர்க்கரை ட்ரஸ்ட் நிர்ணயித்தது; இதன் விளைவாக இது, ஏழு மடங்கு ''நீரால் பெருக்கப்பட்ட'' மூலதனத்தின்மேல் 10 சதவிகிதம், அல் லது ட்ரஸ்ட் அமைக்கப்பட்ட காலத்தில் உண்மையாக இடப்பட்ட மூலதனத்தின் மேல் 70 சதவிகிதம் லாபப் பங்கீட்டைக் கொடுக்கும் அளவுக்கு லாபங்களைப் பெற்றது! 1909ல் இந்தச் சர்க்கரை ட்ரஸ்டின் மூலதனம் 9 கோடி டாலர்க ளாக ஆயிற்று. இருபத்திரண்டு ஆண்டுகளில் பத்து மடங் குக்கும் அதிகமாக அது தனது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டது.

பிரான்சில் ''நிதி ஆட்சிக் குழு''வின் ஆதிக்கம் (லிசிஸ் எழுதிய ''பிரான்சில் நிதி ஆட்சிக் குழுவுக்கு எதிராக''

என்ற தலைப்புள்ள நன்கு பிரசித்தமான நூலின் ஐந்தாம் பதிப்பு 1908ல் வெளியாயிற்று) சிறிதே மாறுபட்ட ஒரு வடிவத்தைப் பெற்றிருந்தது. பத்திரங்கள் [bonds] வெளியிடுதலில் மிகமிகச் சக்திவாய்ந்த நான்கு பாங்குகள், மற்ற பாங்குகளைக் காட்டிலும் அதிகமான ஏகபோகத்தை அல்லாமல் ஓர் ''எல்லையற்ற ஏகபோகத்தையே'' அனுபவிக்கின்றன. உண்மையில், இது ''பெரிய பாங்குகளின் ட்ரஸ்டாகும்''. ஏகபோகம் பத்திரங்கள் வெளியிடுவதிலிருந்து ஏகபோக லாபங்களை உத்திரவாதஞ் செய்கிறது. வழக்கமாக, கடன் வாங்கும் ஒரு நாடு கடன் தொகையில் 90 சதவிகிதத்துக்கு மேலாகப் பெறுவதில்லை. எஞ்சிய 10 சதவிகிதம் பாங்குகளுக்கும் மற்ற தரகர்களுக்கும் செல்கிறது. 40 கோடி பிராங்குகளைக் கொண்ட ருஷ்ய-சீனக் கடனிலிருந்து பாங்குகள் சம்பாதித்த லாபம் 8 சதவிகிதமாக இருந்தது; ருஷ்ய (1904) கடனுகிய 80 கோடி பிராங்குகளிலிருந்து கிடைத்த லாபம் 10 சதவிகிதம்; மொரோக்கோ (1904) கடனுகிய $6^1/_4$ கோடி பிராங்குகளிலிருந்து $18^3/_4$ சதவிகித லாபம் கிடைத்தது. தனது வளர்ச்சியைச் சிறிய கடும்வட்டி மூலதனத்துடன் தொடங்கிய முதலாளித்துவம் பிரம்மாண்டமான கடும்வட்டி மூலதனத்துடன் தனது வளர்ச்சியை முடித்துக் கொண்டிருக்கிறது. ''பிரெஞ்சுக்காரர்கள் ஐரோப்பாவின் கடும்வட்டி வாங்கிகள்'' என்று லிசிஸ் கூறுகிறுர். பொருளாதார வாழ்வின் சகல நிலைமைகளும் முதலாளித்துவத்தின் இந்த உருவவேறுபாட்டால் தீவிரமாக மாறுபாடு அடைகின்றன. நிலையான ஒரு மக்கள் தொகையும் தேங்கிய தொழில், வாணிகம், கப்பல் போக்கு வரத்து ஆகியவையும் கொண்ட ''நாடு'' கூடக் கடும்வட்டி வாங்குதல் மூலம் செல்வமுற முடியும். ''80 லட்சம் பிராங்குகள் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐம்பது நபர்கள் நான்கு பாங்குகளில் டெபாசிட் செய்யப்பட்டுள்ள 200 கோடி பிராங்குகளை ஆளமுடியும்.'' நமக்கு ஏற்கனவே பரிச்சயமாகியிருக்கிற ''ஹோல்டிங் முறை''யும் இதே விளைவுக்குத் தான் அழைத்துச் செல்கிறது. உதாரணமாக, மிகமிகப் பெரிய பாங்குகளில் ஒன்றுகிய ''சொசைட்டி ஜெனரல்'' (Société Générale) என்பது தனது ''பிள்ளைக் கம்பெனியாகிய''

''எகிப்தியச் சர்க்கரைச் சுத்திகரிப்புச் சாலைகளு''க்கு 64,000 பத்திரங்களை வழங்குகிறது. பத்திரங்கள் 150 சத விகித மதிப்பில் வழங்கப்படுகின்றன; அதாவது பாங்கு ஒரு ரூபிளுக்கு 50 கோப்பெக்குகள் லாபம் பெறுகிறது. இக்கம்பெனியின் லாபப் பங்கு தொகைகள் போலியான வைகளெனக் கண்டுபிடிக்கப்பட்டன. ''பொது மக்கள்'' 9 முதல் 10 கோடி பிராங்குகள் வரை நஷ்டமுற்றனர். '' 'சொசைட்டி ஜெனரலின்' டைரக்டர்களில் ஒருவர் 'சர்க்கரைச் சுத்திகரிப்புச் சாலைகளின்' டைரக்டர் போர்டில் ஓர் அங்கத்தினராக இருந்தார்.'' ''பிரெஞ்சுக் குடியரசு ஒரு நிதியாட்சி முடியரசு'', ''அது நிதியாட்சிக் குழுவின் முழு ஆதிக்கம்; இந்நிதியாட்சிக் குழு பத்திரிகைச் சாதனங்கள்மீதும் அரசாங்கத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது''* என்ற முடிவுக்கு ஆசிரியர் வரவேண்டியிருப்பதில் ஆச்சரியமில்லை.

நிதி மூலதனத்தின் பிரதானக் காரியங்களில் ஒன்றாகிய பத்திரங்கள் வெளியிடுவதிலிருந்து கிடைக்கும் அசாதாரணமாக அதிகமான லாப விகிதம், நிதியாட்சிக் குழுவை வளர்ப்பதிலும் வலுப்படுத்துவதிலும் மிகவும் முக்கியமான பங்காற்றுகிறது. ''அன்னியக் கடன்களைத் திரட்டுவதில் கிடைக்கும் லாபங்களுக்குக் கிட்டத்தட்டச் சமமான லாபங்களைக் கொடுக்கும் இதையொத்த ஒரு தொழிலும் நாட்டில் இல்லை'' என்று ''பாங்கு'' என்ற ஜெர்மானியச் சஞ்சிகை கூறுகிறது.**

''பத்திரங்கள் வெளியீட்டிலிருந்து கிடைப்பதையொத்த பெருத்த லாபங்களை ஒரு பாங்கு நடவடிக்கையும் தருவதில்லை.'' ''ஜெர்மன் பொருளாதாரவாதி'' கொடுத்துள்ள புள்ளிவிவரங்களின்படி, தொழிற் பங்குகளின் வெளியீட்டிலிருந்து கிடைத்த சராசரி ஆண்டு லாபங்கள் கீழ்க்கண்டவாறுயிருந்தன:

---

* Lysis, *Contre l'oligarchie financière en France*, 5 éd, P., *1908*, pp. *11,12,26,39,40,48* (*லிசிஸ், ''பிரான்சில் நிதி ஆட்சிக் குழுவுக்கு எதிராக'', 5வது பதிப்பு, பாரிஸ், 1908, பக்கங்கள் 11, 12, 26, 39, 40, 48.*—ப-ர்.

** *Die Bank*, *1913, 7, S. 630.*

| | சதவிகிதம் |
|---|---|
| 1895 . . . . . . . . | 38.6 |
| 1896 . . . . . . . . | 36.1 |
| 1897 . . . . . . . . | 66.7 |
| 1898 . . . . . . . . | 67.7 |
| 1899 . . . . . . . . | 66.9 |
| 1900 . . . . . . . . | 55.2 |

''1891லிருந்து 1900 வரையிலான பத்தாண்டுகளில் ஜெர்மன் தொழிற்பங்குகளை வெளியிட்டதன் மூலம் நூறு கோடிக்கும் அதிகமான மார்க்குகள் 'சம்பாதிக்கப்பட்டன' ''.*

தொழில் கொழிப்புக் காலங்களில் நிதி மூலதனத்தின் லாபங்கள் அளவுகடந்து அதிகமாயிருக்கின்றன; ஆனால் மந்தக் காலங்களில் சிறிய, நல்ல நிலையிலில்லாத தொழில் நிலையங்கள் அழிந்துபோகின்றன. பெரிய பாங்குகள் அவைகளை மிக மலிவாக வாங்குவதில், அல்லது அவைகளின் ''புனர்நிர்மாணத்துக்கும்'' ''புனருத்தாரணத்துக்கு'' மான லாபகரமான திட்டங்களில் ''பங்கெடுத்துக் கொள்கின்றன''. நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ஸ்தாபனங்களைப் ''புனர்நிர்மாணம்'' செய்தலில் ''பங்கு மூலதனம் குறைத்து எழுதப்படுகிறது; அதாவது லாபங்கள் குறைந்த மூலதனத்தின் பேரிலேயே பிரித்துக் கொடுக்கப்படுகின்றன; இந்தக் குறைந்த அடிப்படையிலேயே தொடர்ந்து கணக்கிடவும் படுகின்றன. அல்லது, வரும்படி வாய்ப்பு பூஜ்ஜியமாகக் குறைந்துவிட்டால், புதிய மூலதனம் ஈர்க்கப்படுகிறது; இப்புதிய மூலதனம் பழையதும் குறைந்த பலனைத் தருவதுமான மூலதனத்துடன் சேர்ந்து போதுமான பலனைக் கொண்டு தருகிறது.'' ஹில்பர்டிங் மேலும் சொல்கிறார்: ''இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றும் சொல்லிவிடவேண்டும்: இந்தப் புனருத்தாரணம், புனர்நிர்மாணம் எல்லாம் பாங்குகளைப் பொறுத்தவரை இரண்டுபட்ட முக்கியத்துவத்

---

*Stillich, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 143; W.Sombart, *Die deutsche Volkswirtschaft im 19. Jahrhundert*, 2 aufl.1909, பக்கம் 526, Anlage 8(வெ. சோம்பார்ட், ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மன் தேசீயப் பொருளாதாரம்'', 2ம் பதிப்பு, 1909, பக்கம் 526, அனுபந்தம் 8.—ப-ர்.).

தை உடையனவாயிருக்கின்றன: முதலாவதாக, லாபகரமான நடவடிக்கைகள் என்ற முறையிலும்; இரண்டாவதாக, கஷ்ட நிலேயில் உள்ள கம்பெனிகளின்மேல் அதிகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் என்ற முறையிலும்''.*

இதோ ஓர் உதாரணம்: டோர்ட்மன்டிலுள்ள ''யூனியன்'' சுரங்கக் கம்பெனி 1872ல் நிறுவப்பட்டது. கிட்டத்தட்ட 4 கோடி மார்க்குகளுக்குப் பங்கு மூலதனம் வெளியிடப்பட்டது. முதலாண்டுக்கு 12 சதவிகிதம் லாபப் பங்குத் தொகை கொடுக்கப்பட்டபின், பங்குகளின் மார்க்கெட் விலே 170 சதவிகிதமாக உயர்ந்தது. நிதி மூலதனம் திரண்ட வெண்ணெயை எடுத்துக் கொள்வதுபோல 2 கோடி 80 லட்சம் மார்க்குகளேயும் சம்பாதித்தது. இந்தக் கம்பெனியின் பிரதான ஸ்தாபனகர்த்தா, மிகவும் வெற்றிகரமாக 30 கோடி மார்க்குகள் மூலதனத்தை அடைந்த மிகப் பெரிய ஜெர்மானிய ''டிஸ்கவுண்டு ஸ்தாபனம்'' தான். பின்னர், ''யூனிய''னின் லாபப் பங்குத் தொகைகள் பூஜ்ஜியமாகக் குறைந்துவிட்டன. மூலதனத்தைக் ''குறைத்து எழுதுவதற்கு'', அதாவது, அது முழுவதையும் இழந்து விடாமலிருப்பதற்காக அதில் ஒரு பகுதியை இழப்பதற்கு, பங்குதாரர்கள் இசைய வேண்டியதாயிற்று. தொடர்ச்சியான ''புனருத்தாரணங்கள்'' மூலமாக முப்பதாண்டுக் காலத்தில் 7 கோடி 30 லட்சம் மார்க்குகளுக்கும் அதிகமாக ''யூனிய''னின் கணக்குப் புத்தகங்களிலிருந்து கழித்து எழுதப்பட்டன. ''நிகழ் காலத்தில் இக்கம்பெனியின் ஆதிப் பங்குதாரர்கள் தங்களது பங்குகளின் பெயரளவு மதிப்பில் 5 சதவிகிதத்தை மட்டுமே பெற்றிருக்கிருர்கள்''**,—ஆனுல், பாங்குகள் ஒவ்வொரு ''புனருத்தாரணத்''திலிருந்தும் தொடர்ந்து ''சம்பாதித்திருக்கின்றன''.

துரிதமாக வளர்ந்து வரும் பெரிய நகரங்களின் புறப் பகுதிகளில் அமைந்துள்ள நிலத்தில் ஊக வாணிகம் செய்வது நிதி மூலதனத்துக்குக் குறிப்பாக லாபகரமான ஒரு

---

* ''நிதி மூலதனம்'', பக்கம் 172.

** Stillich, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 138; Liefmann, பக்கம் 51.

செயலாகும். இங்கு, பாங்குகளின் ஏகபோகம் நிலவாடகையின் ஏகபோகத்துடனும் போக்குவரத்துச் சாதனங்களின் ஏகபோகத்துடனும் ஒன்றிணைகிறது; ஏனெனில், நிலவிலையின் ஏற்றமும், அதைப் பங்கிட்டு லாபகரமாக விற்கும் சாத்தியப்பாடும், இன்னும் பலவும், நகரின் மையப் பகுதியுடன் தொடர்புபடுத்தும் நல்ல போக்குவரத்துச் சாதனங்களையே முக்கியமாகப் பொறுத்திருக்கின்றன; இந்தப் போக்குவரத்துச் சாதனங்கள், ஹோல்டிங் முறை மூலமாகவும், டைரக்டர் ஸ்தானங்களின் விநியோக மூலமாகவும், இவ்விவகாரங்களில் ஈடுபாடுடைய பாங்குகளுடன் சம்பந்தப்பட்டுள்ள பெரிய கம்பெனிகளின் கையில்இருக்கின்றன. இதன் விளைவாக, ''பாங்கு'' சஞ்சிகையில் எழுதுபவரும், பூஸ்திதிவியாபாரம், அடமானங்கள் முதலியவை பற்றி விசேஷமான ஆராய்ச்சி செய்தவருமான ஜெர்மானிய எழுத்தாளர் லூ. எஷ்வேகெ கூறுவதுபோல ஒரு ''புதைசேற்றை'' அடைந்து விட்டோம்: நகர்ப்புற நிலங்களில் வெறிகொண்ட ஊக வாணிகம்; கட்டிடக் கம்பெனிகளின் வீழ்ச்சி—பெர்லின் நிறுவனமான ''போஸ்வாவ் அன்ட் க்னுவர்'' போல. இது, ''மிக உறுதியும் திண்மையும் கொண்ட'' ''ஜெர்மானிய பாங்''கின் (Deutsche Bank) உதவியினுல் 10 கோடி மார்க்குகள் வரை அரித்துத் திரட்டி விட்டது; ''ஜெர்மானிய பாங்கு'' ஹோல்டிங் முறையில் செயலாற்றி, அதாவது திரைமறைவில் இரகசியமாகச் செயலாற்றி, இச்சம்பவத்திலிருந்து 1 கோடி 20 லட்சம் மார்க்குகள் ''மட்டுமேயான'' நஷ்டத்துடன் தப்பித்துக் கொண்டது, பிறகு இந்தப் போலியான கட்டிட நிறுவனங்களிலிருந்து ஒன்றுமே பெருத சிறு உடைமைக்காரர்கள், தொழிலாளிகள் ஆகியோரின் அழிவு, கட்டிடமனைக்கான சர்ட்டிபிக்கேட்டுகளையும் நகரசபையின் கட்டிட லைசென்சுகளையும் வழங்குதலைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக ''நேர்மையான'' பெர்லின் போலீசுடனும் நிர்வாகத்துடனும் வஞ்சகத் தொடர்புகள், இத்யாதி, இத்யாதி.*

---

* *Die Bank*, 1913, பக்கம் 952, L. Eschwege, *Der Sumpf* (லூ. எஷ்வேகெ, ''புதைசேறு''.—ப-ர்.); அதே சஞ்சிகையில், 1912, 1, பக்கம் 223ம், அடுத்த பக்கங்களும்.

எந்த ‘‘அமெரிக்க நீதி நெறி’’யை ஐரோப்பியப் பேராசிரியர்களும் நல்லெண்ணங்கொண்ட பூர்ஷ்வாக்களும் மிகவும் கபடத்துடன் குறை கூறுகிருர்களோ, அதுவே, நிதி மூலதனக் காலத்தில் உண்மையில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒவ்வொரு பெரிய நகரத்தினுடைய நீதி நெறியாகவும் ஆகிவிட்டது.

1914ன் தொடக்கத்தில், ஒரு ‘‘போக்குவரத்து ட்ரஸ்ட்’’ அமைக்கப்படுவதைப்பற்றி, அதாவது நகர மின்சார ரயில்வே, டிராம்வே கம்பெனி, பஸ் கம்பெனி ஆகிய பெர்லினின் மூன்று போக்குவரத்து ஸ்தாபனங்களுக்குமிடையில் ‘‘நலன்களின் ஒருமைப்பாட்’’டை நிறுவுவதுபற்றி பெர்லினில் பேசப்பட்டது. ‘‘பாங்கு’’ எழுதியது: ‘‘பஸ் கம்பெனியில் பெரும் பகுதி பங்குகள் இதர இரண்டு போக்குவரத்துக் கம்பெனிகளால் வாங்கப்பட்டு விட்டன என்பது தெரிந்து விட்டதால், இந்தத் திட்டம் சிந்திக்கப்படுகிறது என்பதை நாம் தெரிந்து கொண்டோம்... இந்த நோக்கத்தைப் பின்பற்றுகிறவர்கள் போக்குவரத்து சர்வீசுகளை ஐக்கியப்படுத்துவதன் மூலம் தாங்கள் செலவைச் சிக்கனப்படுத்தப் போவதாகவும், இதில் ஒரு பகுதி உரிய காலத்தில் பொது மக்களுக்குப் பயன் தருமென்றும் கூறுகிற பொழுது அவர்களை நாம் முழுதும் நம்பலாம். நிறுவப்படுகின்ற போக்குவரத்து ட்ரஸ்ட்டுக்குப் பின்னல் பாங்குகள் இருக்கின்றன என்ற விஷயம் இந்தப் பிரச்சினையைச் சிக்கல் நிறைந்ததாகச் செய்கிறது; ஏனெனில், இந்த பாங்குகள், தாங்கள் ஏகபோகமாக்கியுள்ள போக்குவரத்துச் சாதனங்களைத் தாங்கள் விரும்பினுல் தங்களது பூஸ்திதி வியாபாரத்தின் நலன்களுக்கு அடிப்படுத்தி விட முடியும். இத்தகைய ஊகம் நியாயமானது தான் என்பதைச் சந்தேகத்திற்கிடமில்லாமல் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, நகர மின்சார ரயில்வே கம்பெனி நிறுவப்படுவதை ஊக்குவித்த பெரிய பாங்கின் நலன்கள் அக்கம்பெனி நிறுவப்பட்ட காலத்திலேயே அதில் ஈடுபட்டிருந்தன என்பதை மட்டும் நினைவு கூர்ந்தால் போதுமானது. அதாவது: இந்தப் போக்குவரத்து ஸ்தாபனத்தின் நலன்கள் பூஸ்திதி வியாபாரத்தின் நலன்களுடன் பின்னிப் பிணைந்திருந்தன. விஷயம் என்னவென்

ருல், இந்த ரயில்வேயின் கிழக்கத்தியப் பாதை அந்தக் குறிப்பிட்ட நிலத்தின் வழியாகப் போகும்படித் திட்டமிடப்பட்டது என்பதும், இந்தப் பாதை போடப்படப்போவது நிச்சயமான பிறகு, இந்தப் பாங்கு தனக்கும் இந்த நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட சில கூட்டாளிகளுக்கும் பெருத்த லாபம் ஏற்படும்வகையில் அந்நிலத்தை விற்றது என்பதும் தான்.''*...

ஓர் ஏகபோகம், தான் நிறுவப்பட்டு, நூற்றுக்கணக்கான கோடிகள் மதிப்புள்ள தொகையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தவுடன், அரசியல் அமைப்பையும் இன்னும் எல்லா இதர ''விவரங்களையும்'' பொருட்படுத்தாமல், பொது வாழ்வின் ஒவ்வொரு துறைக்குள்ளும் தவிர்க்க முடியாதபடிப் புகுந்து கொள்கிறது. பிரஷ்ய அதிகார வர்க்கத்தின் நேர்மையைக் குறித்த அடிமைத்தனமான புகழ்ச்சியையும், பிரெஞ்சுப் பனுமா விஷயம்[17], அமெரிக்க அரசியல் ஊழல் ஆகியவை பற்றிய குறிப்புகளையும், ஜெர்மன் பொருளாதார நூல்களில் வழக்கமாகக் காண்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், ஜெர்மன் பாங்குத் தொழில் விஷயங்களைப் பற்றி எழுதப்பட்ட பூர்ஷ்வா நூல்கள் கூட, தூய பாங்குத் தொழில் நடவடிக்கைகளின் எல்லைகளிலிருந்து நிரந்தரமாக வெகுதூரம் அப்பால் சென்று வேறு சிலவற்றை, உதாரணமாக, பொது அதிகாரிகள் பாங்குகளில் அதிகமாக அடிக்கடி வேலையில் அமர்ந்து வருவது சம்பந்தமாக ''பாங்கின் கவர்ச்சி'' பற்றிக் கீழ்க் கண்டவாறு பேச வேண்டியிருக்கிறது: ''பேரன்ஷ்த்ராஸ்ஸெயில் (''ஜெர்மானிய பாங்கு''த் தலைமைக் காரியாலயம் இருக்கும் பெர்லின் நகர வீதி) ஒரு சுகமான வேலையைப் பற்றித் தனது உள்மனதில் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்க அதிகாரியின் நேர்மையைக் குறித்து என்ன சொல்வது?''** ''பாங்கின்'' பிரசுரகர்த்தாவாகிய ஆல்ப்ரெட் லன்ஸ்பர்க்

---

* *Verkehrstrust, Die Bank,* 1914, 1, பக்கம் 89, (''போக்குவரத்து ட்ரஸ்ட்'', ''பாங்கு''.—ப-ர்.).

** *Der Zug zur Bank, Die Bank,* 1909, 1, பக்கம் 79, (''பாங்கின் கவர்ச்சி'', ''பாங்கு''.—ப-ர்.).

''பைஸான்டினிஸத்தின் பொருளாதார முக்கியத்துவம்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை 1909ல் எழுதினார்; இரண்டாம் வில்ஹெல்மின் பாலஸ்தீனச் சுற்றுப் பிரயாணத்தைப் பற்றியும், ''இப்பிரயாணத்தின் உடனடி விளைவான, 'ஜெர்மன் தொழில் முயற்சியின்' நாசமூட்டக் கூடிய 'பெரும் விளைவான', நமது எல்லா அரசியல் தவறுகளையும் ஒன்று சேர்த்தால் அவைகளையும்விட 'வளைத்துச் சூழ்தலுக்கு' அதிகம் காரணமான பாக்தாத் ரயில்வே நிறுவப்படுவது''* பற்றியும் அக்கட்டுரையில் அவர் மற்றவற்றுக்கிடையே குறிப்பிட்டார். (ஜெர்மனியைப் பிற நாடுகளிலிருந்து தனிப்படுத்தி, ஜெர்மனிக்கு விரோதமான ஓர் ஏகாதிபத்தியக் கூட்டமைப்பினுல் அதைச் சூழ்ந்து கொள்வதற்கான ஏழாம் எட்வர்டின் கொள்கையைத்தான் ''வளைத்துச் சூழ்தல்'' என்பது குறிக்கிறது.) இதே சஞ்சிகையில் எழுதுபவரும், நம்மால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறவருமான எஷ்வேகெ ''செல்வராட்சியும், அதிகார வர்க்கமும்'' என்ற தலைப்புடைய ஒரு கட்டுரையை 1911ல் எழுதினார். கார்ட்டல் கமிட்டியின் அங்கத்தினரும், வேலையில் சுறுசுறுப்பு மிக்கவரும், சிறிதுகாலத்திற்குப்பின்னர் மிகமிகப் பெரிய கார்ட்டலில், அதாவது எஃகு சின்டிகேட்டில், மிகவும் லாபகரமான ஒரு பதவியைப் பெற்றவரும் ஆகிய வோல்கர் என்ற ஜெர்மன் அதிகாரியின் விஷயத்தை உதாரணமாக அம்பலப்படுத்தினார். இதைப் போன்ற, சற்றும் தற்செயலாக நடக்காத சம்பவங்கள்தாம், இந்த முதலாளித்துவ ஆசிரியரை ''ஜெர்மன் அரசியல் சட்டம் உத்தரவாதம் செய்யும் பொருளாதார சுதந்திரம், பொருளாதார வாழ்வின் பல துறைகளில் ஒரு பொருளற்ற சொற்றொடராக ஆகிவிட்டது'' என்றும், இன்று நிலவும் செல்வராட்சியின் கீழ் ''மிக மிக விரிவான அரசியல் சுதந்திரம் கூட, நாம் சுதந்திரமற்ற மக்களைக் கொண்ட ஒரு தேசமாக மாற்றப்படுவதிலிருந்து நம்மைக் காப்பாற்ற முடியாது''** என்றும் ஒப்புக் கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தின.

---

* அதே நூல், 1, பக்கம் 301.

** அதே நூல், 1911, 2, பக்கம் 825; 1913, 2, பக்கம் 962.

ருஷ்யாவைப் பற்றிக் கூறும்பொழுது, ஓர் உதாரணத்துடன் நாம் நின்றுவிடுவோம்: பற்றுக்கடன் அலுவலகத்தின் டைரக்டராயிருந்த தவீதவ் தமது அரசாங்கப் பதவியை ராஜினுமாச் செய்துவிட்டு, குறிப்பிட்ட பெரிய ஒரு பாங்கில் ஒப்பந்தத்தின்படிச் சில ஆண்டுகள் வாக்கில் மொத்தம் பத்து லட்சம் ரூபிள்களுக்கும் மேலாக அதிகரிக்கும் ஒரு சம்பளத்தில் வேலைக்கமருகிருர் என்று சில ஆண்டுகளுக்கு முன் எல்லாச் செய்திப் பத்திரிகைகளும் அறிவித்தன. பற்றுக் கடன் அலுவலகம், ''நாட்டின் எல்லாப் பற்றுக் கடன் ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளையும் இணைப்பதை''க் கடமையாகக் கொண்ட ஸ்தாபனமாகும்; செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிலும் மாஸ்கோவிலும் உள்ள பாங்குகளுக்கு மொத்தம் 80 கோடி முதல் 100 கோடி வரை ரூபிள்கள் கொண்ட உதவி மான்யங்களை இது தருகின்றது.*— — —

மூலதனத்தைப் பெற்றிருப்பது, உற்பத்திக்கு மூலதனத்தை உபயோகித்தலிலிருந்து பிரிக்கப் பட்டிருப்பதும், பண மூலதனம் தொழில் மூலதனம் அல்லது உற்பத்தி மூலதனத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதும், முழுதும் பண மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டே வாழ்கின்ற முதலீட்டாளன் [rentier] தொழில் முயற்சியாளனிடமிருந்தும், மூலதனத்தின் நிர்வாகத்தில் நேர்முகமாகச் சம்பந்தப்பட்ட எல்லோரிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருப்பதும் பொதுவாக முதலாளித்துவத்தின் விசேஷ குணமாகும். ஏகாதிபத்தியம் அல்லது நிதி மூலதனத்தின் ஆதிக்கம் என்பது இந்தப் பிரிவு மிகப் பெரிய அளவை அடையும் முதலாளித்துவத்தின் மிக உச்ச கட்டமாகும். மூலதனத்தின் மற்ற எல்லா வடிவங்களின்மீதும் நிதி மூலதனத்தின் தலைமையதிகாரம் என்பது முதலீட்டாளனின் தலைமையையும் நிதியாட்சிக் குழுவின் தலைமையையும் குறிக்கிறது; இதர எல்லா நாடுகளிலிருந்தும் நிதி விஷயத்தில் ''சக்தி வாய்ந்த'' சிறிய எண்ணிக்கையுள்ள சில நாடுகளைப் பிரித்துத் தனிப்படுத்துவதை அது குறிக்கிறது. எவ்வளவு தூரம் இந்தப் போக்கு செல்கிறது என்பதை வெளியீடுகளின் புள்ளி

---

* E. Agahd, பக்கம் 202.

விவரங்களிலிருந்து, அதாவது சகல விதமான நிதிப் பத்திரங்களின் வெளியீட்டிலிருந்து தீர்மானிக்க முடியும்.

உலக முழுவதிலும் செய்யப்பட்ட பத்திரங்களின் வெளியீட்டை உள்ளடக்கிய மிகப் பரந்த, முழுமையான, ஒப்புவமையான புள்ளிவிவரங்களைச் ''சர்வதேசப் புள்ளிவிவரக் கழகத்தின் அறிக்கையில்'' அ. நெய்மார்க்* வெளியிட்டுள்ளார். இந்தப் புள்ளிவிவரங்களின் பகுதிகள் பொருளாதார இலக்கியத்தில் திரும்பத் திரும்ப எடுத்தாளப்பட்டிருக்கின்றன. நான்கு பத்தாண்டுக் காலங்களுக்கான மொத்தங்கள் கீழே இருக்கின்றன.

மொத்த வெளியீடு,
நூறு கோடி பிராங்குகளில்

(பத்தாண்டுக் காலம்)

| | |
|---|---|
| *1871—1880* . . . . . | 76.1 |
| *1881—1890* . . . . . | 64.5 |
| *1891—1900* . . . . . | 100.4 |
| *1901—1910* . . . . . | 197.8 |

*1871-1880* கால கட்டத்தில், குறிப்பாக, பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தம் சம்பந்தமாகத் திரட்டப்பட்ட கடன்கள் காரணமாகவும், அந்த யுத்தத்துக்குப்பின் ஜெர்மனியில் ஊக வாணிக நோக்கத்துடன் தொடங்கிய தொழில் நிறுவன வெறியின் காரணமாகவும் உலக முழுவதினுடைய மொத்த வெளியீட்டுத் தொகை அதிகமாயிருந்தது. பொதுவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி மூன்று பத்தாண்டுக் காலங்களில் அதிகரிப்பு ஒப்பு நோக்கையில் மிகத் தீவிரமில்லை. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில்தான் கிட்டத்தட்ட 100 சதவிகித அளவிலான

---

* *Bulletin de l'institut international de statistique*, t. XIX, livr. II La Haye, *1912*. (''சர்வதேசப் புள்ளிவிவரக் கழகத்தின் அறிக்கை'', தொகுதி XIX, பகுதி II, ஹேக்.—ப-ர்.). இரண்டாவது பட்டியலில் உள்ள சிறிய நாடுகள் பற்றிய புள்ளிவிவரங்கள் தோராயமாக 1902ன் புள்ளிவிவரங்களுடன் 20 சதவிகிதத்தைக் கூட்டித் தரப்பட்டிருக்கின்றன.

மிகப் பெரிய அதிகரிப்பு காணப்படுகிறது. இப்படியாக, நாம் ஏற்கனவே கூறியிருக்கிற ஏகபோகங்களின் (கார்ட்டல்கள், சின்டிகேட்டுகள், ட்ரஸ்டுகளின்) வளர்ச்சி விஷயத்தில் மட்டுமின்றி, நிதி மூலதனத்தின் வளர்ச்சி விஷயத்திலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் ஒரு திருப்பு முனையைக் குறிக்கிறது.

1910ல் உலகத்தில் நடப்பிலிருந்த வெளியிடப்பட்ட பத்திரங்களின் மொத்தத் தொகையைச் சுமார் 81,500 கோடி பிராங்குகளாக நெய்மார்க் மதிப்பிட்டார். திரும்பத் திரும்ப இரண்டு தடவைகள் குறிக்கப்பட்டிருக்கும் தொகைகளை இத்தொகையிலிருந்து கழித்து, 57,500-60,000 கோடிக்கு மொத்தத்தைக் குறைக்கிறார். இம்மொத்தம் பல நாடுகளிடையில் கீழ்க்கண்டவாறு பங்கிடப்பட்டிருக்கிறது (நாம் 60,000 கோடியை எடுத்துக் கொள்வோம்):

**1910ல் நடப்பிலிருந்த நிதிப் பத்திரங்கள்**

*(100 கோடி பிராங்குகளில்)*

| | | | | |
|---|---|---|---|---|
| கிரேட் பிரிட்டன் . . | 142 | 479 | ஹாலந்து . . . | 12.5 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் . . . . . | 132 | | பெல்ஜியம் . . . | 7.5 |
| பிரான்ஸ் . . . . . | 110 | | ஸ்பெயின் . . . | 7.5 |
| ஜெர்மனி . . . . . | 95 | | ஸ்விட்சர்லாந்து | 6.25 |
| ருஷ்யா . . . . . . | 31 | | டென்மார்க் . . | 3.75 |
| ஆஸ்திரியா-ஹங்கேரி | 24 | | ஸ்வீடன், நார்வே, ருமேனியா முதலியன | 2.5 |
| இத்தாலி . . . . . | 14 | | | |
| ஜப்பான் . . . . . . | 12 | | | |
| | | | மொத்தம். . . . | 600 |

ஒவ்வொன்றும் தோராயமாக 10,000 முதல் 15,000 கோடி பிராங்குகள் வரையிலான தொகைகளுக்கு நிதிப் பத்திரங்களைப் பெற்றிருக்கும் மிக மிகச் செல்வம் படைத்த நான்கு முதலாளித்துவ நாடுகள் தெளிவாகத் தனித்து நிற்பதை நாம் இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து உடனே காண்கிறோம். இந்நான்கில் இரண்டு, இங்கிலாந்தும் பிரான்சும், யாவற்றிலும் பழைய முதலாளித்துவ நாடுகள்; இவைகள், பின்னர் நாம் பார்க்கப்போவதைப் போல, யாவற்றிலும்

அதிகமான காலனிகளைப் பெற்றிருக்கின்றன; மற்றைய இரண்டும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஜெர்மனியும், வளர்ச்சியின் துரிதம், தொழிலில் முதலாளித்துவ ஏகபோகங்களினது பரப்பின் அளவு ஆகியவைகளைப் பொறுத்த விஷயத்தில் மிக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளாகும். இந்நான்கு நாடுகளும் சேர்ந்து 47,900 கோடி பிராங்குகள், அதாவது உலக நிதி மூலதனத்தில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் பெற்றிருக்கின்றன. கிட்டத்தட்ட உலகின் இதர பாகங்கள் முழுவதும் இந்த சர்வதேச பாங்கு நாடுகளுக்கு, உலக நிதி மூலதனத்தின் இந்த நான்கு ''தூண்களுக்கு''க் கடன்பட்டவையாகவும் கப்பம் செலுத்துபவையாகவும், ஒரு அல்லது இன்னொரு விதத்தில், இருக்கின்றன.

நிதி மூலதனத்தின் தொடர்புகள், அதன் ஆதீனங்கள் ஆகிய சர்வதேச வலைப்பின்னலைச் சிருஷ்டிப்பதில் மூலதன ஏற்றுமதி ஆற்றும் பங்கைப் பரிசீலித்துப் பார்ப்பது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## IV. மூலதன ஏற்றுமதி

கட்டுப்பாடற்ற போட்டி தனியாட்சி செய்த காலத்தைச் சேர்ந்த பழைய முதலாளித்துவத்தின் விசேஷத் தன்மை சரக்குகளின் ஏற்றுமதியாகும். ஏகபோகங்கள் ஆட்சி புரிகின்ற காலத்திய முதலாளித்துவத்தின் நவீனக் கட்டத்தின் விசேஷத் தன்மை மூலதனத்தின் ஏற்றுமதியாகும்.

தனது வளர்சசியின் உச்ச கட்டத்தை எட்டிவிட்ட சரக்கு உற்பத்தி தான் முதலாளித்துவம்; அப்பொழுது உழைப்புச் சக்தி கூட ஒரு சரக்கு ஆகிவிடுகிறது. உள்நாட்டுப் பரிவர்த்தனையின், குறிப்பாகச் சர்வதேசப் பரிவர்த்தனையின் வளர்ச்சி முதலாளித்துவம் தன்னைத் தனிப்படுத்திக் காட்டும் விசேஷ குணும்சமாகும். தனித்தனி ஸ்தாபனங்களின், தனித்தனித் தொழிற்கிளைகளின், தனித்தனி நாடுகளின் வளர்ச்சி சமமற்றதாகவும் இடையீடுள்ளதாகவும் இருப்பது முதலாளித்துவ அமைப்பின்கீழ் தவிர்க்க முடியாததாகும். மற்ற எந்த ஒரு நாட்டுக்கும் முன்னதாக இங்கிலாந்து முதலாளித்துவ நாடாக ஆகிவிட்டது; அது பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்தியில், கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை மேற்கொண்டு, ''உலகத்தின் தொழிற்சாலை'' என்றும், எல்லா நாடுகளுக்கும் உற்பத்திப் பொருட்களை வழங்கும் நாடு என்றும் தன்னைப் பற்றிக் கூறிக் கொண்டது. இந்த உற்பத்திப் பொருட்களுக்கு மாற்றுக மற்ற நாடுகள் அதற்குக் கச்சாப் பொருட்களைக் கொடுத்துவர வேண்டியிருந்தது. ஆனுல், பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசி இருபத்தைந்து ஆண்டுகளில், இங்கிலாந்தின் இந்த ஏகபோகம் அஸ்திவாரத்தில் ஏற்கனவே தகர்க்கப்பட்டு விட்டது; ஏனெனில், வேறு அநேக நாடுகள் ''காப்பு வரிகள்'' மூலமாகத் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு சுதந்திர முதலாளித்துவ நாடுகளாக வளர்ந்து விட்டன. இருபதாம் நூற்றுண்டின் புகுவாயிலில் புதிய விதமான ஏகபோகங்கள் நிறுவப்படுவதை நாம் காண்கிறேம்: முதலாவதாக, முத

லாளித்துவ ரீதியில் வளர்ச்சியுற்ற எல்லா நாடுகளிலும் முதலாளிகளின் ஏகபோகக் கூட்டமைப்புக்கள்; இரண்டாவதாக, மூலதனத் திரட்சி பிரம்மாண்டமான அளவை எட்டி விட்ட ஒரு சில மிகுந்த செல்வம் படைத்த நாடுகளின் ஏகபோக நிலே. முன்னேறிய நாடுகளில் ஒரு மிகப் பெரும் ''உபரி மூலதனம்'' தோன்றியிருக்கிறது.

முதலாளித்துவம், இன்று எங்கும் தொழிலுக்குப் பின்ஞல் பயங்கரமாகப் பின்தங்கியிருக்கும் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியுமாஞல், வியக்கத்தக்க தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறபோதிலும் எங்கும் இன்னும் அரைப் பட்டினியாகவும் ஏழ்மையில் நலிந்தும் வாழ்கின்ற பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியுமாஞல், உபரி மூலதனத்தைப் பற்றிய பேச்சே இருக்க முடியாது என்பது சொல்லாமலே விளங்கும். இந்த ''வாதம்'' முதலாளித்துவத்தின் குட்டி-பூர்ஷ்வா விமர்சகர்களால் மிகவும் அடிக்கடி முன்வைக்கப்படுகிறது. ஆஞல், முதலாளித்துவம் இவைகளேச் செய்திருந்தால் அது முதலாளித்துவமாக இருக்க முடியாது; ஏனெனில் வளர்ச்சியின் சமமின்மை, பொதுமக்கள் வாழ்வின் அரைப்பட்டினித் தரம் ஆகிய இரண்டும் இந்த உற்பத்தி முறையின் அடிப்படையான, தவிர்க்க முடியாத நிபந்தனேகளும், ஆதாரங்களும் ஆகும். முதலாளித்துவம் முதலாளித்துவமாகவே இருக்கிறவரை, ஒரு நாட்டின் பொதுமக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் காரியத்துக்காக உபரி மூலதனம் உபயோகப்படுத்தப்படமாட்டாது, ஏனென்றுல் இது, முதலாளிகளின் லாபத்தில் குறைவுபாட்டை உண்டாக்கும்; ஆஞல், பின்தங்கிய வெளிநாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதன்மூலம் அதிக லாபங்களேப் பெறும் பொருட்டு உபரி மூலதனம் உபயோகப்படுத்தப்படும். இந்தப் பின்தங்கிய நாடுகளில் மூலதனம் போதாததாகவும், நிலத்தின் விலே ஒப்புநோக்கில் குறைவாகவும், கூலிகள் குறைவாகவும், கச்சாப் பொருட்கள் மலிவாகவும் இருப்பதால் சாதாரணமாக லாபங்கள் அதிகமாக இருக்கின்றன. அநேகப் பின்தங்கிய நாடுகள் உலக முதலாளித்துவத் தொடர்புகளில் ஏற்கனவே இழுக்கப்பட்டு விட்டன; அங்கு முக்கிய ரயில் பாதைகள் போடப்

பட்டிருக்கின்றன அல்லது போடப்பட்டு வருகின்றன; தொழில் வளர்ச்சிக்கான ஆரம்பச் சூழ்நிலைகள் உண்டாக்கப் பட்டு இருக்கின்றன; இன்னும் இவ்வாறு பல நடை பெற்றிருக்கின்றன; இந்தக் காரணங்களால் மூலதன ஏற்றுமதிக்கு வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. ஒரு சில நாடுகளில் முதலாளித்துவம் ''மட்டுமீறிப் பழுத்துவிட்டது'' என்ற காரணத்தினாலும், (விவசாயத்தின் பின்தங்கிய நிலை, பொதுமக்களின் வறுமை நிலை ஆகியவை காரணமாக) ''லாபகரமான'' முதலீட்டுக்கான துறையை மூலதனம் பெறமுடியாதிருக்கும் காரணத்தினாலும், மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் அவசியம் ஏற்படுகிறது:

மூன்று முதன்மையான நாடுகள் வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ள மூலதனத்தின் தொகையைக் காட்டும் தோராயமான புள்ளிவிவரங்கள் இதோ இருக்கின்றன:*

---

* Hobson, *Imperialism*, L., *1902*, பக்கம் *58;* Riesser, மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் *395, 404;* P. Arndt, *Weltwirtschaftliches Archiv* என்ற வெளியீட்டில் Bd. *7, 1916*, S. *35 (பி. அருந்த், ''உலகப் பொருளாதாரத்தின் பழைய தஸ்தாவேஜுகள்'', தொகுதி 7, 1916, பக்கம் 35.—ப-ர்.);* Neymarck, *Bulletin* இல்; ஹில்பர்டிங், ''நிதி மூலதனம்'', பக்கம் *492;* Lloyd-George, காமன்ஸ் சபையில் பேச்சு, மே *4, 1915, Daily Telegraph*, மே *5, 1915*ல் வெளியிடப்பட்டிருக்கிறது; B. Harms, *Probleme der Weltwirtschaft*, Jena, *1912*, S. *235* முதலியன *(பி. ஹார்ம்ஸ், ''உலகப் பொருளாதாரப் பிரச்சினைகள்''. யேனு, 1912, பக்கம் 235 முதலியன—ப-ர்.);* Dr. Siegmund Schilder, *Entwicklungstendenzen der Weltwirtschaft*, Berlin, *1912*. Bd. *1*. S. *150 (டாக்டர் சீக்முண்ட் ஷில்டர், ''உலகப் பொருளாதார வளர்ச்சியின் போக்குகள்'', பெர்லின், 1912, தொகுதி 1, பக்கம் 150.—ப-ர்.); Journal of the Royal Statistical Society* என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்ட George Paish, *Great Britain's Capital Investments etc.* vol. LXXIV. *1910-11*, பக்கம் *167*ம் அடுத்தவையும் *(ஜார்ஜ் பெய்ஷ், ''கிரேட் பிரிட்டனின் மூலதன முதலீடுகள், முதலியன'', ''ராயல் புள்ளிவிவரக் கழகத்தின் சஞ்சிகை''. தொகுதி* LXXIV, — *ப-ர்.).* Georges Diouritch, *L'Expansion des banques allemandes à l'étranger, ses rapports avec le développement économique de l'Allemagne*, P.

வெளிநாடுகளில் போடப்பட்டுள்ள மூலதனம்
*(100 கோடி பிராங்குகளில்)*

| ஆண்டு | கிரேட் பிரிட்டன் | பிரான்ஸ் | ஜெர்மனி |
|---|---|---|---|
| *1862* | *3.6* | — | — |
| *1872* | *15.0* | *10(1869)* | — |
| *1882* | *22.0* | *15(1880)* | *?* |
| *1893* | *42.0* | *20(1890)* | *?* |
| *1902* | *62.0* | *27-37* | *12.5* |
| *1914* | *75-100.0* | *60* | *44.0* |

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தான் மூலதனத்தின் ஏற்றுமதி பயங்கரமான பரிமாணங்களை எட்டியது என்பதை இந்தப் பட்டியல் காட்டுகிறது. யுத்தத்துக்கு முன்னுல், இந்த மூன்று முதன்மையான நாடுகளும் வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்த மூலதனத்தின் தொகை *17,500-20,000* கோடி பிராங்குகளுக்கு இடைப்பட்டதாக இருந்தது. 5 சதவிகிதம் என்ற மிதமான விகிதத்தின்படி, இந்தத் தொகையிலிருந்து கிடைத்த வருமானம் ஆண்டொன்றுக்கு *800* கோடி முதல் *1,000* கோடி பிராங்குகள் வரை எட்டியிருக்க வேண்டும். உலகின் பெரும்பாலான நாட்டினங்களும் நாடுகளும் ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் ஆளாக்கப்படுவதற்கும் செல்வம் படைத்த மிகச் சில தேசங்களின் முதலாளித்துவ ஒட்டுண்ணித் தனத்துக்கும் இதுவே ஒரு திடமான அஸ்திவாரமாகும்!

வெளிநாடுகளில் போடப்பட்டுள்ள இந்த மூலதனம் பல்வேறு நாடுகளுக்கிடையில் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது? எங்கு அது முதலீடு செய்யப்பட்டிருக்கிறது? இக்கேள்விக்குத் தோராயமான பதில்தான் கொடுக்க முடி

---

*1909*, p. *84* (ஜார்ஜ் டியுரிச், ''ஜெர்மனியின் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாக வெளிநாடுகளில் ஜெர்மன் பாங்குகளின் விஸ்தரிப்பு'', பாரிஸ், *1909*, பக்கம் *84*.—ப-ர்.).

யும்; ஆயினும் அப்பதில், தற்கால ஏகாதிபத்தியத்தின் சில பொதுவான உறவுகள், தொடர்புகள் ஆகியவைகளைத் தெளிவாக்குவதற்குப் போதுமானதாக இருக்கும்.

**அன்னிய மூலதனம் (தோராயமாக) வினியோகிக்கப்பட்டிருக்கும் உலகப் பகுதிகள்**

*(சுமார் 1910)*

| | இரேட் பிரிட்டன் | பிரான்சு | ஜெர்மனி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (100 கோடி மார்க்குகள்) | | | |
| ஐரோப்பா . . . . . . . . . . . | 4 | 23 | 18 | 45 |
| அமெரிக்கா . . . . . . . . . . . | 37 | 4 | 10 | 51 |
| ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா . . . . . . . . . . . . . | 29 | 8 | 7 | 44 |
| மொத்தம் | 70 | 35 | 35 | 140 |

பிரிட்டிஷ் மூலதனம் முதலீடு செய்யப்பட்ட முக்கியமான பிரதேசங்கள் பிரிட்டிஷ் காலனிகள். காலனிகள் அமெரிக்காவில் கூட (உதாரணமாக, கானடா) மிகவும் பரந்திருக்கின்றன; ஆசியா முதலியவைகளைப் பற்றியோ கூறவே வேண்டியதில்லை. இந்த விஷயத்தில், ஏராளமான மூலதன ஏற்றுமதி பரந்த காலனிகளுடன் மிகமிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது; ஏகாதிபத்தியத்திற்கு இவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி நாம் பிறகு பேசுவோம். பிரான்ஸ் விஷயத்தில் நிலைமை வேருக இருக்கிறது. பிரெஞ்சு மூலதனம் முக்கியமாக ஐரோப்பாவில், முதன்மையாக ருஷ்யாவில் (ஆயிரம் கோடி பிராங்குகளுக்குக் குறையாமல்) முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது; பெரும்பாலும் இது கடன் மூலதனம், அரசாங்கக் கடன்கள்; தொழில்

ஸ்தாபனங்களில் இடப்பட்ட மூலதனமல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் காலனி ஏகாதிபத்தியம்; அதைப்போலன்றி பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைக் கடும்வட்டி வாங்கி ஏகாதிபத்தியம் என்று குறிக்கலாம். ஜெர்மனி விஷயத்தில் நாம் ஒரு மூன்ருவது வகையைப் பெற்றிருக்கிறேம்: அதன் காலனிகள் மிகவும் சொற்பமானவை; அயல் நாடுகளில் முதலீடு செய்யப்பட்ட ஜெர்மன் மூலதனம் ஐரோப்பா, அமெரிக்காவுக்கிடையில் மிகமிகச் சமமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

மூலதன ஏற்றுமதி, எந்த நாடுகளுக்கு அது ஏற்றுமதி செய்யப்படுகிறதோ அவைகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிமீது செல்வாக்கு விளைக்கிறது; இந்த வளர்ச்சியை மிக மிகத் துரிதப்படுத்துகிறது. ஆகவே, மூலதன ஏற்றுமதி, மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வளர்ச்சியை ஓரளவுக்குத் தடைப்படுத்தக் கூடும் ஆயினும் உலக முழுவதிலும் முதலாளித்துவத்தின் மேற்கொண்ட வளர்ச்சியை விரிவும் ஆழமும் படுத்துவதற்கு விலையாகவே இது நிகழ முடியும்.

மூலதன ஏற்றுமதி செய்யும் நாடுகள் அநேகமாக எப்பொழுதும் ஒரு சில ''அனுகூலங்களை''ப் பெற முடிகிறது; அவ்வனுகூலங்களின் தன்மை நிதி மூலதன, ஏகபோகக் கால கட்டத்தின் விசேஷத் தன்மையைத் தெளிவாக்குகிறது. உதாரணமாக, பெர்லின் சஞ்சிகையாகிய ''பாங்கு'' அக்டோபர் 1913 இதழில் கீழ்க்கண்டவாறு எழுதியது:

''அரிஸ்டோபேன்ஸினுல் எழுதப்படும் தகுதிவாய்ந்த ஒரு நகைச்சுவை நாடகம் சர்வதேச மூலதன மார்க்கெட்டில் இப்போது கொஞ்ச காலமாக நடத்தப்பட்டு வருகிறது. ஸ்பெயினிலிருந்து பால்கன் நாடுகள் வரை, ருஷ்யாவிலிருந்து ஆர்ஜென்டீனு, பிரேஸில், சீனு ஆகியவை வரை அநேக அயல் நாடுகள், கடன் கோரிக்கைகளுடன், சில சமயங்களில் மிகப் பிடிவாதமான கோரிக்கைகளுடன், வெளிப்படையாக அல்லது இரகசியமாகப் பெரிய பண மார்க்கெட்டிற்குள் வந்து கொண்டிருக்கின்றன. இந்நேரத்தில் பண மார்க்கெட்டுகள் நல்ல நிலையில் இல்லை; அரசியலின் எதிர் காலம் நம்பிக்கையூட்டத்தக்கதாக இல்லை. ஆயினும் தனது அண்டையிலுள்ளவர்கள் முந்திக் கொள்வார்கள்;

கடன் கொடுக்கச் சம்மதிப்பார்கள்; ஆகவே, கைமாருகச் சில உபகாரங்களைப் பெறுவார்கள் என்ற அச்சத்தினுல் ஒரு பண மார்க்கெட்டும் கடனைத் தர மறுக்கத் துணிவதில்லை. இந்த விதமான சர்வதேச நடவக்கைகளில், கடன் தருபவன் சாதாரணமாக எப்பொழுதும் சில அதிகப்படியான பயனை எப்படியாவது பெற்றுவிடுகிருன்: ஒரு வர்த்தக உடன்படிக்கையில் சாதகமான ஒரு ஷரத்து, நிலக்கரி நிலையம், துறை முகம் கட்டுவதற்கானதோர் ஒப்பந்தம், கொழுத்த சலுகை, பீரங்கிகளுக்கான ஓர் ஆர்டர்.''*

நிதி மூலதனம் ஏகபோகங்களின் காலகட்டத்தை ஏற் படுத்தியிருக்கிறது. ஏகபோகங்கள், ஏகபோகக் கொள்கைகளை எங்கும் புகுத்தியிருக்கின்றன: பகிரங்க மார்க்கெட்டிலான போட்டியின் இடத்தை, லாபகரமான நடவடிக்கைகளுக்காகத் ''தொடர்புகளை''ப் பயன்படுத்துதல் பிடித்துக் கொள்கிறது. கொடுக்கப்படுகின்ற கடனில் ஒரு பகுதி, கடன் தருகிற நாட்டில் பொருள்களை வாங்குவதற்காக, குறிப்பாகப் போர்த் தளவாடங்கள் அல்லது கப்பல்கள் முதலியவைகளுக்காகச் செலவிடப்பட வேண்டும் என்று நிபந்தனை போடுவது மிகவும் வழக்கமாக நடக்கிற விஷயமாகும். கடந்த இரண்டு பத்தாண்டுகளில் *(1890-1910)* பிரான்ஸ் இம் முறையை மிகவும் அடிக்கடி கையாண்டிருக்கிறது. இவ்வாறு, வெளிநாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வது பொருள் ஏற்றுமதியை ஊக்குவிக்கிற ஒரு சாதனமாக ஆகிறது. இது சம்பந்தமாக, விசேஷமாகப் பெரிய நிறுவனங்களுக்கிடையிலான நடவடிக்கைகள், ஷில்டர்** ''பதமாகக்'' கூறுவதுபோல, ''ஊழலைக் கிட்டத்தட்ட ஒத்த'' ஒரு வடிவத்தைப் பெறுகின்றன. சக்திவாய்ந்த பாங்குகளுடனும் அரசாங்கங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவையும், கடன் ஒப்பந்தம் செய்யப்படும் பொழுது சுலபமாக ''அசட்டை செய்ய'' முடியாதவையுமான நிறுவனங்களுக்கு ஜெர்மனியில் க்ருப்பும், பிரான்சில் ஷ்னைடரும், இங்கிலாந்தில் ஆம்ஸ்ட்ராங்கும் உதாரணங்களாகும்.

---

* *Die Bank*, 1913,2, 1024-1025.

** Schilder, மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 346, 350, 371.

பிரான்ஸின் அரசாங்கம் ருஷ்யாவுக்குக் கடன்கள் கொடுத்த பொழுது, 1905, செப்டம்பர் 16ந் தேதிய வர்த்தக உடன்படிக்கையில் அதைக் ''கசக்கிப் பிழிந்தது''; இவ்வுடன் படிக்கையில் 1917 வரை நீடிக்கக் கூடிய ஒரு சில சலுகை களைப் பெறுவதற்காக பிரான்ஸ் நிபந்தனை போட்டது. 1911, ஆகஸ்டு 19ல் பிரெஞ்சு-ஜப்பானிய வர்த்தக உடன்படிக் கை செய்து கொள்ளப்பட்ட பொழுதும் பிரான்ஸ் இதை யே செய்தது. ஏழு மாத இடைவேளையுடன், 1906 முதல் 1911 வரை ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்குமிடையில் நடந்த சுங்கவரிப் போர், போர்த் தளவாடங்களை செர் பியாவுக்கு சப்ளை செய்வதற்காக ஆஸ்திரியாவுக்கும் பிரான் சுக்கும் இடையிலான போட்டியினுல் ஓரளவு விளைந்தது. 1908லிருந்து 1911 வரை பிரெஞ்சு நிறுவனங்கள் $4^1/_2$ கோடி பிராங்குகள் மதிப்புள்ள போர்த் தளவாடங்களை செர்பியாவுக்கு சப்ளை செய்திருந்ததாகப் பிரதிநிதிகள் சபை யில் போல் டெஷனெல் 1912 ஜனவரியில் கூறினுர்.

ஸாவோ-பாவுலோவில் (பிரேஸில்) இருக்கும் ஆஸ்திரிய-ஹங்கேரிய கான்சலிடமிருந்து வந்த ஓர் அறிக்கை கூறு கிறது: ''பிரேஸிலிய ரயில்வேக்கள் நிறுவப்படுவது, முக் கியமாக பிரெஞ்சு, பெல்ஜிய, பிரிட்டிஷ், ஜெர்மன் மூலதனத் தினுல் செய்யப்பட்டு வருகிறது. இந்த ரயில்வேக்கள் அமைக்கப்படுவதுடன் தொடர்புள்ள நிதி சம்பந்தமான நடவடிக்கைகளில், இதில் ஈடுபட்டிருக்கும் நாடுகள், தே வையான ரயில்வே சாமான்களுக்கான ஆர்டர்களைத் தாங்கள் பெறுவதற்காக ஒப்பந்தத்தில் நிபந்தனைகள் விதிக்கின்றன.''

இவ்வாருக, நிதி மூலதனம் உலகமெங்கிலும் உள்ள எல்லா நாடுகளிலும் உண்மையிலேயே தனது வலையை விரிக்கிறது என்று கூறலாம். காலனிகளில் நிறுவப்பட்டுள்ள பாங்குகளும் அவைகளின் கிளைகளும் இதில் ஒரு முக்கிய மான பங்கு ஆற்றுகின்றன. இவ்விஷயத்தில் தங்களுக்கு வேண்டியதைப் பெறுவதில் விசேஷமாக ''வெற்றியடைந் திருக்கிற'' ''பழைய'' காலனி ஆதிக்க நாடுகளை ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் பொருமையுடன் பார்க்கிருர்கள். 1904ல் கிரேட் பிரிட்டன் 2,279 கிளைகளுடன் 50 காலனி பாங்குகளைக் கொண்டிருந்தது (1910ல் 5,449 கிளைகளுடன்

72 பாங்குகள் இருந்தன); பிரான்ஸ் 136 கிளைகளுடன் 20 பாங்குகளைப் பெற்றிருந்தது; ஹாலந்து 68 கிளைகளுடன் 16; ஜெர்மனி 70 கிளைகளுடன் 13 ''மட்டுமே'' பெற்றிருந்தது.* அமெரிக்க முதலாளிகள், தங்களது முறையாக, ஆங்கில, ஜெர்மானிய முதலாளிகளைப்பற்றிப் பொருமைப்படுகிருர்கள். அவர்கள் 1915ல் முறையிட்டார்கள்: ''தென்னமெரிக்காவில் ஐந்து ஜெர்மன் பாங்குகள் நாற்பது கிளைகளையும், ஐந்து இங்கிலீஷ் பாங்குகள் எழுபது கிளைகளையும் பெற்றிருக்கின்றன.... இங்கிலாந்தும் ஜெர்மனியும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஆர்ஜென்டீனு, பிரேஸில், உருகுவே ஆகிய நாடுகளில் கிட்டத்தட்ட நானூறு கோடி டாலர்கள் முதலீடு செய்துள்ளன. இதன்விளைவாக, இந்த மூன்று நாடுகளின் மொத்த வியாபாரத்தில் 46 சதவிகிதத்தை இரு நாடுகளும் சேர்ந்து அனுபவிக்கின்றன.''**

மூலதன ஏற்றுமதி செய்யும் நாடுகள் உலகத்தைத் தங்களுக்குள் உருவகப் பொருளில் பிரித்துக் கொண்டு விட்டன. ஆனல் நிதி மூலதனமோ உலகத்தை உண்மையிலேயே பங்கிடுவதில் கொண்டு விட்டிருக்கிறது.

---

* Riesser, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 375, 4வது பதிப்பு; Diouritch, பக்கம் 283.

***The Annals of the American Academy of Political and Social Science* vol. LIX, May 1915, p. 301 (''அரசியல், சமூக விஞ்ஞானம் பற்றிய அமெரிக்கக் கழகத்தின் வரலாற்றுக் குறிப்புகள்'', தொகுதி LIX, மே 1915, பக்கம் 301.—ப-ர்.). அதே புத்தகம், பக்கம் 331ல், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து ஆகியவை ஏற்றுமதி செய்த மூலதனத்தின் தொகை 4,000 கோடி டாலர்கள், அதாவது 20,000 கோடி பிராங்குகள் என்று பிரசித்திபெற்ற புள்ளி விவர அறிஞர் பெய்ஷ் நிதி சம்பந்தமான சஞ்சிகையாகிய *The Statist* மதிப்பிட்டிருப்பதாக நாம் படிக்கிறோம்.

## V. முதலாளிகளின் கூட்டமைப்புக்களுக் கிடையில் உலகப் பங்கீடு

முதலாளிகளின் ஏகபோகக் கூட்டமைப்புக்களும், கார்ட்டல்களும், சின்டிகேட்டுகளும், ட்ரஸ்டுகளும் முதன் முதலாக உள்நாட்டு மார்க்கெட்டைத் தங்களுக்குள் பிரித்துக் கொள்கின்றன; ஒரு நாட்டினது உற்பத்தித் தொழிலின் உரிமையை ஏறத்தாழ முழுமையாகக் கைப்பற்றிக் கொள் கின்றன. ஆனல், முதலாளித்துவத்தின்கீழ் உள்நாட்டு மார்க் கெட் வெளிநாட்டு மார்க்கெட்டுடன் தவிர்க்க முடியாத படிப் பிணைந்திருக்கிறது. நீண்ட காலத்துக்கு முன்பே முதலாளித்துவம் ஓர் உலக மார்க்கெட்டைச் சிருஷ்டித்தது. மூலதன ஏற்றுமதி பெருகப் பெருக, மிகப் பெரிய ஏகபோகக் கூட்டமைப்புக்களின் அந்நியத் தொடர்புகளும் காலனித் தொடர்புகளும் ''செல்வாக்கு மண்டலங்களும்'' எல்லா வழிகளிலும் விரிவடைய விரிவடைய, இக்கூட்டமைப்புக் களுக்கிடையில் ஒரு சர்வதேச உடன்பாடு ஏற்படுவதற்கும், சர்வதேசக் கார்ட்டல்கள் அமைக்கப்படுவதற்கும் ''இயற் கையாக'' விஷயங்கள் இழுத்துச் சென்றன.

இது, மூலதனத்தினுடையதும் உற்பத்தியினுடையது மான உலக ரீதியான குவிதலில் ஒரு புதிய கட்டம், முந்திய கட்டங்களேக் காட்டிலும் ஒப்புயர்வல்லாதபடி மிகவும் உயர் ந்த கட்டம் ஆகும். இந்த அதி ஏகபோகம்[supermonopoly] எவ்வாறு வளர்ச்சியுறுகிறது என்பதை நாம் கவனிப்போம்.

மிகவும் நவீனத் தொழில் நுட்பச் சாதனேகளின் மிக எடுத்துக்காட்டான மாதிரியாக இருப்பதும், பத்தொன்ப தாம் நூற்ருண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் முதலாளித்துவத்தின் மிகச் சிறந்த மாதிரி யாக இருப்பதும் மின்சாரத் தொழிலாகும். புதிய முத லாளித்துவ நாடுகளில் மிகமிக முன்னேறியுள்ள இரண்டில், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஜெர்மனியிலும், இத்தொ ழில் மிகவும் அதிகமாக அபிவிருத்தியடைந்துள்ளது. ஜெர்

மனியில் 1900ம் ஆண்டு நெருக்கடி இந்தத் துறையில் உள்ள குவிதலுக்கு ஒரு விசேஷமான பலத்த தூண்டுதலை அளித்தது. அந்நேரத்தில் தொழிலுடன் போதிய அளவு நன்கு ஒன்றிணைந்து விட்டிருந்த பாங்குகள், அந்நெருக்கடியின் பொழுது, ஒப்புநோக்கில் சிறிய நிறுவனங்களின் அழிவையும், அவைகள் பெரிய நிறுவனங்களால் விழுங்கப்படுவதையும் மிகப் பெருத்த அளவில் துரிதப்படுத்தின, தீவிரப்படுத்தின. எய்டல்ஸ் எழுதுகிறார்: ''மூலதனம் மிகமிக அதிகமாகத் தேவைப்படுகிற கம்பெனிகளுக்கு உதவி செய்ய மறுப்பதன் காரணமாக, அப்பாங்குகளுடன் போதுமான அளவு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிராத கம்பெனிகளுக்கு முதலில் வெறி வேகத்துடன் கூடிய கொழிப்பையும், பிறகு மோசமான முறிவையும் பாங்குகள் கொண்டு தருகின்றன.''*

இதன் விளைவாக, 1900க்குப் பிறகு, ஜெர்மனியில் குவிதல் இயக்கம் பெரு நடைபோட்டு வளர்ந்தது. 1900வரை மின்சாரத் தொழிலில் எட்டு அல்லது ஏழு ''குழுக்கள்'' இருந்து வந்தன; ஒவ்வொன்றும் அநேகக் கம்பெனிகளைக் கொண்டிருந்தது (மொத்தம் 28 இருந்தன); ஒவ்வொன்றும் 2 முதல் 11 வரை பாங்குகளால் ஆதரிக்கப்பட்டன. 1908க்கும் 1912க்கும் இடையில் இக்குழுக்கள் எல்லாம் இரண்டு அல்லது ஒரு குழுவாக ஒன்றுகிவிட்டன. இந்த நிகழ்முறை நடந்த விதம் பின்வருமாறு: (136ம் பக்கம் பார்க்க.)

இவ்வழியில் வளர்ந்த, பிரசித்தி பெற்ற A. E. G. (ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி), 175 முதல் 200 வரை கம்பெனிகள்மீது ''ஹோல்டிங்'' முறை மூலம் ஆதிக்கம் செலுத்துகிறது, கிட்டத்தட்ட மொத்தம் 150 கோடி மார்க்குகள் கொண்ட மூலதனத்தையும் நிர்வகிக்கிறது. வெளிநாடுகளிலுள்ள நேரடியான ஏஜென்ஸிகளை எடுத்துக் கொண்டால் கூட, பத்துக்கும் அதிகமான நாடுகளில் அது முப்பத்து நான்கைப் பெற்றிருக்கிறது; அவைகளில் பன்னிரண்டு ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளாகும். சற்று முன்பு, 1904லேயே, ஜெர்மன் மின்சாரத் தொழிலினுல் வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை 23 கோடி 30 லட்சம்

* எய்டல்ஸ், மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 232.

### மின்சாரத் தொழிலிலுள்ள குழுக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1900க்கு முன்பு: | பெல்டனும் லாம<br>கில்யோமும் யர் | யூனியன் | சீமென்ஸும் ஷுகெர்ட்டும்<br>ஹல்ஸ்கெயும் கம்பெனியும் | பெர்க்மன் | கும்மர் |
| | பெல்டனும் லாமயரும் | A. E. G. — A. E. G. (ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி) | சீமென்ஸும் ஹல்ஸ்கெ-ஷுகெர்ட்டும் | பெர்க்மன் | 1900 ல் முறிந்தது |
| | A. E. G. (ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி) | | சீமென்ஸும் ஹல்ஸ்கெயும்-ஷுகெர்ட்டும் | | |
| 1912க்குள்: | (1908க்குப் பிறகு நெருங்கிய ''கூட்டுறவு'') | | | | |

மார்க்குகளாக மதிப்பிடப்பட்டது; இத்தொகையில், 6 கோடி 20 லட்சம் ருஷ்யாவில் முதலீடு செய்யப்பட்டது. ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி'', கேபிள்கள், இன்சுலேட்டர்கள் ஆகியவைகளிலிருந்து மோட்டார் கார்கள், பறக்கும் இயந்திரங்கள் வரை மிகவும் பல்வேறு விதமான பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு பிரம்மாண்டமான ''கூட்டமைப்பு''—அதன் உற்பத்தி செய்யும் கம்பெனிகளின் எண்ணிக்கை மட்டுமே பதினாறுக்குச் சமமாக இருக்கிறது—என்பதைக் கூறத் தேவையில்லை.

ஆனால், ஐரோப்பியக் குவிதல் இயக்கம், அமெரிக்கக் குவிதல் இயக்க நிகழ்முறையின் ஓர் உறுப்பாகவும் இருந்தது. குவிதல் இயக்கம் கீழ்க்கண்ட வழியில் வளர்ந்தது:

| | ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி (General Electric Co.) | |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள்: | தாம்சன்-ஹொஸ்டன் கம்பெனி ஐரோப்பாவில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துகிறது | எடிசன் கம்பெனி ஐரோப்பாவில் ''பிரெஞ்சு எடிசன் கம்பெனி''யை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரெஞ்சுக் கம்பெனி தனது பேடன்ட்டுகளை ஜெர்மன் நிறுவனத்துக்கு மாற்றுகிறது |
| ஜெர்மனி: | யூனியன் எலெக்டிரிக் கம்பெனி | ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி'' (A. E. G.) |
| | ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி'' (A. E. G.) | |

இவ்வாறாக, இரண்டு மின்சார ''வல்லரசுகள்'' அமைக்கப்பட்டன: ''இவைகளிலிருந்து முழுதும் சுதந்திரமான வேறு எந்த மின்சாரக் கம்பெனிகளும் உலகில் இல்லை'' என்று ''மின்சார ட்ரஸ்ட்டின் பாதை'' என்ற தமது கட்டுரையில் ஹைனிஹ் எழுதுகிறார். இந்த இரண்டு ''ட்ரஸ்டு''களின் மொத்தக் கொடுக்கல் வாங்கல்களை பற்றியும், அவைகளுடைய ஸ்தாபனங்களின் அளவைப் பற்றியும் ஒரு கருத்

தை—மிகவும் முழுமையான கருத்தையல்ல—கீழ்க்கண்ட புள்ளிவிவரங்களிலிருந்து பெற முடியும்:

| | மொத்தக் கொடுக்கல் வாங்கல் (பத்து லட்சம் மார்க்குகளில்) | தொழிலாளர்களின் எண்ணிக்கை | நிகர லாபம் (பத்து லட்சம்மார்க்குகளில்) |
|---|---|---|---|
| அமெரிக்கா: ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி'' (G.E.C.) | | | |
| 1907 . . . . . . . . | 252 | 28,000 | 35.4 |
| 1910 . . . . . . . . | 298 | 32,000 | 45.6 |
| ஜெர்மனி: ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி'' (A. E. G.) | | | |
| 1907 . . . . . . . . | 216 | 30,700 | 14.5 |
| 1911 . . . . . . . . | 362 | 60,800 | 21.7 |

சரி, 1907ல் ஜெர்மானிய ட்ரஸ்டும் அமெரிக்க ட்ரஸ்டும் உலகைப் பங்கு போட்டுக் கொள்வதுபற்றி ஒப்பந்தம் செய்து கொண்டன. அவைகளுக்கிடையில் போட்டி நின்றது. அமெரிக்க ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி'' (G. E. C.), அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் கானடாவையும்''பெற்றது''; ஜெர்மானிய ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி'' (A.E.G.) ஜெர்மனி, ஆஸ்திரியா, ருஷ்யா, ஹாலந்து, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து, துருக்கி, பால்கன் நாடுகள் ஆகியவைகளைப் ''பெற்றது''. புதிய தொழிற்கிளைகளில், இன்னும் முறையாகப் பங்கிடப்படாத ''புதிய'' நாடுகளில், ''பிள்ளைக் கம்பெனிகள்'' உள்நுழைவதற்காக விசேஷ, இயற்கையில் இரகசியமான, ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. புதிய கண்டுபிடிப்புகளையும் பரிசோதனைகளையும் இரண்டு

ட்ரஸ்டுகளும் பரிவர்த்தனை செய்து கொள்வதென்று ஏற்பாடாயிற்று.*

உண்மையில் ஒன்றான, உலக முழுவதும் பரந்துள்ள, பல நூறு கோடி மூலதனத்தை நிர்வகிக்கின்ற, உலகின் ஒவ்வொரு மூலையிலும் தனது ''கிளைகள்'', ஏஜென்ஸிகள், பிரதிநிதிகள், தொடர்புகள் முதலியவைகளைப் பெற்றுள்ள இந்த ட்ரஸ்டுடன் போட்டியிடுவதிலுள்ள கஷ்டம் தானே புலனாகிறது. ஆனால், சரிசமமற்ற வளர்ச்சி, யுத்தம், திவாலாகுதல் முதலியவை காரணமாகச் சக்திகளின் ஒப்புநிலை மாற்றமடைந்தால் உலகம் மறுபங்கிடப்படுவதை, இரண்டு பலமிக்க ட்ரஸ்டுகளுக்கு இடையில் உலகம் பங்கிடப்பட்டிருப்பது தவிர்க்காது.

அத்தகைய ஒரு மறுபங்கீடு செய்வதற்கான முயற்சிகளுக்கு, மறுபங்கீட்டுக்கான போராட்டத்திற்கு, படிப்பினையளிக்கும் ஓர் உதாரணத்தை எண்ணெய்த் தொழில் தருகிறது.

1905ல் எய்டல்ஸ் எழுதினார்: ''உலகக் கனிய எண்ணெய் மார்க்கெட் இன்று கூட இரண்டு பெரிய நிதிக் குழுக்களுக்கிடையில் இன்னும் பங்கிடப்பட்டிருக்கிறது: ராக்பெல்லரது அமெரிக்க 'ஸ்டான்டர்டு எண்ணெய்க் கம்பெனி' (Standard Oil Co.), பாக்கூவில் உள்ள ருஷ்ய எண்ணெய் வயல்களின் உடைமையாளிகளான ரோத்ஷீல்டும் நோபலும் ஆகியவையே அவை. இவ்விரண்டு குழுக்களும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றன; ஆனால், அவைகளின் ஏகபோகத்தை ஐந்து எதிரிகள் பல ஆண்டுகளாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்''**: 1) அமெரிக்க எண்ணெய் வயல்களின் வறட்சி; 2) பாக்கூவிலுள்ள மன்தாஷேவ் நிறுவனத்தின் போட்டி; 3) ஆஸ்திரிய எண்ணெய் வயல்கள்; 4) ருமேனிய எண்ணெய் வயல்கள்; 5) கடல் கடந்த தேசங்களில் உள்ள எண்ணெய் வயல்கள், குறிப்பாக டச்சுக் காலனிகளில் (அதி செல்வம்படைத்த நிறுவனங்களான,

---

* Riesser, மேற்குறிப்பிட்ட நூல்; Diouritch, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 239; Kurt Heinig, மேற்குறிப்பிட்ட கட்டுரை.

** எய்டல்ஸ், மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 192-193.

பிரிட்டிஷ் மூலதனத்துடனும் தொடர்புள்ள, சாமுவேலும், ஷெல்லும்). இதில் கடைசி மூன்று குழுக்களும், பிரம்மாண்டமான ''ஜெர்மானிய பாங்''கின் தலைமையிலான பெரிய ஜெர்மன் பாங்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இந்த பாங்குகள், உதாரணமாக ருமேனியாவில், ''தங்களுக்கு''க் காலூன்றும் இடம் பெற வேண்டி, தனித்தனியாகவும் முறையாகவும் எண்ணெய்த் தொழிலை அபிவிருத்தி செய்தன. ருமேனிய எண்ணெய்த் தொழிலில் போடப்பட்ட அந்நிய மூலதனம் 18 கோடி 50 லட்சம் பிராங்குகள் என்று 1907ல் மதிப்பிடப்பட்டது. அதில் 7 கோடி 40 லட்சம் ஜெர்மன் மூலதனமாகும்.*

பொருளாதார இலக்கியத்தில் உண்மையில் கூறப்படுவதுபோல ''உலகப் பங்கீட்டு''க்காக ஒரு போராட்டம் தொடங்கியது. ஒருபுறம், எல்லாவற்றையும் கைப்பற்ற விரும்பி, ராக்பெல்லர் ''எண்ணெய் ட்ரஸ்டு'' ஹாலந்திலேயே ஒரு ''பிள்ளைக் கம்பெனி''யை அமைத்து, தனது தலையாய எதிரியாகிய ஆங்கிலோ-டச்சு ''ஷெல்'' ட்ரஸ்டைத் தாக்க வேண்டி, டச்சு இந்தியத் தீவுகளில் எண்ணெய் வயல்களை வாங்கியது. மறுபுறம், ''தங்களுக்கென'' ருமேனியாவைத் ''தொடர்ந்து வைத்துக் கொள்வதற்கும்'', ராக்பெல்லருக்கு எதிராக அதை ருஷ்யாவுடன் ஐக்கியப்படுத்துவதற்கும் ''ஜெர்மானிய பாங்கும்'', மற்ற ஜெர்மன் பாங்குகளும் நோக்கங்கொண்டன. ராக்பெல்லர் ட்ரஸ்டு, மற்றவற்றைக் காட்டிலும் மிக அதிகமான மூலதனத்தையும், எண்ணெய்ப் போக்குவரத்திற்கும் விநியோகத்திற்கும் தலை சிறந்த அமைப்பு முறையையும் பெற்றிருந்தது. அப்போராட்டம் ''ஜெர்மானிய பாங்''கின் முழுதோல்வியுடன் முடிய வேண்டியிருந்தது, 1907ல் அவ்வாறே முடியவும் செய்தது. கீழ்க்கண்ட வழிகள்தான் ''ஜெர்மானிய பாங்''கின் எதிரில் இருந்தன: ஒன்று, கோடிக்கணக்கான நஷ்டத்துடன் தனது ''எண்ணெய்த் தொழில்களை'' மூட்டை கட்டி வைத்து விட வேண்டும், அல்லது பணிய வேண்டும். அது பணியத் தீர்மானித்தது; ''எண்ணெய் ட்ரஸ்டுடன்'' தனக்கு மிகவும் பிரதிகூலமான

* Diouritch, மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 245-246.

ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. ''அமெரிக்க நலன் களுக்கு ஊறு செய்யும் எதையும் செய்ய முயலுவதில்லை'' என ''ஜெர்மானிய பாங்கு'' ஒப்புக்கொண்டது. ஆயினும், ஜெர்மனியில் ஓர் அரசாங்க எண்ணெய் ஏகபோகத்தை நிறுவும் சட்டம் இயற்றப்பட்டால் இந்த ஒப்பந்தம் ரத்து ஆகிவிடும் என்ற ஷரத்தும் அவ்வொப்பந்தத்தில் சேர்க் கப்பட்டது.

பிறகு ''எண்ணெயின் வேடிக்கை நாடகம்'' தொடங்கி யது. ஜெர்மனியின் நிதி மன்னர்களில் ஒருவரும், ''ஜெர் மானிய பாங்''கின் டைரக்டருமான வான் க்வின்னர், அர சாங்க எண்ணெய் ஏகபோகத்தை நிறுவுவதற்காக, தனது அந்தரங்கக் காரியதரிசி ஷ்ட்டோஸ் மூலம் ஒரு பிரசார இயக்கத்தை ஆரம்பித்தார். இந்த மிகப் பெரிய பெர்லின் பாங்கின் பிரம்மாண்டமான இயந்திரமும் அதன் பரந்த ''தொடர்புகள்'' யாவும் இயங்கத் தொடங்கின. அமெரிக்க ட்ரஸ்டின் ''நுகத்''துக்கு எதிராகத் ''தேசபக்தி மிகுந்த'' கோபாவேசத்துடன் பத்திரிகைகள் கொதித்துப் பொங்கின. 1911, மார்ச்சு 15ந் தேதி, எண்ணெய் ஏகபோகத்தை நிறுவுவதற்கான மசோதாவைப் பிரேரேபிக்கும்படி அரசாங் கத்தைக் கோரி கிட்டத்தட்ட ஏகமனதாக ஒரு தீர்மானத் தை ரைஹ்ஸ்டாக் நிறைவேற்றியது. ''மக்களது ஆதரவு பெற்ற'' இந்த யோசனையை அரசாங்கம் பிடித்துக் கொண் டது; தனது அமெரிக்கக் கூட்டாளியை ஏமாற்றவும், அர சாங்க ஏகபோகத்தின்மூலம் தனது தொழிலை அபிவிருத்தி செய்து கொள்ளவும் எண்ணிய ''ஜெர்மானிய பாங்''கின் குழ்ச்சி வெற்றியடைந்து விட்டதாகத் தோன்றியது. ருஷ் யச் சர்க்கரை ஆலைக்காரர்களது லாபங்களைவிடக் குறைவில் லாத மிகப் பெருத்த லாபங்களின் காட்சிகளை ஜெர்மன் எண்ணெய் மன்னர்கள் தங்கள் கண்முன் ஏற்கனவே கண் டார்கள்.... ஆனால் முதலாவதாக, கொள்ளைப் பொருட் களைப் பகிர்ந்து கொள்ளுவதுபற்றிப் பெரிய ஜெர்மன் பாங்குகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டன. ''ஜெர்மானிய பாங்''கினது பேராசை நோக்கங்களை ''டிஸ்க வுண்டு ஸ்தாபனம்'' அம்பலப்படுத்தியது; இரண்டாவதாக, ராக்பெல்லருடன் போரிடுவதன் விளைவைப் பற்றி அரசாங்கம்

பயங்கொண்டது. ஏனெனில், வேறு மூலங்களிலிருந்து எண்ணெய் பெறுவதுபற்றி ஜெர்மனி நிச்சயமாக இருக்க முடியுமா என்பது மிகவும் சந்தேகமாயிருந்தது (ருமேனிய உற்பத்தியின் அளவு சிறியது); மூன்றாவதாக, இந்தச் சமயத் தில் தான் ஜெர்மனியின் போர் ஆயத்தங்களுக்காக நூறு கோடி மார்க்கு கடன்கள் 1913ல் அங்கீகரிக்கப்பட்டன. எண்ணெய் ஏகபோகத் திட்டம் ஒத்திப் போடப்பட்டது. ராக்பெல்லர் ''எண்ணெய் ட்ரஸ்டு'' போராட்டத்திலிருந்து தாற்காலிக வெற்றியுடன் வெளிவந்தது.

மின்சார ஏகபோகம் ஒன்றை ஏற்படுத்துவதன்மூலமும் நீர் சக்தியை மலிவான மின்சார சக்தியாக மாற்றுவதன் மூலமும் மட்டும்தான், ஜெர்மனி ''எண்ணெய் ட்ரஸ்''டுடன் போரிட முடியும் என்று இவ்விஷயம் சம்பந்தமாக பெர்லின் சஞ்சிகை ''பாங்கு'' எழுதியது. அதன் ஆசிரியர் தொடர்ந்து எழுதியதாவது: ''ஆனால், மின்சார ஏகபோகம், உற்பத்தி யாளர்கள் அதைத் தேவைப்பட்டு விரும்புகிற பொழுது, வரும்; அதாவது, மின்சாரத் தொழிலில் அடுத்தபடியாகப் பெரிய முறிவு வாயிலில் வந்து நிற்கும்பொழுதும், தனிப் பட்ட மின்சார கன்சர்ன்களால் எங்கெங்கும் மிகுந்த செல வில் இப்பொழுது நிறுவப்பட்டு வருகின்ற பிரம்மாண்ட மான, விலை உயர்ந்த மின்சார நிலையங்கள், எவற்றுக்காக இந்தக் கன்சர்ன்கள் நகரங்களிடமிருந்தும் ராஜ்யங்கள் முத லியவைகளிடமிருந்தும் அரைகுறை ஏகபோக உரிமைகளை ஏற்கனவே பெற்று வருகின்றனவோ அம்மின்சார நிலையங் கள், லாபத்துடன் மேலும் இயங்க முடியாத பொழுதும் மின்சார ஏகபோகம் வரும். அப்பொழுது நீர்சக்தி உபயோகப் படுத்தப்பட்ட வேண்டிவரும். ஆனால், அரசாங்கச் செல வில் அதை மலிவான மின்சார சக்தியாக மாற்றுவது முடி யாது; 'அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தனியார் ஏகபோகம்' ஒன்றின் கையில் அதை ஒப்படைக்க வும் வேண்டியிருக்கும்; ஏனெனில் தனியார் தொழில் ஏற் கனவே நிறைய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கிறது; பெருத்த நஷ்ட ஈடுகளுக்கான நிபந்தனைகளையும் விதித் திருக்கிறது... நைட்டிரேட் ஏகபோகம் விஷயத்திலும் இப் படித்தான் இருந்தது; எண்ணெய் ஏகபோக விஷயத்திலும்

இப்படித்தான் இருக்கிறது; மின்சார ஏகபோகத்தின் விஷயத்திலும் இப்படித் தான் இருக்கும். ஓர் அழகான கொள்கை தங்களது கண்ணைக் கறைக்கும்படி விட்டிருக்கும் நமது அரசாங்க சோஷலிஸ்டுகள் கீழ்க்கண்டதைப் புரிந்துகொள்ள வேண்டிய காலம் கடைசியில் வந்துவிட்டது: நுகர்வோர் பயன் பெறுகின்ற அல்லது தோற்றுவிப்போர் லாபங்களில் ஒரு பாகத்தை அரசாங்கத்திடமாவது ஒப்படைக்கின்ற நோக்கத்தை ஜெர்மனியில் ஏகபோகங்கள் ஒருபோதும் கடைப்பிடிக்கவில்லை; இந்த விளைவுகளையும் அவைகள் தோற்றுவிக்கவில்லை; திவாலாகும் நிலையில் இருந்த தனியார் தொழில்களை அரசாங்கத்தின் செலவில் புனருத்தாரணம் செய்யும் பணியை ம்ட்டுமே அவை புரிந்தன.''*

ஜெர்மன் பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகள் ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்ற, விலை மதிப்பற்ற உண்மைகள் இப்படிப்பட்டவை தாம். நிதி மூலதன யுகத்தில் எவ்வாறு தனியார் ஏகபோகங்களும் அரசாங்க ஏகபோகங்களும் ஒன்ருகப் பின்னிப்பிணைந்திருக்கின்றன என்பதையும், உலகத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்காக மிக பெரிய ஏகபோகக்காரர்களிடையில் நடக்கும் ஏகாதிபத்தியப் போராட்டம் என்ற சங்கிலித் தொடரில் எவ்வாறு இவையிரண்டும் உண்மையில் தனித் தனியான வளையங்களே தவிர வேறில்லை என்பதையும் நாம் தெளிவாகக் காண்கிருேம்.

வியாபாரக் கப்பல் போக்குவரத்தில் கூட, குவிதல் இயக்கத்தின் பிரம்மாண்டமான வளர்ச்சி உலகத்தைப் பங்கிடுவதற்குத்தான் இட்டுச் சென்றிருக்கிறது. ஜெர்மனியில் இரண்டு சக்திவாய்ந்த கம்பெனிகள் முன்னணிக்கு வந்துள்ளன: ''ஹாம்பர்க்—அமெரிக்கா''வும், ''வட ஜெர்மானிய லாயி''டும். ஒவ்வொன்றும் (கூட்டுரிமைப் பங்குகளிலும் கடன் பத்திரங்களிலுமாக) 20 கோடி மார்க்குகள் மூலதனத்தைப் பெற்றிருப்பதுடன், 18 கோடி 50 லட்சத்திலிருந்து 18 கோடி 90 லட்சம் மார்க்குகள் வரை மதிப்புள்ள

---

* Die Bank, *1912, 2, பக்கம் 629, 1036; 1913, 1, பக்கம் 388.*

கப்பல்களையும் கொண்டிருக்கின்றன. அடுத்த பக்கத்தில், அமெரிக்காவில், மார்கன் ட்ரஸ்டு என்று அழைக்கப்படுகின்ற ''சர்வதேசக் கடல் வர்த்தகக் கம்பெனி'' ஜனவரி 1, 1903ல் நிறுவப்பட்டது. அது ஒன்பது அமெரிக்க, பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளை ஐக்கியப்படுத்தியது. 12 கோடி டாலர்கள் (48 கோடி மார்க்குகள்) மூலதனத்தையும் அது பெற்றிருந்தது. லாபங்களைப் பங்கிட்டுக் கொள்வது சம்பந்தமாக உலகைப் பங்கிட்டுக் கொள்வதுபற்றி ஓர் ஒப்பந்தத்தை ஜெர்மானிய ராக்ஷசர்களும் இந்த அமெரிக்க-பிரிட்டிஷ் ட்ரஸ்டும் 1903லேயே செய்து கொண்டன. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே நடக்கும் போக்குவரத்துடன் போட்டியிடாதிருக்க ஜெர்மன் கம்பெனிகள் இசைந்தன. ஒவ்வொன்றுக்கும் எந்தெந்தத் துறைமுகங்கள் ''ஒதுக்கித் தரப்பட வேண்டும்'' என்பது திட்டமாக நிர்ணயிக்கப்பட்டது; கூட்டுக் கட்டுப்பாட்டுக் கமிட்டியொன்றும் அமைக்கப்பட்டது. இப்படிப் பல செய்யப்பட்டன. இருபது ஆண்டுகளுக்காக இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. யுத்தம் நேரிட்டால் இது ரத்தாகிவிடும் என்ற முன் ஜாக்கிரதையான ஷரத்தும் அதில் சேர்க்கப்பட்டது*.

சர்வதேசத் தண்டவாளக் கார்ட்டல் அமைக்கப்பட்ட கதையும் பல விஷயங்களை நமக்குப் புலப்படுத்தக் கூடியது ஆகும். 1884லேயே ஒரு கடுமையான தொழில் மந்தம் ஏற்பட்டிருந்த பொழுது, இத்தகைய கார்ட்டல் ஒன்றை அமைப்பதற்கான முதல் முயற்சி பிரிட்டிஷ், பெல்ஜிய, ஜெர்மன் தண்டவாள உற்பத்தியாளர்களால் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட நாடுகளின் உள்நாட்டு மார்க்கெட்டுகளில் ஒருவரோடொருவர் போட்டியிடுவதில்லை என்று அந்த உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொண்டார்கள். பிறகு, அன்னிய மார்க்கெட்டுகளைத் தங்களுக்கிடையில் கீழ்க்கண்ட பங்குகளாக அவர்கள் பிரித்துக் கொண்டார்கள்: கிரேட் பிரிட்டன் 66 சதவிகிதம்; ஜெர்மனி 27 சதவிகிதம்; பெல்ஜியம் 7 சதவிகிதம். இந்தியா முழுக்க முழுக்க கிரேட் பிரிட்டனுக்கு என்று ஒதுக்கிவைக்கப்பட்டது. இந்தக் கார்ட்டலில்

* ரீசர், மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 125.

சேராமல் இருந்த ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்துக்கு எதிராகக் கூட்டு யுத்தம் துவக்கப்பட்டது; எல்லா விற்பனைகளின் மீதும் விதிக்கப்பட்ட சதவிகிதக் கட்டணம் ஒன்றின்மூலம் இப்போரின் செலவுகள் சமாளிக்கப்பட்டன. ஆனால் 1886ல் இரண்டு பிரிட்டிஷ் நிறுவனங்கள் இதிலிருந்து விலகியபொழுது இந்தக் கார்ட்டல் தகர்ந்து போயிற்று. அடுத்து வந்த தொழில் கொழிப்புக் காலங்களில் ஒப்பந்தம் செய்ய முடியாமற் போனது இதன் குண விசேஷத்தைக் காட்டுகிறது.

1904ன் தொடக்கத்தில் ஜெர்மனியில் எஃகு சின்டிகேட் அமைக்கப்பட்டது. 1904 நவம்பரில், சர்வதேசத் தண்டவாளக் கார்ட்டல், கீழ்க்கண்ட பங்குகளுடன் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது: இங்கிலாந்து 53.5 சதவிகிதம்; ஜெர்மனி 28.83 சதவிகிதம்; பெல்ஜியம் 17.67 சதவிகிதம். பிரான்ஸ் பின்பு கார்ட்டலில் சேர்ந்து, 100 சதவிகித வரையறைக்கு மேல், 4.8 சதவிகிதம், 5.8 சதவிகிதம், 6.4 சதவிகிதமாக, அதாவது மொத்தம் 104.8 சதவிகிதம் முதலியன, முதல், இரண்டாவது, மூன்றாவது ஆண்டுகளில் பெற்றது. 1905ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''எஃகு கார்ப்பொரேஷன்'' இந்தக் கார்ட்டலில் சேர்ந்தது; பிறகு ஆஸ்திரியாவும் ஸ்பெயினும் சேர்ந்தன. 1910ல் போகல்ஷ்டைன் எழுதினார்: ''இந்தச் சமயத்தில் உலகப் பங்கீடு முற்றுப் பெற்றுவிட்டது; பெரிய நுகர்வாளர்கள், முதன்மையாக அரசாங்க ரயில்வேக்கள், அவைகளின் நலன்களைப் பற்றிய அக்கறையின்றி உலகம் துண்டுபோடப்பட்டு விட்டபடியால், பிரகஸ்பதியின் சுவர்க்கத்தில் கவிஞனைப்போல இப்பொழுது வசிக்கலாம்.''*

1909ல் நிறுவப்பட்டதும், ஜெர்மன், பெல்ஜிய, பிரெஞ்சு, ஸ்பானிஷ், பிரிட்டிஷ் ஆகிய ஐந்து நாட்டுத் தொழிற்சாலைகளின் குழுக்களுக்கிடையில் உற்பத்தியின் அளவைத் திட்டமாகப் பங்கிட்டதுமான சர்வதேசத் துத்தநாக சின்டிகேட்டைப் பற்றியும் குறிப்பிடுவோம்; பின்னர் சர்வதேச வெடிமருந்து ட்ரஸ்டைப் பற்றிக் குறிப்பிடுவோம்; இந்தச் சர்வதேச வெடிமருந்து ட்ரஸ்ட் ''எல்லா ஜெர்மன் வெடி

---

* Vogelstein, *Organisationsformen*, பக்கம் 100.

பொருள் உற்பத்தியாளர்களும் அடங்கிய, மிக்க நவீன மானதும், நெருங்கியதுமான ஒரு கூட்டணியாகும்; இந்த ஜெர்மன் வெடிபொருள் உற்பத்தியாளர்கள்,இதே முறையில் அமைக்கப்பட்ட பிரெஞ்சு, அமெரிக்க வெடிமருந்து உற்பத்தியாளர்களுடன் சேர்ந்து தங்களுக்குள் உலக முழுவதையுமே பங்கிட்டுக் கொண்டார்கள் எனலாம்''* என்றுலீப்மன் கூறுகிருர்.

ஜெர்மனி பங்கு பெற்றிருந்த சர்வதேசக் கார்ட்டல்கள் 1897ல் மொத்தம் சுமார் நாற்பதே இருந்தன வென்றும் 1910க்குள்ளேயே அவை சுமார் நூறு ஆகிவிட்டன என்றும் லீப்மன் கணக்கிட்டார்.

சர்வதேசக் கார்ட்டல்கள் மூலதனம் சர்வதேசீயமய மாக்கப்படுதலின் மிகமிக வன்மையான தோற்றங்களில் ஒன்ருக இருக்கின்ற காரணத்திஞல், முதலாளித்துவத்தின் கீழுள்ள நாடுகளிடையில் சமாதானத்திற்கான நம்பிக்கையைத் தருகின்றன என்ற கருத்தைச் சில பூர்ஷ்வா எழுத்தாளர்கள் வெளியிட்டிருக்கிருர்கள் (தாம், உதாரணமாக 1909ல், கொண்டிருந்த மார்க்ஸீய நிலையை முழுதும் கைவிட்டு விட்ட கா. காவுட்ஸ்கி இந்த எழுத்தாளர்களுடன் இப்பொழுது சேர்ந்து கொண்டிருக்கிருர்). தத்துவ ரீதியாக இந்தக் கருத்து சுத்த அபத்தமானது; நடைமுறையில் இது குதர்க்கமும் [sophistry], மிக மோசமான சந்தர்ப்பவாதத்தை நேர்மையற்ற முறையில் பாதுகாப்பதும் ஆகும். முதலாளித்துவ ஏகபோகங்கள் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதையும், முதலாளித்துவக் கூட்டமைப்புக்களுக்கும் இடையில் போராட்டம் எதற்காக நடைபெறுகிறது என்பதையும் சர்வதேசக் கார்ட்டல்கள் காண்பிக்கின்றன. இந்தக் கடைசிச் சூழ்நிலைதான் மிகமிக முக்கியமானது; இப்பொழுது நடைபெறுவதன் சரித்திர-பொருளாதார அர்த்தத்தை இது மட்டும் தான் நமக்குக் காண்பிக்கிறது; ஏனெனில், ஒப்பிட்டுப் பார்க்கையில் தனிப்பட்டதும் தாற்காலிகமானதுமான காரணங்களுக்கு இணங்க,

* Liefmann, *Kartelle und Trusts*, 2. A., பக்கம் 161.

போராட்டத்தின் வடிவம் மாறக் கூடியது, நிரந்தரமாக மாற்றமடையவும் செய்கிறது, ஆனுல், போராட்டத்தின் சாராம்சம், அதன் வர்க்க உள்ளுறை, வர்க்கங்கள் இருக்கும் வரை, நிச்சயமாக மாற்றமடைய முடியாது. இன்றையப் பொருளாதாரப் போராட்டத்தின் சாராம்சத்தை (உலகப் பங்கீட்டை) மறைப்பதும், அப்போராட்டத்தின் ஒரு வடிவத்தை ஒரு சமயமும், இன்னெரு வடிவத்தை இன்னெரு சமயமும் வலியுறுத்துவதும், உதாரணமாக ஜெர்மன் பூர்ஷ்வாக்களின்—தமது தத்துவ வாதங்களில் யாருடைய தரப்புக்கு காவுட்ஸ்கி உண்மையில் சென்று விட்டாரோ (இதைப் பற்றி பிறகு நாம் கவனிப்போம்) அந்த ஜெர்மன் பூர்ஷ்வாக்களின்—நலன்களுக்கு உகந்ததாகும் என்பது தெளிவு. காவுட்ஸ்கி இதே தவறைத்தான் செய்கிருர். உண்மையில் ஜெர்மன் பூர்ஷ்வாக்களே மட்டும் நாம் கவனத்தில் கொள்ள வில்லே; உலகமெங்கிலும் உள்ள பூர்ஷ்வாக்களேக் கவனத்தில் கொள்கிருேம். முதலாளிகள் உலகைப் பங்கிடுவது ஏதோ விசேஷமான குரோதத்திஞல் அல்ல; ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் குவிதலின் தரம், லாபங்களேப் பெறும்பொருட்டு இம்முறையைப் பின்பற்றும்படி அவர்களே நிர்ப்பந்திக்கிற காரணத்திஞல்தான்; ''மூலதனத்தின் விகிதத்தில்'', ''வலிமையின் விகிதத்தில்'' அதை அவர்கள் பங்கிடுகிருர்கள்; சரக்கு உற்பத்தியின்கீழும், முதலாளித்துவத்தின்கீழும், பங்கிடுவதற்கு வேறு எந்த முறையும் இருக்க முடியாது. வலிமையோ, பொருளாதார, அரசியல் வளர்ச்சியைப் பொறுத்து மாற்றமடைகிறது; என்ன நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு, வலிமையில் ஏற்படும் மாற்றங்களால் என்ன பிரச்சினேகள் தீர்க்கப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்; இம்மாறுதல்கள் ''தூய''ப் பொருளாதார ரீதியானவையா அல்லது பொருளாதார ரீதியல்லாதவையா (உதாரணமாக, ராணுவ ரீதியானவையா) என்ற கேள்வி இரண்டாந்தரமான ஒன்று; முதலாளித்துவத்தின் நவீன காலகட்டத்தைப் பற்றிய அடிப்படையான கருத்துக்களில் இக்கேள்வி எதையும் மாற்ற முடியாது. முதலாளித்துவக் கூட்டமைப்புக்களுக்கிடையில் நடைபெறும் போராட்டத்தினுடையவும் ஒப்பந்தங்களி

னுடையவும் சாராம்சத்தைப் பற்றிய பிரச்சினைக்குப் பதிலாக, அப்போராட்டத்தினுடையவும் ஒப்பந்தங்களினுடையவும் வடிவம் (இன்றைக்கு அது சமாதானமானது, நாளைக்குச் சமாதானமற்றது, நாளைக்கு அடுத்த நாள் மீண்டும் சமாதானமற்றது) பற்றிய பிரச்சினையைப் போடுவது ஒரு குதர்க்கவாதியின் நிலைக்கு இழிந்து விடுவதாகும்.

பொருளாதார ரீதியாக உலகம் பங்கிடப்படுவதன் அடிப்படையில் முதலாளித்துவக் கூட்டமைப்புக்களுக்கிடையில் ஒரு சில உறவுகள் வளர்கின்றன என்பதையும், அதே சமயத்தில், அவற்றோடு கூடவே, அவற்றுடன் சம்பந்தப்பட்டு, உலக நிலப்பரப்பைப் பங்கிட்டுக் கொள்வது, காலனிகளுக்காகப் போராட்டம், ''பொருளாதாரப் பிரதேசங்களுக்கான போராட்டம்'' ஆகியவைகளின் அடிப்படையில் அரசியல் கூட்டமைப்புக்களுக்கிடையில், நாடுகளுக்கிடையில், ஒரு சில உறவுகள் வளர்கின்றன என்பதையும் முதலாளித்துவத்தின் இந்த நவீன சகாப்தம் நமக்குக் காட்டுகிறது.

## VI. பெரு வல்லரசுகளுக்கிடையில் உலகப் பங்கீடு

''ஐரோப்பியக் காலனிகளின் நிலப்பரப்பின் வளர்ச்சி''* பற்றிய தமது நூலில், பூகோளவியலாரான ஆ. சூப்பன் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் இவ்வளர்ச்சியைப் பற்றிய கீழ்க்கண்ட சுருக்கமான தொகுப்பைத் தருகிருர்:

ஐரோப்பியக் காலனி வல்லரசுகளுக்குச்
சொந்தமான நிலப்பரப்பின் சதவிகிதம்

*(அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் உள்ளிட்டு)*

| | 1876 | 1900 | அதிகரிப்பு அல்லது குறைவு |
|---|---|---|---|
| ஆப்பிரிக்காவில் . . . . | 10.8% | 90.4% | +79.6% |
| போலினீஷியாவில் . . | 56.8% | 98.9% | +42.1% |
| ஆசியாவில் . . . . . . | 51.5% | 56.6% | +5.1% |
| ஆஸ்திரேலியாவில் . . | 100.0% | 100.0% | — |
| அமெரிக்காவில் . . . . | 27.5% | 27.2% | —0.3% |

''ஆகவே, இக்காலகட்டத்தின் குணும்சம், ஆப்பிரிக்கா, போலினீஷியா ஆகியவைகளின் பங்கீடு ஆகும்'' என்று அவர் தீர்மானிக்கிருர். ஆசியாவிலும் அமெரிக்காவிலும் ஆக்கிரமிக்கப்படாத நிலப்பகுதிகள் — அதாவது, எந்த அரசுக்கும் சொந்தமில்லாத நிலப்பகுதிகள் — இப்பொழுது இல்லாததால், சூப்பனது முடிவை விரிவாக்குவதும், பூமி உருண்டையின் இறுதியான பங்கீடுதான் இப்பொழுது பரிசீலனையின்கீழ் இருக்கும் காலகட்டத்தின் குணும்சமாகும் என்று கூறுவதும் அவசியமாகும்,—இறுதியான பங்கீடு என்ருல்,

---

* A. Supan, *Die territoriale Entwicklung der europäischen Kolonien*, 1906, பக்கம் 254, (ஆ. சூப்பன், ''ஐரோப்பியக் காலனிகளின் நிலப்பரப்பின் வளர்ச்சி''.—ப-ர்.).

மறு பங்கீடு சாத்தியமில்லை என்றபொருளில் அல்ல—அதற்கு மாருக மறு பங்கீடுகள் சாத்தியமானவையும் தவிர்க்க முடியாதவையும் ஆகும்—ஆனல், முதலாளித்துவ நாடுகளின் காலனி ஆதிக்கக் கொள்கை நமது கிரகத்தில் ஆக்கிரமிக்கப் படாத நிலப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொள்வதைப் பூர்த்தி செய்து விட்டது என்ற பொருளில்தான். முதல் தடவையாக உலகம் முழுவதும் பங்கிடப்பட்டு விட்டது; ஆகவே, எதிர்காலத்தில் மறு பஙகீடுகள் மட்டுமே சாத்தியமானவையாகும், அதாவது, சொந்தக்காரனில்லாத நிலப்பரப்பு ஒரு ''சொந்தக்காரனுக்கு''ப் போவதைப் போலன்றி, ஒரு ''நாட்டாண்மைக்கார''னிடமிருந்து இன்னெருவனுக்கு நிலப்பரப்புகள் கைமாறுவது முடியும்.

ஆகவே, ''முதலாளித்துவ வளர்ச்சியின் நவீன கட்டத்துடன்'', நிதி மூலதனத்துடன், மிக மிக நெருக்கமாகச் சம்பந்தப்பட்டுள்ள உலகக் காலனி ஆதிக்கக் கொள்கையின் ஒரு விசேஷக் காலகட்டத்தினூடே நாம் சென்று கொண்டிருக்கிறோம். இக்காரணத்தினுல், இக்காலகட்டத்தை இதற்கு முன் சென்ற காலகட்டதிலிருந்து எது வேறுபடுத்துகிறது என்பதையும், தற்கால நிலை என்ன என்பதையும் முடிந்த வரை சரியாகத் தெரிந்து கொள்வதற்கு யதார்த்த விவரங்களை மிகவும் விரிவாகப் பார்ப்பது முதலாவதாக அவசியமாகிறது. எல்லாவற்றுக்கும் முன்னதாக, யதார்த்த நிலை பற்றிய இரண்டு கேள்விகள் இங்கு எழுகின்றன: காலனி ஆதிக்கக் கொள்கை தீவிரப்படுதல், காலனிகளுக்கான போராட்டம் கூர்மைப்படுதல், திட்டமாக நிதி மூலதனத்தின் இக்காலகட்டத்தில் காணப்படுகிறதா? பிறகு, இவ்விஷயத்தில், உலகம் தற்சமயத்தில் திட்டமாக எவ்வாறு பங்கிடப்பட்டிருக்கிறது?

காலனியாக்கத்தின் வரலாறு பற்றிய தமது நூலில் அமெரிக்க எழுத்தாளராகிய மாரிஸ்*, பத்தொன்பதாம்

---

* Henry C. Morris, *The History of Colonization*, N.Y. 1900, vol. II pp. 88, I, 419; II 304 (ஹென்றி சி. மாரிஸ், ''காலனியாக்கத்தின் வரலாறு'', நியூயார்க். 1900, தொகுதி II, பக்கம் 88; தொகுதி I, பக்கம் 419; தொகுதிII, பக்கம் 304.—ப-ர்.).

நூற்றுண்டின் வெவ்வேறு காலப் பகுதிகளில் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகியவைகளின் ஆதிக்கத்திலிருந்த காலனிகளின் பரப்புக்கள் பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுத்துரைக்க முயற்சி செய்தார். அவர் பெற்ற முடிவுகளின் சுருக்கம் கீழ்வருமாறு:

ஆதிக்கத்திலிருந்த காலனிகளின் பரப்புக்கள்

| ஆண்டு | கிரேட் பிரிட்டன் | | பிரான்ஸ் | | ஜெர்மனி | |
|---|---|---|---|---|---|---|
| | நிலப்பரப்பு (பத்துலட்சச் சதுர மைலில்) | மக்கள் தொகை (பத்து லட்சத்தில்) | நிலப்பரப்பு (பத்து லட்சச் சதுர மைலில்) | மக்கள் தொகை (பத்து லட்சத்தில்) | நிலப்பரப்பு (பத்து லட்சச் சதுர மைலில்) | மக்கள் தொகை (பத்து லட்சத்தில்) |
| 1815—1830 | ? | 126.4 | 0.02 | 0.5 | — | — |
| 1860 | 2.5 | 145.1 | 0.2 | 3.4 | — | — |
| 1880 | 7.7 | 267.9 | 0.7 | 7.5 | — | — |
| 1899 | 9.3 | 309.0 | 3.7 | 56.4 | 1.0 | 14.7 |

கிரேட் பிரிட்டனுக்கு, 1860லிருந்து 1880க்கு இடைப்பட்டதுதான், காலனி ஆக்கிரமிப்புகளின் பிரம்மாண்டமான விஸ்தரிப்பு ஏற்பட்ட காலமாகும்; பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசி இருபதாண்டுகளிலும் கூட அது மிகவும் கணிசமாக இருந்தது. பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் திட்டமாக இந்த இருபதாண்டுகள்தாம் காலனி ஆக்கிரமிப்பு விஸ்தரிப்புக் காலமாகும். ஏகபோகத்துக்கு முற்பட்ட முதலாளித்துவம், கட்டுப்பாடற்ற போட்டி மேலோங்கி நின்ற முதலாளித்துவம், தனது வளர்ச்சியின் உச்ச வரம்பை எட்டியது 1860-79க்கு இடைப்பட்ட காலத்தில் தான் என்பதை நாம் மேலே கண்டோம். திட்டமாக அந்தக் காலகட்டத்துக்குப் பிறகுதான் காலனி ஆக்கிரமிப்புகளில் பிரம்மாண்டமான ''கொழிப்பு'' துவங்குகிறது என்பதையும்,

உலக நிலப்பரப்புப் பங்கீட்டுக்கான போராட்டம் அசாதாரணமாகத் தீவிரமடைகிறது என்பதையும் நாம் இப்பொழுது காண்கிறோம். ஆகவே, முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவக் கட்டத்துக்கு, நிதி மூலதனத்துக்கு மாறுதல், உலகைப் பங்கிடுவதற்கான போராட்டம் தீவிரப்படுதலுடன் இணைந்திருக்கிறது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட உண்மை.

1884-1900 ஆண்டுகளை முக்கிய ஐரோப்பிய நாடுகளின் தீவிரமான ''நிலப்பரப்பு விஸ்தரிப்பு''க் காலம் என்று ஏகாதிபத்தியத்தைப் பற்றிய தமது நூலில் ஹாப்ஸன் குறிப்பிடுகிறார். அவரது மதிப்பீட்டின்படி, இவ்வாண்டுகளில் கிரேட் பிரிட்டன் 5 கோடி 70 லட்சம் ஜனத்தொகை கொண்ட 37 லட்சம் சதுர மைல் பரப்பைக் கைக் கொண்டது; 3 கோடி 65 லட்சம் மக்கள் தொகை கொண்ட 36 லட்சம் சதுர மைல் பரப்பை பிரான்ஸ் கைக்கொண்டது; 1 கோடி 47 லட்சம் ஜனத்தொகையுடைய 10 லட்சம் சதுர மைல் பரப்பை ஜெர்மனியும், 3 கோடி மக்களைக் கொண்ட 9 லட்சம் சதுர மைல் பரப்பை பெல்ஜியமும், 90 லட்சம் பேர்கள் வசிக்கும் 8 லட்சம் சதுர மைல் பரப்பைப் போர்த்துக்கலும் கைக்கொண்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், குறிப்பாக 1880க்குப் பிறகும், எல்லா முதலாளித்துவ நாடுகளும் நடத்திய காலனி வேட்டை, ராஜதந்திரம், அயல்நாட்டுக் கொள்கை ஆகியவற்றின் வரலாற்றில் எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயமாகும்.

கிரேட் பிரிட்டனில் கட்டுப்பாடற்ற போட்டியின் யாவற்றிலும் செழிப்பு மிக்க காலத்தில், அதாவது 1840க்கும் 1860க்கும் இடையில், தலையாய பிரிட்டிஷ் பூர்ஷ்வா அரசியல்வாதிகள் காலனி ஆதிக்கக் கொள்கையை எதிர்த்தார்கள்; காலனிகளை விடுதலை செய்தல், பிரிட்டனிலிருந்து அவைகளை முழுமையாகப் பிரித்தல் தவிர்க்க முடியாததும் பயன் தருவதும் ஆகும் என்று கருதினார்கள். பொதுவாக ஏகாதிபத்தியச் சார்பு கொண்டிருந்த, ஆங்கில அரசியல்வாதியான டிஸ்ரேலி ''காலனிகள் நமது கழுத்தில் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் ஏந்திரக் கற்களே'' என்று 1852ல் கூறியதாக, 1898ல் பிரசுரிக்கப்பட்ட ''நவீன பிரிட்டிஷ் ஏகாதி

பத்தியம்''* என்ற ஒரு கட்டுரையில் மா. பேர் காட்டுகிறார். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலோ, இங்கிலாந்தின் ஆதர்ச வீரர்களாகத் திகழ்ந்தவர்கள் வெளிப்படையாக ஏகாதிபத்தியப் பிரசாரம் செய்தவர்களும், மிகவும் நெஞ்சீரமற்ற முறையில் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கடைப்பிடித்தவர்களுமான செசில் ரோட்ஸும், ஜோசப் சேம்பர்லினும்தாம்.

நவீன ஏகாதிபத்தியத்தின், ஒரு வகையில் சொன்னால், தூய பொருளாதார, அரசியல்-சமுதாய வேர்களுக்கிடையே உள்ள தொடர்பை, இந்த முதன்மையான பிரிட்டிஷ் பூர்ஷ்வா அரசியல்வாதிகள் அந்தக் காலத்திலேயே கண்டார்கள் என்று கூறுவது அக்கறைக்குரியதற்றதாகாது. ஏகாதிபத்திய வாதம், ''உண்மையானதும் விவேகமானதும் சிக்கனமானதுமாகிய ஒரு கொள்கை'' என்று, உலக மார்க்கெட்டில் கிரேட் பிரிட்டனுக்கு இப்போது எதிர்ப்பட்டு வந்த ஜெர்மன், அமெரிக்க, பெல்ஜியப் போட்டியை விசேஷமாகச் சுட்டிக்காட்டிப் பிரசாரம் செய்தார் சேம்பர்லின். ஏகபோகத்தில் தான் விமோசனம் இருக்கிறது என்று, கார்ட்டல்களையும் சின்டிகேட்டுகளையும் ட்ரஸ்டுகளையும் அமைத்த பொழுது முதலாளிகள் கூறினார்கள். ஏகபோகத்தில் தான் விமோசனம் இருக்கிறது என்று, உலகில் இன்னும் பங்கு போடப்படாத பகுதிகளைக் கைப்பற்றிக் கொள்வதற்கு விரைந்து கொண்டே, பூர்ஷ்வாக்களின் அரசியல் தலைவர்கள் எதிரொலித்தார்கள். செசில் ரோட்ஸ் தமது ஏகாதிபத்தியக் கருத்துகளைக் கீழ்க்கண்டவாறு 1895ல் தம்மிடம் வெளியிட்டதாக அவரது மிக நெருங்கிய நண்பரும், பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவருமான ஸ்டெட் என்பவர் தெரிவிக்கிறார். ''நேற்று லண்டனின் ஈஸ்ட் என்டில்'' (தொழிலாளி வர்க்கம் வசிக்கும் பகுதி) ''இருந்தேன்; அங்கு வேலையற்றோரின் கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். ஆவேசமான பேச்சுக்களைக் கவனித்துக் கேட்டேன். அவை 'ரொட்டி', 'ரொட்டி' என்பதற்கான கூப்பாடுதான்! வீடு திரும்பும் வழியில் அக்காட்சியைப் பற்றிச் சிந்தித்தேன்.

---

* *Die Neue Zeit*, XVI, I, 1898, பக்கம் 302.

அப்பொழுது, ஏகாதிபத்தியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி முன் எப்பொழுதும் விட அதிகமாக நான் தீர்க்க மாக நம்பிக்கையுடையவனுனேன்.... நான் மனதில் பேணிய கருத்து சமுதாயப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுதான்; அதாவது, ஐக்கிய முடியரசில் [United Kingdom] உள்ள 4 கோடி மக்களை ரத்தமயமான உள்நாட்டுப் போரிலிருந்து காப் பாற்ற வேண்டி, காலனி ஆதிக்க அரசியல்வாதிகளாகிய நாம் உபரியான மக்களைக் குடியமர்த்துவதற்காகவும், தொழிற் சாலைகளிலும் சுரங்கங்களிலும் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குப் புதிய மார்க்கெட்டுகளைத் தருவதற்காக வும் புதிய பிரதேசங்களைப் பெற்ருக வேண்டும். நான் எப் பொழுதும் கூறிவந்துள்ளதைப்போல, சாம்ராஜ்ஜியம் என் பது வயிற்றுப் பிரச்சினைதான். உள்நாட்டுப் போரைத் தவிர்க்க நீங்கள் விரும்பினுல் ஏகாதிபத்தியவாதிகளாக நீங்கள் ஆக வேண்டும்.''*

இதுதான், ஒரு கோடீஸ்வரன், ஒரு நிதி மன்னன், ஆங்கில-போயர் யுத்தத்துக்கு முக்கியப் பொறுப்பாளி செசில் ரோட்ஸ் 1895ல் கூறியது. அவர் ஏகாதிபத்தியத்தை ஆதரிக் கும் முறை பண்படாததும், நெஞ்சீரமற்றதும் ஆகும் என்பது உண்மை தான். ஆயினும், திருவாளர்கள் மாஸ் லொவ், சூடேகும், பொத்ரேஸொவ், டேவிட், ருஷ்ய மார்க்ஸீயத்தின் ஸ்தாபகர் ஆகியோரும் பிறரும் ஆதரிக் கும் ''தத்துவத்''திலிருந்து அது சாராம்சத்தில் வேறுபட வில்லை. இவர்களைக் காட்டிலும் செசில் ரோட்ஸ் ஓரளவு அதிக நேர்மையான சோஷல்-ஷோவினிஸ்ட் ஆவார்....

உலகின் நிலப்பரப்பின் பங்கீடு பற்றியும், இவ்விஷயத் தில் கடந்த சில பத்தாண்டுகளில் நிகழ்ந்துள்ள மாறுதல்கள் பற்றியும் முடிந்த அளவு ஒரு திட்டமான சித்திரத்தைத் தீட்டுவதற்கு உலகிலுள்ள எல்லா வல்லரசுகளின் ஆதிக்கத் திலிருந்த காலனிகள் விஷயமாக ஏற்கனவே நாம் எடுத் தாண்ட நூலில் சூப்பன் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களை நாம் உபயோகிப்போம். 1876, 1900 ஆகிய ஆண்டுகளை சூப்பன் எடுத்துக் கொள்கிருர். நாம் 1876ம் ஆண்டையும்—

---

* *Die Neue, Zeit* XVI, I, *1898,* பக்கம் *304.*

இவ்வாண்டு மிகவும் பொருத்தமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது; ஏனெனில், திட்டமாக இக்காலத்தில்தான், மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஏக போகத்திற்கு முந்தைய அதன் கட்டத்தில் பொதுவாகவும் முழுமையாகவும் பூர்த்தி பெற்றது எனக் கருதலாம்—*1914*ம் ஆண்டையும் எடுத்துக் கொள்வோம்; சூப்பனது புள்ளி விவரங்களுக்குப் பதிலாக, அவைகளைவிடச் சமீப காலத்தியவைகளாகிய, ஹூப்னரது ''பூகோளவியல், புள்ளியியல் பட்டியல்க''ளில் உள்ள புள்ளிவிவரங்களை நாம் எடுத்துக் காட்டுவோம். காலனிகளைப் பற்றிய விவரங்களை மட்டும் தான் சூப்பன் தருகிறார்; உலகப் பங்கீடு பற்றிய முழுப் படத்தையும் தருவதற்கு, காலனிகள் அல்லாத நாடுகள், அரைக் காலனி நாடுகள் ஆகியவை பற்றிய சுருக்கமான புள்ளிவிவரங்களையும் சேர்த்துக் கொடுப்பது உபயோகமானது என்று நாம் எண்ணுகிறோம். அரைக் காலனி நாடுகள் என்ற வகையில் பாரசீகம், சீனா, துருக்கி ஆகியவைகளைச் சேர்க்கிறோம். இவைகளில் முதலில் கூறப்பட்ட நாடு கிட்டத்தட்ட ஒரு முழுக் காலனியாக ஏற்கனவே ஆகிவிட்டது, இரண்டாவதும் மூன்றாவதும் அப்படி ஆகிக் கொண்டு வருகின்றன.

இவ்வாறாகக் கீழ்க்கண்ட தொகுப்பை நாம் பெறுகிறோம்: (126ம் பக்கம் பார்க்க.)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகப் பங்கீடு எவ்வளவு ''முழுமையுற்றிருந்தது'' என்பதை இப்புள்ளிவிவரங்களிலிருந்து நாம் தெளிவாகப் பார்க்கிறோம். 1876க்குப் பிறகு காலனிப் பிரதேசங்கள் பிரம்மாண்டமான அளவில், ஆறு மிகப் பெரிய வல்லரசுகளுக்கு ஒன்றரை மடங்குக்கும் அதிகமாக, 4 கோடி சதுர கிலோமீட்டர் பரப்பிலிருந்து 6 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டர் ஆக வளர்ந்தன; இந்த வளர்ச்சி 2 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டர்களாக, ஆட்சித் தலைமை நாடுகளின் பரப்பைப்போல (1 கோடி 65 லட்சம் சதுர கிலோமீட்டர்கள்) ஒன்றரை மடங்கு இருக்கிறது. 1876ல் மூன்று வல்லரசுகளுக்குக் காலனிகளே இல்லை; நாலாவது வல்லரசான பிரான்சும் ஒரு துளியே பெற்

பெரு வல்லரசுகளின் ஆதிக்கத்திலுள்ள காலனிகள் (பத்து லட்சம் சதுர கிலோமீட்டர்களிலும் பத்து லட்சம் மக்கள் தொகையிலும்)

| | காலனிகள் | | | | ஆட்சித்தலைமை நாடுகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1876 | | 1914 | | 1914 | | 1914 | |
| | பரப்பு | மக்கள் தொகை | பரப்பு | மக்கள் தொகை | பரப்பு | மக்கள் தொகை | பரப்பு | மக்கள் தொகை |
| கிரேட் பிரிட்டன் . . | 22.5 | 251.9 | 33.5 | 393.5 | 0.3 | 46.5 | 33.8 | 440.0 |
| ருஷ்யா . . . . . . . | 17.0 | 15.9 | 17.4 | 33.2 | 5.4 | 136.2 | 22.8 | 169.4 |
| பிரான்ஸ் . . . . . . | 0.9 | 6.0 | 10.6 | 55.5 | 0.5 | 39.6 | 11.1 | 95.1 |
| ஜெர்மனி . . . . . . | — | — | 2.9 | 12.3 | 0.5 | 64.9 | 3.4 | 77.2 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் . . . . . . | — | — | 0.3 | 9.7 | 9.4 | 97.0 | 9.7 | 106.7 |
| ஜப்பான் . . . . . | — | — | 0.3 | 19.2 | 0.4 | 53.0 | 0.7 | 72.2 |
| 6 வல்லரசுகளுக்கும் மொத்தம் | 40.4 | 273.8 | 65.0 | 523.4 | 16.5 | 437.2 | 81.5 | 960.6 |
| இதர நாடுகளின் காலனிகள் (பெல்ஜியம், ஹாலந்து, முதலியன) . . . | | | | | | | 9.9 | 45.3 |
| அரைக் காலனி நாடுகள் (பாரசீகம், சீனு, துருக்கி) . . . . . . . . . | | | | | | | 14.5 | 361.2 |
| இதர நாடுகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . | | | | | | | 28.0 | 289.9 |
| உலகம் முழுவதற்கும் மொத்தம் . . . . . . . . . . . . . . . . . . | | | | | | | 133.9 | 1657.0 |

றிருந்தது. 1914க்குள் இந்நான்கு வல்லரசுகளும் 1 கோடி 41 லட்சம் சதுர கிலோமீட்டர்கள் பரப்புடைய, அதாவது ஐரோப்பாவின் பரப்பளவைவிடச் சுமார் ஒன்றரை மடங்கு பெரியதான, கிட்டத்தட்ட 10 கோடி மக்கள் தொகையைக் கொண்ட காலனிகளை அடைந்துவிட்டன. காலனிகள் மீது ஆதிக்க விஸ்தரிப்பில் உள்ள ஏற்றத்தாழ்வு மிகப் பெரிதாக இருக்கிறது. உதாரணமாக, பரப்பளவிலும் மக்கள்தொகையிலும் அதிகம் வேறுபடாத பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் ஆகியவைகளை நாம் ஒப்பிட்டால், முதலாவது நாடு மற்ற இரண்டும் சேர்ந்து அடைந்தவற்றைவிட ஏறக்குறைய மும்மடங்கு அதிகமான காலனிகளை (பரப்பளவில்) பெற்றிருக்கிறது என்பதை நாம் பார்ப்போம். நிதி மூலதன விஷயத்திலும் பிரான்ஸ், நாம் கவனிக்கிற இக்காலத்தின் தொடக்கத்தில், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்த்தாலும், இவைகளைவிட ஒரு வேளை சில மடங்கு செல்வமிக்கதாக இருந்தது. தூயபொருளாதார நிலைமைகளுடன், அவைகளின் அடிப்படையில் பூகோள நிலைமைகளும் இதர நிலைமைகளும் சேர்ந்து காலனிப் பிரதேசங்களின் அளவைப் பாதிக்கின்றன. பேரளவுத் தொழில், பரிவர்த்தனை, நிதி மூலதனம் ஆகியவைகளின் நிர்ப்பந்தம் காரணமாக உலகைச் சமப்படுத்துகின்ற, பொருளாதார, வாழ்க்கை நிலைமைகளைப் பல்வேறு நாடுகளிலும் சமப்படுத்துகின்ற நிகழ்முறை கடந்த சில பத்தாண்டுகளில் எவ்வளவுதான் தீவிரமாக இருந்த போதிலும், வித்தியாசங்கள் இன்னும் கணிசமாக இருக்கின்றன; கூறப்பட்ட ஆறு வல்லரசுகளுக்கிடையில் அசாதாரணமாகத் துரித முன்னேற்றமுடைய இளம் முதலாளித்துவ நாடுகளை (அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான்) ஒருபுறம் நாம் பார்க்கிறோம்; மறுபுறம், இந்நாடுகளைக் காட்டிலும் சமீப காலத்தில் மிகவும் மெதுவாகவே முன்னேறிய, பழைய முதலாளித்துவ வளர்ச்சியைக் கொண்ட நாடுகளை (பிரான்ஸும், கிரேட் பிரிட்டனும்) பார்க்கிறோம்; மூன்றாவது புறம், நவீன முதலாளித்துவ ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்துக்கு முந்தைய உறவுகளாகிய ஒரு விசேஷமாக நெருங்கிய வலையில், ஒரு வகையில் சொன்னால், பின்னிப்பிணைந்திருப்பதும்

பொருளாதார ரீதியில் மிகமிகப் பின்தங்கியதுமான ஒரு நாட்டை (ருஷ்யா) நாம் காண்கிறோம்.

பெரிய வல்லரசுகளின் ஆதிக்கத்திலுள்ள காலனிகளுடன் சிறிய நாடுகளின் சிறிய காலனிகளையும் நாம் குறிப்பிட்டுள்ளோம்; இச்சிறிய காலனிகள் தாம், சாத்தியமானதும் நடக்கக் கூடியதுமான காலனிகளின் ''மறு பங்கீட்''டுக்குரிய அடுத்த பொருட்களாகும். கொள்ளைப் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளும் விஷயத்தில் பெரு வல்லரசுகள் ஓர் உடன்படிக்கைக்கு வருவதைத் தடை செய்கின்றவைகளாகிய, அவ்வல்லரசுகளுக்கிடையிலான முரணான நலன்கள், சச்சரவுகள் முதலியவைகளினால்தான், சிறிய நாடுகளில் பெரும்பாலானவை தங்களது காலனிகளை இன்னும் வைத்துக் கொண்டிருக்க முடிகிறது. ''அரைக் காலனி'' நாடுகளைப் பொறுத்தவரையில், இயற்கை, சமுதாயம் ஆகியவைகளின் சகல துறைகளிலும் காணப்படும் இடைநிலை வடிவங்களின் ஓர் உதாரணத்தையே அவை தருகின்றன. முழுமையான அரசியல் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற நாடுகளைக் கூட ஆதீனப்படுத்தும் சக்திகொண்ட, உண்மையில் தனக்கு ஆதீனப்படுத்துகின்ற, அத்தகைய ஒரு பெரிய சக்தியாக —எல்லாப் பொருளாதார உறவுகளிலும் எல்லாச் சர்வதேச உறவுகளிலும் நிர்ணயகரமான சக்தியாக என்று கூடக் கூறலாம்—நிதி மூலதனம் விளங்குகிறது; இதன் உதாரணங்களை நாம் சீக்கிரம் பார்ப்போம். உண்மையில், ஆதீனப்படுத்தப்பட்ட நாடுகள், மக்களின் அரசியல் சுதந்திரம் பறி போவதுடன் தொடர்புகொண்ட அத்தகைய ஆதீனந்தான் நிதி மூலதனத்துக்கு எல்லாவற்றையும் விட அதிக ''வசதி''யையும் எல்லாவற்றையும்விட அதிக லாபத்தையும் தருகிறது என்பது கூறாமலே விளங்கும். அரைக் காலனி நாடுகள் இவ்விஷயத்தில் ''மத்தியக் கட்டத்தின்'' எடுத்துக்காட்டான உதாரணமாக இருக்கின்றன. நிதி மூலதன யுகத்தில், உலகின் மற்றப் பகுதிகள் எல்லாம் ஏற்கனவே பங்கிடப்பட்டு விட்டபின், இந்த அரைச் சார்புடைய நாடுகளுக்கான போராட்டம் விசேஷமாகத் தீவிரமடைந்தது புரியக் கூடியதே.

காலனி ஆதிக்கக் கொள்கையும் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவத்தின் நவீனக் கட்டத்துக்கு முன்பும், முதலாளித்

துவத்துக்கு முன்பும் கூட இருந்தன. அடிமைத்தனத்தின்மீது ஸ்தாபிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் காலனி ஆதிக்கக் கொள்கையைப்பின்பற்றியது; ஏகாதிபத்தியத்தைக்கையாண்டது. ஆயினும் சமுதாய-பொருளாதார அமைப்புக்களுக்கு இடையிலுள்ள அடிப்படையான வேறுபாட்டை அசட்டை செய்கின்ற, அல்லது அதைப் பின்னுக்குத் தள்ளிவிடுகின்ற, ஏகாதிபத்தியத்தைப் பற்றிய ''பொதுவான'' விவாதங்கள், மிகவும் காரசாரமற்ற கடைச்சரக்காகவும் அல்லது ''மாபெரும் ரோம சாம்ராஜ்யத்தை மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன்''* ஒப்பிடுவது போன்ற ஜம்பப் பேச்சாகவும் நிச்சயம் தரங்கெட்டுப் போகின்றன. முதலாளித்துவத்தின் முந்தைய கட்டங்களினுடைய முதலாளித்துவக் காலனி ஆதிக்கக் கொள்கைகூட, நிதிமூலதனத்தின் காலனி ஆதிக்கக் கொள்கையிலிருந்து சாராம்சத்தில் வேறுனது.

முதலாளித்துவத்தின் நவீன கட்டத்தின் மிக முக்கிய அம்சம், மிகப் பெரிய தொழிலதிபர்களது ஏகபோகக் கூட்டமைப்புக்களின் ஆதிக்கம்தான். கச்சாப் பொருட்களின் மூலங்கள் அனைத்தும் ஒரே குழுவினுல் கைப்பற்றப்பட்டிருக்கிறபொழுது இந்த ஏகபோகங்கள் மிக உறுதியாக நிலைபெறுகின்றன; போட்டியிடுவதற்கான எல்லா வாய்ப்புக்களையும் எதிரிகளிடமிருந்து பறித்துக் கொள்வதற்கு, உதாரணமாக இரும்புக் கனிப் பிரதேசங்கள், எண்ணெய் வயல்கள் முதலியவற்றை வாங்கிவிடுவதற்கு முதலாளிகளின் சர்வதேசக் கூட்டமைப்புக்கள் எவ்வளவு ஊக்கத்துடன் பாடுபடுகின்றன என்பதை நாம் பார்த்தோம். போட்டியாளர்களுடன் போராட்டத்தில் நேரிடும் சந்தர்ப்பவசமான எல்லாச் சம்பவங்களுக்கும் எதிராக, அப்போட்டியாளர்கள் அரசாங்க ஏகபோகம் ஒன்றை ஏற்படுத்தும் சட்டத்தின் மூலமாகத் தங்களைக் காத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தையும் உள்ளிட்ட

---

* C. P. Lucas, *Greater Rome and Greater Britain*, Oxf., *1912 (சீ. பீ. லூகாஸ், ''மாபெரும் ரோம சாம்ராஜ்யமும் மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும்'', ஆக்ஸ்போர்டு, 1912.—ப-ர்.)*, அல்லது Earl of Cromer, *Ancient and Modern Imperialism*, L., *1910 (குரோமர், ''பண்டைய ஏகாதிபத்தியமும் தற்கால ஏகாதிபத்தியமும்'', லண்டன், 1910.—ப-ர்.)*.

எல்லாச் சம்பவங்களுக்கும் எதிராக, காலனிகள்மீது ஆதிக்கம் மட்டும்தான் ஏகபோகங்களுக்கு முழு உத்தரவாதத்தையும் தருகின்றது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி எவ்வளவு அதிகமாகிறதோ, கச்சாப் பொருட்களின் பற்ருக்குறை எவ்வளவு அதிகத் தீவிரமாக உணரப்படுகிறதோ, உலக முழுவதிலும் கச்சாப் பொருள் மூலங்களுக்கான போட்டியும் வேட்டையும் எவ்வளவு அதிகக் கூர்மையடைகின்றனவோ, காலனிகளைப் பெறுவதற்கான போராட்டமும் அவ்வளவுக்கு அதிகக் கடுமையடைகிறது.

''ஓரளவு அணித்தான எதிர்காலத்தில் நகர மக்கள், தொழிலாளி மக்கள் ஆகியோரது தொகையின் வளர்ச்சி உணவுப் பொருள் பற்ருக்குறையைவிடத் தொழிலுக்கான கச்சாப் பொருள் பற்ருக்குறையினல் தடைபடுவதற்குத்தான் அதிக வாய்ப்பு இருக்கிறது என்று, இது முரண்பாடானதாகச் சிலருக்குத் தோன்றினும்கூட, வலியுறுத்திக் கூறலாம்'' என்று ஷில்டர் எழுதுகிருர். உதாரணமாக, கட்டுமான மரங்களின் பற்ருக்குறையும்—இவைகளின் விலை மேலும் மேலும் ஏறிக் கொண்டிருக்கிறது—தோல், ஜவுளித் தொழிலுக்கான கச்சாப் பொருட்கள் ஆகியவைகளின் பற்ருக்குறையும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ''உலகப் பொருளாதாரம் முழுவதிலும், விவசாயத்துக்கும் தொழிலுக்குமிடையில் ஒரு சம நிலையை உண்டாக்குவதற்குத் தொழிலதிபர்களின் கூட்டமைப்புக்கள் முயற்சிகள் செய்கின்றன; இதற்கு ஓர் உதாரணமாக மிக முக்கியத் தொழில் வளர்ச்சியுற்ற நாடுகள் சிலவற்றில் 1904ல் நிறுவப்பட்ட பருத்தி நூற்போர் சங்கங்களின் சர்வதேச சம்மேளனத்தையும், இதே மாதிரியில் 1910ல் நிறுவப்பட்ட சணல் நூற்போர் சங்கங்களின் ஐரோப்பிய சம்மேளனத்தையும் நாம் கூறலாம்.''*

''செலவு மிக்கதும் ஆபத்தானதுமான'' காலனி ஆதிக்கக் கொள்கையில்லாமலே கட்டுப்பாடற்ற மார்க்கெட்டில் கச்சாப் பொருட்களைப் பெறுவது ''சாத்தியமாகும்'' என்றும், பொதுவாக விவசாய நிலைமைகளின் ''சாதாரண''

---

* Schilder, மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 38-42.

மேம்பாட்டின்மூலம் கச்சாப் பொருட்களின் சப்ளையைப் பிரம்மாண்டமான அளவுக்கு அதிகரிப்பது ''சாத்தியமாகும்'' என்றும் வாதித்து, முதலாளித்துவச் சீர்திருத்தவாதிகளும், அவர்களுள்ளும் குறிப்பாக இன்றையக் காவுட்ஸ்கியர்களும், இத்தகைய உண்மைகளின் முக்கியத்தைச் சிறுமைப்படுத்த முயல்கிறார்கள் என்பது நிச்சயம். ஆனால், அத்தகைய வாதங்கள் ஏகாதிபத்தியத்திற்குச் சப்பைக்கட்டாகவும், அதற்கு மூலாம் பூசுவதாகவும் ஆகின்றன; ஏனெனில், முதலாளித்துவத்தின் நவீன கட்டத்தின் தலையாய அம்சத்தை— ஏகபோகங்களை — அவ்வாதங்கள் கவனிக்க மறுக்கின்றன. கட்டுப்பாடற்ற மார்க்கெட் மேலும் மேலும் இறந்த காலத்தைச் சேர்ந்ததாக ஆகிக் கொண்டிருக்கிறது; ஏகபோக சின்டிகேட்டுகளும், ட்ரஸ்டுகளும் நாள்தோறும் அதை மேலும் மேலும் குறுக்கிக் கொண்டிருக்கின்றன, விவசாய நிலைமைகளின் ''சாதாரண'' மேம்பாடு என்பது பொதுமக்களின் நிலைமைகளை மேம்படுத்துவதும், கூலியை உயர்த்துவதும், லாபத்தைக் குறைப்பதும் ஆகும். காலனிகளைப் பிடிப்பதற்குப் பதிலாகப் பொதுமக்களின் நிலைமையில் தாங்கள் அக்கறை கொள்ளவல்ல ட்ரஸ்டுகள், இனிமை மிகுந்த சீர்திருத்தவாதிகளின் கற்பனையில் தவிர, வேறு எங்கே இருக்கின்றன?

ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ள கச்சாப் பொருட்களின் ஊற்றுக்கண்கள் மட்டுமல்ல, பின்னால் கிடைக்கக் கூடிய ஊற்றுக்கண்களும் நிதி மூலதனத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஏனெனில், இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சி மிக மிகத் துரிதமானதாக இருக்கிறது, ஆகவே, புதிய முறைகள் கையாளப்பட்டு (இப்புதிய முறைகளைக் கண்டுபிடிப்பதற்கு எஞ்சினீயர்கள், விவசாய நிபுணர்கள் முதலியவர்களைக் கொண்ட ஒரு விசேஷக் குழுவைப் பெரிய பாங்கு ஒன்று தயாரித்து அனுப்ப முடியும்), பெருந்தொகைகள் முதலீடு செய்யப்பட்டால் இன்றைக்குப் பயன்படாத நிலத்தைச் செழிப்பானதாக நாளைக்குச் செய்யலாம். கனிப் பொருட்களைத் தேடுதல், கச்சாப் பொருட்களைப் பதன் படுத்தி அவைகளைப் பயன்படுத்தும் நவீன முறைகள் முதலியவைகளுக்கும் கூட இது பொருந்துகிறது. ஆகையால்தான்

தனது பொருளாதாரப் பிரதேசத்தையும் பொதுவாகத் தனது பிரதேசத்தையும் கூட விஸ்தரிப்பதற்கு நிதி மூல தனம் தவிர்க்க இயலாதவாறு முயற்சி செய்கிறது. வருங் காலத்தில் ''சாத்தியமான'' லாபத்தையும் (இன்றைய லாபத் தை அல்ல), ஏகபோகத்தின் பிற்கால விளைவுகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, ட்ரஸ்டுகள் எப்படித் தங் களது சொத்தின் மதிப்பை இரண்டு அல்லது மூன்று மடங் காகப் பெருக்கி மதிப்பிட்டு, அதை மூலதனமாக்குகின்றன வோ அதே வழியில், பின்னால் கிடைக்கக் கூடிய கச்சாப் பொருட்களின் ஊற்றுக்கண்களைக் கணக்கிலெடுத்துக் கொண் டும், இன்னும் பங்கிடப்படாத பிரதேசங்களாகிய கடைசித் துண்டுகளுக்காக அல்லது ஏற்கனவே பங்கிடப்பட்டிருக் கும் பிரதேசங்களை மறு பங்கீடு செய்வதற்காக நடைபெறும் உக்கிரமான போராட்டத்தில் பின்தங்கி விடக் கூடாதே என்று அஞ்சியும், நிதி மூலதனம், எல்லா இடங்களிலும் உள்ள எல்லாவகையான நிலத்தையும் எவ்வளவு அதிக அளவுக்கு முடியுமோ அவ்வளவு அதிகமாக, எவ்வகையிலும் கைப்பற்றிக் கொள்வதற்குப் பொதுவாக முயலுகிறது.

பிரிட்டிஷ் முதலாளிகள் **தங்களது** காலனியாகிய எகிப் தில் பருத்தி பயிரிடுதலை வளர்ப்பதற்கு எல்லா முயற்சிகளை யும் செய்து கொண்டிருக்கிறார்கள் (1904ல் விவசாயம் செய் யப்பட்டு வந்த 23 லட்சம் ஹெக்டேர் நிலத்தில், 6 லட்சத்தில் அல்லது கால் பகுதிக்கும் அதிகமான நிலத்தில் பருத்தி பயிரிடப்பட்டது); ருஷ்யர்களும் **தங்களது** காலனியாகிய துர்கெஸ்தானில் அதையேதான் செய்து கொண்டிருக்கிறார் கள்; ஏனெனில், இவ்விதமாக, தங்களது அன்னியப் போட் டியாளர்களை வெல்வதற்கும், கச்சாப் பொருட்களின் மூலங்களைத் தங்களது ஏகபோகமாக ஆக்கிக் கொள்வதற் கும், பருத்தி உற்பத்தி, பதன்பாடு ஆகிய **எல்லாச்** செய் முறைகளும் சொந்தக்காரர்களின் ஒரே குழுவினர் கையில் குவிக்கப்படுகின்ற, ''கூட்டமைந்த'' உற்பத்தி கொண்ட, மேலும் சிக்கனமானதும் லாபகரமானதுமான ஒரு ஜவுளி ட்ரஸ்டை அமைப்பதற்கும் உகந்ததான ஒரு சிறந்த நிலையில் அவர்கள் இருப்பார்கள்.

மூலதன ஏற்றுமதி குறித்த நலன்கள் காலனிகளைப் பிடிப்பதற்கும் தூண்டுகின்றன; ஏனெனில் ஏகபோக முறைகள் வாயிலாகப் போட்டியாளனை ஒழித்தலும், சப்ளைகளை உறுதிப்படுத்திக் கொள்ளலும், ஏற்ற ''தொடர்புகளை'' வலுப்படுத்திக் கொள்ளலும், இன்னும் பிறவும் காலனி மார்க்கெட்டில் எளிது (சில வேளைகளில் சாத்தியமான ஒரே வழி) ஆகும்.

நிதி மூலதனத்தின் அடிப்படைமீது எழும் பொருளாதாரமல்லாத மேலமைப்பு, அதன் அரசியல், அதன் சித்தாந்தம் ஆகியவை காலனிகள் பிடிக்கும் ஆசையைத் தீவிரப்படுத்துகின்றன. ஹல்பர்டிங் நியாயமாகக் கூறுவது போல ''நிதி மூலதனம் விரும்புவது சுதந்திரத்தை அல்ல, ஆதிக்கத்தையே''. முன்பு எடுத்துக் காட்டப்பட்ட செசில் ரோட்ஸின் கருத்துக்களை* அபிவிருத்தி செய்வது போலவும், அதில் விட்டுப் போனதைச் சேர்ப்பது போலவும், பிரெஞ்சு முதலாளித்துவ எழுத்தாளர் ஒருவர், தற்காலக் காலனி ஆதிக்கக் கொள்கையின் பொருளாதாரக் காரணங்களுடன் சமூகக் காரணங்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று எழுதுகிறார்: ''வாழ்க்கையின் வளர்ந்துவரும் சிக்கல்கள், தொழிலாளி மக்கள்மீது மட்டுமின்றி, மத்தியதர வர்க்கங்களின் மீதும் சுமையாக அழுத்திக் கொண்டிருக்கும் கஷ்டங்கள் ஆகிய காரணங்களினால், 'பொறுமையின்மை, எரிச்சல், வெறுப்பு ஆகியவை' பழைய நாகரீகத்தைச் சேர்ந்த எல்லா நாடுகளிலும் திரண்டு கொண்டிருக்கின்றன; 'அவை பொது அமைதிக்கு ஆபத்தாகவும் ஆகிக் கொண்டிருக்கின்றன; குறிப்பிட்ட வர்க்கக் கால்வாய் வழியாக வெளிப் புரண்டு வரும் சக்தி பயன்படுத்தப்பட வேண்டும், உள்ளுக்குள்ளேயே வெடிப்பு ஏற்படாது தவிர்க்கும் பொருட்டு, நாட்டுக்கு வெளியே அதற்கு வேலை கொடுக்கப்பட வேண்டும்.' ''**

---

* இந்நூல், பக்கங்கள் 123-124 பார்க்க.—ப-ர்.

** Wahl, *La France aux colonies* (வால், ''காலனிகளில் பிரான்ஸ்''.—ப-ர்.), Henri Russier, *Le Partage de l'Océanie*, P.(அன்ரி ரூசியே, ''ஓஷியானுவின் பங்கீடு'', பாரிஸ்.—ப-ர்.), 1905, பக்கம் 165ல் மேற்கோள் காட்டப்பட்டது.

முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் காலனி ஆதிக்கக் கொள்கையைப்பற்றி நாம் பேசிக் கொண்டிருப்பதால், நிதி மூலதனமும், பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் வல்லரசுகள் உலகைப் பங்கிட்டுக் கொள்வதற்கான போராட்டமாகத் தன்னைக் குறைத்துக் கொள்ளும் அதற்கேற்ற அயல்நாட்டுக் கொள்கையும் அரசாங்க சார்பின் அநேக இடைநிலை வடிவங்களைத் தோற்றுவிக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். இச்சகாப்தத்திற்கு எடுத்துக்காட்டுகள் ஆனவை, காலனிகளைப் பெற்றிருப்பவை, காலனிகள் ஆகிய நாடுகளின் இரண்டு முக்கியக் குழுக்கள் மட்டுமல்ல; பெயரளவில் அரசியல் சுதந்திரமுள்ளவையும், ஆனால், உண்மையில் நிதிச் சார்பு, ராஜதந்திரச் சார்பு ஆகிய வலைகளில் சிக்கிக் கொண்டிருப்பவையுமான சார்பு நாடுகளின் பல்வேறு வடிவங்களும் கூடத்தான். ஒரு சார்பு வடிவத்தை — அரைக் காலனியை—நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இன்னொரு வடிவத்தின் மாதிரி, உதாரணமாக, ஆர்ஜென்டீனாவாகும்.

''ஏறக்குறைய பிரிட்டிஷ் வர்த்தகக் காலனி என்று வர்ணிக்கப்பட வேண்டிய அளவுக்குத் தென் அமெரிக்கா, குறிப்பாக ஆர்ஜென்டீனா, லண்டன்மீது நிதித் துறையில் சார்ந்துள்ளது'' என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பற்றிய தமது நூலில் ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் எழுதுகிறார்.* போனஸ் அயர்ஸிலிருந்த ஆஸ்திரிய-ஹங்கேரியக் கான்சலின் 1909ம் வருடத்திய அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு ஆர்ஜென்டீனாவில் முதலீடு செய்யப்பட்ட பிரிட்டிஷ்

* Schulze-Gaevernitz, *Britischer Imperialismus und englischer Freihandel zu Beginn des 20-ten Jahrhunderts*, Lpz. 1906, பக்கம் 318 (ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், ''இருபதாம் நூற்றாண்டு தொடங்க இருக்கையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் இங்கிலாந்தின் கட்டுப்பாடற்ற வர்த்தகமும்'', லைப்ஸிக்.—ப-ர்.); *Das volkswirtschaftliche System der Kapitalanlage im Auslande*, Berlin, 1907, S. 46ல் இதையேதான் Sartorius v. Waltershausen கூறுகிறார் (சார்டோரியஸ் ஃபன் வால்டர்ஸ்ஹாவுசன், ''வெளி நாடுகளில் முதலீடு செய்தலின் தேசீயப் பொருளாதார அமைப்பு'', பெர்லின், 1907, பக்கம் 46.—ப-ர்.).

மூலதனத் தொகையை 875 கோடி பிராங்குகளாக ஷில்டர் மதிப்பிடுகிருர். எவ்வளவு வலிவான தொடர்புகளை ஆர்ஜென்டீனுவின் பூர்ஷ்வாக்களுடனும், அந்நாட்டின் பொருளாதார, அரசியல் வாழ்வு முழுவதையும் ஆட்சி செய்கின்ற வட்டாரங்களுடனும், பிரிட்டிஷ் நிதி மூலதனம்—அதன் உண்மையான ''நண்பனு''கிய ராஜதந்திரமும்கூட—இதன் மூலமாகப் பெறுகிறது என்பதைக் கற்பனை செய்வது கடினமல்ல.

அரசியல் சுதந்திரம் இருக்கையிலேயே, ஓரளவு வேருன வடிவங்கொண்ட நிதிச் சார்பையும் ராஜதந்திரச் சார்பையும் போர்த்துகலின் உதாரணம் நமக்குக் காட்டுகிறது. போர்த்துகல் சுதந்திரமான, முழு அதிகாரம் பெற்ற நாடு; ஆயினும் உண்மையில், இருநூறு ஆண்டுகளுக்கும் அதிகமாக, ஸ்பெயின் வாரிசுரிமை யுத்தத்திற்கு (1701-1714) பின்னிருந்து, அது பிரிட்டனுக்கு உட்பட்ட காப்பு நாடாக இருந்து வருகிறது. ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய தனது எதிரிகளுடன் போராட்டத்தில் தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டுப் போர்த்துகலையும் அதன் காலனிகளையும் கிரேட் பிரிட்டன் காத்தது. அதற்குப் பதிலாக, வர்த்தகச் சலுகைகளையும், போர்த்துகலுக்குள்ளும் போர்த்துகலின் காலனிகளுக்குள்ளும் சரக்குகளையும் குறிப்பாக மூலதனத்தையும் இறக்குமதி செய்வதற்கு அனுகூலமான நிபந்தனைகளையும், போர்த்துகலின் துறைமுகங்களையும் தீவுகளையும், அதன் கடல் தந்திக் கம்பிகளையும் உபயோகிக்கும் உரிமையையும் இன்னும் பலவற்றையும் பிரிட்டன் பெற்றது.* தனித்தனியான பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்குமிடையில் இவ்வகை உறவுகள் எப்பொழுதும் இருந்திருக்கின்றன; ஆனுல், முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் இவை ஒரு பொதுவான அமைப்பாக ஆகி விடுகின்றன; ''உலகைப் பங்கிடும்'' உறவுகளின் மொத்தத் தொகுதியில் ஓர் அங்கமாக அவை அமைந்து விடுகின்றன; உலக நிதி மூலதனத்தின் நடவடிக்கைகளாகிய சங்கிலித் தொடரில் வளையங்களாக ஆகி விடுகின்றன.

---

* ஷில்டர், மேற்குறிப்பிட்ட நூல், தொகுதி I, பக்கங்கள் 160-161.

உலகப் பங்கீடு பற்றிய பிரச்சினையை முடிக்கும் பொருட்டுக் கீழ்க்கண்டவற்றையும் நாம் குறிப்பிட வேண்டும். இப்பிரச்சினை மிக வெளிப்படையாகவும், திட்டமாகவும் எழுப்பப்பட்டது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகக் கடைசியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஸ்பானிஷ்-அமெரிக்க யுத்தத்துக்குப் பிறகு அமெரிக்க இலக்கியத்திலும், ஆங்கில-போயர் யுத்தத்துக்குப் பிறகு இங்கிலீஷ் இலக்கியத்திலும், மட்டும் அல்ல; இவ்விஷயத்தை முறையாக மதிப்பிட்டது ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை'' மேலும் மேலும் ''மிகவும் பொறாமையுடன்'' கவனித்து வந்த ஜெர்மன் இலக்கியம் மட்டும் அல்ல. பிரெஞ்சு பூர்ஷ்வா இலக்கியத்திலும் இந்தப் பிரச்சினை, பூர்ஷ்வா நோக்கு நிலையிலிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு திட்ட வட்டமாகவும் விரிவாகவும் எழுப்பப்பட்டிருக்கிறது. ''பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அரசியல், சமூகப் பிரச்சினைகள்'' என்ற தமது நூலில் ''பெரு வல்லரசுகளும் உலகப் பங்கீடும்'' என்ற அத்தியாயத்தில் கீழ்க்கண்டவாறு எழுதிய வரலாற்று நூலாசிரியர் ட்ரியோ என்பவரை நாம் மேற்கோள் காட்டுவோம்: ''கடந்த ஆண்டுகளில் சீனாவைத் தவிர பூமியிலுள்ள சுதந்திர நிலப்பரப்பு அனைத்தும் ஐரோப்பிய, வட அமெரிக்க வல்லரசுகளால் பிடித்துக் கொள்ளப் பட்டு விட்டது. இந்தக் காரணத்தால், சில மோதல்களும் ஆதிக்கப் பெயர்ச்சிகளும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்றன; அணித்தான வருங்காலத்தில் மேலும் பயங்கரமான வெடியதிர்ச்சிகள் உண்டாகப் போவதை இவை முன்னறிவிக்கின்றன. ஏனெனில் துரிதமாகச் செயல்படுவது அவசியமாகும்: தங்களுக்குத் தேவையானவற்றை இன்னும் உத்தரவாதப் படுத்திக் கொள்ளாத தேசங்கள், ஒருபோதும் தங்களது பங்கைப் பெறாமலும், அடுத்த நூற்றாண்டின்'' (அதாவது இருபதாம் நூற்றாண்டின்) ''மிக அடிப்படையான அம்சங்களில் ஒன்றாக இருக்கப்போகின்ற, உலகைப் பிரம்மாண்டமாகச் சுரண்டும் காரியத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமலும் நஷ்டப்படும் ஆபத்தை மேற்கொள்கின்றன. அதனால் தான் அகில ஐரோப்பாவும் அமெரிக்காவும் காலனி ஆதிக்க விஸ்தரிப்பு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மிக

வும் கவனிக்கத்தக்க அம்சமாகிய 'ஏகாதிபத்தியம்', ஆகிய ஜ்வரத்தினுல் சமீபத்தில் பீடிக்கப்பட்டுள்ளன.'' ஆசிரியர் மேலும் எழுதியதாவது: ''இந்த உலகப் பங்கீட்டில், பூமியின் செல்வங்களுக்கும் பெரிய மார்க்கெட்டுகளுக்குமான வெறிகொண்ட இவ்வேட்டையில், இந்தப் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நிறுவப்பட்ட சாம்ராஜ்யங்களின் ஒப்பு வலிமை, அச்சாம்ராஜ்யங்களை நிறுவிய நாட்டினங்கள் ஐரோப்பாவில் வகிக்கும் நிலைக்கு முற்றிலும் பொருத்த மற்றதாக இருக்கிறது. ஐரோப்பாவில் ஆதிக்கமிக்க, அக் கண்டத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய வல்லரசுகள், அங்கு போலவே உலகமெங்கிலும் ஆதிக்கத்தில் ஓங்கி நிற்க வில்லை. காலனி ஆதிக்க விறல், இன்னும் அளவிடப்படா மலிருக்கும் செல்வத்தை ஆளலாம் என்னும் நம்பிக்கை, ஐரோப்பிய வல்லரசுகளின் ஒப்புவலிமைமீது தெளிவாகப் பிரதிச் செயல் விளைக்கும் ஆதலால், ஐரோப்பாவிலேயே கூட, அதன் அரசியல் நிலைமைகளை ஏற்கனவே மாற்றிவிட்ட காலனிப் பிரச்சினை—நீங்கள் விரும்பினுல் 'ஏகாதிபத்தியம்' என்றும் கூறிக் கொள்ளலாம்—அந்நிலைமைகளை மேலும் மேலும் அதிகமாக மாற்றி விடும்.''*

---

* J.-E. Driault, *Problèmes politiques et sociaux*, P. 1900, பக்கம் 299. (ஜா.ஏ. ட்ரியோ, ''அரசியல், சமூகப் பிரச்சினைகள்'', பாரிஸ்.—ப-ர்.)

## VII. முதலாளித்துவத்தின் ஒரு விசேஷக் கட்டம் என்ற வகையில் ஏகாதிபத்தியம்

ஏகாதிபத்தியம் பற்றிய ஒரு சில முடிவுகளைத் தொகுப்பதற்கு, மேலே கூறப்பட்டுள்ளவைகளை ஒன்று கூட்டுவதற்கு நாம் இப்பொழுது முயல வேண்டும். பொதுவாக முதலாளித்துவத்தின் அடிப்படைக் குணும்சங்களின் வளர்ச்சியாகவும், நேரான தொடர்ச்சியாகவும் ஏகாதிபத்தியம் எழுந்தது. ஆனுல், முதலாளித்துவம் தனது வளர்ச்சியில் திட்டமானதும் மிக மிக உயர்ந்ததுமான ஒரு கட்டத்தில்தான் முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக மாறியது; இக்கட்டத்தில்தான் முதலாளித்துவத்தின் சில அடிப்படை அம்சங்கள் தங்களுக்கு எதிரானவைகளாக மாற ஆரம்பித்தன; முதலாளித்துவத்திலிருந்து மேலானதொரு சமுதாய-பொருளாதார அமைப்புக்கு மாற்றம் நேரிடும் காலத்தினுடைய அம்சங்கள் வழி நெடுகிலும் உருப் பெற்றுத் தங்களை வெளிக்காட்டின. இம்மாற்றத்தில் பொருளாதார ரீதியில் மிகமுக்கிய விஷயமானது, கட்டுப்பாடற்ற முதலாளித்துவப் போட்டியை அகற்றிவிட்டு அதனிடத்தை முதலாளித்துவ ஏகபோகங்கள் பிடித்துக் கொண்டதுதான். கட்டுப்பாடற்ற போட்டி, முதலாளித்துவத்தினுடைய, பொதுவாகச் சரக்கு உற்பத்தியினுடைய அடிப்படைக் குணும்சம் ஆகும்; ஏகபோகம் கட்டுப்பாடற்ற போட்டிக்குச் சரியான எதிரிடை; ஆனுல், கட்டுப்பாடற்ற போட்டி நம் கண்முன்னுலேயே ஏகபோகமாக மாற்றப்படுவதை ஏற்கனவே நாம் கண்டிருக்கிருேம், அப்பொழுது அது பேரளவுத் தொழிலை உண்டாக்குகிறது; சிறிய தொழிலை நெருக்கி வெளித் தள்ளுகிறது; பேரளவுத் தொழிலை இன்னும் பெரிய தொழிலால் அகற்றுகிறது; ஏகபோகம், அதாவது கார்ட்டல்கள், சின்டிகேட்டுகள், ட்ரஸ்டுகள், அவற்றுடன் சேர்ந்து கலந்தவையும் நூறுகோடிக் கணக்கான பணத்தை ஆளுகின்றவையுமான ஒரு பத்து பாங்குகளின் மூலதனம் ஆகியவை உற்பத்திக்

குவிதலிலிருந்தும் மூலதனக் குவிதலிலிருந்தும் வளர்ச்சியுற்றிருக்கிற, இன்னும் வளர்ச்சியுறுகிற அளவுக்கு உற்பத்திக் குவிதலையும் மூலதனக் குவிதலையும் கொண்டு செல்கிறது. அதே சமயம், கட்டுப்பாடற்ற போட்டியிலிருந்து தோன்றிய ஏகபோகங்கள் அதை அகற்றுவதில்லை; அதற்கு மேல், அதன் பக்கத்திலேயே நிலவுகின்றன; இதனால் மிகக் கடுமையும் தீவிரமுமான அநேக முரண்பாடுகளும், உராய்வுகளும், மோதல்களும் தோற்றுவிக்கப்படுகின்றன. முதலாளித்துவத்திலிருந்து அதைவிட மேலானதோர் அமைப்புக்கான மாற்றமே ஏகபோகமாகும்.

ஏகாதிபத்தியத்தைப்பற்றி இயன்ற அளவு சுருக்கமான வரையறுப்பை நாம் தரவேண்டியது அவசியமானால், முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டமே ஏகாதிபத்தியம் என்று நாம் கூற வேண்டும். அத்தகைய வரையறுப்பு யாவற்றிலும் முக்கியமானதை உள்ளிட்டதாக இருக்கும். ஏனென்றால், ஒரு புறம், நிதி மூலதனம் என்பது தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டமைப்புக்களின் மூலதனத்துடன் சேர்க்கப்பட்ட, ஒரு சில மிகப் பெரிய ஏகபோகப் பாங்குகளின் பாங்கு மூலதனமாகும்; மறு புறம், உலகப் பங்கீடு, எந்த முதலாளித்துவ வல்லரசாலும் கைப்பற்றப்படாத பிரதேசங்களுக்குத் தடையின்றிப் பரவியிருக்கும் ஒரு காலனிக் கொள்கையிலிருந்து, முழுமையாகப் பங்கிடப்பட்டு விட்ட உலகின் நிலப்பரப்பை ஏகபோக ரீதியாகக் கைப்பற்றியிருக்கிற ஒரு காலனிக் கொள்கைக்கு மாற்றமடைவதாகும்.

ஆனால் மிகவும் சுருக்கமான வரையறுப்புக்கள் முக்கிய அம்சங்களைத் தொகுத்துத் தருவதால் வசதியாக இருந்தாலும் கூட, அவை போதமாட்டா; ஏனெனில், விவரிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியின் மிக முக்கிய அம்சங்களை அவற்றிலிருந்து விசேஷமாக அனுமானிக்கவேண்டியிருக்கிறது. பொதுவாக எல்லா வரையறுப்புக்களுமே ஒரு நிகழ்ச்சியின் முழு வளர்ச்சியிலும் அதன் எல்லாத் தரப்புத் தொடர்புகளையும் உட்கொண்டிருக்க ஒருபோதும் இயலாதவையாகும். எனவே, அவற்றின் சூழ்நிலைச்சார்புள்ள, ஒப்புநோக்கான முக்கியத்துவத்தை மறந்து விடாமல், ஏகாதிபத்தியத்தின் கீழ்க் குறித்த ஐந்து அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய வரை

யறுப்பு ஒன்றை நாம் தர வேண்டும்: 1) உற்பத்திக் குவிதலும் மூலதனக் குவிதலும் மிக உயர்ந்த நிலைக்கு வளர்ந்து விட்டன; அந்நிலையில், பொருளாதார வாழ்வில் நிர்ணயகரமான பங்காற்றும் ஏகபோகங்களை அவை உருவாக்கியிருக்கின்றன; 2) தொழில் மூலதனத்துடன் பாங்கு மூலதனம் ஒன்றிணைதலும் இந்த ''நிதி மூலதனத்தின்'' அடிப்படையில் ஒரு நிதியாட்சிக் குழு உருவாதலும்; 3) சரக்கு ஏற்றுமதிக்குப் பதிலாக மூலதன ஏற்றுமதி பிரத்தியேக முக்கியத்துவம் பெறுகிறது; 4) உலகைப் பங்கிட்டுக் கொள்ளும் சர்வதேச ஏகபோக முதலாளித்துவக் கூட்டமைப்புக்கள் உருவாதல்; 5) மிகப் பெரிய முதலாளித்துவ வல்லரசுகளுக்கிடையில் உலக நிலப்பரப்பின் பங்கீடு முற்றுப் பெற்று விட்டது. எந்தக் கட்டத்தில் ஏகபோகங்கள், நிதி மூலதனம் ஆகியவைகளின் ஆதிக்கம் வேரூன்றி விட்டதோ, மூலதன ஏற்றுமதி விசேஷ முக்கியத்துவத்தைப் பெற்று விட்டதோ, சர்வதேச ட்ரஸ்டுகளுக்கிடையில் உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ, உலகின் நிலப்பரப்பு அனைத்தும் மிக மிகப் பெரிய முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் பங்கிடப்படுவது முற்றுப் பெற்று விட்டதோ, அந்த வளர்ச்சிக் கட்டத்தில் உள்ள முதலாளித்துவமே ஏகாதிபத்தியமாகும்.

அடிப்படையான, தூய பொருளாதார ரீதியான கருத்துக்களை மட்டுமின்றி (மேலேயுள்ள வரையறுப்பு அக்கருத்துக்களுடன் தான் நின்று விடுகிறது), பொதுவாக முதலாளித்துவத்தின் சம்பந்தத்தில் முதலாளித்துவத்தின் இந்தக் கட்டத்திற்குச் சரித்திரத்திலுள்ள இடத்தையும், அல்லது ஏகாதிபத்தியத்துக்கும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் இரண்டு முக்கியப் போக்குகளுக்கும் இடையிலுள்ள உறவையும் நாம் மனதில் கொண்டால் ஏகாதிபத்தியத்தை வேறு விதமாக விவரிக்க முடியும், விவரிக்க வேண்டும் என்பதை நாம் பிறகு பார்ப்போம். இச்சமயத்தில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம், ஏகாதிபத்தியம், மேலே விளக்கப்பட்டிருக்கிற விதத்தில், முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரு விசேஷக் கட்டத்தைச் சந்தேகமின்றிக் குறிக்கிறது என்பதாகும். ஏகாதிபத்தியத்தைப் பற்றிய இயன்ற அளவு நன்கு ஸ்தாபிக்கப்பட்ட கருத்தை வாசகர்களுக்குக் கொடுக்கும்

பொருட்டு முதலாளித்துவத்தின் நவீன பொருளாதாரத்தைப் பற்றிய குறிப்பாக மறுக்க முடியாதபடி நிலைநாட்டப்பட்டுள்ள உண்மைகளை ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட **பூர்ஷ்வாப்** பொருளாதாரவாதிகளின் கூற்றுக்களைக் கூடிய அளவு அதிகமாக மேற்கோள் காட்ட நாம் வேண்டுமென்றே முயன்றோம். இதே நோக்கத்தைக் கருத்தில் கொண்டுதான், எந்த அளவுக்கு பாங்கு மூலதனம் முதலியவை வளர்ந்திருக்கின்றன, அளவு பண்பாக மாற்றமடைவது, வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாற்றமடைவது எதில் திட்டமாக வெளியிடப்பட்டிருக்கிறது என்பவற்றைக் காண உதவும் விரிவான புள்ளி விவரங்களை நாம் மேற்கோள் காட்டியுள்ளோம். இயற்கையிலும், சமுதாயத்திலும் உள்ள எல்லா எல்லைக் கோடுகளும் சூழ்நிலையைப் பொறுத்தவையும் மாறக்கூடியவையும் ஆகும் என்பதையும், ஏகாதிபத்தியம், உதாரணமாக, எந்தக் குறிப்பிட்ட ஆண்டில் அல்லது பத்தாண்டுக் காலத்தில் ''நிச்சயமாக'' நிறுவப்பட்டது என்பதைப் பற்றி விவாதிப்பது அபத்தமானது என்பதையும் நாம், உண்மையில், கூறத் தேவையில்லை.

ஆயினும், ஏகாதிபத்தியத்தை வரையறுக்கும் விஷயத்தில், இரண்டாவது இன்டர்நேஷனல் எனப்படுவதன் காலத்திய, அதாவது 1889-1914க்கு இடைப்பட்ட இரு பத்தைந்தாண்டுக் காலத்திய, தலையாய மார்க்ஸீயத் தத்துவவாதியாகிய கா. காவுட்ஸ்கியுடன் முதன் முதலாக விவாதத்தில் நாம் இறங்க வேண்டும். ஏகாதிபத்தியத்தைப் பற்றிய நமது வரையறுப்பில் வெளியிடப்பட்ட அடிப்படைக் கருத்துக்கள் 1915லும், நவம்பர் 1914லும் கூட, காவுட்ஸ்கியால் மிக வன்மையாகத் தாக்கப்பட்டன; பொருளாதாரத்தின் ஒரு ''கட்ட''மாகவோ அல்லது ஒரு படியாகவோ ஏகாதிபத்தியத்தைக் கருதக் கூடாது என்றும்; மாறாக ஒரு கொள்கை என்று, நிதி மூலதனத்தினால் ''சிறந்ததாக எண்ணப்படும்'' திட்டமானதொரு கொள்கை என்று அதைக் கருதவேண்டும் என்றும்; ''இன்றைய முதலாளித்துவத்துடன்'' ஏகாதிபத்தியத்தை ''ஒன்றுபடுத்த''க் கூடாது என்றும்; ஏகாதிபத்தியம் ''இன்றைய முதலாளித்துவத்தின் எல்

லாத் தோற்றங்களையும்''—கார்ட்டல்கள், காப்புக் கொள்கை, நிதியதிபர்களின் ஆதிக்கம், காலனிக் கொள்கை ஆகியவைகளை—குறிப்பதாகக் கொண்டால், முதலாளித்துவத்துக்கு ஏகாதிபத்தியம் தேவைதானு என்ற கேள்வி''சர்வ மட்டமான கூறியது கூறலாக'' மாறி விடுகிறது, ஏனென்ருல், அவ்வாருயின் ''ஏகாதிபத்தியம் இயற்கையாக முதலாளித்துவத்தினுடைய அதிமுக்கியத் தேவையாகிறது'' என்றும் இப்படிப் பலவாருக அப்பொழுது அவர் சொன்னுர். காவுட்ஸ்கியின் கருத்தைக் காட்டுவதற்கு மிகச் சிறந்த வழி, நாம் வெளியிட்டிருக்கிற கருத்துக்களின் சாராம்சத்துக்கு நேர் எதிரான, ஏகாதிபத்தியத்தைப் பற்றிய அவரது சொந்த வரையறுப்பை எடுத்துக் காட்டுவது தான் (ஏனெனில் இத்தகைய கருத்துக்களை ஏற்கனவே பல ஆண்டுகளாகப் பேசி வரும் ஜெர்மன் மார்க்ஸீயவாதிகளின் குழுவிலிருந்து வரும் மறுப்புகள், மார்க்ஸீயத்தில் ஒரு குறிப்பிட்ட போக்கினிடமிருந்து வரும் மறுப்புகள் என்று காவுட்ஸ்கிக்கு வெகு நாட்களாகத் தெரியும்).

காவுட்ஸ்கியின் வரையறுப்பு கீழ்க்கண்டவாறு இருக்கிறது:

''நன்ருக வளர்ந்த தொழில் முதலாளித்துவத்தின் விளைவு தான் ஏகாதிபத்தியம். **விவசாய** (காவுட்ஸ்கியின் கொட்டை எழுத்துகள்) பிரதேசங்களின் மேலும் மேலும் பெரிய நிலப்பரப்பை, அந்தப் பிரதேசங்களில் எந்த தேசீய இனங்கள் வசிக்கின்றன என்பதைப்பற்றிக் கவலைப்படாமல், தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அல்லது தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு தொழில் முதலாளித்துவ தேசீய இனமும் செய்யும் முயற்சி அதில் அடங்கியுள்ளது.''*

இந்த வரையறுப்பு சுத்த உபயோகமற்றது; ஏனெனில் இது, ஒருமுகமாக, அதாவது தன்னிச்சையாக, தேசீய இனப் பிரச்சினையை மட்டுமே (இப்பிரச்சினை அதைப் பொறுத்த

---

* *Die Neue Zeit*, 1914, 2 (தொகுதி 32), பக்கம் 909, செப். 11, 1914. ஒப். 1915, 2, பக்கம் 107 முதலியன.

வரையிலும், ஏகாதிபத்தியத்துடன் அதற்குள்ள தொடர்பைப் பொறுத்தவரையிலும்கூட, மிகமிக முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் கூட) தனிப்படுத்திக் காட்டுகிறது; மற்ற தேசீய இனங்களைத் தன்னோடு சேர்த்துக் கொள்கிற நாடுகளில் உள்ள தொழில் மூலதனத்துடன் மட்டும்தான் இப்பிரச்சினையை இது தன்னிச்சையாகவும் தவருகவும் தொடர்புபடுத்துகிறது; மேலும், விவசாயப் பிரதேசங்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை இதைப்போலவே தன்னிச்சையானதும் தவருனதுமான முறையில் முதலிடத்தில் வைக்கிறது.

நாடுகள் சேர்ப்பதற்கான ஒரு முயற்சியே ஏகாதிபத்தியம்—காவுட்ஸ்கியின் வரையறுப்பின் அரசியல் சம்பந்தமான பகுதி இந்த முடிவுக்குத்தான் வருகிறது. இது சரியானதே, ஆனல் மிக அரைகுறையானது; ஏனென்ருல் அரசியல் ரீதியில் ஏகாதிபத்தியம், பொதுவாக பலாத்காரத்தையும் பிற்போக்கையும் அடைவதற்கான ஒரு முயற்சி. ஆயினும், தற்சமயத்தில் இப்பிரச்சினையின் பொருளாதார அம்சத்தில்தான் நாம் கவனம் கொண்டுள்ளோம்; இந்த அம்சத்தைக் காவுட்ஸ்கி தாமே தமது வரையறுப்பில் புகுத்தியிருக்கிருர். காவுட்ஸ்கியின் வரையறுப்பிலுள்ள தவறுகள் அப்பட்டமானவை. ஏகாதிபத்தியத்தின் குணும்சம் தொழில் மூலதனம் அல்ல, அதற்கு மாருக நிதி மூலதனம்தான். பிரான்சில் நிதி மூலதனத்தின் அசாதாரணத் துரித வளர்ச்சியும், தொழில் மூலதனத்தின் பலவீனமும்தான், 1880-90லிருந்து நாடு பிடிக்கும் (காலனி) கொள்கை அதி தீவிரமடைந்ததைத் தோற்றுவித்தன என்பது தற்செயல் நிகழ்ச்சியில்லை. ஏகாதிபத்தியத்தின் தன்மையைக் காட்டும் இயல்பு, விவசாயப் பிரதேசங்களை மட்டும் அல்ல மிகவும் அதிகமாகத் தொழில்மயமாக்கப்பட்ட பிரதேசங்களையும் பிடித்துக் கொள்ள முயல்வதுதான் (பெல்ஜியத்தைச் சாப்பிடவேண்டுமென்ற ஜெர்மனியின் பசி; லோரைனை விழுங்குவதற்கு பிரான்சின் ஆசை). ஏனென்ருல், 1) உலகம் ஏற்கனவே பங்கிடப்பட்டு விட்டது, மறு பங்கீட்டைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களை எவ்வகைப் பிரதேசங்களையும் பிடித்துக் கொள்வதற்குக் கையை நீட்டும்படிச் செய்கிறது; அடுத்ததாக, 2) தலைமையை அடைவதற்கான, அதாவது

நாடு பிடிப்பதற்கான முயற்சியில் சில வல்லரசுகளுக்கிடை யில் நடக்கும் போட்டி ஏகாதிபத்தியத்தின் ஒரு முக்கிய மான அம்சமாகும்; இந்த முயற்சி நேராகத் தங்களது நலனுக் காக அவ்வளவாகச் செய்யப்படுவதில்லை; தங்களது எதிரி யைப் பலவீனப்படுத்துவதற்காகவும் அவனது தலைமைக்குக் குழி பறிப்பதற்காகவும் அது நடைபெறுகிறது, (இங்கிலாந் தின்மீது தாக்குதல்கள் தொடுப்பதற்கான தளமாக பெல் ஜியம் ஜெர்மனிக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது; ஜெர்மனிக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவதற்கான தளமாக பாக்தாது இங்கிலாந்துக்குத் தேவைப்படுகிறது, முதலியன).

காவுட்ஸ்கி இங்கிலீஷ்காரர்களை விசேஷமாகத் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிருர்; ஏகாதிபத்தியம் என்ற வார்த் தைக்கு, தாம், அதாவது காவுட்ஸ்கி, புரிந்து கொண்டுள்ள படி, தூய அரசியல் அர்த்தத்தை அவர்கள் கொடுத்து விட்டதாகச் சொல்லுகிருர். இங்கிலீஷ்காரராகிய ஹாப் ஸன் எழுதிய, 1902ல் வெளியான ''ஏகாதிபத்தியம்'' என்ற நூலை நாம் எடுத்துக் கொள்வோம். அதில் நாம் இவ்வாறு படிக்கிறோம்:

'' புதிய ஏகாதிபத்தியம் பழைய ஏகாதிபத்தியத்தி லிருந்து வேறுபடுவது எவற்றிலென்ருல், முதலாவதாக, வளர் ந்து கொண்டேயிருக்கும் ஒரே சாம்ராஜ்யம் என்ற பே ரவாவுக்குப் பதிலாக அரசியல் ஆதிக்க விஸ்தரிப்பு, வர்த்தக லாபம் என்ற ஒரே விதமான வேட்கைகளினுல் ஒவ்வொன் றும் உந்தப்படுகின்ற போட்டி சாம்ராஜ்யங்களின் தத்துவத் தையும் நடைமுறையையும் அது வைக்கிறது என்பதில்; இரண்டாவதாக, வியாபார நலன்கள்மீது நிதி அல்லது முத லீட்டு நலன்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதில்.''*

பொதுவாக இங்கிலீஷ்காரர்களை (நயப்பண்பற்ற இங் கிலீஷ் ஏகாதிபத்தியவாதிகளை, அல்லது ஏகாதிபத்தியத்தை வெளிப்படையாகத் தாங்கிப் பேசுபவர்களை அவர் கருதி யிருந்தால் பரவாயில்லை) காவுட்ஸ்கி குறிப்பிட்டது யதார்த்த ரீதியாக முழுத் தவறு என்பதை நாம் காண்கிருேம். தாம் மார்க்ஸீயத்தைத் தொடர்ந்து ஆதரித்து வாதிப்ப

* Hobson, *Imperialism*, L., 1902, பக்கம் 324.

தாகப் பாவனை செய்யும் காவுட்ஸ்கி, தற்கால ஏகாதிபத்தியத்தின் இரண்டு ''சரித்திர பூர்வமான ஸ்தூல'' அம்சங்களை (காவுட்ஸ்கியின் வரையறுப்பு சரித்திரபூர்வமான ஸ்தூலத் தன்மையைக் கேலி செய்வதாகும்!) அதிக சரியாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளும் சோஷல்-லிபரல் ஹாப்ஸனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது உண்மையில் ஓரடி பின்னால் செல்கிறார் என்பதை நாம் காண்கிறோம். அந்த இரண்டு அம்சங்களாவன: 1) சில ஏகாதிபத்தியங்களுக்கிடையில் போட்டி, 2) வியாபாரிக்கு மேல் நிதியதிபனின் ஆதிக்கம். தொழில் வளர்ச்சியுற்ற நாடு விவசாய நாட்டைப் பிடித்துக் கொள்ளும் விஷயம் பிரதானமாக இருந்தால், அப்பொழுது வியாபாரியின் பாத்திரத்திற்கு முதலிடம் கொடுக்கப் படுகிறது.

காவுட்ஸ்கியின் வரையறுப்பு தவறானதும், மார்க்ஸீய ரீதியற்றதும் மட்டுமில்லை. மார்க்ஸீயத் தத்துவத்துடனும், மார்க்ஸீய நடைமுறையுடனும் ஒவ்வொரு துறையிலும் வேறுபடுகின்ற ஒரு கருத்து முறை முழுவதுக்கும் அது அடிப்படையாக இருக்கிறது; இதைப்பற்றி நாம் பிறகு குறிப்பிடுவோம். முதலாளித்துவத்தின் நவீன கட்டம் ஏகாதிபத்தியம் என்று அழைக்கப்பட வேண்டுமா அல்லது நிதி மூலதன கட்டம் என்று என்பது குறித்துக் காவுட்ஸ்கி கிளப்புகின்ற, வார்த்தைகள் பற்றிய விவாதம் மிகவும் முக்கியமற்றது. நீங்கள் அதை எப்படி வேண்டுமானாலும் அழையுங்கள், ஒரு வித்தியாசமும் இருக்காது. விஷயத்தின் சாராம்சம் என்னவென்றால், ஏகாதிபத்தியத்தின் அரசியலை அதன் பொருளாதாரத்திலிருந்து காவுட்ஸ்கி பிரித்து விடுகிறார்; நாடுகள் பிடித்தலை அது நிதி மூலதனத்தினால் ''சிறந்ததாக எண்ணப்படும்'' ஒரு கொள்கை எனப் பேசுகிறார்; அதே நிதி மூலதன அடிப்படையில் சாத்தியமானது என்று தாம் கருதும் இன்னொரு பூர்ஷ்வாக் கொள்கையை இதற்குப் பதிலாக எதிரில் வைக்கிறார். அப்படியானால், பொருளாதாரத்தில் ஏகபோகங்கள், அரசியலில் ஏகபோகமல்லாத, பலாத்காரமல்லாத, நாடு பிடிப்பதல்லாத செயல்முறைகளுடன் சேர்ந்திருக்கக் கூடியவை என்று இதிலிருந்து முடிவாகிறது. அப்படியானால், நிதிமூலதனக் காலத்தில் திட்டமாக முடிவடைந்து

விட்டதும், மிகமிகப் பெரிய முதலாளித்துவ நாடுகளுக் கிடையில் நடைபெறும் போட்டியின் இன்றைய விசேஷ வடிவங்களின் அடிப்படையாக இருப்பதுமான உலக நிலப் பரப்பின் பங்கீடு ஏகாதிபத்தியமல்லாத ஒரு கொள்கை யுடன் சேர்ந்திருக்கக் கூடியது என்றும் இதிலிருந்து முடிவா கிறது. முதலாளித்துவத்தின் நவீன கட்டத்தின் மிக அடிப் படையான முரண்பாடுகளின் ஆழ்ந்த தன்மையை அம்பலப் படுத்துவதற்குப் பதிலாக, அவைகளை மூடிமறைப்பதும் மழுப்புவதும் தான் இதன் விளைவாக இருக்கிறது; மார்க் ஸீயத்துக்குப் பதிலாக பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதம் தான் இதன் விளைவாக இருக்கிறது.

ஏகாதிபத்தியம், நாடு பிடித்தல் ஆகியவற்றைத் தாங் கிப் பேசுபவரான ஜெர்மானியர் கூனெவ் என்பவருடன் காவுட்ஸ்கி விவாதத்தில் இறங்குகிறார்; ஏகாதிபத்தியம் இன்றைய முதலாளித்துவமே என்றும், முதலாளித்துவத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாததும் முற்போக்குடையதுமாகும் என்றும், ஆகவே ஏகாதிபத்தியம் முற்போக்கானது என்றும், ஆகவே அதன் முன் விழுந்து கும்பிட்டு அதன் புகழ்பாட வேண்டும் என்றும் பாங்கற்ற முறையிலும் வெட்கமின்றி யும் கூனெவ் வாதிடுகிறார். இது ஒரு விதத்தில் ருஷ்ய மார்க்ஸீயவாதிகளைப் பற்றி நரோத்னிக்குகள் 1894-95ல் எழுதிய நையாண்டிச் சித்திரத்தைப் போலிருக்கிறது; அவர் கள் வாதித்தார்கள்: ருஷ்யாவில் முதலாளித்துவம் தவிர்க்க முடியாதது என்றும், அது முற்போக்கானது என்றும் மார்க் ஸீயவாதிகள் நம்பினார்களேயானால், அவர்கள் கட்டாயம் ஒரு சாராயக் கடையைத் திறந்து முதலாளித்துவத்தை நட ஆரம்பிக்க வேண்டும். கூனெவுக்குக் காவுட்ஸ்கியின் பதில் கீழ்க்கண்டவாறு இருக்கிறது: ஏகாதிபத்தியம் இன்றைய முதலாளித்துவமில்லை; அது இன்றைய முதலாளித்துவத் தினுடைய கொள்கையின் வடிவங்களில் ஒன்று, அவ் வளவுதான்; இக்கொள்கையை, ஏகாதிபத்தியத்தை, நாடு பிடித்தலை, இன்னும் இதைப் போன்றவைகளை, நாம் எதிர்த்துப் போரிட முடியும், போரிட வேண்டும்.

இப்பதில் முற்றிலும் பொருத்தமாகத் தோன்றுகிறது; ஆனால் உண்மையில் இது ஏகாதிபத்தியத்துடன் சமரசத்தை

ஏற்படுத்துகிற, அதிக சாமர்த்தியமானதும் வேஷம் தரித்தது மான (ஆகவே அதிக ஆபத்தானதுமான) பிரசாரம்; ஏனென்றல், ட்ரஸ்டுகள், பாங்குகள் ஆகியவைகளுடைய பொருளாதாரத்தின் அடிப்படையைப் பாதிக்காதவாறு, அந்த ட்ரஸ்டுகள், பாங்குகள் ஆகியவைகளின் கொள்கையை எதிர்த்து நடத்தும் ஒரு ''போர்'' பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதமும் பசிபிசமும், இரக்கமுள்ளதும் தீங்கற்றதுமான நல்ல விருப்பமுமே தவிர வேருென்றுமில்லே. இருக்கிற முரண்பாடுகளின் முழு ஆழத்தையும் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, அவைகளைத் தட்டிக் கழிப்பது, அவைகளில் மிகவும் முக்கியமானவைகளை மறந்து விடுவது—இதுதான் மார்க்ஸீயத்துடன் பொதுமை எதுவும் அற்ற காவுட்ஸ்கியின் தத்துவம். இயற்கையாக, இத்தகைய ''தத்துவம்'' கூனெவ் போன்றவர்களுடன் ஒற்றுமைப்படும் எண்ணத்தைத் தாங்கிப் பேணுவதற்குத்தான் பயன்பட முடியும்!

''தூய பொருளாதாரக் கருத்து நிலையிலிருந்து நோக்கினல், முதலாளித்துவம் கார்ட்டல் கொள்கையை வெளிநாட்டுக் கொள்கைக்கும் விஸ்தரித்தல் என்ற இன்னெரு புதிய கட்டத்தில், அதி ஏகாதிபத்தியக் கட்டத்தில் [ultraimperialism]'', அதாவது மேலான ஏகாதிபத்தியக் கட்டத்தில் [superimperialism], ''நிலவுவது நடக்கக் கூடாத ஒரு விஷயமல்ல''* என்று எழுதுகிருர் காவுட்ஸ்கி; அவரது கூற்றுப்படி, உலக முழுவதிலும் உள்ள ஏகாதிபத்தியங்களுக்கிடையில் போராட்டங்கள் நடைபெறும் கட்டத்தில் அல்ல, அவைகளுக்கிடையில் ஐக்கியம் உண்டாகும் கட்டத்தில், முதலாளித்துவத்தின்கீழ் போர்கள் நின்றுபோகும் ஒரு கட்டத்தில், ''சர்வதேசீய ரீதியில் ஐக்கியப்பட்ட நிதி மூலதனம் உலகைக் கூட்டாகச் சுரண்டும்''** ஒரு கட்டத்தில் நிலவுவது நடக்கக் கூடாத ஒரு விஷயமல்ல.

---

* *Die Neue Zeit*, 1914, 2 (தொகுதி 32), பக்கம் 921, செப். 11, 1914. ஒப். 1915, 2, பக்கம் 107ம் அடுத்த பக்கங்களும்.

** *Die Neue Zeit*, 1915,1, பக்கம் 144, ஏப்ரல் 30, 1915.

''அதி ஏகாதிபத்தியம் என்ற தத்துவம்'' மார்க்ஸீயத்திலிருந்து எவ்வளவு திட்டமாகவும் திரும்ப இயலாதவாறும் பிரிவுபடுகிறது என்பதை விவரமாகக் காட்டுவதற்கு இத்தத்துவத்தைப்பற்றிப் பின்னர் நாம் கவனிக்க நேரிடும். இந்த ஆய்வுரைக்கான பொதுவான திட்டத்தின்படியே, இப்பிரச்சினையைப் பற்றிய துல்லியமான பொருளாதாரப் புள்ளிவிவரங்களை நாம் இப்பொழுது பரிசீலனை செய்ய வேண்டும். ''தூய பொருளாதாரக் கருத்து நிலையிலிருந்து நோக்கினல்'' ''அதி ஏகாதிபத்தியம்'' சாத்தியமானது தானு, அல்லது அது அதிமுட்டாள்தனமா?

தூய பொருளாதாரக் கருத்து நிலை என்பது ''தூய'' கற்பனைதான் என்று பொருள் கொண்டால், பிறகு, சொல்லக் கூடியது எல்லாம் கீழ்க்கண்ட ஒரு கூற்ருக ஆகிவிடுகிறது: வளர்ச்சி ஏகபோகங்களை நோக்கி முன்னேறுகிறது; ஆகவே, ஒரே உலக ஏகபோகத்தை நோக்கி, ஒரே சர்வ தேச ட்ரஸ்டை நோக்கி முன்னேறுகிறது. இக்கூற்று மறுக்க முடியாதது; ஆயினும், உணவுப் பொருட்களைச் சோதனைச் சாலைகளில் உற்பத்தி செய்வதை நோக்கி ''வளர்ச்சி முன்னேறுகிறது'' என்று கூறுவது எப்படிப் பொருள் அற்றதோ அப்படியே இக்கூற்றும் முழுதும் பொருளற்றது. இந்த அர்த்தத்தில் ''அதி விவசாயம் என்ற தத்துவம்'' எவ்வளவு அபத்தமானதோ அதி ஏகாதிபத்தியம் என்ற ''தத்துவம்'' அவ்வளவே அபத்தமானது.

இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த சரித்திர ரீதியில் ஸ்தூலமான காலகட்டம் என்ற முறையில், நிதி மூலதனக் காலகட்டத்தின் ''தூய பொருளாதார'' நிலைமைகளைப் பற்றி விவாதிப்பதாஞல் அப்பொழுது, ''அதி ஏகாதிபத்தியம்'' என்ற (நிலவும் முரண்பாடுகளின் ஆழத்திலிருந்து கவனத்தை வேறு புறம் திருப்புவது என்ற, பிரத்தியேகமாக யாவற்றிலும் பிற்போக்கான நோக்கத்துக்கே பயன்படுகிற) உயிரற்ற கற்பனைகளுக்குச் சிறந்த பதில் அக்கற்பனைகளை இன்றைய உலகப் பொருளாதாரத்தின் ஸ்தூல-பொருளாதார யதார்த்த நிலைமைகளுடன் வேறுபடுத்திக் காட்டுவதுதான். அதி ஏகாதிபத்தியத்தைப் பற்றிய காவுட்ஸ்கியின் சுத்தமாகப் பொருளற்ற பேச்சுக்கள் பல

| பிரதானப் பொருளாதாரப் பிரதேசங்கள் | பரப்பு | மக்கள் தொகை | போக்குவரத்துச் சாதனங்கள் | | வியாபாரம் | தொழில் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து லட்சம் சதுர கிலோமீட்டர்கள் | பத்து லட்சம் | ரயில்வேக்கள் (ஆயிரம் கிலோமீட்டர்கள்) | வியாபாரக் கப்பல்கள் (பத்து லட்சம் டன்) | இறக்குமதி, ஏற்றுமதி (நூறு கோடி மார்க்குகள்) | உற்பத்தியளவு: நிலக்கரி (பத்து லட்சம் டன்) | உற்பத்தியளவு: வார்ப்பு இரும்பு (பத்து லட்சம் டன்) | பருத்தி நூற்கும் கதிர்கள் (பத்து லட்சம்) |
| 1. மத்திய ஐரோப்பிய | 27.6 (23.6)* | 388 (146) | 204 | 8 | 41 | 251 | 15 | 26 |
| 2. பிரிட்டிஷ் . . . . | 28.9 (28.6)* | 398 (355) | 140 | 11 | 25 | 249 | 9 | 51 |
| 3. ருஷ்ய . . . . . . . | 22 | 131 | 63 | 1 | 3 | 16 | 3 | 7 |
| 4. கிழக்கு ஆசிய . . . | 12 | 389 | 8 | 1 | 2 | 8 | 0.02 | 2 |
| 5. அமெரிக்க . . . . | 30 | 148 | 379 | 6 | 14 | 245 | 14 | 19 |

* அடைப்புக் குறிகளில் உள்ள எண்கள் காலனிகளின் பரப்பையும் மக்கள் தொகையையும் காட்டுகின்றன.

விஷயங்களுக்கிடையில், ஏகாதிபத்தியத்தைத் தாங்கிப் பேசு பவர்களுக்குச் சாதகமான கீழ்க்கண்ட மிகவும் தவறுன கருத் தையும் ஊக்குவிக்கின்றன: நிதி மூலதனத்தின் ஆட்சி உலகப் பொருளாதாரத்தின் உள்ளேயே இருக்கும் ஏற்றத் தாழ்வுகள், முரண்பாடுகள் ஆகியவற்றைப் பலவீனப்படுத்து கிறது என்பதுதான் அந்தத் தவறுன கருத்து; ஆனல் உண் மையிலோ, நிதி மூலதனத்தின் ஆட்சி அவைகளை வலுப் படுத்துகிறது.

பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளின் எல்லைக் கோட்டில் உலகப் பொருளாதாரத்தின் உள்ளுறவுகள் பற் றிய ஒரு ஸ்தூல சித்திரத்தைப் பெறுவதற்கு உதவி செய் கின்ற பிரதானமான தூய பொருளாதாரப் புள்ளிவிவரங் களைத் தொகுப்பதற்கு, ''உலகப் பொருளாதாரத்திற்கு ஓர் அறிமுகம்''* என்ற தமது சிறிய நூலில் ரி. கால்வெர் முயற்சி செய்தார். கீழ்க்கண்ட ஐந்து ''பிரதான பொருளா தாரப் பிரதேசங்களாக'' அவர் உலகம் முழுவதையும் பிரிக் கிருர்: 1) மத்திய ஐரோப்பா (ருஷ்யா, கிரேட் பிரிட்டன் நீங்கலாக ஐரோப்பா முழுதும்); 2) கிரேட் பிரிட்டன்; 3) ருஷ்யா; 4) கிழக்கு ஆசியா; 5) அமெரிக்கா; அவர் காலனிகள் எந்த நாடுகளுக்குச் சொந்தமோ அவைகளின் ''பிரதேசங்களுடன்'' அக்காலனிகளைச் சேர்க்கிருர்; பிரதேச ரீதியாகப் பங்கிடப்படாத சில நாடுகளை, எடுத்துக்காட் டாக: ஆசியாவில் பாரசீகம், ஆப்கனிஸ்தானம், அராபி யா, ஆப்பிரிக்காவில் மொரோக்கோ, அபிசீனியா முதலியவற் றை ''விட்டுவிடுகிருர்''.

இப்பிரதேசங்களைப் பற்றி அவர் மேற்கோள் காட்டும் பொருளாதாரப் புள்ளிவிவரங்களின் சுருக்கமான தொகுப்பு இதோ இருக்கிறது: (149 பக்கம் பார்க்க.)

முதலாளித்துவம் மிகவும் வளர்ச்சியுற்ற (போக்குவரத் துச் சாதனங்கள், வியாபாரம், தொழில் ஆகியவை மிகவும் வளர்ச்சியுற்ற) மூன்று பிரதேசங்களை நாம் பார்க்கிறேம்— மத்திய ஐரோப்பிய, பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரதேசங்கள்.

---

* R. Calwer, *Einführung in die Weltwirtschaft*. Brl., **1906**.

இவைகளில் உலகை ஆதிக்கம் செயயும் ஜெர்மனி, கிரேட் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய மூன்று அரசுகள் இருக்கின்றன. மிகவும் குறைவான பிரதேசத்தையும் மிகச் சில காலனிகளையுமே ஜெர்மனி பெற்றிருப்பதால், இந்நாடுகளுக்கிடையில் ஏகாதிபத்தியப் போட்டியும் போராட்டமும் மிக மிகத் தீவிரமடைந்து விட்டன; ''மத்திய ஐரோப்பா''வின் சிருஷ்டி இன்னும் எதிர்காலத்துக்கான ஒரு விஷயம்; கடுமையான போராட்டத்தின் மத்தியில் அது உருவாகிக் கொண்டிருக்கிறது. அரசியல் ரீதியில் துண்டுபட்டிருப்பது ஐரோப்பா முழுவதினுடைய குணும்சமாகத் தற்சமயத்தில் இருக்கிறது. மாருக, பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரதேசங்களில் அரசியற்குவிதல் மிக அதிகமாக இருக்கிறது; ஆனுல் ஒன்றின் ஏராளமான காலனிகளுக்கும், மற்றதின் அற்ப காலனிகளுக்குமிடையில் பெரிய வித்தியாசம் உள்ளது. ஆயினும், காலனிகளில் முதலாளித்துவம் இப்பொழுதுதான் வளர ஆம்பிக்கிறது. தென்னமெரிக்காவிற்கான போராட்டம் மேலும் மேலும் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது.

முதலாளித்துவம் சொற்பமாகவே வளர்ந்த இரண்டு பிரதேசங்கள் இருக்கின்றன: அவை ருஷ்யாவும் கிழக்கு ஆசியாவும். முன்னுல் சொல்லப்பட்ட நாட்டில் மக்கள் நெருக்கம் மிக மிகக் குறைவு, பின்னதில் மிக மிக அதிகம்; முன்னதில் அரசியற் குவிதல் அதிகம், பின்னதில் இல்லவே இல்லை. சீனுவின் பங்கீடு இப்பொழுதுதான் ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது; அதற்ாக ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலியவைகளுக்கிடையில் போராட்டம் தொடர்ந்து தீவிரமடைந்து கொண்டிருக்கிறது.

இந்த யதார்த்த நிலையை—பொருளாதார, அரசியல் நிலைமைகளில் பெருத்த வேற்றுமை, வெவ்வேறு நாடுகளின் வளர்ச்சி விகிதத்தில் பெருருத ஒப்பின்மை முதலியன, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் வெறிகொண்ட போராாட்டம் ஆகயன நிலவுவதை — ''அமைதியான'' அதி ஏகாதிபத்தியம் பற்றிய காவுட்ஸ்கியின் அறிவீனமான சிறிய கட்டுக்கதையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள. கடுமையான யதார்தத்திலிருந்து ஒளிந்து கொள்வதற்குக் கிலி பிடித்த ஒரு பிலிஸ்டைன் செய்கின்ற பிற்போக்குத்தனமான முயற்சி அல்லவா

இது? ''அதி ஏகாதிபத்தியத்தின்'' கருக்கள் என்று (ஒரு சோதனைச்சாலையில் மாத்திரைகள் உற்பத்தி செய்யப்படுவதை, கருவில் உள்ள அதி விவசாயம் என்று ஒரு நபர் எப்படி வர்ணிக்க ''முடியுமோ'' அது போலவே) காவுட்ஸ்கி கற்பனை செய்து கொள்ளும் சர்வதேசீயக் கார்ட்டல்கள், உலகப் பங்கீட்டிற்கும், மறு பங்கீட்டிற்கும், அமைதியான பங்கீட்டிலிருந்து அமைதியான முறையில் அல்லாத பங்கீட்டிற்கும், பின்னதிலிருந்து முன்னதுக்குமான ஒரு மாற்றத்துக்கும் ஓர் உதாரணம் அல்லவா? ஜெர்மனியை, எடுத்துக்காட்டாக, சர்வதேசத் தண்டவாள சின்டிகேட்டில் அல்லது சர்வதேச வியாபார கப்பல் ட்ரஸ்டில், பங்கெடுத்துக்கொள்ள விட்டு உலக முழுவதையும் அமைதியாகப் பங்கிட்டுக் கொண்ட அமெரிக்க நிதி மூலதனமும், மற்ற நாடுகளின் நிதி மூலதனமும், முழுவதும் அமைதியானவையல்லாத முறைகளினால் மாறிப் போயிருக்கும் சக்திகளின் புதிய உறவின் அடிப்படையில் உலகை மறு பங்கீடு செய்வதில் இப்பொழுது ஈடுபட்டிருக்கின்றன அல்லவா?

உலகப் பொருளாதாரத்தினுடைய பல்வேறு பகுதிகளின் வளர்ச்சி வேகத்திலுள்ள வேறுபாடுகளை நிதி மூலதனமும் ட்ரஸ்டுகளும் குறைப்பதில்லை, அதிகரிக்கின்றன. சக்திகளின் ஒப்புநிலை மாற்றப்பட்டுவிட்டால், முரண்பாடுகளை நீக்குவதற்கு வலிமையைத் தவிர வேறு எந்த வழியை முதலாளித்துவத்தின்கீழ் காண முடியும்? உலகப் பொருளாதாரம் முழுவதிலும், முதலாளித்துவம், நிதி மூலதனம் ஆகியவைகளின் வளர்ச்சியினுடைய வெவ்வேறு வேகங்களைப் பற்றிக் குறிப்பிடத்தக்க விதத்தில் மிகவும் பொருத்தமான விவரங்களை ரயில்வேப் புள்ளிவிவரங்கள் தருகின்றன.*

---

* *Stat. Jahrbuch für das deutsche Reich*, 1915; *Archiv für Eisenbahnwesen*, 1892 (''ஜெர்மானிய அரசின் புள்ளிவிவர ஆண்டு நூல்'', 1915; "ரயில் பாதை தஸ்தாவேஜுகள்'' 1892.—ப-ர்.); 1890ல் பல்வேறு நாடுகளின் காலனிகளுக்கிடையில் ரயில் பாதைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது பற்றிய முக்கியமல்லாத விவரங்களைத் தோராயமாக மதிப்பிட வேண்டியிருந்தது.

ஏகாதிபத்திய வளர்ச்சியினது சென்ற சில பத்தாண்டுகளில் ரயில் பாதைகளின் மொத்த நீளம் கீழ்க்கண்டவாறு மாறியிருக்கிறது.

**ரயில் பாதைகள்**

(ஆயிரம் கிலோமீட்டர்கள்)

| | 1890 | | 1913 | | + | |
|---|---|---|---|---|---|---|
| ஐரோப்பா . . . . . | 224 | | 346 | | +122 | |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் . . . . . . . . . | 268 | | 411 | | +143 | |
| எல்லாக் காலனிகளும் | 82 | 125 | 210 | 347 | +128 | +222 |
| சுதந்திர, அரைச் சுதந்திர ஆசிய, அமெரிக்க நாடுகள் . . . . . . | 43 | | 137 | | + 94 | |
| **மொத்தம்** . . . | 617 | | 1,104 | | | |

இவ்வாறாக, ரயில் பாதைகளின் வளர்ச்சி, ஆசிய, அமெரிக்கக் கண்டங்களிலுள்ள காலனிகளிலும் சுதந்திர நாடுகளிலும் (அரைச் சுதந்திர நாடுகளிலும் கூட) மிக மிகத் துரிதமாக இருந்திருக்கிறது. இந்நாடுகளில் நான்கு அல்லது ஐந்து மிகப் பெரிய முதலாளித்துவ நாடுகளின் நிதி மூலதனம் முழுமையாக அரசும் ஆணையும் செலுத்துகிறது என்பது தெரிந்ததே. ஆசியா, அமெரிக்காவில் உள்ள காலனிகளிலும் மற்ற நாடுகளிலும் இரண்டு லட்சம் கிலோமீட்டர் புதிய ரயில் பாதைகள் என்றால், விசேஷமாக அனுகூலமான நிபந்தனைகளின்பேரில், வருவாய்க்கான விசேஷ உத்தரவாதத்துடனும், எஃகு ஆலைகளுக்கான லாபகரமான ஆர்டர்கள் முதலியவற்றுடனும் 4,000 கோடி மார்க்குகளுக்கும் அதிகமான மூலதனம் புதிதாக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்று ஆகிறது.

காலனிகளிலும் கடல் கடந்த நாடுகளிலும் முதலாளித்துவம் மிகமிக அதிகத் துரிதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

கடல் கடந்த நாடுகளுக்கு மத்தியில், புதிய ஏகாதிபத்திய அரசுகள் எழுச்சியுற்று வருகின்றன (உதாரணம் ஜப்பான்). உலக ஏகாதிபத்தியங்களுக்கிடையில் போராட்டம் மேலும் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது. காலனிகளிலும் கடல் கடந்த நாடுகளிலும் உள்ள மிகமிக லாபந்தரும் நிறுவனங்களிடமிருந்து நிதி மூலதனம் வசூலிக்கின்ற கப்பம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இக்''கொள்ளை''யின் பங்கீட்டில் அசாதாரணமாகப் பெரியதொரு பாகம், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி வேகத்தைப் பொறுத்தவரை எப்பொழுதும் முதலிடத்தில் நிற்காத நாடுகளுக்குச் செல்கின்றது. அவைகளது காலனிகளையும் சேர்த்துக் கணக்கிட்டால், மிக மிகப் பெரிய வல்லரசுகளின் விஷயத்தில் ரயில் பாதைகளின் மொத்த நீளம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது:

(ஆயிரம் கிலோமீட்டர்கள்)

| | 1890 | 1913 | |
|---|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 268 | 413 | +145 |
| பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் . . | 107 | 208 | +101 |
| ருஷ்யா . . . . . . . . | 32 | 78 | + 46 |
| ஜெர்மனி . . . . . . . | 43 | 68 | + 25 |
| பிரான்ஸ் . . . . . . . | 41 | 63 | + 22 |
| 5 அரசுகளுக்கும் மொத்தம் . . . . . | 491 | 830 | +339 |

இவ்வாறாக, இப்பொழுதுள்ள மொத்த ரயில் பாதைகளில் சுமார் 80 சதவிகிதம் மிக மிகப் பெரிய ஐந்து வல்லரசுகளின் கையில் குவிந்திருக்கிறது. இந்த ரயில் பாதைகளைச் சொந்தமாகப் பெற்றிருக்கும் உரிமையின் குவிதல், நிதி மூலதனத்தின் குவிதல், அளவிட முடியாதபடி மிகப் பெரிதாக இருக்கிறது; உதாரணமாக, இங்கிலீஷ், பிரெஞ்சு கோடீஸ்வரர்கள் அமெரிக்க, ருஷ்ய ரயில்வேக்களிலும் மற்ற நாடுகளின் ரயில்வேக்களிலும் ஏராளமான அளவு பங்குகளையும் பத்திரங்களையும் பெற்றிருக்கிறார்கள்.

தனக்குக் காலனிகள் இருக்கிற காரணத்தினால், கிரேட்

பிரிட்டன் ''தன்னுடைய'' ரயில்பாதைகளின் நீளத்தை 1 லட்சம் கிலோமீட்டர்கள், ஜெர்மனியைவிட நான்கு மடங்கு, அதிகமாக்கியிருக்கிறது. ஆயினும், ஜெர்மனியில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, குறிப்பாக நிலக்கரி, இரும்புத் தொழில்களின் வளர்ச்சி, இக்காலகட்டத்தில் இங்கிலாந்தைக் காட்டிலும்—பிரான்ஸ், ருஷ்யாவைப் பற்றிப் பேசவே வேண்டியதில்லை—ஒப்பிட முடியாத அளவு அதிகத் துரிதமாக நடந்திருக்கிறது என்பது நன்கு தெரிந்ததே. 1892ல், ஜெர்மனி 49 லட்சம் டன்கள் வார்ப்பு இரும்பையும், கிரேட் பிரிட்டன் 68 லட்சம் டன்களையும் உற்பத்தி செய்தன; 1912ல், ஜெர்மனி 1 கோடி 76 லட்சம் டன்களையும் கிரேட் பிரிட்டன் 90 லட்சம் டன்களையும் உற்பத்தி செய்தன. ஆகவே, இவ்விஷயத்தில் ஜெர்மனி இங்கிலாந்தைக் காட்டிலும் மிக அதிக மேன்மையைப் பெற்றிருக்கிறது.* ஒரு பக்கம் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் மூலதனக் குவிதலுக்கும், மறுபக்கம் நிதி மூலதனத்திற்காகக் காலனிகள், ''செல்வாக்கு மண்டலங்''களின் பங்கீட்டுக்கும் இடையிலான வேறுபாட்டை நீக்குவதற்குப் போரைத் தவிர வேறு எந்தச் சாதனம் தான் முதலாளித்துவத்தின்கீழ் இருக்க முடியும்? இதுதான் இப்பொழுது கேள்வி.

---

* ஒப்பு நோக்குக: Edgar Crammond, *The Economic Relations of the British and German Empires, Journal of the Royal Statistical Society*, 1914, July, pp. 777 ss. (எட்கார் கிரம்மாண்ட், ''பிரிட்டிஷ், ஜெர்மன் சாம்ராஜ்யங்களின் பொருளாதார உறவுகள்'', ''ராயல் புள்ளி விவரக் கழகத்தின் சஞ்சிகை'', 1914, ஜூலை, பக்கம் 777ம் அடுத்த பக்கங்களும்.—ப-ர்.).

## VIII. முதலாளித்துவத்தின் ஒட்டுண்ணித்தனமும் மக்குதலும்

ஏகாதிபத்தியத்தினுடைய இன்னொரு மிக முக்கியமான அம்சத்தை நாம் இப்பொழுது பரிசீலனை செய்ய வேண்டும்; இப்பொருளைப் பற்றிய பெரும்பாலான பரிசீலனைகளில் இதற்குக் குறைந்த முக்கியத்துவமே சாதாரணமாகக் கொடுக்கப்படுகிறது. மார்க்ஸீயவாதியாகிய ஹில்பர்டிங்கினுடைய குறைபாடுகளில் ஒன்று, மார்க்ஸீயவாதியல்லாத ஹாப்ஸனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அவர் ஓர் அடி பின்னால் எடுத்து வைக்கிறார் என்பதுதான். ஏகாதிபத்தியத்தின் குணம் சமாகிய ஒட்டுண்ணித்தனத்தை நாம் குறிப்பிடுகிறோம்.

நாம் முன்பே பார்த்திருப்பது போல, ஏகாதிபத்தியத்தின் மிகவும் ஆழமான பொருளாதார அடிப்படை ஏகபோகம் ஆகும். இது முதலாளித்துவ ஏகபோகம், அதாவது, முதலாளித்துவத்திலிருந்து தோன்றிய ஏகபோகம்; முதலாளித்துவத்தின் பொதுச் சூழ்நிலையில், சரக்கு உற்பத்தியும் போட்டியும் உள்ள சூழ்நிலையில், இப்பொதுச் சூழ்நிலையுடன் நிரந்தரமாகவும் தீர்வுகாண முடியாத வகையிலும் முரண்பட்டு இருக்கிற ஏகபோகம். ஆனபோதிலும், எல்லாவகை ஏகபோகத்தையும் போல, இதுவும் தேக்கத்திற்கும் மக்குதலுக்கும் இட்டுச்செல்லும் போக்கைத் தவிர்க்க முடியாதபடி உண்டாக்குகிறது. ஏகபோக விலைகள்—தாற்காலிகமாகவே ஆயினும்—நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், தொழில் நுட்ப வளர்ச்சிக்கான, ஆகவே எல்லா வளர்ச்சிக்குமான தூண்டும் காரணங்கள் ஓரளவுக்கு மறைந்து போகின்றன; மேலும், தொழில் நுட்ப வளர்ச்சியைச் செயற்கையாகத் தடை செய்யும் பொருளாதாரச் சாத்தியப்பாடும் தோன்றுகிறது. உதாரணமாக, பாட்டில்கள் உற்பத்தி செய்யும் முறையைப் புரட்சிகரமாக அபிவிருத்தி செய்யும் ஓர் இயந்திரத்தை ஓவன்ஸ் என்பவர் அமெரிக்காவில் கண்டு பிடித்தார். பாட்டில் உற்பத்தி செய்யும் ஜெர்மானியக்

கார்ட்டல் ஓவன்சின் உரிமைப் பத்திரத்தை (பேடன்ட்) வாங்கியது; ஆனால் அதை மூட்டை கட்டி வைத்து உபயோகப் படுத்தாமல் விட்டுவிட்டது. உலக மார்க்கெட்டில் போட்டியை முழுமையாகவும், மிக நீண்ட காலத்துக்கும், முதலாளித்துவத்தின்கீழ் ஏகபோகம் நிச்சயமாக ஒருபோதும் நீக்கி விட முடியாது (அதி ஏகாதிபத்தியம் பற்றிய தத்துவம் ஏன் அவ்வளவு அபத்தமானது என்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்). தொழில் நுட்ப அபிவிருத்திகளைப் புகுத்துவதனால் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் லாபங்களை அதிகரிப்பதற்கும் உள்ள சாத்தியப்பாடு மாறுதலைச் செய்வதற்கு நிச்சயமாகத் தூண்டுகிறது. ஆனாலும், ஏகபோகத்தின் குணாம்சமாகிய தேக்கத்திற்கும் மக்குதலுக்கும் இட்டுச் செல்லும் போக்கு தொடர்ந்து செயல்படுகிறது; சில தொழிற்கிளைகளில், சில நாடுகளில், சிறிது காலத்திற்கு அது கையோங்கி நிற்கிறது.

மிகவும் பரந்த, வளமான அல்லது வசதியாக அமைந்த காலனிகளை ஏகபோகம் பெற்றிருப்பதும் இதே திக்கில் செயல்படுகிறது.

மேலும். பண மூலதனம் ஒரு சில நாடுகளில் ஏராளமாகக் குவிந்திருப்பதே ஏகாதிபத்தியமாகும்; நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறது போல, 10,000-15,000 கோடி பிராங்குகள் வரை மதிப்புள்ள பத்திரங்கள் உருவத்தில் இம்மூலதனம் இருக்கிறது. எனவே தான், பண முதலீட்டாளர்களது, அதாவது எந்தவிதமான நிறுவனத்திலும் பங்கெடுத்துக் கொள்ளாத, சோம்பேறித்தனத்தையே தங்களது தொழிலாகக் கொண்ட, ''கூப்பன் கத்தரித்தல்'' மூலம் வாழ்கின்ற வர்க்கத்தின், அல்லது மேலும் பொருத்தமாக, ஒரு பிரிவின் அசாதாரணமான வளர்ச்சி ஏற்படுகிறது. ஏகாதிபத்தியத்தின் மிக முக்கியமான பொருளாதார அடிப்படைகளில் ஒன்றான மூலதன ஏற்றுமதியானது, பண முதலீட்டாளர்கள் பிரிவை உற்பத்தியிலிருந்து இன்னும் அதிகம் முழுமையாகத் தனிப்படுத்தி, கடல் கடந்த சில நாடுகள், காலனிகள் ஆகியவைகளின் உழைப்பைச் சுரண்டி வாழ்கின்ற ஒரு நாடு முழுவதின்மேலும் ஒட்டுண்ணித்தனத்தின் முத்திரையைப் பதித்து விடுகிறது.

''1893ல் வெளி நாடுகளில் போடப்பட்ட பிரிட்டிஷ் மூலதனம் பிரிட்டனின் மொத்தச் செல்வத்தில் சுமார் 15 சதவிகிதமாக இருந்தது'' என்று ஹாப்ஸன் எழுதுகிருர்.* 1915க்குள் இம்மூலதனம் சுமார் இரண்டரை மடங்கு அதிக மாகிவிட்டது என்பதை நாம் வாசகர்களுக்கு நினைவூட்டு வோம். ஹாப்ஸன் பிறகு சொல்கிருர்: ''வரி கொடுப்ப வர்களுக்கு மிகுந்த செலவு வைக்கிற, உற்பத்தியாளனுக் கும் வியாபாரிக்கும் மிகக் குறைவாகவே முக்கியமுள்ள தான, ஆக்கிரமிப்புத் தன்மையுடைய ஏகாதிபத்தியம்... தனது மூலதனத்தை முதலீடு செய்ய வகை தேடும் முதலா ளிக்கு'' (ஆங்கிலத்தில் இது 'இன்வெஸ்டர்' — 'முதலீடு செய்பவன்', பண முதலீட்டாளன்—என்ற ஒரு சொல்லால் குறிக்கப்படுகிறது) ''பெரும் லாபம் அளிக்கும் ஒரு மூலமாக இருக்கிறது''.... ''தனது அந்நிய வியாபாரம், காலனி நாடுக ளுடன் வியாபாரம், இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவை முழுவ திலிருந்தும் கிடைக்கும் தரகுகளிலிருந்து கிரேட் பிரிட்டன் அடைகிற வருடாந்தர வருமானம் மொத்தக் கொள்வினை-கொடுப்பினையின் மதிப்பாகிய 80 கோடி பவுன்களின் மேல் $2^1/_2$ சதவிகிதமாக எடுத்துக் கொண்டால், 1899ல் 1 கோடி 80 லட்சம் பவுன்கள் (சுமார் 17 கோடி ரூபிள்கள்) என்று புள்ளி இயலறிஞர் கிஃப்பென் மதிப்பிடுகிருர்.'' இத்தொகை எவ்வளவுதான் பெரியதாக இருந்தாலும், கிரேட் பிரிட்ட னின் ஆக்கிரமிப்புத்தனமான ஏகாதிபத்தியத்திற்கு இது காரணம் கூற முடியாது. ''முதலீடு செய்யப்பட்ட'' மூலதனத் திலிருந்து கிடைக்கும் 9 முதல் 10 கோடி பவுன்கள் வரை யுள்ள வருமானம், பண முதலீட்டாளர்களின் வருமானம், அதற்குக் காரணம் கூறுகிறது.

பண முதலீட்டாளர்களின் வருமானம், உலகில் மிகமிகப் பெரிய ''வர்த்தக'' நாட்டின் அந்நிய வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிக மானதாக இருக்கிறது! இதுதான் ஏகாதிபத்தியத்தின், ஏகாதிபத்திய ஒட்டுண்ணித்தனத்தின் சாராம்சமாகும்.

இந்தக் காரணத்தினுல், ''பண முதலீட்டாளி அரசு''

---

* Hobson, பக்கங்கள் 59, 62.

(Rentnerstaat) அல்லது கடும்வட்டி வாங்கி அரசு என்ற சொற்கள் ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் பேசும் பொருளாதார இலக்கியத்தில் பொது வழக்கில் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு சில கடும்வட்டி வாங்கி நாடுகள் எனவும், பெரு எண்ணிக்கையான கடனாளி நாடுகள் எனவும் உலகம் பிரிக்கப்பட்டு விட்டது. ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் எழுதுகிறார்: ''அந்நிய முதலீடுகளின் பட்டியலின் உச்சியில், அரசியல் ரீதியில் மற்றொரு நாட்டின்மீது சார்ந்த அல்லது கூட்டுச் சேர்ந்த நாடுகளில் உள்ளவைதான் இருக்கின்றன: எகிப்து, ஜப்பான், சீனா, தென் அமெரிக்கா ஆகியவைகளுக்கு கிரேட் பிரிட்டன் கடன்கள் வழங்குகிறது. தேவையான பொழுது எல்லாம் இவ்விடங்களில் கிரேட் பிரிட்டனின் கடற்படை அமீனாவாக இயங்குகிறது. கிரேட் பிரிட்டனின் அரசியல் வலிமைதான் அதன் கடனாளிகளின் ஆத்திரத்திலிருந்து அதைக் காக்கிறது.''* ''வெளிநாடுகளில் முதலீடு செய்தலின் தேசீயப் பொருளாதார அமைப்பு'' என்ற தமது நூலில் சார்டொரியஸ் ஃபன் வால்டர்ஸ்ஹாவுசன், ''பண முதலீட்டாளி அரசுக்கு'' உதாரணமாக ஹாலந்தை எடுத்துக் காட்டி, பிரிட்டனும் பிரான்ஸூம் இப்பொழுது அவ்வாறு ஆகிக் கொண்டிருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டுகிறார்.** கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து ஆகிய தொழில் பெருக்கம் மிக்க ஐந்து நாடுகள் ''நிச்சயமாக வெளிப்படையான கடன் தரும் நாடுகளாக'' ஆகி விட்டன என்று ஷில்டர் கருதுகிறார். ஹாலந்து ''தொழில் ரீதியில் குறைவாகவே வளர்ச்சியுற்றிருக்கிற'' ஒரே காரணத்தினால் இந்தப் பட்டியலில் அவர் அதைச் சேர்க்கவில்லை.*** அமெரிக்க நாடுகளுக்கு மட்டுமே கடன் தரும் நாடாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் இருக்கிறது.

ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் கூறுகிறார்: ''கிரேட் பிரிட்டன் தொழில் நாடு என்பதிலிருந்து கடன் தரும் ஒரு நாடாகச்

---

* Schulze-Gaevernitz, *Br. Imp.*, பக்கம் 320, முதலியன.

** Sart. von Waltershausen, *D. Volkswirt. Syst., etc.*, B. 1907, Buch IV.

*** Schilder, பக்கம் 393.

சிறிது சிறிதாக மாறுதலடைந்து வருகிறது. தொழிலுற்பத்தியிலும், தொழில் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியிலும் மொத்த அதிகரிப்பு ஏற்பட்டிருந்த போதிலும் வட்டி, லாபப் பங்குத் தொகைகள், பத்திரங்களின் வெளியீடு, தரகுகள், ஊக வாணிகம் ஆகியவைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒப்புநிலை முக்கியத்துவம் அதன் தேசீயப் பொருளாதாரம் முழுவதிலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. திட்டமாக இதுதான் ஏகாதிபத்தியக் கொழிப்பின் பொருளாதார அடிப்படையாக இருக்கிறது என்பது என் அபிப்பிராயம். விற்போன் வாங்குவோனுடன் பிணைக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும், கடன் தருவோன் கடனுளியுடன் மேலும் அதிக உறுதியாகப் பிணைக்கப்பட்டிருக்கிறன்''.* ஜெர்மனியைப் பற்றி, பெர்லின் சஞ்சிகையாகிய ''பாங்கு'' என்பதன் வெளியீட்டாளரான ஆ. லன்ஸ்பர்க், ''ஜெர்மனி—பண முதலீட்டாளி அரசு'' என்ற தலைப்பிட்ட ஒரு கட்டுரையில் 1911ல் கீழ்க்காண்பதை எழுதினர்: ''பிரான்ஸின் மக்களிடையே காணப்படுகின்ற, பண முதலீட்டாளர்களாக ஆகவேண்டும் என்ற ஆசையைப் பரிகாசம் செய்வதற்கு ஜெர்மன் மக்கள் தயாராக இருக்கிருர்கள். ஆனல், பூர்ஷ்வாக்களைப் பொறுத்தவரையில், ஜெர்மனியிலும் நிலைமைகள் பிரான்ஸிலிருப்பவை போலவே மேலும் மேலும் ஆகிக் கொண்டிருக்கின்றன என்பதை அவர்கள் மறந்து விடுகிருர்கள்.''**

பண முதலீட்டாளி அரசு, ஒட்டுண்ணித்தனமான, மக்கிக் கொண்டிருக்கிற முதலாளித்துவத்தின் அரசாகும்; இச்சூழ்நிலை, குறிப்பிடப்பட்ட நாடுகளின் எல்லாச் சமுதாய, அரசியல் நிலைமைகளையும் பொதுவாகவும், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் காணப்படும் இரண்டு அடிப்படையான போக்குகளைக் குறிப்பாகவும், பாதிக்காமல் இருக்க முடியாது. இதை முடிந்த அளவு மிக மிகத் தெளிவான முறையில் காட்டுவதற்கு ஹாப்ஸனை நாம் மேற்கோள் காட்டுவோம்; அவர் தான் மிகவும் ''நம்பத் தகுந்த'' சாட்சி;

---

* Schulze-Gaevernitz, *Br. Imp.*, பக்கம் 122.

** *Die Bank*, 1911, 1, பக்கங்கள் 10-11.

ஏனெனில் ''மார்க்ஸீய சம்பிரதாயத்''தின்பால் அவருக்குப் பற்று இருப்பதாக யாரும் சந்தேகப்பட முடியாது; அடுத்த தாக, காலனிகள், நிதி மூலதனம், ஏகாதிபத்திய அனுபவம் ஆகியவைகளை நிறையப் பெற்றிருக்கிற தமது நாட்டி லுள்ள நிலையை மிக நன்ருகத் தெரிந்து இருக்கிற இங்கி லீஷ்காரர் அவர்.

ஆங்கில-போயர் யுத்தத்தைப் பற்றிய நினைவுகள் இன் னும் பசுமையாகத் தமது மனதில் நிற்க, ஏகாதிபத்தியத் துக்கும் ''நிதியாளர்களின்'' நலன்களுக்கும் இடையிலான தொடர்பு, கான்ட்ராக்டுகள், சப்ளைகள் முதலியவற்றிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கிற மேலும் மேலும் அதிகமான லாபங்கள் ஆகியவற்றை ஹாப்ஸன் வர்ணிக்கிருர்; அவர் எழுதுகிருர்: ''நிச்சயமாக ஒட்டுண்ணித்தனமான இக்கொள் கையை நடத்துபவர்கள் முதலாளிகளே; எனினும் தொழி லாளிகளில் சில விசேஷ வகுப்புக்களுக்கும் இத்தகைய நோக் கங்கள் கவர்ச்சிகரமாக இருக்கின்றன. பல நகரங்களில், யாவற்றிலும் முக்கியமான தொழிற் கிளைகள் அரசாங்கக் கான்ட்ராக்டுகளையே சார்ந்திருக்கின்றன; உலோகத் தொழில் மையங்கள், கப்பல்கட்டும் மையங்கள் ஆகியவைகளின் ஏகாதிபத்தியவாதம் இவ்வுண்மையையே பெருமளவில் சார்ந் திருக்கிறது.'' இவ்வெழுத்தாளரின் அபிப்பிராயத்தின்படி, பழைய சாம்ராஜ்யங்கள் வன்மை குன்றிப் போனதற்கு இரண்டு வகையான நிலைமைகளே காரணங்கள்: 1) ''பொரு ளாதார ஒட்டுண்ணித்தனம்'', 2) அடிமைப்படுத்தப்பட்ட மக்களைக் கொண்ட ராணுவங்களைத் திரட்டல்: ''முதலாவ தாக, பொருளாதார ஒட்டுண்ணித்தனம் என்ற பழக்கம் இருக்கிறது; இப்பழக்கத்தின் மூலமாக ஆளும் அரசு தனது மாகாணங்கள், காலனிகள், சார்பு நாடுகள் ஆகியவைகளைத் தனது ஆளும் வர்க்கத்தை மேலும் செல்வமிக்கதாகச் செய் வதற்கும், தனது கீழ் வர்க்கங்களை லஞ்சங் கொடுத்து இணங்கவைப்பதற்கும் பயன்படுத்தியிருக்கிறது.'' அத்தகைய லஞ்சங் கொடுத்தலின் வடிவங்கள் எவையாக இருந்தா லும், அதன் பொருளாதாரச் சாத்தியப்பாட்டிற்குப் பெரிய ஏகபோக லாபங்கள் தேவைப்படுகின்றன என்பதை நாம் சேர்த்துக் கூறுவோம்.

இரண்டாவது நிலைமையைப்பற்றி ஹாப்ஸன் எழுதுகிறூர்: ''ஏகாதிபத்தியத்தின் குருட்டுத்தனத்தினுடைய விந்தையான அறிகுறிகளில் ஒன்று, கிரேட் பிரிட்டனும் பிரான்ஸும் மற்ற ஏகாதிபத்திய தேசங்களும் அஜாக்கிரதையான அலட்சியத்துடன் இந்த ஆபத்தான வழியை மேற்கொள்ள முற்படுவதுதான். கிரேட் பிரிட்டன் மற்றவற்றையெல்லாம்விட மிக அதிக தூரம் சென்று விட்டது. நாம் இந்திய சாம்ராஜ்யத்தை அடைவதற்குச் செய்த சண்டைகளில் பெரும்பாலானவை சுதேசிகள் அடங்கிய நமது படைகளால் புரியப்பட்டன; இந்தியாவில், இன்னும் அண்மையில் எகிப்தில் உள்ளவை போலவே, பெரிய நிரந்தரமான ராணுவங்கள் பிரிட்டிஷ் தளபதிகளின்கீழ் இருக்கின்றன. ஆப்பிரிக்காவை நாம் அடிப்படுத்தியதுடன் தொடர்பு கொண்ட அநேகமாக எல்லாப் போர்களும் நமக்காகச் சுதேசிகளாலேயே நடத்தப்பட்டன; அதன் தென்பகுதி இதற்கு விலக்கு.''

சீனு பங்கிடப்படுவதின் எதிர்கால விளைவுகள் பற்றிக் கீழ்க்கண்ட பொருளாதார மதிப்பீட்டை ஹாப்ஸன் தருகிறூர்: ''தென் இங்கிலாந்து, ரிவ்யேரா, இத்தாலியிலும், ஸ்விட்சர்லாந்திலும் உல்லாசப் பிரயாணிகள் அதிகமாக வந்து செல்லும் பகுதிகள், அல்லது பணக்காரர்கள் வசிக்கும் பகுதிகள் ஆகியன ஏற்கனவே பெற்றுள்ள தோற்றத்தையும் குணத்தையும் மேற்கு ஐரோப்பாவின் பெரும் பாகம் அப்போது பெற்று விடலாம். அதாவது அங்கு, தூரக்கிழக்கிலிருந்து லாபப் பங்குத் தொகைகளையும், பென்ஷன்களையும் பெற்றுக் கொண்டிருக்கும் செல்வப்பிரபுக்கள் சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து வசிப்பார்கள்; உத்தியோகச் சிப்பந்திகளும் வியாபாரிகளும் சேர்ந்த ஓரளவு மேலும் பெரிய குழுவும், வீட்டு வேலைக்காரர்களும், போக்குவரத்துத் தொழிலிலும் பண்டங்களின் உற்பத்தியின் கடைசி கட்டங்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளும் சேர்ந்த, எண்ணிக்கை பெருத்த தொகுதியும், அப்பிரபுக்களுடன் வசிப்பார்கள். பிரதானமான தொழிற்கிளைகள் எல்லாம் மறைந்து விட்டிருக்கும்; முக்கிய உணவுப் பொருள்களும், அரை உற்பத்திப் பொருட்களும் ஆசியா, ஆப்பிரிக்காவிலிருந்து திறைப் பொருட்களாக வந்துசேரும்.'' ''மேற்கத்

திய நாடுகளின் மேலும் பரந்த ஒரு கூட்டணி, பெரு வல்லரசுகளின் ஐரோப்பிய சமஷ்டி அமைக்கப்படுவதின் சாத்தியப்பாட்டை நாம் முன்கூட்டியே கூறினேம். இக்கூட்டணி உலக நாகரிகத்தை முன்னேற்ருது என்பது மட்டுமல்ல, மேற்கத்திய ஒட்டுண்ணித்தனம் என்ற பிரம்மாண்டமான அபாயத்தையும் புகுத்தக் கூடும்: முன்னேற்றமடைந்த, தொழில் பெருக்கம் மிக்க தேசங்களின் ஒரு குழு, ஆசியா. ஆப்பிரிக்காவிலிருந்து மிகுந்த கப்பத்தைப் பெறுகின்ற அத் தேசங்களின் மேல் வர்க்கங்கள், அக்கப்பத்தைக் கொண்டு மேல் வர்க்கங்களால் ஆதரிக்கப்படுகின்ற அடக்க ஒடுக்க மான சிப்பந்திகள், பணியாட்களின் பெரிய கூட்டத்தினர்; அவர்கள் முக்கிய விவசாய, இயந்திர உற்பத்தித் தொழில் களில் மேலும் ஈடுபட்டிருக்க மாட்டார்கள்; ஆனல் புதிய நிதிப் பிரபுத்துவ வர்க்கத்தின் நிர்வாகத்தின்கீழ், தனிப் பட்ட குற்றேவல்களையும் தொழில் சம்பந்தமான சிறிய பணிகளையும் புரிவதில் ஈடுபடுத்தப்படுவார்கள்; இவைதான் ஒட்டுண்ணித்தனத்தினுல் வரும் பிரம்மாண்டமான அபா யம். இத்தகைய தத்துவத்தை'' (எதிர்காலத் தோற்றத் தை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்) ''கவனத் துக்கு உரியதல்ல என்று நிராகரிப்பவர்கள், அந்த நிலை மைக்கு ஏற்கனவே மாறிவிட்ட,இன்றையத் தென் இங்கிலாந் தின் ஜில்லாக்களினுடைய பொருளாதார, சமுதாய நிலைமை யைப் பரிசீலனை செய்யட்டும். உலகம் இது வரை கண்டுள் ளவற்றிலெல்லாம் மிகப் பெரியதான வருங்கால லாபக் களஞ்சியத்திலிருந்து வெளியேற்றப்படும் லாபங்களை ஐரோப் பாவில் உபயோகிக்கும் பொருட்டு இம்மாதிரி நிதியாளர் கள், 'முதலீடு செய்வோர்கள்', அவர்களுடைய அரசியல், வியாபார உத்தியோகஸ்தர்கள் ஆகியோரின் குழுக்களது பொருளாதார நிர்வாகத்துக்குச் சீன அடிமைப்படுத்தப் படுவதால், அத்தகைய அமைப்பு எவ்வளவு பெருமளவில் விஸ்தரிப்பது சாத்தியமாகக் கூடும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். நிலைமை மிக அதிகம் குழப்பமாக வும், உலகச் சக்திகளின் இயக்கம் கணக்கிட மிகவும் கடின மாகவும் இருக்கிறது. ஆதலால், ஒரே திசையில் மட்டுமே செல்லும் எதிர்காலத்தைப் பற்றிய இந்த, அல்லது வேறு

எந்த ஒரு விளக்கமும் நிச்சயம் நாளைக்கு நடக்கக் கூடிய தே என்று கொள்ள முடியாது. ஆயினும், இன்று மேற்கு ஐரோப்பாவின் ஏகாதிபத்தியத்தை ஆட்சி புரிகின்ற செல்வாக்குகள் இந்தத் திசையில்தான் சென்று கொண்டிருக்கின்றன. அவற்றைத் தடுக்காமல் அல்லது வேறு திசையில் திருப்பி விடாமல் இருந்துவிட்டால், நிகழ்முறையின் அத்தகையதொரு முடிவை நோக்கித்தான் அவை செல்லும்.''*

இவ்வாசிரியர் சொல்வது மிகவும் சரி. ஏகாதிபத்தியத்தின் சக்திகள் எதிர்ச்செயலை எதிர்ப்படாது இருந்தால் இதை நோக்கித்தான் அவைகள் சென்றிருக்கும். இன்றைய ஏகாதிபத்திய நிலைமையில் ''ஐரோப்பிய ஐக்கிய நாடுகள்'' என்பதன் அர்த்தம் இங்கே சரியாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆயினும், தொழிலாளிவர்க்க இயக்கத்தின் உள்ளேயும் கூட, பெரும்பாலான நாடுகளில் இந்த நேரத்தில் தாற்காலிகமாக வெற்றி பெற்றிருக்கிற சந்தர்ப்பவாதிகள் இதே திசையில் தான் முறையாகவும் வழி பிறழாமலும் ''வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்பதையும் சேர்த்துக் கூறியிருக்க வேண்டும். உலகைப் பங்கிடுதல் என்றும், சீனாவை மட்டுமின்றி மற்ற நாடுகளையும் சுரண்டுதல் என்றும், விரல் விட்டு எண்ணி விடக் கூடிய ஒரு மிகப் பணக்கார நாடுகளுக்கு அதிக ஏகபோக லாபங்கள் என்றும் பொருள் படுகின்ற ஏகாதிபத்தியம், பாட்டாளி வர்க்கத்தின் மேல் தட்டில் உள்ளவர்களை லஞ்சங்கொடுத்து விலைக்கு வாங்கக் கூடிய பொருளாதாரச் சாத்தியப்பாட்டை உண்டாக்குகிறது; அதன் மூலம், சந்தர்ப்பவாதத்திற்கு ஊட்டமளித்து, அதற்கு வடிவத்தைக் கொடுத்து, அதைப் பலப்படுத்துகிறது. ஆயினும், பொதுவாக ஏகாதிபத்தியத்திற்கும், குறிப்பாகச் சந்தர்ப்பவாதத்திற்கும் எதிராகச் செயல்படுகின்ற சக்திகளையும் நாம் மறந்து விடக் கூடாது. இச்சக்திகளை சோஷல்-லிபரலான ஹாப்ஸனால் காண இயலாதது இயல்பே.

கெர்ஹார்ட் ஹில்டிபிரான்ட் என்ற ஜெர்மன் சந்தர்ப்பவாதி, ஏகாதிபத்தியத்தை ஆதரித்ததற்காக ஒரு காலத்தில்

* Hobson, பக்கங்கள் *103, 205, 144, 335, 386.*

கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர். ஜெர்மனியின் ''சோஷல்-டெமாக்ரடிக்'' கட்சி என்று அழைக்கப்படுகிற கட்சியின் ஒரு தலைவராக இன்று அவரால் இருந்திருக்க முடியும். இவர், ஹாப்ஸனது வாதத்துடன் தமது வாதத்தையும் சேர்த்து அதை நன்கு நிறைவுபடுத்துகிறார். ஆப்பிரிக்க நீக்ரோக்களுக்கு எதிராகவும், ''பெரிய இஸ்லாமிய இயக்கத்திற்கு'' எதிராகவும், ''பலம் பொருந்திய ராணுவத்தையும் கடற்படையையும்'' வைத்திருப்பதற்காகவும், ''ஜப்பானிய-சீனக் கூட்டுக்கு'' எதிராகவும் இன்னும் பல நோக்கங்களுக்காகவும்... ஒரு ''கூட்டு'' நடவடிக்கையை மேற்கொள்ளும் காரியத்துக்காக ''மேற்கு ஐரோப்பிய ஐக்கிய நாடுகள்'' ஒன்றை (ருஷ்யா நீங்கலாக) அமைப்பதை ஆதரித்துப் பிரசாரம் செய்கிறார்.*

ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸின் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்'' வர்ணனையும் இதே ஒட்டுண்ணித்தனமான குணங்களைத்தான் காட்டுகிறது. 1865லிருந்து 1898 வரை கிரேட் பிரிட்டனின் தேசீய வருமானம் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக அதிகரித்தது; அதே காலத்தில் ''வெளி நாடுகளிலிருந்து'' கிடைக்கும் வருமானம் ஒன்பது மடங்கு அதிகரித்தது. ஏகாதிபத்தியத்தின் ''தொண்டு'', அது ''நீக்ரோவை உழைப்புக்குப் பயிற்றுவிக்கிறது'' (பலவந்தம் தவிர்க்க இயலாதது...), ஆயினும் ஏகாதிபத்தியத்தின் ''ஆபத்து'' என்னவென்றால், ''ஐரோப்பா உடலுழைப்பின் சுமையை—முதலாவது விவசாயத்திலும் சுரங்கத் தொழிலிலுமான உடலுழைப்பையும், பிறகு இயந்திரத் தொழிலிலுள்ள கடின வேலையையும் கறுப்பு இனத்தவர்களின்மீது ஏற்றி விட்டுப் பண முதலீட்டாளியின் பாத்திரத்தை மட்டும் தான் மேற்கொண்டு நிம்மதியாக இருக்கும்; இவ்விதத்தில், பழுப்பு நிறத்தவரும் கறுப்பு நிறத்தவர்களுமான இனத்தினரின்

---

* Gerhard Hildebrand, *Die Erschütterung der Industrieherrschaft und des Industriesozialismus*, 1910, பக்கம் 229ம், அடுத்த பக்கங்களும், (கெர்ஹார்ட் ஹில்டிபிரான்ட், ''தொழில் ஆதிக்கம், தொழில் சோஷலிஸம் ஆகியவைகளது சிதைவு''.—ப-ர்.).

பொருளாதார விமோசனத்துக்கும், பிறகு அரசியல் விமோசனத்துக்கும் ஐரோப்பா ஒரு வேளை வழிவகுக்கும்''.

கிரேட் பிரிட்டனில் மேலும் மேலும் அதிகமான விகிதத்தில் நிலம் பயிர்த் தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்டு, விளையாட்டுக்களுக்காக, செல்வந்தர்களின் பொழுது போக்குக்காக உபயோகப்படுத்தப்படுகிறது. ஸ்காட்லாந்து—வேட்டைக்கும் வேறு விளையாட்டுக்களுக்கும் யாவற்றினும் பிரபுத்தன்மை கொண்ட அந்த இடம்—''தனது இறந்த காலத்தையும், மிஸ்டர் கார்னீஜியையும்'' (அமெரிக்க கோடீசுவரர்) ''நம்பித்தான் வாழ்கிறது'' என்று கூறப்படுகிறது. குதிரைப் பந்தயத்திலும் நரி வேட்டையிலும் மட்டுமே பிரிட்டன் ஆண்டு தோறும் 1 கோடி 40 லட்சம் பவுன்களை (கிட்டத்தட்ட 13 கோடி ரூபிள்களை) செலவழிக்கிறது. இங்கிலாந்தில் பண முதலீட்டாளர்களின் எண்ணிக்கை சுமார் பத்து லட்சம். மொத்த மக்கள் தொகையில், ஆக்கமான உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மக்களின் சதவிகிதம் குறைந்து வருகிறது:

| | மக்கள் தொகை | அடிப்படைத் தொழில் கிளைகளில் உள்ள தொழிலாளிகளின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகையில் சதவிகிதம் |
|---|---|---|---|
| | பத்து லட்சத்தில் | | |
| 1851 . . . | 17.9 | 4.1 | 23% |
| 1901 . . . | 32.5 | 4.9 | 15% |

''இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நிலை''யைப் பற்றி ஆராயும் பூர்ஷ்வா ஆராய்ச்சியாளர் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிப் பேசும்பொழுது, தொழிலாளிகளில் ''மேல் தட்டு'', ''உண்மையான பாட்டாளிகளின் கீழ்த் தட்டு'' என்ற இரண்டையும் முறையாக வேறுபடுத்திக் கூற வேண்டியிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், விளையாட்டுக் கிளப்புகள், பற்பல மத வகுப்புக்கள் ஆகியவைகளின் உறுப்பினர்களில் பெரும் பகுதியினர் மேல் தட்டிலிருந்து வருகிருர்கள். கிரேட் பிரிட்டனில் ''இன்றும் கூட உண்மையான பாட்டாளிகளின் கீழ்த் தட்டை விலக்கி வைப்பதற்குப் போதுமான அளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ள'' தேர்தல் முறை இந்த மேல் தட்டு வரைதான் உபயோகிக்கப்படுகிறது!! பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையை அழகுபடுத்திக் காட்டும் பொருட்டு, பாட்டாளி வர்க்கத்தில் ஒரு சிறு பான்மையாக இருக்கிற இந்த மேல் தட்டைப் பற்றி மட்டும்தான் பொதுவாகப் பேசப்படுகிறது. உதாரணமாக இதைப் பாருங்கள்: ''வேலையில்லாப் பிரச்சினை என்பது முக்கியமாக லண்டன் நகரின் பிரச்சினையும், பாட்டாளிகளின் கீழ்த் தட்டின் பிரச்சினையும் ஆகும்; இதற்கு அரசியல் வாதிகள் அதிக முக்கியத்துவம் ஒன்றும் கொடுப்பதில்லை....''* இதற்கு முதலாளித்துவ அரசியல்வாதிகளும், ''சோஷலிஸ்ட்'' சந்தர்ப்பவாதிகளும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்று அவர் கூறியிருக்க வேண்டும்.

நாம் இப்பொழுது வர்ணித்துக் கொண்டிருக்கும் விஷயங்களுடன் சம்பந்தப்பட்ட, ஏகாதிபத்தியத்தின் விசேஷ அம்சங்களில் ஒன்று, ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து மக்களின் வெளியேற்றம் குறைதலும், குறைந்த கூலிகள் கொடுக்கப்படுகிற, மேலும் பின்தங்கிய நாடுகளிலிருந்து மக்கள் இந்த ஏகாதிபத்திய நாடுகளில் வந்து குடியேறுதல் அதிகரித்தலும் ஆகும். ஹாப்ஸன் குறிப்பிடுவதுபோல, கிரேட் பிரிட்டனிலிருந்து வெளியேற்றம் 1884க்குப் பிறகு குறைந்து கொண்டிருக்கிறது: அவ்வாண்டில் வெளியேறியவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 42 ஆயிரம்; ஆனுல், 1900ல் அந்த எண்ணிக்கை 1 லட்சத்து 69 ஆயிரம் ஆகி விட்டது. 1881க்கும் 1890க்குமிடையே ஜெர்மனியிலிருந்து வெளியேற்றம் உச்ச நிலையை அடைந்தது: அப்பொழுது வெளியேறியவர்களின் தொகை 14 லட்சத்து 53 ஆயிரம். அடுத்த இரண்டு பத்தாண்டுக் காலங்களில் இத்தொகை 5 லட்சத்து

* Schulze-Gaevernitz, *Br. Imp.*, பக்கம் 301.

44 ஆயிரம் ஆகவும், 3 லட்சத்து 41 ஆயிரம் ஆகவும் குறைந்து போயிற்று. இதற்கு மாருக, ஆஸ்திரியா, இத்தாலி, ருஷ்யா, இன்னும் மற்றைய நாடுகள் ஆகியவைகளிலிருந்து வெளியேறி ஜெர்மனிக்கு வந்த தொழிலாளிகளின் எண்ணிக்கை உயர்ந்தது. 1907ல் ஜனக் கணிப்பின்படி, ஜெர்மனியில் 13 லட்சத்து 42 ஆயிரத்து 294 அந்நியர்கள் இருந்தார்கள்; இவர்களில் 4 லட்சத்து 40 ஆயிரத்து 800 பேர் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள்; 2 லட்சத்து 57 ஆயிரத்து 329 பேர் விவசாயத்தில் வேலை செய்பவர்கள்.* பிரான்ஸில் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளில் ''கணிசமான பகுதி'' அந்நியர்கள்: போலந்துக்காரர்கள், இத்தாலியர்கள், ஸ்பானிஷ்காரர்கள்.** அமெரிக்க ஐக்கிய நாடுகளில், கிழக்கு, தெற்கு ஐரோப்பாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் பெரும்பாலும் மிகச் சொற்பக் கூலி கொடுக்கப்படும் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்; அமெரிக்கத் தொழிலாளிகளோ மேற்பார்வை செய்கிறவர்கள் அல்லது மிக உயர்ந்த சம்பளம் வாங்கும் தொழிலாளிகளில் அதிக சதவிகிதத்தினராக இருக்கிறார்கள்.*** தொழிலாளிகளுக்குள்ளேயும் கூடச் சலுகை பெற்ற வகுப்புக்களை உண்டாக்கி, அவைகளைப் பாட்டாளிகளின் பொதுத் திரளிலிருந்து பிரிக்கும் ஒரு போக்கை ஏகாதிபத்தியம் பெற்றிருக்கிறது.

கிரேட் பிரிட்டனில், தொழிலாளிகளைப் பிளவுபடுத்துகிற, அவர்களுக்கிடையில் சந்தர்ப்பவாதத்தைப் பலப்படுத்துகிற, தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தாற்காலிக மக்குதலை உண்டு பண்ணுகிற ஏகாதிபத்தியத்தின் போக்கு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கும் இருபதாம் நூற்

---

* *Statistik des Deutschen Reichs*, Bd. 211 (''ஜெர்மன் அரசின் புள்ளிவிவரங்கள்'', தொகுதி 211.—ப-ர்.).

** Henger, *Die Kapitalsanlage der Franzosen*, St. 1913 (ஹெங்கெர், ''பிரெஞ்சு முதலீடுகள்'', ஷ்டுட்கார்ட், 1913.—ப-ர்.).

*** Hourvich, *Immigration and Labour*, N. Y., 1913 (ஹூர்விச், ''உட்குடியேற்றமும் உழைப்பும்'', நியூயார்க், 1913.—ப-ர்.).

ருண்டின் தொடக்கத்துக்கும் மிக முன்னேயே வெளியாயிற்று என்பதை நாம் குறிப்பிட வேண்டும். ஏனெனில், பத்தொன்பதாம் நூற்ருண்டின் இடைக்காலத்திலேயே ஏகாதிபத்தியத்தின் இரண்டு பெரிய, தனிப்படுத்திக்காட்டும் குணும்சங்கள் கிரேட் பிரிட்டனில் காணப்பட்டன: அவைகள்: பரந்த காலனிகளும், உலக மார்க்கெட்டில் ஏகபோக நிலையும் ஆகும். தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்திற்கும், பிரிட்டிஷ் முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய விசேஷ அம்சங்களுக்கும் இடையிலான இந்தத் தொடர்பை முறையாக மார்க்ஸும் எங்கெல்ஸும் பல பத்தாண்டுகளில் ஆய்ந்தறிந்தார்கள். உதாரணமாக, 1858, அக்டோபர் 7ல் எங்கெல்ஸ் மார்க்ஸுக்கு எழுகிஞர்: ''இங்கிலீஷ் பாட்டாளி வர்க்கம் யதார்த்தத்தில் மேலும் மேலும் பூர்ஷ்வா ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, எல்லா நாடுகளேக் காட்டிலும் மிக மிக பூர்ஷ்வாத் தன்மை கொண்ட நாட்டினமாகிய இது, ஒரு பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒரு பூர்ஷ்வாப் பிரபுவம்சத்தையும் ஒரு பூர்ஷ்வாப் பாட்டாளி வர்க்கத்தையும் இறுதியாகப்பெற்றிருப்பதற்குத் தெளிவாக நோக்கங்கொண்டிருக்கிறது போல் தெரிகிறது. அகில உலகையும் சுரண்டுகிற ஒரு தேசத்துக்கு இது இயற்கையாக ஓரளவு நியாயமானதே.'' கிட்டத்தட்ட ஒரு கால் நூற்ருண்டுக்குப் பிறகு, 1881, ஆகஸ்டு 11 என்று தேதியிட்ட ஒரு கடிதத்தில் ''பூர்ஷ்வா வர்க்கத்துக்கு விற்கப்பட்டு விட்ட அல்லது அவ்வர்க்கத்தினிடம் சம்பளம் மட்டுமாவது வாங்குகிற மனிதர்கள் தங்களே நடத்திச் செல்லும்படி விட்டு விட்ட மிக மோசமான இங்கிலீஷ் தொழிற்சங்கங்களே''ப் பற்றி எங்கெல்ஸ் பேசுகிருர். 1882, செப்டம்பர் 12ந் தேதி காவுட்ஸ்கிக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் எங்கெல்ஸ் எழுதிஞர்: ''காலனிக் கொள்கையைப் பற்றி இங்கிலீஷ் தொழிலாளிகள் என்ன நினேக்கிருர்கள் என்று என்னே நீங்கள் கேட்கிறீர்கள். நல்லது, பொதுவாக அரசியலேப் பற்றி அவர்கள் என்ன நினேக்கிருர்களோ, அதையே தான் இதைப் பற்றியும் நினேக்கிருர்கள். இங்கு தொழிலாளர் கட்சியே கிடையாது; கன்சர்வேட்டிவ்களும் லிபரல் ரேடிகல்களும் தான் இருக்கிருர்கள்; இங்கிலாந்தின் காலனி ஏகபோகத்தையும் உலக மார்க்கெட்டில் அதன் ஏகபோகத்தையும் தொழி

லாளிகள் குஷியாகச் சேர்ந்து அனுபவிக்கிறார்கள்.''* (1892ல் வெளியான ''இங்கிலீஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' என்ற நூலின் இரண்டாவது பதிப்புக்கான முகவுரையில் இதே மாதிரியான கருத்துக்களை எங்கெல்ஸ் அச்சு வடிவில் வெளியிட்டார்.)

காரணங்களையும் விளைவுகளையும் இது தெளிவாகக் காட்டுகிறது. காரணங்களாவன: 1) இந்நாட்டினால் உலக முழுவதும் சுரண்டப்படுவது; 2) உலக மார்க்கெட்டில் இதனுடைய ஏகபோக நிலை; 3) இதனுடைய காலனி ஏகபோகம். விளைவுகளாவன: 1) பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பிரிவு பூர்ஷ்வாத் தன்மை அடைகிறது; 2) பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பிரிவு, பூர்ஷ்வா வர்க்கத்துக்கு விற்கப்பட்டு விட்ட அல்லது அவ்வர்க்கத்தினிடம் சம்பளம் மட்டுமாவது வாங்குகிற மனிதர்கள் தங்களை நடத்திச் செல்லும்படி விட்டு விடுகிறது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தின் ஏகாதிபத்தியம், ஒரு சில நாடுகளுக்கிடையில் உலகம் பங்கிடப்படுவதைப் பூர்த்தி செய்தது; இந்நாடுகளில் ஒவ்வொன்றும் ''அகில உலகத்தின்'' ஒரு பகுதியை—இங்கிலாந்து 1858ல் சுரண்டிய பகுதியை விடக் கொஞ்சமே சிறியதான ஒரு பகுதியை—இன்று (உபரி லாபங்களை வாரிச் செல்லுதல் என்ற அர்த்தத்தில்) சுரண்டுகிறது; அவைகளில் ஒவ்வொன்றும், ட்ரஸ்டுகள், கார்ட்டல்கள், நிதி மூலதனம், கடனாளியுடன் கடன் தருவோனின் உறவுகள் ஆகியவை மூலம், உலக மார்க்கெட்டில் ஏகபோக நிலைமை பெற்றிருக்கிறது; அவைகளில் ஒவ்வொன்றும் ஓரளவுக்குக் காலனி ஏகபோகத்தை அனுபவிக்கிறது (முழுக் காலனி உலகின் மொத்தப்

---

* *Briefwechsel von Marx und Engels*, Bd. II, S. 290; IV, 433 (''மார்க்ஸ்-எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து'', தொகுதி II, பக்கம் 290; தொகுதி IV, பக்கம் 433.—ப-ர்.). — K. Kautsky, *Sozialismus und Kolonial-politik*, Brl. 1907, பக்கம் 79 (கா. காவுட்ஸ்கி, ''சோஷலிஸமும் காலனி அரசியலும்'', பெர்லின்.—ப-ர்.); மிகத் தூரமாகக் கடந்து போன நாட்களில், அவர் இன்னும் மார்க்ஸீயவாதியாக இருந்த பொழுது, இச்சிறு நூல் காவுட்ஸ்கியால் எழுதப்பட்டது.

பரப்பாகிய 7 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டரில் 6 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டர், அல்லது 86 சத விகிதம், 6 வல்லரசுகளுக்குச் சொந்தம் என்பதையும், 6 கோடி 10 லட்சம் சதுர கிலோமீட்டர், அல்லது 81 சத விகிதம் மூன்று வல்லரசுகளுக்குச் சொந்தம் என்பதையும் நாம் முன்பே கண்டோம்).

சந்தர்ப்பவாதத்துக்கும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பொதுவான, ஜீவாதார நலன்களுக்குமிடையில் சமரசப்பட முடியாத தன்மையை அதிகப்படுத்துகிற பொருளாதார, அரசியல் நிலைமைகள் இப்பொழுது நிலவுகின்றன; இதுதான் இன்றைய நிலைமையின் விசேஷ குணும்சம்: கரு நிலையிலிருந்து ஆதிக்கம் செலுத்தும் ஓர் அமைப்பாக ஏகாதிபத்தியம் வளர்ந்திருக்கிறது; தேசீயப் பொருளாதாரத்திலும் அரசியலிலும் முதலாளித்துவ ஏகபோகங்கள் முதலிடத்தை வகிக்கின்றன; உலகப் பங்கீடு பூர்த்தியடைந்து விட்டது; மறு பக்கத்தில், கிரேட் பிரிட்டனுடைய பங்கிடப்படாத முழு ஏகபோகத்துக்குப் பதிலாக, இந்த ஏகபோகத்தில் பங்கு கொள்ளும் உரிமைக்காகச் சில ஏகாதிபத்திய வல்லரசுகள் போரிட்டுக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்; இந்தப் போராட்டம், இருபதாம் நூற்றுண்டின் தொடக்கப் பகுதி முழுவதினுடைய குணும்சமாக இருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பின் பாதியில் இங்கிலாந்தில் தான் வெற்றி பெற்றது போல, பல பத்தாண்டுகளுக்கு ஒரு நாட்டின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் இப்பொழுது பூரண வெற்றியடைய முடியாது; ஆனுல், பல நாடுகளில் அது பழுத்தும், அளவுக்கு மீறிப் பழுத்தும், அழுகியும் இருக்கிறது; மேலும், அது, சோஷல்-ஷோவினிஸம்* என்ற வடிவில் பூர்ஷ்வாக் கொள்கையுடன் பூரணமாக ஐக்கியப்பட்டு விட்டது.

---

* ருஷ்ய சோஷல்-ஷோவினிஸம் பொத்ரேசொவ், ச்ஹென்கெலி, மாஸ்லொவ் போன்ற திருவாளர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வெளிப்படையான வடிவிலும், (திருவாளர்கள் ச்ஹெயிட்ஸே, ஸ்கொபெலேவ், அக்சல்ராட், மார்டொவ் முதலியோரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்) மறைமுகமான வடிவிலும், சந்தர்ப்பவாதத்தின் ருஷ்ய வகையான, லிக்விடேட்டர்வாதத்திலிருந்தும்கூடத் தோன்றியது.

## IX. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம்

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம் என்பதை அதன் விரிந்த பொருளில், சமுதாயத்திலுள்ள வெவ்வேறு வர்க்கங்களும் தங்களது பொதுவான சித்தாந்தம் சம்பந்தப் பட்ட விதத்தில் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பற்றி மேற்கொள்ளும் நிலையை நாம் குறிக்கிறோம்.

பிரம்மாண்டமான அளவு நிதி மூலதனம் ஒரு சிலரது கைகளில் குவிந்திருக்கிறது; அசாதாரணமாகப் பரந்த, நெருக்கமான வலைப்பின்னலைப் போன்ற உறவுகளையும் தொடர்புகளையும் உண்டாக்குகிறது; இவ்வலைப்பின்னல், ஏராளமான சிறிய, நடுத்தர முதலாளிகளை மட்டுமின்றி, மிகச் சிறிய முதலாளிகளையும் எஜமானர்களையும்கூட நிதி மூல தனத்துக்கு அடிப்படுத்தி விடுகிறது—இவை ஒரு பக்கம்; உலகப் பங்கீட்டுக்காகவும், மற்ற நாடுகளின்மீது ஆதிக்கம் கொள்வதற்காகவும் மற்ற தேசீய-அரசு நிதியாளர் குழுக் களுக்கு எதிராக நடத்தப்படும் அதிகத் தீவிரமாகிக் கொண் டிருக்கும் போராட்டம்—மறு பக்கம்; இவை எல்லாம் செல் வம் படைத்த வர்க்கங்கள் அனைத்தையும் ஏகாதிபத்தியத் தின் பக்கத்தில் முழுதும் சேர்ந்து கொள்ளும்படிச் செய் கின்றன. ஏகாதிபத்தியத்தின் எதிர்கால நிலையைப் பற்றிய ''பொதுவான'' உற்சாகம், அதை வெறியுடன் ஆதரித்தல், மிக அழகான வர்ணங்களில் அதற்கு மேற்பூச்சு பூசுதல்— இப்படிப்பட்டவை தாம் இக்காலத்தின் அறிகுறிகள். ஏகாதி பத்தியச் சித்தாந்தம் தொழிலாளி வர்க்கத்தில் கூட உட்புகு கிறது. மற்ற வர்க்கங்களிலிருந்து அதை எந்தச் சீனத்துச் சுவரும் பிரித்து வைப்பதில்லை. ஜெர்மனியில் ''சோஷல்-டெமாக்ரடிக்'' கட்சி என்றழைக்கப்படுகிற இன்றையக் கட்சியின் தலைவர்கள், ''சோஷல்-ஏகாதிபத்தியவாதி கள்'' என்று, அதாவது சொல்லில் சோஷலிஸ்டுகள், செய லில் ஏகாதிபத்தியவாதிகள் என்று, சரியாகத்தான் கூறப்

படுகிறார்கள்; ஆனால் 1902லேயே, சந்தர்ப்பவாத ''பேபியன் சங்கத்தை''ச்[18] சேர்ந்த ''பேபியன் ஏகாதிபத்தியவாதிகள்'' இங்கிலாந்தில் வசிப்பதை ஹாப்ஸன் குறிப்பிட்டார்.

பூர்ஷ்வா அறிஞர்களும் பிரசாரகர்த்தாக்களும், வழக்கமாக ஓரளவு மறைவான உருவில் ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பதற்கு முன்வருகிறார்கள்; ஏகாதிபத்தியத்தின் பூரண ஆதிக்கத்தையும் அதன் ஆழ்ந்த வேர்களையும் அவர்கள் மழுப்புகிறார்கள்; தனித்தனியான, இரண்டாந்தரமான விவரங்களுக்கு முதலிடம் தர முயற்சி செய்கிறார்கள்; ட்ரஸ்டுகளை அல்லது பாங்குகளை போலீஸ் மேற்பார்வை செய்தல் முதலியன போன்ற மிகவும் பரிகசிக்கத்தக்க ''சீர்திருத்த''த் திட்டங்களின்மூலம், அடிப்படையான அம்சங்களிலிருந்து கவனத்தை அப்பால் திருப்புவதற்குத் தங்களால் முடிந்ததையும் செய்கிறார்கள். ஏகாதிபத்தியத்தின் அடிப்படைக் குணாம்சங்களைச் சீர்திருத்தும் எண்ணத்தின் அபத்தமான தன்மையைத் தைரியமாக ஒப்புக்கொள்ளுவதற்கு, நெஞ்சீரமற்ற, வெளிப்படையாகப் பேசுகிற ஏகாதிபத்தியவாதிகள் எப்பொழுதாவது முன்னால் வருகிறார்கள்.

நாம் ஓர் உதாரணத்தைத் தருவோம். காலனிகளில், குறிப்பாக ஜெர்மனிக்குச் சொந்தமல்லாத காலனிகளில்தான், நடக்கும் தேச விடுதலை இயக்கங்களைக் கவனிப்பதற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் ''உலகப் பொருளாதாரத்தின் தஸ்தாவேஜுகள்'' என்ற சஞ்சிகையில் முயற்சி செய்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் கலவரத்தையும் எதிர்ப்பு இயக்கங்களையும், நேட்டால் (தென் ஆப்பிரிக்கா), டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களில் நடைபெறும் இயக்கங்களையும் அவர்கள் கவனிக்கிறார்கள். அத்தகைய ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளில் ஒருவர், அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்ட ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றின் பல்வேறு மக்களுடைய பிரதிநிதிகளைக்கொண்ட அடிமை நாட்டினங்கள், மக்களினங்கள் ஆகியவைகளது 1910, ஜூன் 28-30ல் நடந்த ஒரு மகாநாட்டின் ஆங்கில அறிக்கையைப்பற்றி விமர்சனம் செய்யும்பொழுது, அம் மகாநாட்டில் ஆற்றப்பட்ட உரைகளைக் கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிறார்: ''நாம் ஏகாதிபத்தியத்துடன் போரிட வேண்

## IX. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம்

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம் என்பதை அதன் விரிந்த பொருளில், சமுதாயத்திலுள்ள வெவ்வேறு வர்க்கங்களும் தங்களது பொதுவான சித்தாந்தம் சம்பந்தப் பட்ட விதத்தில் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பற்றி மேற்கொள்ளும் நிலையை நாம் குறிக்கிறோம்.

பிரம்மாண்டமான அளவு நிதி மூலதனம் ஒரு சிலரது கைகளில் குவிந்திருக்கிறது; அசாதாரணமாகப் பரந்த, நெருக்கமான வலைப்பின்னலைப் போன்ற உறவுகளையும் தொடர்புகளையும் உண்டாக்குகிறது; இவ்வலைப்பின்னல், ஏராளமான சிறிய, நடுத்தர முதலாளிகளை மட்டுமின்றி, மிகச் சிறிய முதலாளிகளையும் எஜமானர்களையும்கூட நிதி மூல தனத்துக்கு அடிப்படுத்தி விடுகிறது—இவை ஒரு பக்கம்; உலகப் பங்கீட்டுக்காகவும், மற்ற நாடுகளின்மீது ஆதிக்கம் கொள்வதற்காகவும் மற்ற தேசீய-அரசு நிதியாளர் குழுக் களுக்கு எதிராக நடத்தப்படும் அதிகத் தீவிரமாகிக் கொண் டிருக்கும் போராட்டம்—மறு பக்கம்; இவை எல்லாம் செல் வம் படைத்த வர்க்கங்கள் அனைத்தையும் ஏகாதிபத்தியத் தின் பக்கத்தில் முழுதும் சேர்ந்து கொள்ளும்படிச் செய் கின்றன. ஏகாதிபத்தியத்தின் எதிர்கால நிலையைப் பற்றிய ''பொதுவான'' உற்சாகம், அதை வெறியுடன் ஆதரித்தல், மிக அழகான வர்ணங்களில் அதற்கு மேற்பூச்சு பூசுதல்—இப்படிப்பட்டவை தாம் இக்காலத்தின் அறிகுறிகள். ஏகாதி பத்தியச் சித்தாந்தம் தொழிலாளி வர்க்கத்தில் கூட உட்புகு கிறது. மற்ற வர்க்கங்களிலிருந்து அதை எந்தச் சீனத்துச் சுவரும் பிரித்து வைப்பதில்லை. ஜெர்மனியில் ''சோஷல்-டெமாக்ரடிக்'' கட்சி என்றழைக்கப்படுகிற இன்றையக் கட்சியின் தலைவர்கள், ''சோஷல்-ஏகாதிபத்தியவாதி கள்'' என்று, அதாவது சொல்லில் சோஷலிஸ்டுகள், செய லில் ஏகாதிபத்தியவாதிகள் என்று, சரியாகத்தான் கூறப்

படுகிறார்கள்; ஆனால் 1902லேயே, சந்தர்ப்பவாத ''பேபியன் சங்கத்தை''ச்[18] சேர்ந்த ''பேபியன் ஏகாதிபத்தியவாதிகள்'' இங்கிலாந்தில் வசிப்பதை ஹாப்ஸன் குறிப்பிட்டார்.

பூர்ஷ்வா அறிஞர்களும் பிரசாரகர்த்தாக்களும், வழக்கமாக ஓரளவு மறைவான உருவில் ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பதற்கு முன்வருகிறார்கள்; ஏகாதிபத்தியத்தின் பூரண ஆதிக்கத்தையும் அதன் ஆழ்ந்த வேர்களையும் அவர்கள் மழுப்புகிறார்கள்; தனித்தனியான, இரண்டாந்தரமான விவரங்களுக்கு முதலிடம் தர முயற்சி செய்கிறார்கள்; ட்ரஸ்டுகளை அல்லது பாங்குகளை போலீஸ் மேற்பார்வை செய்தல் முதலியன போன்ற மிகவும் பரிகசிக்கத்தக்க ''சீர்திருத்த''த் திட்டங்களின்மூலம், அடிப்படையான அம்சங்களிலிருந்து கவனத்தை அப்பால் திருப்புவதற்குத் தங்களால் முடிந்ததையும் செய்கிறார்கள். ஏகாதிபத்தியத்தின் அடிப்படைக் குணங்களைச் சீர்திருத்தும் எண்ணத்தின் அபத்தமான தன்மையைத் தைரியமாக ஒப்புக்கொள்ளுவதற்கு, நெஞ்சீரமற்ற, வெளிப்படையாகப் பேசுகிற ஏகாதிபத்தியவாதிகள் எப்பொழுதாவது முன்னால் வருகிறார்கள்.

நாம் ஓர் உதாரணத்தைத் தருவோம். காலனிகளில், குறிப்பாக ஜெர்மனிக்குச் சொந்தமல்லாத காலனிகளில் தான், நடக்கும் தேச விடுதலை இயக்கங்களைக் கவனிப்பதற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் ''உலகப் பொருளாதாரத்தின் தஸ்தாவேஜுகள்'' என்ற சஞ்சிகையில் முயற்சி செய்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் கலவரத்தையும் எதிர்ப்பு இயக்கங்களையும், நேட்டால் (தென் ஆப்பிரிக்கா), டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களில் நடைபெறும் இயக்கங்களையும் அவர்கள் கவனிக்கிறார்கள். அத்தகைய ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளில் ஒருவர், அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்ட ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றின் பல்வேறு மக்களுடையபிரதிநிதிகளைக்கொண்ட அடிமை நாட்டினங்கள், மக்களினங்கள் ஆகியவைகளது 1910, ஜூன் 28-30ல் நடந்த ஒரு மகாநாட்டின் ஆங்கில அறிக்கையைப்பற்றி விமர்சனம் செய்யும்பொழுது, அம் மகாநாட்டில் ஆற்றப்பட்ட உரைகளைக் கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிறார்: ''நாம் ஏகாதிபத்தியத்துடன் போரிட வேண்

டும்; அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் சுதந்திரமடையும் உரிமையை, ஆளும் நாடுகள் அங்கீகரிக்க வேண்டும்; பெரு வல்லரசுகளுக்கும் பலமற்ற மக்களினங்களுக்குமிடையில் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படுவதை சர்வதேச நீதிமன்றம் மேற்பார்வை செய்ய வேண்டும்; இவ்வாறெல்லாம் நமக்குக் கூறப்படுகிறது. இந்தக் கவைக் குதவாத நல்ல விருப்பங்களை வெளியிடுவதைத் தவிர, மகா நாடு மேலே செல்லவில்லை. கீழ்க்கண்ட உண்மையை அவர்கள் புரிந்து கொண்டதற்கான ஓர் அறிகுறியையும் நாம் காண வில்லை: ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் இப்பொழு தைய வடிவத்துடன் நீக்கமறப் பிணைந்திருக்கிறது; ஆகவே (!!), அதனுடைய தனித்தனியான, மிகவும் வெறுக்கத்தக்க அக்கிரமங்களை எதிர்த்து ஆட்சேபணை செய்வதுடன் போராட் டம் நின்று விட்டாலொழிய, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெளிப்படையான போராட்டம் ஒன்றும் பயன்தராது.''*

ஏகாதிபத்தியத்தின் அடிப்படையைச் சீர்திருத்தம் செய்வது என்பது ஓர் ஏமாற்று, ஒரு ''கவைக்குதவாத நல்ல விருப்பம்'' ஆதலாலும், ஒடுக்கப்பட்ட தேசங்களின் முதலாளித்துவப் பிரதிநிதிகள் ''மேலும்'' முன்னே செல்ல வில்லை ஆதலாலும், ஒடுக்குகின்ற ஒரு தேசத்தின் முதலாளித் துவப் பிரதிநிதி ''மேலும்'' **பின்னே** செல்கிறார்—''விஞ் ஞான ரீதியாக''ப் பேசுவதாகக் கூறிக் கொண்டு அந்தத் திரை மறைவில் ஏகாதிபத்தியத்துக்கு முன்னே குழைச்சான் கொட்டு கொட்டுகிறார். ''தர்க்கப் பொருத்தமானது'' தான்!

ஏகாதிபத்தியத்தின் அடிப்படைகளைச் சீர்திருத்துவது சாத்தியம்தானா; அது தோற்றுவிக்கின்ற முரண்பாடுகளை மேலும் தீவிரப்படுத்தவும் ஆழமாக்கவும் செய்ய முன்னோக்கிச் செல்வதா, அல்லது அம்முரண்பாடுகளைத் **தணிப்பதற்காகப்** பின்நோக்கிச் செல்வதா—ஆகிய கேள்விகள், ஏகாதிபத்தி யத்தைப் பற்றிய விமர்சனத்தில் அடிப்படையான கேள்வி கள். ஒவ்வொரு துறையிலும் பிற்போக்கும், நிதியாட்சிக் குழுவின் அடக்குமுறை, கட்டுப்பாடற்ற போட்டி அகற்

---

* *Weltwirtschaftliches Archiv*, Bd. II, பக்கம் 193 (''உலகப் பொருளாதாரத்தின் தஸ்தாவேஜுகள்'', தொகுதி II.—ப-ர்.).

றப்படுதல் ஆகியவைகளிலிருந்து விளைந்த நாட்டின அடக்கு முறையின் தீவிரப்பாடும் ஏகாதிபத்தியத்தின் குறிப்பான அரசியல் அம்சங்களாக இருப்பதால், இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கிட்டத்தட்ட எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் குட்டி பூர்ஷ்வா-ஜனநாயக எதிர்ப்புத் தோன்றியது. தனது பொருளாதார அடிப்படையில் பிற்போக்குத் தனமான இந்தக் குட்டி பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதத்தினுடைய எதிர்ப்பை காவுட்ஸ்கி எதிர்க்க வேண்டும் என்று அக்கறை கொள்ளவே இல்லை என்பது மட்டுமின்றி, அதை எதிர்க்க அவரால் இயலவில்லை என்பது மட்டுமின்றி, நடைமுறையில் அவர் அதனுடன் இணைந்தும் விட்டார்; சரியாக இந்த விஷயத்தில்தான் காவுட்ஸ்கியும், பரந்த சர்வதேசக் காவுட்ஸ்கிவாதப் போக்கும் மார்க்ஸீயத்திலிருந்து பிரிந்து போய்விட்டன என்பது அடங்கியிருக்கிறது.

*1898ல் ஸ்பெயினுக்கு எதிராகப் புரியப்பட்ட ஏகாதிபத்திய யுத்தம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பூர்ஷ்வா ஜனநாயகத்தின் கடைசி மோஹிகன்களான ''ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பாளர்களின்'' எதிர்ப்பைத் தூண்டியது; இவர்கள் இந்த யுத்தத்தைக் ''குற்றத்தன்மை கொண்டது'' என்று அறிவித்தார்கள்; அன்னியப் பிரதேசங்களைப் பிடித்துக் கொள்ளுதல் அரசியல் சட்டத்துக்கு மீறிய ஒரு செயலாகும் என்று கருதினர்; சுதேசிகளான பிலிப்பைன் வாசிகளின் தலைவர் ஆக்விஞல்டோ நடத்தப்பட்ட விதத்தை (அவரது நாட்டுக்குச் சுதந்திரம் தருவதாக அமெரிக்கர்கள் உறுதி கூறினார்கள்; ஆனால் பிறகு அவர்கள் துருப்புக்களை இறக்கி அந்நாட்டைப் பிடித்துக் கொண்டார்கள்) ''ஷோவினிஸ்டுகளின் நம்பிக்கைத் துரோகம்'' என்று அறிவித்தார்கள்; லிங்கனது இவ்வார்த்தைகளை மேற்கோள் காட்டினார்கள்: ''வெள்ளை மனிதன் தன்னையே ஆண்டு கொண்டால் அது சுயாட்சி; ஆனால் அவன் தன்னையும் ஆண்டு, பிறரையும் சேர்த்து ஆண்டால் அது சுயாட்சி இல்லை; யதேச்சாதிகாரம்.''* அயினும், இந்த விமர்சனம் எல்லாம், ஏகாதிபத்தியத்*

* J. Patouillet, *L'impérialisme américain*, Dijon, *1904*, *பக்கம் 272 (ஜெ. படுய்யே, ''அமெரிக்க ஏகாதிபத்தியம்'', டிஜோன்.—ப-ர்.).*

துக்கும் ட்ரஸ்டுக்கும் உள்ள, ஆகவே ஏகாதிபத்தியத் துக்கும் முதலாளித்துவத்தின் அடிப்படைகளுக்கும் உள்ள, பிரிக்க முடியாத பிணைப்பைக் கண்டு கொள்ள அஞ்சிய வரையில், பெரிய அளவு முதலாளித்துவமும் அதன் வளர்ச்சியும் தோற்றுவித்துள்ள சக்திகளுடன் சேர்ந்து கொள்ள அஞ்சிய வரையில் இது ''கவைக்குதவாத நல்ல விருப்பமாகவே'' இருந்து வந்தது.

ஹாப்ஸன் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய தமது விமர் சனத்தில் மேற்கொள்ளும் பிரதான நிலையையும் இதுதான். ''ஏகாதிபத்தியம் தவிர்க்க முடியாதது'' என்பதை எதிர்ப் பதிலும், மக்களது ''நுகர்வுப் பொருள்களை வாங்கும் திற மையை அதிகரிப்பதன்'' அவசியத்தை (முதலாளித்துவத்தின் கீழ்!) வலியுறுத்துவதிலும் காவுட்ஸ்கியை ஹாப்ஸன் முந் திக் கொண்டு விட்டார். ஏகாதிபத்தியத்தைப் பற்றியும், பாங்குகள், நிதியாட்சிக் குழு ஆகியவற்றின் சர்வ வல்லமை பற்றியும், பிறவற்றைப் பற்றியும் உள்ள விமர்சனத்தில் குட்டி பூர்ஷ்வா கருத்தை நாம் ஏற்கனவே அடிக்கடி மேற் காட்டியுள்ள ஆசிரியர்களும் கொண்டுள்ளார்கள். உதாரண மாக அகாட், ஆ. லன்ஸ்பர்க், லூ. எஷ்வேகெ ஆகியோ ரும் பிரெஞ்சு எழுத்தாளர்களில், 1900ல் வெளியான, ''இங்கிலாந்தும் ஏகாதிபத்தியமும்'' என்ற தலைப்பிட்ட மேம் போக்கான ஒரு நூலின் ஆசிரியராகிய விக்டர் பேரார் என்பவரும். தாங்களும் மார்க்ஸீயவாதிகள் என்று சற்றும் உரிமை பாராட்டாத இந்த ஆசிரியர்கள் எல்லோரும், ஏகாதிபத்தியத்துக்குக் கட்டுப்பாடற்ற போட்டியையும் ஜனநாயகத்தையும் எதிர்நிறுத்துகிறார்கள்; பாக்தாத் ரயில் பாதைத் திட்டம் மோதல்களையும் யுத்தத்தையும் விளைவிக் கும் என்று அதைக் கண்டனம் செய்கிறார்கள்; சமாதானம் தழைக்க வேண்டும் என்ற ''கவைக்குதவாத நல்ல விருப் பங்களை'' வெளியிடுகிறார்கள்; இப்படிப் பல செய்கிறார்கள். சர்வதேச ஸ்டாக்குகள், பங்குகளின் வெளியீடு பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுப்பவராகிய அ.நெய்மார்க் அவர் களுக்கும் கூட இது பொருந்துகிறது; இவர், ''சர்வதேச''ப் பத்திரங்களாகிய பதினாயிரங்கோடிக் கணக்கான பிராங்கு களைக் கணக்கிட்டுவிட்டு 1912ல் வியப்பை வெளியிட்டார்:

''அமைதி குலைக்கப்படக் கூடும் என்று... இத்தைகய மிகப் பெருந் தொகைகள் இருக்கும் பொழுது யாராவது யுத்தத்தைத் துணிந்து மூட்டி விடுவார்கள் என்று நம்ப முடியுமா?''*

பூர்ஷ்வா பொருளாதாரவாதிகளின் தரப்பில் இத்தகைய பேதைமை வியப்பூட்டுவதில்லை; மேலும், இவ்வளவு எளிமையுள்ளவர்கள் போலப் பாசாங்கு செய்வதும் ஏகாதிபத்தியத்தின்கீழ் சமாதானம் நிலவுவதைப்பற்றி ''ஆழ்ந்த முறையில்'' பேசுவதும் அவர்களது நலன்களுக்கு உகந்தது. ஆனால், காவுட்ஸ்கி, 1914, 1915, 1916ல் இதே பூர்ஷ்வா-சீர்திருத்தவாத நோக்கை மேற்கொண்டு, சமாதானம் பற்றிய விஷயத்தில் ''எல்லோரும் உடன்பாடு கொண்டிருக்கிறார்கள்'' (ஏகாதிபத்தியவாதிகளும், போலி சோஷலிஸ்டுகளும், சோஷல்-பசிபிஸ்டுகளும்) என்று வலிந்துரைத்த பொழுது, அவரது மார்க்ஸீயத்தில் என்ன மிச்சமிருக்கிறது? ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளைப் பகுத்து ஆராய்வதற்கும், அவற்றின் ஆழத்தை வெளிப்படுத்துவதற்கும் பதிலாக, அவைகளை ஒதுக்கித்தள்ளி விடுவதற்கான, அவைகளைத் தட்டிக்கழிப்பதற்கான சீர்திருத்தவாத ''கவைக்குதவாத நல்ல விருப்பத்தை''த் தான் நாம் காண்கிறோம்.

ஏகாதிபத்தியத்தைப்பற்றி காவுட்ஸ்கியின் பொருளாதார விமர்சனத்துக்கு மாதிரி ஒன்று இதோ இருக்கிறது. எகிப்துடன் பிரிட்டிஷ் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் 1872, 1912 வருடத்தியப் புள்ளிவிவரங்களை அவர் எடுத்துக்கொள்கிறார்; பிரிட்டனுடைய அந்நிய வர்த்தகம் முழுவதைக் காட்டிலும் குறைந்த வேகத்துடன் இந்த ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் வளர்ச்சியடைந்திருப்பதாக இதிலிருந்து வெளியாகிறது. இதிலிருந்து காவுட்ஸ்கி இந்த முடிவுக்கு வருகிறார்: ''ராணுவ ஆக்கிரமிப்பு இல்லாமலிருந்தால், வெறும் பொருளாதாரக் காரணங்களின் செயல்பாட்டின் விளைவினாலேயே, எகிப்துடன் பிரிட்டிஷ் வர்த்தகம்

---

* *Bulletin de l'Institut International de Statistique*, T. XIX, livr. II, p. 225, (''சர்வதேசப் புள்ளிவிவரக் கழகத்தின் அறிக்கை'', தொகுதி XIX, புத்தகம் II, பக்கம் 225.—ப-ர்.).

குறைவாக இருந்திருக்கும் என்று ஊகிப்பதற்கு நமக்குக் காரணமொன்றும் இல்லே.'' ''மூலதனத்தினுடைய விஸ்தரிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை... அமைதியான ஜனநாயகத் திஞல்தான் நன்கு பூர்த்தி செய்ய முடியும்; ஏகாதிபத் தியத்தின் பலாத்கார முறையினுல் அல்ல.''*

காவுட்ஸ்கியின் இந்த வாதத்தை அவரது ருஷ்ய ஆயுதந் தூக்கியும் (சோஷல்-ஷோவினிஸ்டுகளின் ருஷ்யக் காவலரு மான) திரு. ஸ்பெக்தாதொர்[19] ஒவ்வொரு சுருதியிலும் திருப்பித் திருப்பிப் பாடுகிறுர்; இந்த வாதம்தான் ஏகாதிபத் தியத்தைப் பற்றிய காவுட்ஸ்கிய விமர்சனத்தின் அடிப் படையாக அமைந்திருக்கிறது, ஆகவேதான் இதைப்பற்றி இன்னும் அதிக விவரமாக நாம் கவனிக்க வேண்டும். ஹில் பர்டிங்கின் முடிவுகள் ''எல்லா சோஷலிஸ்ட் தத்துவாசிரி யர்களாலும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்ப தாக''க் காவுட்ஸ்கி, 1915ல் ஏப்ரல் உட்படப் பல சமயங்க ளில் கூறியிருக்கிறுர்; ஆகவே ஹில்பர்டிங்கின் நூலிலிருந்து ஒரு மேற்கோளுடன் நாம் தொடங்குவோம்.

''மேலும் முன்னேற்றமான முதலாளித்துவக் கொள் கைக்கு, கட்டுப்பாடற்ற வர்த்தகம், அரசாங்கத்துடனை விரோதம் ஆகியவைகளேக் கொண்டதாகிய கடந்த காலத் தைச் சேர்ந்த சகாப்தத்தின் கொள்கையை எதிர்நிறுத்து வது தொழிலாளி வர்க்கத்தின் வேலே அல்ல. நிதி மூலதனத் தின் பொருளாதாரக் கொள்கைக்கும், ஏகாதிபத்தியத்துக் கும் பாட்டாளி வர்க்கத்தின் பதில் கட்டுப்பாடற்ற வர்த் தகமாக இருக்க முடியாது, சோஷலிஸமாகத்தான் இருக்க முடியும். பாட்டாளி வர்க்கக் கொள்கையின் நோக்கம் கட்டுப்பாடற்ற போட்டியை மீண்டும் ஸ்தாபிக்கும் குறிக் கோளாக இப்பொழுது இருக்க முடியாது—அது இப்பொ ழுது பிற்போக்குத்தனமான குறிக்கோளாக ஆகி விட்டது —அதற்கு மாருக முதலாளித்துவத்துக்கு முடிவு கட்டுவதன்

---

* Kautsky, *Nationalstaat, imperialistischer Staat und Staatenbund*, Nürnberg, 1915, பக்கங்கள் 72, 70. (காவுட்ஸ்கி, ''தேசீய அரசு, ஏகாதிபத்திய அரசு, அரசுகளின் ஐக்கியம்''. நூரன்பர்க்.—ப-ர்.).

மூலம் போட்டியைப் பூரணமாக நீக்கி விடுதல்தான் குறிக்கோளாக இருக்க முடியும்''* என்று ஹில்பர்டிங் எழுதினார்.

நிதி மூலதன சகாப்தத்தில் ஒரு ''பிற்போக்குத்தனமான குறிக்கோள்'', ''அமைதியான ஜனநாயகம்'', ''வெறும் பொருளாதாரக் காரணங்களின் செயல்பாடு'' ஆகியவைகளை ஆதரித்தவாறு காவுட்ஸ்கி மார்க்ஸீயத்திலிருந்து பிரிந்து விட்டார்; ஏனெனில் புறநிலையாக இக்குறிக்கோள், ஏகபோகத்திலிருந்து ஏகபோகமில்லாத முதலாளித்துவத்துக்குப் பின்னேக்கி இழுத்துச் செல்கிறது; மேலும் இது ஒரு சீர்திருத்தவாத மோசடி.

எகிப்துடன் (அல்லது எந்த ஒரு காலனி அல்லது அரைக் காலனியுடன்) வர்த்தகம், ராணுவ ஆக்கிரமிப்பு இன்றி, ஏகாதிபத்தியம் இன்றி, நிதி மூலதனமும் இன்றி மேலும் அதிகமாக ''வளர்ந்திருக்கும்''. இதற்கு என்ன பொருள்? பொதுவாக ஏகபோகங்கள், அல்லது ''தொடர்புகள்'', நிதி மூலதனத்தின் நுகம் (அதாவது, ஏகபோகமே தான்), அல்லது தனிப்பட்ட நாடுகள் ஏகபோகமாகக் காலனிகளைப் பெற்றிருத்தல், ஆகிய காரணங்களால் கட்டுப்பாடற்ற போட்டி குறுக்கப்படாமலிருந்தால் முதலாளித்துவம் இன்னும் துரிதமாக வளர்ச்சியடைந்திருக்கும் என்பதுதானே இதன் பொருள்?

காவுட்ஸ்கியின் வாதத்துக்கு வேறு எந்தப் பொருளும் இருக்க முடியாது; மேலும், இந்தப் ''பொருள்'' பொருளற்றது. ஆமாம், கட்டுப்பாடற்ற போட்டி, எந்த விதமான ஏகபோகமும் இன்றி, முதலாளித்துவத்தையும் வர்த்தகத்தையும் இன்னும் அதிகத் துரிதமாக வளர்த்திருக்கும் என்று வைத்துக் கொள்வோம். ஆனல், வர்த்தகமும் முதலாளித்துவமும் எவ்வளவு துரிதமாக வளர்கின்றனவோ, உற்பத்திக் குவிதலும் மூலதனக் குவிதலும் அவ்வளவு அதிகரிக்கின்றன; இக்குவிதல் ஏகபோகத்தைத் தோற்றுவிக்கிறது. இப்படி, ஏகபோகங்கள் ஏற்கனவே தோன்றி விட்டன—திட்டமாகக் கட்டுப்பாடற்ற போட்டியிலிருந்தே! ஏகபோகங்கள்

---

* ''நிதி மூலதனம்'', பக்கம் 567.

இப்பொழுது முன்னேற்றத்தை மந்தப்படுத்த ஆரம்பித்து விட்டிருந்தாலும் கூட, கட்டுப்பாடற்ற போட்டி வேண்டும் என்பதற்கு அது ஒரு தகுந்த காரணமில்லை; ஏனெனில், தான் ஏகபோகத்தைத் தோற்றுவித்தபின், கட்டுப்பாடற்ற போட்டி அசாத்தியம் ஆகி விட்டது.

காவுட்ஸ்கியின் வாதத்தை எந்தப் பக்கமாகத் திருப் பிப் பார்த்தாலும், அதில் பிற்போக்கையும் பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதத்தையும் தவிர வேறென்றையும் நாம் காண மாட்டோம்.

இந்த வாதத்தைத் திருத்தி ஸ்பெக்தாதொர் சொல்வ தைப் போலவே, இங்கிலாந்துடன் பிரிட்டிஷ் காலனிகளின் வர்த்தகம் மற்ற நாடுகளுடன் அவைகளின் வர்த்தகத்தைக் காட்டிலும் மெதுவாக இப்பொழுது வளர்ந்துவருகிறது என்று நாம் கூறினுல் கூட, இதுவும் காவுட்ஸ்கியைக் காப்பாற்றவில்லை; ஏனெனில், கிரேட் பிரிட்டனைத் தோற்கடிப் பதும் ஏகபோகம் தான், ஏகாதிபத்தியம் தான். ஆனுல், அது வேறொரு நாட்டின் (அமெரிக்கா, ஜெர்மனி) ஏகபோ கம், ஏகாதிபத்தியம். கார்ட்டல்கள் ஒரு புதிய விசித்திர மான வடிவில் காப்புச் சுங்க வரிகளைத் தோற்றுவித்திருக் கின்றன என்பது தெரிந்ததே: அதாவது, ஏற்றுமதிக்கு உகந்த பண்டங்கள் காக்கப்படுகின்றன (''மூலதனம்'', தொகுதி IIIல் எங்கெல்ஸ் இதைக் குறிப்பிட்டிருக்கிறுர்[20]). கார்ட்டல்களும் நிதிமூலதனமும் தங்களுக்கே விசேஷமாக உரித்தான ஒரு முறையை, அதாவது, ''கழிவு விலைக்குப் பண்டங்களை ஏற்றுமதி செய்கிற'' முறையை, அல்லது இங் கிலீஷ்காரர்கள் கூறுவது போல ''கொட்டி நிறைக்கும் முறை'' யைக் [dumping] கொண்டிருக்கின்றன என்பதும் தெரிந் ததே: கார்ட்டல், தன் நாட்டிற்குள் தனது பண்டங்களை ஏகபோக அதி விலைக்கு விற்கிறது; ஆனுல் வெளி நாடுகளில் அவைகளை மிகக் குறைந்த விலைக்கு விற்கிறது; விலை வெட்டு மூலம் போட்டியாளரை அழித்தல், தனது சொந்த உற்பத் தியைப் பெரிய அளவுக்கு வளர்த்தல், முதலியவைகளுக் காக இவ்வாறு செய்கிறது. பிரிட்டிஷ் காலனிகளுடன் ஜெர் மனியின் வர்த்தகம் கிரேட் பிரிட்டனின் வர்த்தகத்தைவிட அதிகத் துரிதமாக வளர்ச்சியடைகிறது என்ருல் ஜெர்மன்

ஏகாதிபத்தியம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும் இளையது, பலம் பொருந்தியது, நன்கு ஸ்தாபன ரீதியாக அமைந்தது, அதைவிட மேலானது என்பதைத்தான் அது நிரூபிக்கிறது; அது எந்த வகையிலும் கட்டுப்பாடற்ற வர்த்தகத்தின் ''மேன்மையை'' நிரூபிக்கவில்லை; ஏனெனில் காப்புடனும் காலனிச் சார்புடனும் போராடுவது கட்டுப்பா டற்ற போட்டி அல்ல; மாருக, ஓர் ஏகாதிபத்தியம் மற்ருென் றுக்கு எதிராக, ஓர் ஏகபோகம் மற்ருென்றுக்கு எதிராக, ஒரு நிதி மூலதனம் மற்ருென்றுக்கு எதிராகப் போராடுகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குமேல் ஜெர்மன் ஏகாதிபத்தி யத்தின் மேன்மை, காலனி எல்லைகள், காப்புச் சுங்க வரிகள் என்ற மதிற்சுவரைவிட அதிக வலிமை வாய்ந்தது: இவ்வுண் மையைக் கட்டுப்பாடற்ற வர்த்தகத்துக்கும், ''அமைதியான ஜனநாயகத்துக்கும்'' சாதகமான ஒரு ''வாதமாக'' உப யோகிப்பது மட்டரகமானது; இப்படிச் செய்வது, ஏகாதிபத் தியத்தினுடைய அடிப்படையான அம்சங்களையும் இயல்பு களையும் மறந்து விடுவதும், மார்க்ஸீயத்துக்குப் பதிலாகக் குட்டி பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதத்தை ஏற்றுக் கொள்வதும் ஆகும்.

ஏகாதிபத்தியத்தைப்பற்றி முதலாளித்துவப் பொருளா தாரவாதி ஆ.லன்ஸ்பர்க் செய்துள்ள விமர்சனம், காவுட் ஸ்கியினுடையதைப் போலவே அவ்வளவு பிலிஸ்டைன் தன் மை கொண்டதாக இருக்கிறது; ஆயினும், காவுட்ஸ்கியைவிட அவர் வர்த்தகப் புள்ளிவிவரங்களை அதிக விஞ்ஞான ரீதி யாக ஆராய்வதில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிருர் என்பது அக்கறைக்குரியது. தற்செயலாக எடுக்கப்பட்ட ஒரே ஒரு நாட்டை, அதுவும் ஒரு காலனியை, மற்ற நாடுகளுடன் அவர் ஒப்பிடவில்லை: ஓர் ஏகாதிபத்திய நாடு 1) நிதி சம்பந்த மாக அதைச் சார்ந்து நிற்கின்ற, அதனிடமிருந்து பணம் கடன் வாங்குகின்ற, நாடுகளுடனும், 2) நிதி விஷயத்தில் சுதந்திரமாக இருக்கும் நாடுகளுடனும், நடத்தும் ஏற்று மதி வர்த்தகத்தை அவர் பரிசீலனை செய்தார். அதிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகளைப் பெற்ருர்:

## ஜெர்மனியின் ஏற்றுமதி வர்த்தகம்

*(பத்து லட்சம் மார்க்குகள்)*

| | | 1889 | 1908 | சதவிகித வளர்ச்சி |
|---|---|---|---|---|
| ஜெர்மனியின் மீது நிதி சம்பந்தமாகச் சார்ந்து நிற்கும் நாடுகளுடன் | ருமேனியா . . | 48.2 | 70.8 | + 47% |
| | போர்த்துகல் | 19.0 | 32.8 | + 73% |
| | ஆர்ஜென்டீனு | 60.7 | 147.0 | +143% |
| | பிரேஸில் . . . | 48.7 | 84.5 | + 73% |
| | சிலி . . . . . | 28.3 | 52.4 | + 85% |
| | துருக்கி . . . . | 29.9 | 64.0 | +114% |
| | **மொத்தம்** | **234.8** | **451.5** | **+ 92%** |

| | | 1889 | 1908 | சதவிகித வளர்ச்சி |
|---|---|---|---|---|
| நிதி விஷயத்தில் ஜெர்மனியிடமிருந்து சுதந்திரமாக இருக்கும் நாடுகளுடன் | கிரேட் பிரிட்டன் | 651.8 | 997.4 | + 53% |
| | பிரான்ஸ் . . . . | 210.2 | 437.9 | +108% |
| | பெல்ஜியம் . . . | 137.2 | 322.8 | +135% |
| | ஸ்விட்சர்லாந்து | 177.4 | 401.1 | +127% |
| | ஆஸ்திரேலியா . . | 21.2 | 64.5 | +205% |
| | டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் . . | 8.8 | 40.7 | +363% |
| | **மொத்தம்** | **1,206.6** | **2,264.4** | **+ 87%** |

இதிலிருந்து அவர் பொருத்தமான முடிவுகளைப் பெற வில்லை; ஆகவே, தமது புள்ளிவிவரங்கள் எதையாவது நிரூபிக்கின்றன என்ருல், தமது கருத்து சரியல்ல என்பதைத் தான் நிரூபிக்கின்றன என்பதைக் கவனிப்பதற்கு அவர் விசித்திரமாகத் தவறி விட்டார்; ஏனெனில், ஜெர்மனியின்மீது நிதி சம்பந்தமாகச் சார்ந்து நிற்கும் நாடுகளுக்கான ஏற்றுமதி, நிதி விஷயத்தில் சுதந்திரமாயிருக்கும் நாடுகளுக்கான ஏற்றுமதியை விடத் துரிதமாக—மிகக் கொஞ்சம் துரிதமாகவே ஆயினும்—வளர்ந்திருக்கின்றது ('என்ருல்' என்பதை நாம் வலியுறுத்துகிரேம்; ஏனெனில், லன்ஸ்பர்க்கின் புள்ளி விவரங்கள் கொஞ்சமும் முழுமையானவை அல்ல).

ஏற்றுமதிக்கும் கடன்களுக்குமிடையிலான தொடர்பை ஆராய்ந்து லன்ஸ்பர்க் எழுதுகிருர்:

''1890-91ல் ஒரு ருமேனியக் கடன், ஏற்கனவே முன்

ஆண்டுகளில் அதன் பேரில் முன்பணங்கள் கொடுத்திருந்த ஜெர்மானிய பாங்குகள் மூலமாகத் திரட்டப்பட்டது. ஜெர் மனியில் ரயில்வே தளவாடங்கள் வாங்குவதற்காக இக்கடன் முக்கியமாகச் செலவிடப்பட்டது. 1891ல் ருமேனியாவுக்கு ஜெர்மன் ஏற்றுமதியின் மதிப்பு 5 கோடி 50 லட்சம் மார்க்குகளாக இருந்தது. அவை அடுத்த ஆண்டில் 3 கோடி 94 லட்சம் மார்க்குகளாகக் குறைந்து போயின; பிறகு, ஏற்ற இறக்கங்களுடன் 1900ல் 2 கோடி 54 லட்சம் ஆகக் குறைந்தன. மிகச் சமீப ஆண்டுகளில்தான், இரண்டு புதிய கடன்களின் விளைவாக, 1891ம் ஆண்டின் அளவை அவை மீண்டும் எட்டிப் பிடித்தன.

''1888-89ம் ஆண்டின் கடன்களைத் தொடர்ந்து, போர்த்துகலுக்கு ஜெர்மன் ஏற்றுமதி 2 கோடி 11 லட்சம் (1890ல்) ஆக உயர்ந்தது; பிறகு, அடுத்த இரண்டு ஆண்டு களில் 1 கோடி 62 லட்சம் ஆகவும் 74 லட்சம் ஆகவும் குறைந்து போயிற்று; கடைசியில் 1903ல் தான் அது முந்தைய அளவை மீண்டும் எட்டியது.

''ஆர்ஜென்டீனாவுடன் ஜெர்மன் வர்த்தகத்தின் புள்ளி விவரங்கள் இன்னும் அதிகமாகக் கவனத்தைக் கவரக் கூடியவையாக இருக்கின்றன. 1888லும் 1890லும் திரட்டப் பட்ட கடன்களைத் தொடர்ந்து, ஆர்ஜென்டீனாவுக்கு ஜெர்மன் ஏற்றுமதி 6 கோடி 7 லட்சம் மார்க்குகளை 1889ல் எட்டியது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அது 1 கோடி 86 லட்சம் மார்க்குகளையே எட்டியது; இது முந்தைய தொகை யைவிட மூன்றில் ஒரு பங்காகும். கடைசியில் 1901ல் தான், இது 1889ம் ஆண்டின் அளவை மீண்டும் எட்டி, அதைத் தாண்டியும் மேலே சென்றது; இதுவும், அரசாங்கத்தினு லும் நகரசபைகளினுலும் திரட்டப்பட்ட புதிய கடன்க ளின் விளைவாகவும், மின்சார நிலையங்கள் அமைப்பதற்கான முன் தொகைகளினுலும், இதர பாங்குப் பற்றுக்கடன் நட வடிக்கைகளினுலும் தான்.

'' 1889ம் வருடத்திய கடனின் விளைவாக, சிலிக்கு ஏற்று மதி 4 கோடி 52 லட்சம் மார்க்குகளாக (1892ல்) உயர்ந் தது; ஓர் ஆண்டுக்குப் பிறகு இது 2 கோடி 25 லட்சம் மார்க்குகளாகக் குறைந்தது. 1906ல் ஜெர்மன் பாங்குகள்

மூலமாகத் திரட்டப்பட்ட ஒரு புதிய கடனைத் தொடர்ந்து ஏற்றுமதி 8 கோடி 47 லட்சம் மார்க்குகளாக (1907ல்) உயர்ந்தது; 1908ல் அது 5 கோடி 24 லட்சம் மார்க்குக ளாக மீண்டும் வீழ்ச்சியடைந்தது.''*

இத்தகைய விவரங்களிலிருந்து லன்ஸ்பர்க் கீழ்க்கண்ட வேடிக்கையான பிலிஸ்டைன் நீதியைத் தொகுத்துத் தரு கிறார்: கடன்களுடன் இணைக்கப்பட்ட ஏற்றுமதி வர்த்தகம் எவ்வளவு ஸ்திரமற்றதாகவும், ஏற்ற இறக்கமுள்ளதாகவும் இருக்கிறது; உள்நாட்டுத் தொழிலை ''இயற்கையாகவும்'', ''ஒத்தியைந்த முறையிலும்'' வளர்ப்பதற்குப் பதிலாக, அந்நிய நாடுகளில் முதலீடு செய்வது எவ்வளவு கெட்டது; அந்நியக் கடன்களைத் திரட்டும்பொழுது க்ருப் கொடுக்க வேண்டியிருக்கிற பக்ஷீஷ்களாகிய கோடிக்கணக்கான மார்க் குகள் எவ்வளவு ''விலை மிக்கவை''; முதலியன. ஆயினும், உண்மைகள் தெளிவாகக் கூறுகின்றன: ஏற்றுமதியின் வளர்ச்சி நிதி மூலதனத்தின் ஏமாற்று வித்தைகளுடன் திட்டமாக இணைக்கப்பட்டுள்ளது; அதற்கு பூர்ஷ்வா நீதி நெறியைப் பற்றி அக்கறையில்லை; அதன் அக்கறையெல்லாம் எப்படி எருதை இரண்டு தடவை தோலுரிப்பது என்பது தான்: முதலில், கடனிலிருந்து வரும் லாபங்களைப் பையில் போட்டுக் கொள்கிறது; பிறகு, கடன் வாங்கியவன் க்ருப் பிடமிருந்து சாமான்கள் வாங்குவது, அல்லது எஃகு சின்டி கேட்டிலிருந்து ரயில்வேத் தளவாடங்களை வாங்குவது முதலியவற்றுக்கு இந்தக் கடன் தொகையை உபயோகப் படுத்தும்பொழுது, இதே கடனிலிருந்து கிடைக்கும் மற்ற லாபங்களையும் பையில் போட்டுக் கொள்கிறது.

லன்ஸ்பர்க்கின் புள்ளிவிவரங்கள் முழுமையானவை என்று நாம் எவ்விதத்திலும் கருதவில்லை என்பதை மீண்டும் கூறுகிறோம்; ஆயினும் அவைகளை நாம் மேற்கோள் காட்ட வேண்டியிருந்தது ஏனெனில், காவுட்ஸ்கி, ஸ்பெக்தாதொர் ஆகியவர்களின் புள்ளிவிவரங்களைவிட அவை அதிக விஞ் ஞான ரீதியானவை என்பதாலும், பிரச்சினையை அணுகு வதற்குச் சரியான வழியை லன்ஸ்பர்க் சுட்டுகிறார் என்பதா

---

* *Die Bank*, 1909, 2, பக்கம் 819ம் அடுத்த பக்கங்களும்.

லும் தான். ஏற்றுமதி முதலியவைகளின் விஷயத்தில் நிதி மூலதனத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி ஒருவர் விவாதிக்கும் பொழுது, ஏற்றுமதிக்கு விசேஷமாக நிதியாளர்களின் தந்திரங்களுடன் மட்டுமே, விசேஷமாக கார்ட்டல்களின் பண்ட விற்பனை, முதலியவைகளுடன் மட்டுமே, உள்ள சம்பந்தத்தைத் தனிப்படுத்திக் காட்டக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். பொதுவாகக் காலனிகளைக் காலனி அல்லாதவைகளுடன், ஓர் ஏகாதிபத்தியத்தை இன்னோர் ஏகாதிபத்தியத்துடன், ஓர் அரைக் காலனியை அல்லது காலனியை (எகிப்து) மற்ற எல்லா நாடுகளுடன் வெறுமனே ஒப்பிடுவது பிரச்சினையின் சாராம்சத்தையே தட்டிக் கழிப்பதும், மூடி மழுப்புவதும் ஆகும்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய காவுட்ஸ்கியின் தத்துவரீதியான விமர்சனத்துக்கும் மார்க்ஸீயத்துக்குமிடையில் பொதுவாக ஒன்றுமேயில்லை; சந்தர்ப்பவாதிகளுடனும் சோஷல்-ஷோவினிஸ்டுகளுடனும் சமாதானம் செய்து கொள்வதற்காகவும் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்வதற்காகவுமான ஒரு பிரசாரத்துக்குப் பீடிகையாவதற்கே அவ்விமர்சனம் ஏற்றது; ஏனென்றால், ஏகாதிபத்தியத்தினுடைய மிக ஆழ்ந்த, அடிப்படையான முரண்பாடுகளை அது தட்டிக் கழிக்கிறது, மூடிமழுப்புகிறது என்ற அந்தக் காரணத்தினால் தான். அவையாவன: ஏகபோகங்களுக்கும் அவற்றின் அருகிலேயே சேர்ந்து காணப்படுகிற கட்டுப்பாடற்ற போட்டிக்குமிடையிலுள்ள முரண்பாடு; நிதி மூலதனத்தின் பிரம்மாண்டமான ''நடவடிக்கைகளுக்கும்'' (பிரம்மாண்டமான லாபங்களுக்கும் தான்) கட்டுப்பாடற்ற மார்க்கெட்டில் நடைபெறும் ''நேர்மையான'' வியாபாரத்துக்கும் இடையிலான முரண்பாடு; ஒரு பக்கம் கார்ட்டல்கள், ட்ரஸ்டுகள், மறுபக்கம் கார்ட்டல்மயமாக்கப்படாத தொழில், இவைகளுக்கிடையிலான முரண்பாடு, முதலியன.

காவுட்ஸ்கியால் புனையப்பட்ட ''அதி ஏகாதிபத்தியம்'' என்ற அபகீர்த்தி பெற்ற சித்தாந்தமும்கூட அதே போன்று பிற்போக்குத்தனமானது. இப்பொருளைப் பற்றி 1915ல் அவர் செய்த தர்க்கத்தை, ஹாப்ஸன் 1902ல் செய்த தர்க்கத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

காவுட்ஸ்கி:''...தேசீய நிதி மூலதனங்களுக்கிடையிலான பரஸ்பரப் போட்டிகளுக்குப் பதிலாக, சர்வதேச ரீதியில் ஐக்கியப்பட்ட நிதி மூலதனம் கூட்டு முறையில் உலகைச் சுரண்டுகின்ற ஒரு முறையைப் புகுத்தும் நவீன அதி ஏகாதிபத்தியக் கொள்கையால் இன்றைய ஏகாதிபத்தியக் கொள்கை அகற்றப்பட முடியாதா? முதலாளித்துவத்தின் அத்தகைய ஒரு புதிய கட்டம் எவ்விதத்திலும் எண்ணிப்பார்க்கக் கூடியதுதான். அதைச் சாதிக்க முடியுமா? இக்கேள்விக்குப் பதில் சொல்வதற்கு வேண்டிய போதுமான ஆதாரங்கள் இன்னும் காணப்படவில்லை''.*

ஹாப்ஸன்: ''ஒவ்வொன்றும் அநேக அநாகரிகக் காலனிகளையும் சார்பு நாடுகளையும் கொண்ட சில பெரிய சமஷ்டி சாம்ராஜ்யங்களில் வலுப்படுத்தப்பட்ட கிறிஸ்தவம் தான்... இன்றையப் போக்குகளின் மிகமிக முறையான வளர்ச்சியாகவும், பரஸ்பர ஏகாதிபத்தியம் [interimperialism] என்ற ஒரு நிச்சயமான அடிப்படையில் நிரந்தரமான அமைதிக்கு எல்லாவற்றிலும் அதிக நம்பிக்கையைத் தரும் வளர்ச்சியாகவும் பலருக்குத் தோன்றுகிறது.''

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னுல் ஹாப்ஸன் எதை இன்டர்-இம்பீரியலிஸம் அல்லது பரஸ்பர ஏகாதிபத்தியம் என்று வருணித்தாரோ, அதையே அதி ஏகாதிபத்தியம் அல்லது மேலான ஏகாதிபத்தியம் என்று காவுட்ஸ்கி அழைத்தார். வார்த்தையின் ஒரு லத்தீன் முன் சேர்க்கையை மாற்றி இன்னென்றை வைத்து, புதிய சாமர்த்தியமான ஒரு குறிச்சொல்லைச் சிருஷ்டி செய்ததைத் தவிர, ''விஞ்ஞான ரீதியான'' சிந்தனைத் துறையில் காவுட்ஸ்கி செய்துள்ள ஒரே முன்னேற்றம் இது தான்: அதாவது, எதை ஹாப்ஸன், சாராம்சத்தில் இங்கிலீஷ் பாதிரிமார்களின் நயவஞ்சக மொழியைப் போல் வருணித்தாரோ, அதையே மார்க்ஸீயமென்று காவுட்ஸ்கி வழங்குகிறுர். ஆங்கில-போயர் யுத்தத்துக்குப் பிறகு, தென் ஆப்பிரிக்கப் போர்க்களங்களில் தங்களுடைய உறவினர்களில் பலரை இழந்துவிட்டவர்களும், பிரிட்டிஷ் நிதியாளர்களுக்கு இன்னும் அதிகமான லாபங்

---

* *Neue Zeit*, ஏப்ரல் 30, 1915, பக்கம் 144.

களை உத்தரவாதம் செய்வதற்காக மேலும் அதிக வரிகளைச் செலுத்தும் படி நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறவர்களுமான பிரிட்டிஷ் மத்திய வர்க்கத்தையும் தொழிலாளிகளையும் தேற்றுவதற்கு இந்த மதிப்புமிக்க வகுப்பினர் தங்களது பிரதான முயற்சிகளைச் செய்வது மிகவும் இயற்கையானது தான். ஏகாதிபத்தியம் அவ்வளவு ஒன்றும் மோசமானது இல்லை, நிரந்தர அமைதியை உத்தரவாதம் செய்யவல்ல பரஸ்பர (அல்லது அதி) ஏகாதிபத்தியத்துக்கு நெருக்க மாக அது இருக்கிறது என்ற தத்துவத்தைவிடச் சிறந்த தேறுதல் வேறு என்ன இருக்க முடியும்? இங்கிலீஷ் பாதிரி மார்களுடைய, அல்லது இனிமை சொட்டும் காவுட்ஸ்கியி னுடைய நல்ல எண்ணங்கள் எவையாக இருந்த போதிலும், காவுட்ஸ்கியின் ''தத்துவத்தினுடைய'' புறநிலையான, அதாவது உண்மையான, சமுதாய உட்பொருள் ஒன்றே ஒன்றுதான்: இன்றைய காலத்தின் தீவிரமான முரண்பாடு களிலிருந்தும், தீவிரமடைந்துள்ள பிரச்சினைகளிலிருந்தும் பொதுமக்களின் கவனத்தை அப்பால் திருப்புவதன் வாயி லாகவும் ''அதி ஏகாதிபத்தியம்'' என்ற ஏதோ புதியது போன்ற வருங்காலத்தின் பொய்த் தோற்றத்தின்பால் கவனத்தை ஈர்ப்பதன் வாயிலாகவும், முதலாளித்துவத்தின்கீழ் நிரந்தரமானதொரு சமாதானம் சாத்தியமே என்ற நம்பிக் கையைக் காட்டிப் பொதுமக்களை மிகவும் பிற்போக்கான முறையில் தேற்றுவது. பொதுமக்களை ஏமாற்றுதல்—காவுட் ஸ்கியின் ''மார்க்ஸீயத்'' தத்துவத்தில் இதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

ஜெர்மன் தொழிலாளிகளுக்கு முன்னால் (எல்லா நாடு களைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கு முன்னாலுங்கூட) காவுட் ஸ்கி தோற்றுவிக்க முயற்சி செய்கின்ற எதிர்கால விளைவுக ளின் முழுப் பொய்மையை ஐயமற உறுதிப்படுத்திக் கொள் வதற்கு, எல்லோருக்கும் நன்கு தெரிந்தவையும் மறுக்க முடியாதவையுமான விவரங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது உண் மையில் போதுமானது. இந்தியாவையும் இந்தோ-சீனாவை யும் சீனாவையும் எடுத்துக் கொள்வோம். அறுபது அல்லது எழுபது கோடி மக்கள்தொகையைக் கொண்ட இந்த மூன்று காலனி, அரைக் காலனி நாடுகளும் அநேக ஏகாதிபத்திய

வல்லரசுகளினுடைய—கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலியன—நிதி மூலதனத்தின் சுரண்டுதலுக்கு உட்பட்டுள்ளன என்பது நன்கு தெரிந்ததுதான். குறித்த ஆசிய நாடுகளில் தங்களுக்குச் சொந்தமான பிரதேசங்கள், தங்களது நலன்கள், தங்களது ''செல்வாக்கு மண்டலங்கள்'' ஆகியவைகளைக் காப்பதற்கு அல்லது மேலும் விஸ்தரிப்பதற்கு வேண்டி, இந்த ஏகாதிபத்திய நாடுகள் ஒன்றுக்கொன்று எதிராகக் கூட்டணிகளை அமைக்கின்றன என்று நாம் வைத்துக் கொள்வோம்; இந்தக் கூட்டணிகள் ''பரஸ்பர ஏகாதிபத்திய'', அல்லது ''அதி ஏகாதிபத்திய''க் கூட்டணிகளாக இருக்கும். குறித்த ஆசிய நாடுகளைச் ''சமாதான முறையில்'' பங்கிட்டுக் கொள்வதற்காக எல்லா ஏகாதிபத்திய வல்லரசுளும் ஒரு கூட்டணி அமைத்துக் கொள்கின்றன என்று நாம் வைத்துக் கொள்வோம்; இந்தக் கூட்டணி ''சர்வதேச ரீதியில் ஐக்கியப்பட்ட நிதி மூலதனத்தின்'' கூட்டணியாக இருக்கும். இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் இவ்வகையான கூட்டணிக்கு நிதர்சனமான உதாரணங்கள் இருக்கின்றன; சீனாவின்பால் இவ்வல்லரசுகள் கடைப்பிடிக்கும் போக்கு[21] இதற்கு ஓர் உதாரணம். முதலாளித்துவ அமைப்பு நிலைத்து இருக்கும் என்று வைத்துக் கொண்டாலும் (திட்டமாக இந்த நிலைமைகளைத்தான் காவுட்ஸ்கி அனுமானித்துக் கொள்கிறார்), அத்தகைய கூட்டணிகள் தாற்காலிகக் கூட்டணிகளாக மட்டும் இருக்க மாட்டா என்று, எல்லா வகையான உராய்வுகள், மோதல்கள், போராட்டங்கள் ஆகியவைகளை அவை போக்கி விடும் என்று கற்பனை செய்வது ''சாத்தியம்'' தானா? என்பதுதான் நம் கேள்வி.

'இல்லை' என்ற ஒரு பதிலைத் தவிர வேறு எந்த பதிலையும் தருவதை இயலாமற் செய்வதற்கு, இக்கேள்வியைத் தெளிவாகக் கேட்டால் போதும்; ஏனெனில், இந்தப் பங்கீட்டில் ஈடுபட்டிருப்பவர்களின் பலத்தைப் பற்றிய, அவர்களது பொதுப் பொருளாதார, நிதி சம்பந்தமான, ராணுவ, முதலிய பலவகைப் பலத்தைப் பற்றிய ஒரு கணக்கீடு தவிர, முதலாளித்துவத்தின்கீழ் செல்வாக்கு மண்டலங்கள், நலன்கள், காலனிகள் முதலியவைகளின் பங்கீட்டுக்கு

வேறு எந்த அடிப்படையும் சாத்தியம் அல்ல. இந்தப் பங்கீட்டில் ஈடுபட்டுள்ளவர்களின் பலம் சமமான அளவில் மாறுவதில்லை; ஏனெனில், வெவ்வேறு ஸ்தாபனங்கள், ட்ரஸ்டுகள், தொழிற்கிளைகள் அல்லது நாடுகள் ஆகியவைகளும் சம வளர்ச்சியடைவது என்பது முதலாளித்துவத்தின் கீழ் முடியாததொன்று. அரை நூற்றுண்டுக்கு முன்பு, இங்கிலாந்தின் அக்காலத்திய பலத்துடன் ஒப்பு நோக்கிப் பார்த்தால், ஜெர்மனி, தனது முதலாளித்துவ பலத்தைப் பொறுத்தவரை, பரிதாபகரமான, அற்ப நாடாக இருந்தது; ருஷ்யாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஜப்பானின் நிலையும் அப்பொழுது அதுவே. பத்து அல்லது இருபது ஆண்டுக் காலத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் தராதர பலம் மாற்றமடையாமல் அப்படியே இருந்திருக்கும் என்று கற்பனை செய்வது ''சாத்தியம்'' ஆகுமா? நிச்சயமாகச் சாத்தியம் அல்ல.

ஆகவே, முதலாளித்துவ அமைப்பின் யதார்த்த நிலைமைகளில்—இங்கிலீஷ் பாதிரிமார்களின் அல்லது ஜெர்மன் ''மார்க்ஸீயவாதி''யாகிய காவுட்ஸ்கியின் மட்டரகமான பிலிஸ்டைன் கற்பனைகளில் அல்ல—''பரஸ்பர ஏகாதிபத்திய'' அல்லது ''அதி ஏகாதிபத்திய''க் கூட்டணிகள், ஓர் ஏகாதிபத்தியக் கூட்டுக்கு எதிராக இன்னொன்று, அல்லது எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளும் சேர்ந்த ஒரு பொதுக் கூட்டணி என்ற எந்த வடிவத்தை அவை மேற்கொண்டாலும், போர்களுக்கிடைப்பட்ட காலங்களில் ''தாற்காலிகச் சமாதானமாக'' மட்டுமே தவிர்க்க முடியாதவாறு விளங்குகின்றன. சமாதானக் கூட்டணிகள் யுத்தங்களுக்கு அடி கோலுகின்றன; தாங்களும் யுத்தங்களிலிருந்தே துளிர்க்கின்றன; உலகப் பொருளாதாரத்துக்கும், உலக அரசியலுக்கும் உள்ளேயே இருக்கின்ற ஏகாதிபத்தியத் தொடர்புகள், உறவுகள் என்ற ஒரே அடிப்படையிலிருந்து அமைதியான போராட்டம், அமைதியல்லாத போராட்டம் என்ற வடிவங்களை மாற்றி மாற்றித் தோற்றுவிப்பதன்மூலம், ஒன்று மற்றொன்றைக் கட்டுப்பாடு செய்கிறது. ஆனால், தொழிலாளிகளைச் சமாதானப்படுத்தவும், பூர்ஷ்வாக் கட்சிக்கு ஓடிப்போய்விட்ட சோஷல்-ஷோவினிஸ்டுகளுடன்

தொழிலாளிகளைச் சமரசப்படுத்தவும் வேண்டி, புத்தி சாலியான காவுட்ஸ்கி ஒரே ஒரு சங்கிலித் தொடரின் ஒரு வளையத்தை மற்றவைகளிலிருந்து வேறுபடுத்துகிறூர்; சீனுவை ''அமைதியான நிலைக்குக் கொண்டுவருவதற்காக'' (பாக்ஸர் எழுச்சி[22] ஒடுக்கியதை மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள்) எல்லா வல்லரசுகளும் சேர்ந்து இன்று ஏற்படுத்தி யிருக்கிற அமைதியான (அதி ஏகாதிபத்தியமான, இல்லை இல்லை, அதி அதி ஏகாதிபத்தியமான) கூட்டணியை, நாளைக்கு நடக்கப் போகும் அமைதியல்லாத மோதலிலிருந்து வேறுபடுத்துகிறூர்; இந்த அமைதியல்லாத மோதல், நாளைக்கு மறுநாள் வேறொரு நாட்டை, உதாரணமாகத் துருக்கியைப் பங்கிடுவதற்கான இன்னேர் ''அமைதியான'' பொதுக்கூட்டணிக்கு அடிகோலும், இத்யாதி, இத்யாதி. ஏகாதிபத்திய அமைதிக் காலங்களுக்கும், ஏகாதிபத்தியப் போர்க் காலங்களுக்கும் இடையில் உள்ள உயிருள்ள தொடர்பைக் காட்டுவதற்குப் பதிலாக, தொழிலாளிகளை அவர்களது உயிர்த் துடிப்பற்ற தலைவர்களுடன் சமரசப்படுத்துவதற்காக அத்தொழிலாளிகளுக்கு ஓர் உயிரற்ற கற்பனையைக் காட்டுகிறூர் காவுட்ஸ்கி.

''ஐரோப்பாவின் சர்வதேச வளர்ச்சியில் ராஜதந்திரத்தின் வரலாறு'' என்ற தமது நூலில் அமெரிக்க எழுத்தாளராகிய ஹில் ராஜதந்திரத்தின் நவீன காலத்திய வரலாற்றில் கீழ்க்கண்ட காலகட்டங்களைப்பற்றி முகவுரையில் குறிப்பிடுகிறூர்: 1) புரட்சி சகாப்தம்; 2) அரசியல் சட்ட இயக்கம்; 3) இன்றையக் காலகட்டமாகிய ''வர்த்தக ஏகாதிபத்தியம்''.* இன்னேர் எழுத்தாளர், 1870க்குப் பின் கிரேட் பிரிட்டனின் ''உலகக் கொள்கை''யின் வரலாற்றை நான்கு காலகட்டங்களாகப் பிரிக்கிறூர்: 1) முதல் ஆசியக் காலகட்டம் (மத்திய ஆசியாவில் இந்தியாவை நோக்கிய ருஷ்யாவின் முன்னேற்றத்துக்கு எதிராகப் போராடிய காலகட்டம்); 2) ஆப்பிரிக்கக் காலகட்டம் (கிட்டத்தட்ட 1885-1902)—

---

* David Jayne Hill, *A History of the Diplomacy in the International Development of Europe*, vol. I, p. X (டேவிட் ஜெய்ன் ஹில், ''ஐரோப்பாவின் சர்வதேச வளர்ச்சியில் ராஜதந்திரத்தின் வரலாறு'', தொகுதி 1, பக்கம் X, —ப-ர்.).

ஆப்பிரிக்காவைப் பங்கிட்டுக் கொள்வதற்காக பிரான் ஸுடன் போராடிய காலகட்டம் (1898ன் ''பஷோடா சம்ப வம்''. இதனுல் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குமிடையில் மூளவிருந்த யுத்தம் ஒரு மயிரிழையில் தவிர்க்கப்பட்டது); 3) இரண்டாவது ஆசியக் காலகட்டம் (ருஷ்யாவுக்கெதிராக ஜப்பானேடு உடன்படிக்கை); கடைசியாக, 4) ''ஐரோப் பிய''க் காலகட்டம்—பிரதானமாக ஜெர்மனிக்கு விரோத மா்ன காலகட்டம்.* எப்படி இத்தாலியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பிரெஞ்சு நிதி மூலதனம் இந்நாடுகளின் அரசியல் கூட்டணிக்கு வழி செய்து கொண்டிருக்கிறது என்றும், எப்படி பாரசீகம் காரணமாக ஜெர்மனிக்கும் கிரேட் பிரிட்டனுக்குமிடையில் போராட்டம் உருவாகிக் கொண் டிருக்கிறது என்றும், சீனக் கடன்கள் காரணமாக எப்படி எல்லா ஐரோப்பிய மூலதனங்களுக்கிடையிலும் கூடப் போ ராட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்றும், இப்படி இன்னும் பலவற்றையும் உதாரணம் காட்டி, ''முன்னணிப் படைப் பிரிவுகளின் சிறு அரசியல் போர்கள் நிதிக் களத்தில் நடை பெறுகின்றன'' என்று பாங்கு ''ஊழியர்'' ரீசர் 1905ல் எழுதினுர். ''அதி ஏகாதிபத்திய'' சமாதானக் கூட் டணிகளின் உயிருள்ள யதார்த்தத்தை, சாதாரண ஏகாதி பத்திய மோதல்களுடன் அவைகளுக்கு இருக்கும் பிரிக்க முடியாத தொடர்புடன் இதில் காண்க.

காவுட்ஸ்கி ஏகாதிபத்தியத்தின் மிக ஆழ்ந்த முரண்பாடு களை மழுப்புவது—இது ஏகாதிபத்தியத்தை அலங்கரிப் பதாக நிச்சயம் ஆகிறது—ஏகாதிபத்தியத்தின் அரசியல் அம்சங்களைப் பற்றிய அந்த எழுத்தாளருடைய விமர்சனத் திலும் தனது சுவடுகளைப் பதித்து விடுகிறது. எங்கும் ஆதிக் கத்துக்கான முயற்சியை, சுதந்திரத்துக்கான முயற்சியை அல்ல, புகுத்தும் நிதி மூலதனம், ஏகபோகங்கள் ஆகியவை களின் சகாப்தம் தான் ஏகாதிபத்தியம். இத்தகைய போக் குகளின் விளைவு—எல்லாவகை அரசியல் அமைப்புக்களினது ஒவ்வொரு துறையிலும் பிற்போக்குத்தனமும், இந்த அர சியல் துறையிலும் கூட உள்ள முரண்பாடுகளைத் தீவிரப்படுத்

---

* Schilder, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 178.

துதலும் ஆகும். தேசிய இன அடக்குமுறையும், நாடு சேர்க்கும் முயற்சியும், அதாவது தேச சுதந்திரத்தை மீறுதலும் (ஏனெனில், நாடு சேர்த்தல் என்பது, தேசங்களின் சுய நிர்ணய உரிமையை மீறுவது தவிர வேறென்றுமில்லை) விசேஷத் தீவிரமடைகின்றன. ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய இன அடக்குமுறை தீவிரப்படுதலுக்கும் உள்ள தொடர்பை ஹில்பர்டிங் சரியாகக் குறிப்பிடுகிறார்; அவர் எழுதுகிறார்: ''புதிதாக வெளிநாட்டினருக்கு வழி திறக்கப்பட்டுள்ள நாடுகளில், இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலதனம் முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துகிறது; தேசிய உணர்ச்சி கொண்டு விழிப்படைந்து கொண்டிருக்கும் மக்களுடைய இடையறாது வளர்ந்து வரும் எதிர்ப்பையும் அன்னியர் தலையீட்டுக்கெதிராக மூட்டி விடுகிறது; இந்த எதிர்ப்பு, அன்னிய மூலதனத்துக்கு எதிராக ஆபத்தான நடவடிக்கைகளாக எளிதில் உருவெடுக்கக் கூடும். பழைய சமுதாய உறவுகள் முழுவதும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படுகின்றன; 'பொதுச் சரித்திரப் போக்குக்கு வெளியிலுள்ள நாட்டினங்க'ளின் நெடுங்கால விவசாயத் தனிமை நிலை நிர்மூலமாக்கப்பட்டு, முதலாளித்துவ நீர்ச் சுழலில் அவைகள் இழக்கப்படுகின்றன. அடிமைப்பட்ட மக்களுக்கு விடுதலைக்கு வேண்டிய சாதனங்களையும், முறைகளையும் முதலாளித்துவமே படிப்படியாக அளிக்கிறது. ஒரு காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு யாவற்றிலும் உயர்வாகத் தோன்றிய இலக்கை, பொருளாதார, கலாச்சார சுதந்திரத்திற்கு ஒரு சாதனமாக ஐக்கிய தேசிய அரசு ஒன்றை உருவாக்கும் இலக்கை, அடைவதற்கு அவர்கள் முற்படுகிறார்கள். சுதந்திரத்துக்கான இந்த இயக்கம், ஐரோப்பிய மூலதனத்தை, அதன் சுரண்டலுக்கு மிகச் சிறந்தவையும் மிக அருமையான வாய்ப்புள்ளவையுமான துறைகளில் பயமுறுத்துகிறது. ஆகவே, ஐரோப்பிய மூலதனம் தனது ராணுவ பலத்தைச் சதா அதிகரிப்பதன் மூலமாக மட்டுமே தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க முடியும்.''*

---

* '' நிதி மூலதனம்'', பக்கம் 487.

புதிதாக வெளிநாட்டினரின் செல்வாக்கின்கீழ் வந்துள்ள நாடுகளில் மட்டுமின்றி, பழைய நாடுகளிலும் கூட ஏகாதிபத்தியம் நாடு சேர்த்தலுக்கும், தேசீய இன அடக்குமுறையின் தீவிரப்பாட்டுக்கும், இதன் விளைவாக, எதிர்ப்பின் அதிகரிப்புக்கும் இட்டுச் செல்கிறது என்பதையும் இத்துடன் சேர்க்க வேண்டும். அரசியல் பிற்போக்குத்தனத்தை ஏகாதிபத்தியம் தீவிரப்படுத்துவதை ஆட்சேபிக்கும் அதே சமயத்தில், விசேஷமாக அவசரமான ஒரு பிரச்சினையைக் காவுட்ஸ்கி ஒதுக்கி வைத்து விட்டார்: அதாவது, ஏகாதிபத்திய சகாப்தத்தில் சந்தர்ப்பவாதிகளுடன் ஐக்கியத்தை ஏற்படுத்துவது முடியாது என்பதுதான் அப்பிரச்சினை. நாடு சேர்த்தலை ஆட்சேபிக்கும் அதே சமயத்தில், அவர் தமது ஆட்சேபனைகளைச் சந்தர்ப்பவாதிகளுக்கு மிகமிக ஏற்புடைய வகையிலும் அவர்களைச் சிறிதும் புண்படுத்தாத வகையிலும் வெளியிடுகிறார். ஜெர்மனியில் உள்ளவர்களுக்காக அவர் இதையெல்லாம் எழுதுகிறார்; ஆயினும் இன்று அதிகம் பேசப்படுகிறதும், முக்கியமானதுமான விஷயத்தை, உதாரணமாக, ஆல்சேஸ்-லோரைன் பிரதேசத்தை ஜெர்மனி சேர்த்துக் கொண்டதை அவர் மூடி மழுப்புகிறார். காவுட்ஸ்கியின் இந்தச் ''சிந்தனைப் பிறழ்ச்சி''யை மதிப்பிடுவதற்குக் கீழ்க்கண்ட உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். அமெரிக்கர்கள் பிலிப்பைன் தீவுகளைச் சேர்த்துக் கொண்டதை ஒரு ஜப்பான்காரன் கண்டனம் செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். கேள்வி என்னவென்றால், அவன் கண்டனம் செய்வது பொதுவாகவே நாடு சேர்த்தலை அவன் வெறுப்பதனால் தான் என்றும், தானே பிலிப்பைன் தீவுகளைச் சேர்த்துக் கொள்ள அவன் விருப்பம் கொண்டிருப்பதனால் அல்ல என்றும் நிறையப் பேர்கள் நம்புவார்களா? கொரியாவை ஜப்பான் சேர்த்துக் கொண்டதை எதிர்த்து ஜப்பான்காரன் போரிட்டால்தான், ஜப்பானிலிருந்து பிரிந்து போகும் சுதந்திரத்தைக் கொரியாவுக்குக் கொடுக்க வேண்டும் என்று அவன் வலியுறுத்தினால்தான், நாடு சேர்த்தலை எதிர்த்து ஜப்பான்காரன் நடத்தும் ''போரை'' மனப் பூர்வமானது என்றும், அரசியல் ரீதியாக நேர்மையானது என்றும் நாம் ஒப்புக் கொள்வோம். இல்லையா?

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய காவுட்ஸ்கியின் தத்துவ ரீதியான பரிசீலனையிலும் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய அவருடைய பொருளாதார, அரசியல் விமர்சனத்திலும், மார்க்ஸீயத்துடன் சுத்தமாக ஒன்றுபடுத்த முடியாததும், அடிப்படையான முரண்பாடுகளை மூடி மழுப்பி, மெருகிடுகின்றதுமான ஒரு போக்கும், ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்துடன் குலைந்து கொண்டிருக்கிற ஐக்கியத்தை எந்த விலை கொடுத்தாவது நீடித்திருக்கச் செய்யவேண்டும் என்ற ஒரு முயற்சியும் தான் முழுக்க முழுக்க ஊடுருவிக் கிடக்கின்றன.

# X. வரலாற்றில் ஏகாதிபத்தியம் வகிக்கும் இடம்

ஏகாதிபத்தியம் தனது பொருளாதார சாராம்சத்தில் ஏகபோக முதலாளித்துவமே என்று ஏற்கனவே நாம் கண்டோம். இதுவே வரலாற்றில் அது வகிக்கும் இடத்தை நிர்ணயம் செய்கிறது; ஏனெனில், கட்டுப்பாடற்ற போட்டியின் அடிப்படையில், திட்டமாகக் கட்டுப்பாடற்ற போட்டியிலிருந்தே, தோன்றுகிற ஏகபோகம், முதலாளித்துவ அமைப்பிலிருந்து அதைவிட உயர்ந்ததொரு சமூகப் பொருளாதார அமைப்புக்கு மாறிக் கொண்டிருக்கிற ஒரு நிலையாகும். ஏகபோகத்தின் நான்கு பிரதான வகைகளை, அல்லது ஏகபோக முதலாளித்துவத்தின் நான்கு பிரதானத் தோற்றங்களை நாம் விசேஷமாகக் கவனிக்க வேண்டும்; அவைகள்தான் நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கும் சகாப்தத்தின் விசேஷ குணங்களாக இருக்கின்றன.

முதலாவதாக, ஒரு மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்திலிருந்த உற்பத்திக் குவிதலிலிருந்து ஏகபோகம் தோன்றியது. முதலாளிகளின் ஏகபோகக் கூட்டமைப்புக்கள், கார்ட்டல்கள், சின்டிகேட்டுகள், ட்ரஸ்டுகள் ஆகியவைகளை இது குறிக்கிறது. இன்றையப் பொருளாதார வாழ்வில் இவை வகிக்கும் மிக முக்கியமான பாத்திரத்தை நாம் ஏற்கனவே கண்டோம். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், முன்னேறிய நாடுகளில் ஏகபோகங்கள் பூர்ணமாகத் தலைமை ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டு விட்டன; உயர்ந்த சுங்க வரிகளின் பாதுகாப்பைக் கொண்டிருந்த நாடுகள் (ஜெர்மனி, அமெரிக்கா) கார்ட்டல்களை அமைக்கும் விஷயத்தில் முதலாவதாக அடியெடுத்து வைத்தன என்றாலும், கட்டுப்பாடற்ற வர்த்தக அமைப்பைக் கொண்டிருந்த கிரேட் பிரிட்டன், சற்றுப் பின்னர்தான், இதே அடிப்படைத் தோற்றத்தை—அதாவது, உற்பத்திக் குவிதலிலிருந்து ஏகபோகங்கள் தோன்றுதலை—வெளிக்காட்டிற்று.

இரண்டாவதாக, கச்சாப் பொருட்களின் மிக முக்கிய ஊற்றுக்கண்களை, குறிப்பாக, முதலாளித்துவ சமுதாயத்தில் அடிப்படையானதும், மிகமிக அதிகமாகக் கார்ட்டல்மய மாக்கப்பட்டதுமான தொழில்களுக்கு (நிலக்கரி, இரும்புத் தொழில்கள்) தேவையான கச்சாப் பொருட்களின் ஊற்றுக் கண்களை, கைப்பற்றுவதை ஏகபோகம் தூண்டியிருக்கிறது. கச்சாப்பொருட்களின் மிக முக்கிய ஊற்றுக்கண்களை ஏக போகமாகப் பெற்றிருப்பது பெரு மூலதனத்தின் அதிகாரத் தை ஏராளமாகப் பெருக்கியிருக்கிறது; மேலும், கார்ட் டல்மயமாக்கப்பட்ட தொழிலுக்கும், கார்ட்டல்மயமாக்கப் படாத தொழிலுக்குமிடையில் உள்ள முரண்பாடுகளை அது தீவிரப்படுத்தியும் இருக்கிறது.

மூன்றாவதாக, ஏகபோகம் பாங்குகளிலிருந்து எழுச்சி பெற்றிருக்கிறது. பாங்குகள், எளிய தரகு ஸ்தாபனங்கள் என்ற நிலையிலிருந்து நிதி மூலதன ஏகபோகக்காரர்களாக வளர்ந்திருக்கின்றன. முதன்மையான முதலாளித்துவ நாடு கள் ஒவ்வொன்றிலும், மூன்று முதல் ஐந்துவரை மிகப் பெரிய பாங்குகள், தொழில் மூலதனத்துக்கும் பாங்கு மூல தனத்துக்குமிடையில் ''சொந்த முறையிலான ஐக்கியத்தை'' ஏற்படுத்தியிருக்கின்றன; மேலும், நாடு முழுவதன் மூலதனங் களிலும் பண வருவாய்களிலும் பெரும் பகுதியாக இருக் கின்ற பல்லாயிரம் கோடிப் பணத்தின் நிர்வாகத்தைத் தங் கள் கையில் அவை குவித்து வைத்திருக்கின்றன. விதி விலக்கு இன்றி, இன்றைய பூர்ஷ்வா சமுதாயத்தின் பொருளாதார, அரசியல் ஸ்தாபனங்கள் எல்லாவற்றின்மேலும் சார்பு உறவு கள் என்ற இறுக்கமான வலையை விரிக்கிற ஒரு நிதியாட் சிக் குழு—இதுதான் இந்த ஏகபோகத்தினுடைய மிகமிகத் துலக்கமான தோற்றம்.

நான்காவதாக, ஏகபோகம் காலனிக் கொள்கையி லிருந்து வளர்ந்திருக்கிறது. காலனிக் கொள்கையின் பற்பல ''பழைய'' நோக்கங்களுடன், கச்சாப் பொருட்களின் ஊற் றுக்கண்களுக்கும், மூலதன ஏற்றுமதிக்கும், ''செல்வாக்கு மண்டலங்க''ளுக்கும்—அதாவது, லாபகரமான ஒப்பந் தங்கள், சலுகைகள், ஏகபோக லாபங்கள் முதலியவை களுக்கான மண்டலங்களுக்கும்—கடைசியாக, பொதுவாகப்

பொருளாதாரப் பிரதேசங்களுக்குமான போராட்டத்தையும் நிதி மூலதனம் சேர்த்திருக்கிறது. உதாரணமாக ஆப்பிரிக்காவின் நிலப்பரப்பில் பத்தில் ஒரு பங்காக ஐரோப்பிய வல்லரசுகளின் காலனிகள் இருந்தபொழுது—1876ல் அவ்வாறு இருந்தது— ஏகபோக முறை அல்லாத வேறு முறையில்—பிரதேசங்களைக் ''கட்டின்றிக் கைப்பற்றிக் கொள்ளுதல்'' மூலம்—காலனிக் கொள்கை வளர முடிந்தது. ஆனல் ஆப்பிரிக்காவில் பத்தில் ஒன்பது பகுதிகள் பிடித்துக் கொள்ளப்பட்டபொழுது (1900க்குள்), அகில உலகமும் பங்கிடப்பட்டுவிட்ட பொழுது, காலனிகளை ஏகபோகமாகப் பெற்றிருக்கின்ற, ஆகவே உலகப் பங்கீட்டுக்கும் மறு பங்கீட்டுக்குமாக விசேஷமாகத் தீவிரப் போராட்டம் நடைபெறுகிற ஒரு காலகட்டம் தவிர்க்க முடியாதபடி உதயமாயிற்று.

முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளையும் ஏகபோக முதலாளித்துவம் எந்த அளவுக்குத் தீவிரப்படுத்தியிருக்கிறது என்பது பொதுவாகத் தெரிந்ததே. உயர்ந்த வாழ்க்கைச் செலவையும், கார்ட்டல்களின் கொடுங்கோன்மையையும் கூறினல் போதுமானது. முரண்பாடுகள் இப்படித் தீவிரப்படுதல் சரித்திரத்தின் மாறும் கட்டத்தின் மிக வன்மையான இயக்கும் சக்தியாக அமைந்திருக்கிறது; உலக நிதி மூலதனம் இறுதி வெற்றி பெற்ற நாளிருந்து இக்கட்டம் தொடங்கிற்று.

ஏகபோகங்கள், ஆட்சிக் குழு, சுதந்திரத்திற்கான முயற்சிக்குப் பதிலாக ஆதிக்கத்துக்கான முயற்சி, ஒரு சில மிகவும் செல்வம் படைத்த அல்லது மிக்க பலம் பொருந்திய தேசங்கள் எண்ணிக்கையில் அதிகரித்து கொண்டிருக்கின்ற சிறிய அல்லது பலவீனமான தேசங்களைச் சுரண்டுதல்—இவை எல்லாம், ஏகாதிபத்தியத்தின் அந்த விசேஷக் குணும்சங்களை—அதை ஒட்டுண்ணித்தனமான அல்லது மக்கிக்கொண்டிருக்கிற முதலாளித்துவம் என்று வரையறை செய்யும்படி நம்மை நிர்ப்பந்திக்கின்ற அந்த விசேஷக் குணும்சங்களை—தோற்றுவித்திருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் போக்குகளில் ஒன்ருக, ''பண முதலீட்டாளி அரசு'', கடும்வட்டி வாங்கி அரசு, மேலும் மேலும் அதிகமான அளவுக்கு ஏற்று

மதி செய்யப்பட்ட மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டும், ''கூப்பன்கள் கத்தரித்தும்'' வாழும் பூர்ஷ்வா வர்க்கம் கொண்ட அரசு அமைக்கப்படுவது வரவர அதிக உப்பலாக மேலெழும்புகிறது. மக்குதலை நோக்கிய இந்தப் போக்கு முதலாளித்துவத்தின் துரிதமான வளர்ச்சிக்கு இடமில்லாது செய்து விடுகிறது என்று கருதுவது தவறாகும்; அது அப்படிச் செய்வதில்லை; ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் தனித்தனித் தொழிற் கிளைகளும் பூர்ஷ்வாக்களில் தனித்தனிப் பிரிவினரும், தனித்தனி நாடுகளும், அதிகமான அல்லது குறைந்த அளவில், இத்தகைய போக்குகளில் இப்பொழுது ஒன்றையும் பிறகு இன்னொன்றையும் வெளிப்படுத்துகின்றன. மொத்தத்தில், முன்னைவிட அதிகத் துரிதமாக முதலாளித்துவம் வளர்ந்து கொண்டிருக்கிறது; ஆனால், பொதுவாக இந்த வளர்ச்சி மேலும் மேலும் சமமற்றதாக ஆவது மட்டுமின்றி, இந்தச் சமமற்ற தன்மை, மூலதனச் செல்வத்தை மிகமிக அதிகமாகப் பெற்றிருக்கும் நாடுகளின் (இங்கிலாந்து) மக்குதலில் விசேஷமாகத் தோற்றமளிக்கவும் செய்கிறது.

ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைக் குறித்து, பெரிய ஜெர்மன் பாங்குகளைப் பற்றிய நூலின் ஆசிரியராகிய ரீசர் கூறுகிறார்: ''முந்தையக் காலகட்டத்தின் *(1848-70)* வளர்ச்சி—அது ஒன்றும் அவ்வளவு மெதுவாக இருக்கவில்லை—இக்காலகட்டத்தில் *(1870-1905)* ஜெர்மனியின் பொருளாதாரம் முழுவதின் வளர்ச்சி வேகத்திற்கு, அதனுடன் ஜெர்மன் பாங்குத் தொழிலின் வளர்ச்சி வேகத்திற்கு, பழைய காலத்தில் தபால் கோச்சு வண்டியின் வேகம் இன்றைய மோட்டார் காரின் வேகத்திற்கு எந்த விகிதத்தில் இருந்ததோ, சுமார் அதே விகிதத்தில் இருந்தது; இன்றைய மோட்டார் மிகமிக வேகமாகப் பறக்கிறது; அப்பொழுது கவலையின்றித் தனது பாதையில் செல்லும் பாதசாரிகளை மட்டிலும் அல்ல, காரின் உள்ளே அமர்ந்திருப்பவர்களையும் கூட ஆபத்துக்குள்ளாக்குகிறது!'' தனது முறையில் இவ்வளவு அசாதாரணத் துரிதமாக வளர்ந்திருக்கிற இந்த நிதி மூலதனம், அதிகச் செல்வம் படைத்த நாடுகளிடமிருந்து—அமைதியான முறைகளில் மட்டுமேயல்ல

—தான் கைப்பற்றித் தீரவேண்டிய காலனிகளை, தான் அவ்வளவு துரிதமாக வளர்ந்திருப்பதன் காரணமாகவே, முன்னை விட அதிக ''அமைதியாக''ப் பெறுவதற்கான முறையைக் கையாள ஆட்சேபிப்பதில்லை. கடந்த சில பத்தாண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, ஜெர்மனியில் ஏற்பட்டதை விட மேலும் அதிக வேகமாக இருந்திருக்கிறது; இதே காரணத்தினால் நவீன அமெரிக்க முதலாளித்துவத்தின் ஒட்டுண்ணித்தனமான அம்சங்கள் மிகத் தெளிவாகத் தோன்றியிருக்கின்றன. மறு பக்கத்தில், உதாரணமாக, குடியரசு அமெரிக்காவின் பூர்ஷ்வாக்களை முடியரசு ஜப்பானின் அல்லது ஜெர்மனியின் பூரஷ்வாக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் மிகமிகப் பிரதானமான அரசியல் வித்தியாசம் மிக உயர்ந்த அளவுக்குக் குறைந்து விடுகிறது என்பதைக் காண்கிறோம்—இந்த வித்தியாசம் பொதுவாக முக்கியமற்றது என்பதால் அல்ல; திட்டமான ஒட்டுண்ணித்தனமான அம்சங்களைக் கொண்டிருக்கிற பூர்ஷ்வா வர்க்கத்தைப் பற்றி இந்த எல்லா விஷயங்களிலும் நாம் இங்கே பிரஸ்தாபிக்கிறோம் என்பதால்தான்.

அநேக தொழிற்கிளைகள், அநேக நாடுகள் முதலியவற்றில் ஒன்றினுடைய முதலாளிகள் அதிக ஏகபோக லாபங்களைப் பெறுதல், தொழிலாளர்களில் ஒரு சில பிரிவினரையும், சிறிது காலம் அவர்களில் கணிசமான சிறுபான்மையினரையும், லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்குவதை முதலாளிகளுக்குப் பொருளாதார ரீதியில் சாத்தியமாக்குகிறது; மேலும், ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது ஒரு குறிப்பிட்ட தேசத்தைச் சேர்ந்த முதலாளிகளின் பக்கத்துக்கு, மற்ற எல்லோருக்கும் எதிராக, அவர்களை இழுத்துக் கொள்வதையும் சாத்தியமாக்குகிறது. உலகைப் பங்கிட்டுக் கொள்ளும் விஷயத்தில் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் உள்ள முரண்பாடுகள் தீவிரப்படுதல் இந்த முயற்சியை அதிகமாக்குகிறது. இப்படித்தான் ஏகாதிபத்தியத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்குமிடையில் ஒரு பந்தம் உண்டாக்கப்படுகிறது; மற்ற நாடுகளைக் காட்டிலும் வெகு முன்னுலேயே ஏகாதிபத்திய வளர்ச்சியின் சில அம்சங்கள் இங்கி

லாந்தில் காணப்பட்ட காரணத்தினுல், இந்தப் பந்தம் முதன் முதலாகவும், மிகமிகத் தெளிவாகவும் அந்நாட்டில் தோற்ற மளித்தது. சில எழுத்தாளர்கள், உதாரணமாக எல். மார்டொவ், ஏகாதிபத்தியத்துக்கும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் காணப்படும் சந்தர்ப்பவாதத்துக்கும் உள்ள தொடர்பை—இக்காலத்தில் அது விசேஷத் தெளிவுடன் விளங்குகிற ஒரு விஷயம்—கீழ்க்கண்டதைப் போன்ற ''அதி கார வர்க்கச் சார்புடைய எதிர்காலத்தைப் பற்றிய நம் பிக்கை''யை (காவுட்ஸ்கியையும் ஹுயிஸ்மன்ஸையும் போல) பேசுவதன் மூலம் ஒதுக்கித்தள்ளி விடும் விருப்ப முடையவர்களாக இருக்கிருர்கள்: சந்தர்ப்பவாதத்தின் வளர்ச்சியை உண்டாக்குவது முற்போக்கான முதலாளித்து வம்தான் என்ருல், அல்லது சந்தர்ப்பவாதத்தை ஏற்றுக் கொள்பவர்கள் மிக உயர்ந்த சம்பளம் வாங்கும் தொழி லாளிகள்தான் என்ருல், முதலாளித்துவத்தை எதிர்ப்பவர் களின் போராட்டம் நம்பிக்கையற்றதாகும்—இப்படிப் பல வற்றை அவர்கள் பேசுகிருர்கள். இத்தகைய ''எதிர்காலத் தைப் பற்றிய நம்பிக்கை''யின் பொருளைப்பற்றி ஏமாந்து போகக் கூடாது. இது சந்தர்ப்பவாதத்தைப் பற்றிய நம் பிக்கை; இது சந்தர்ப்பவாதத்தை மூடிமறைப்பதற்கு உதவி புரியும் நம்பிக்கை. உண்மையில் பார்க்கப் போனுல், சந் தர்ப்பவாத வளர்ச்சியின் அசாதாரணமான வேகமும், அவ் வளர்ச்சியின் விசேஷமாக வெறுக்கத்தக்க தன்மையும், அதன் வெற்றி நிலைத்திருக்கும் என்பதற்கு எவ்விதத்திலும் உத்தரவாதம் ஆக மாட்டா; ஓர் ஆரோக்கியமான உடலின் மீது ஆபத்து விளைவிக்கும் ஒரு கட்டியின் துரிதமான வளர்ச்சி, அக்கட்டியை மேலும் சீக்கிரம் உடையச் செய்து, அதன் மூலம் உடலை அக்கட்டியின் தொந்தரவிலிருந்து விடுவிக்க மட்டுமே செய்யும். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போ ராட்டம், சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத் துடன் பிரிக்க முடியாதபடிப் பிணைக்கப்பட்டிருந்தாலொழிய, ஒரு போலியும் மோசடியும் ஆகும் என்பதைப் புரிந்து கொள்ள விரும்பாதவர்கள், இவ்விஷயத்தில் எல்லோரை யும்விட மிகவும் ஆபத்தானவர்களாக இருக்கிருர்கள்.

இந்நூலில் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாராம்சத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் கொண்டு பார்த்தால், மாறும் கட்டத்திலுள்ள முதலாளித்துவம் என்று அல்லது இன்னும் சரியாகச் சொல்லப்போனால்,சாகும் நிலையிலுள்ள முதலாளித்துவம் என்று ஏகாதிபத்தியத்தை நாம் வரையறுக்க வேண்டியிருக்கிறது. நவீன முதலாளித்துவத்தை வர்ணிக்கும் பொழுது, பூர்ஷ்வா பொருளாதார வாதிகள் ''ஒன்றோடொன்று பின்னியிருத்தல்'', ''தனித்திருத்தல் இன்மை'' முதலிய குறிப்பு வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் அடிக்கடி கையாளுகிறார்கள் என்பதை இவ் விஷயத்தில் கவனிப்பது மிகவும் பயனுள்ளதாகும்; ''தங்களது செயல்கள், வளர்ச்சியின் போக்கு ஆகியவைகளுக்கு ஏற்றபடி'' பாங்குகள் ''தூய தனியார் தொழில் ஸ்தாபனங்கள் அல்ல; தூய தனியார் தொழில் கட்டுப்பாட்டு மண்டலத்திற்கு அப்பால் அவைகள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றன.'' இப்பொழுது மேற்கோள் காட்டப்பட்ட வார்த்தைகளைச் சொல்லிய அதே ரீசர் ''சமுதாய ரீதியாக்கப்படுதல்'' பற்றி மார்க்ஸீயவாதிகளின் ''தீர்க்க தரிசனம்'' ''மெய்யாகவில்லை'' என்று மிகமிக முக்கியத்துவம் கொடுத்துக் கூறுகிறார்!

அப்படியென்றால், ''ஒன்றோடொன்று பின்னியிருத்தல்'' என்ற இந்தக் குறிப்பு வார்த்தை எதைக் காட்டுகிறது? நம் கண் முன்னால் நடந்து கொண்டிருக்கிற வளர்ச்சியின் மிகத் தெளிவான அம்சத்தை மட்டும்தான் அது காட்டுகிறது. இதையெல்லாம் காண்போர் தனித்தனி மரங்களைத்தான் எண்ணுகிறாரேயொழிய, அவரால் முழுமையாக தோப்பைப் பார்க்க முடியவில்லை என்பதை அது காட்டுகிறது. மேற்போக்கானதையும், தற்செயலாக நடப்பதையும், குழப்பமானதையும் அது அடிமைத்தனமாகக் காப்பியடிக்கிறது. திரளான மூல ஆதாரங்களினால் அமுத்தப்பட்டு மூழ்கிப் போய் விட்டவர் ஒருவர் என்றும், அத்திரளின் பொருளையோ முக்கியத்துவத்தையோ மதித்துணருவதற்குச் சுத்தமாகத் தகுதியற்ற ஒருவர் என்றும் அது காண்போரின் உண்மை உருவை வெளிக்காட்டுகிறது. பங்குகளைப் பெற்றிருத்தல், தனியார் சொத்துக்களைப் பெற

றிருப்பவர்களுக்கிடையிலான உறவுகள் ''தற்செயலாக''ப் பின்னப்பட்டிருக்கின்றன''. இந்தப் பின்னலின் கீழாக இருப்பவை—அதன் அடிப்படையாக அமைந்திருப்பவை—உற்பத்தியின் மாறுகின்ற சமுதாய உறவுகள் ஆகும். ஒரு பெரிய ஸ்தாபனம் பிரம்மாண்டமான உருவை அடைகிற பொழுது; திரளான புள்ளிவிவரங்களைத் துல்லியமாகக் கணக்கிட்டதன் அடிப்படையில், கோடிக்கணக்கான மக்களுக்குத் தேவையான எல்லாவற்றிலும் மூன்றில் இரண்டு அல்லது முக்கால் பங்கு அளவுக்கு மூலக் கச்சாப் பொருட்களின் சப்ளையை ஒரு திட்டத்தின்படி ஒழுங்குபடுத்தி அமைக்கிற பொழுது; ஒழுங்கானதும் ஸ்தாபன ரீதியானதுமான ஒரு முறையில் இந்தக் கச்சாப் பொருட்கள், உற்பத்தி நடக்கின்ற மிகவும் பொருத்தமான இடத்திற்குச் சில சமயங்களில் நூற்றுக் கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மைல்களுக்கு ஏற்றியனுப்பப்படும் பொழுது; பலவகைப்பட்ட முழு தயாரிப்புப் பொருட்களைச் செய்து முடிக்கும் வகையிலான வேலையின் எல்லா அடுத்தடுத்த கட்டங்களும் ஒரே மையத்திலிருந்து நடத்தப்படும் பொழுது; இந்த உற்பத்திப் பொருட்கள் ஒரு திட்டத்தின்படிப் பல கோடிக்கணக்கான நுகர்வோர்களிடையில் விநியோகிக்கப்படும் பொழுது (அமெரிக்க ''எண்ணெய் ட்ரஸ்ட்'' அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும் எண்ணெயை விநியோகம் செய்தல்);—அப்பொழுது, நாம் வெறும் ''பின்னியிருத்தலை''ப் பெற்றிருக்கவில்லை, உற்பத்தி சமுதாயரீதியாக்கப்படுதலைப் பெற்றிருக்கிறோம் என்பதும்; தனியார் பொருளாதார உறவுகளும், தனியார் சொத்துறவுகளும் ஒரு மேல் ஓடாக ஆகி விட்டன, உட்பொருட் அம்மேலோடு கொள்ளாத அளவுக்கு வளர்ச்சி பெற்றுவிட்டது, எனவே, அம்மேலோடு செயற்கை முறையில் நீக்கப்படுதல் தாமதப்பட்டால் அது கட்டாயம் மக்கியே தீரும், (துரதிர்ஷ்டவசமாகச் சந்தர்ப்பவாதம் என்ற கட்டியைக் குணப்படுத்துதலைத் தாமதித்தால்) அம்மேலோடு ஓரளவு நீண்ட காலத்துக்கு அழியும் நிலையிலேயே தொடர்ந்து இருக்கக் கூடும், ஆயினும், அது கட்டாயம் பிறகு நீக்கப்பட்டுவிடும், என்பதும் வெளிப்படையாகத் தெரியும்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை உற்சாகத்துடன் மெச்சிப் பேசுகின்றவராகிய ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் உரைக்கிறார்:

''ஜெர்மன் பாங்குகளின் தலைமை நிர்வாகம் ஒரு டஜன் பேர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டு விட்டால், அவர்களின் செயல்கள் அரசாங்க மந்திரிகளில் பெரும் பகுதியினரது செயல்களைவிடப் பொது நலனுக்கு அதிக முக்கியத்துவமுள்ளவையாகும்.'' (பாங்கு முதலாளிகள், மந்திரிகள், தொழிலதிபர்கள், முதலீட்டாளர்கள் ஆகியவர்களின் ''பின்னல்'' இங்கு சௌகரியமாக மறந்து விடப்பட்டிருக்கிறது...) ''...நாம் ஏற்கனவே கவனித்த போக்குகளின் வளர்ச்சியை முடிவுவரை நாம் சிந்தித்துப் பார்த்தால், கீழ்க்கண்டவைகளை நாம் காணுவோம்: தேசத்தின் பண மூலதனம் பாங்குகளில் சேர்ந்திருத்தல்; பாங்குகள் கார்ட்டல்களாக இணைந்திருத்தல்; ஒரு தேசத்தின் முதலீடு செய்யப்பட்ட மூலதனம் பத்திரங்கள் என்ற உருவில் அமைந்திருத்தல். அப்பொழுது ஸான் சிமோன் என்பவரின் மேதைவாய்ந்த சொற்கள் உண்மையாகி விடும். 'ஒரே மாதிரியான விதிமுறையின்றிப் பொருளாதார உறவுகள் வளர்ந்து வருகின்றன என்ற உண்மைக்கு ஒத்திருக்கிற, உற்பத்தியில் இன்று நிலவும் அராஜகம் ஒழிந்து, உற்பத்தியில் ஓர் ஒழுங்கான அமைப்பு முறைக்கு வழி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவரின் சார்பின்றி, மனிதர்களின் பொருளாதார்த் தேவைகளைப்பற்றி அறியாமலிருக்கிற, தனித்தனியாகப் பிரிந்து நிற்கிற உற்பத்தியாளர்களால் உற்பத்தியை மேலும் நடத்த முடியாது; குறிப்பிட்டதொரு பொது ஸ்தாபனம் தான் அதை இனிச் செய்யும். மேலும் விரிந்த சமூகப் பொருளாதாரத் துறையை உயர்ந்த நோக்குநிலையிலிருந்து பார்வையிட வாய்ப்பு பெற்ற ஒரு மத்திய நிர்வாகக் கமிட்டி, சமுதாய முழுவதின் நன்மைக்காக அதை ஒழுங்குபடுத்தும்; தகுந்தவர்களின் கையில் உற்பத்திச் சாதனங்களைக் கொடுக்கும்; கடைசியில், எல்லாவற்றுக்கும் மேலாக, உற்பத்திக்கும் நுகர்ச்சிக்குமிடையில் ஒரு நிரந்தர ஒத்திசைவு இருக்கும்படி வழிசெய்யும். பொருளாதார வேலையை ஒரு விதத்தில் ஒழுங்குபடுத்தியமைப்பதைத் தங்கள் தொழில்களில்

ஒரு பகுதியாகக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்கள், பாங்குகள் ஏற்கனவே உள்ளன.' ஸான் சிமோனின் இந்தச் சொற்கள் நிறைவேறும் காலத்திற்கு நாம் இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறோம்; ஆயினும் அதை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். இது மார்க்ஸ் கற்பனை செய்ததிலிருந்து வேறுபட்ட மார்க்ஸீயம்; ஆனால், வடிவத்தில் மட்டுமே இது வேறுபட்டது.''*

மார்க்ஸ் கூறிய உண்மைகளை ஆணித்தரமாக ''மறுப்பது'' இது; வாஸ்தவம் தான்; மார்க்ஸின் திட்டவட்டமான, விஞ்ஞான ரீதியான பரிசீலனையிலிருந்து, ஸான் சிமோனின் ஊகத்திற்கு—மேதைவாய்ந்தது ஆயினும்—வெறும் ஊகத்திற்குப் பின்னோக்கி அடியெடுத்து வைக்கிறது இது.

ஜனவரி-ஜூன் 1916ல் எழுதியது.
தனித் துண்டுப்பிரசுரமாக
முதலில் பெட்ரோகிராதில்,
ஏப்ரல் 1917ல் பதிப்பிக்கப்பட்டது

---

* *Grundriss der Sozialökonomik*, பக்கம் 146.

## குறிப்புகள்

1 ''ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'' என்ற நூல் 1916ம் ஆண்டின் முதல் பாதியில் எழுதப்பட்டது. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய உலக இலக்கியத்தை, பெர்ன் நகரில் இருந்த பொழுதே, 1915ல் லெனின் ஆராய ஆரம்பித்தார்; ஜனவரி 1916ல் இந்நூல் எழுத ஆரம்பித்தார். அவ்வாண்டு ஜனவரி இறுதியில் லெனின் சூரிச் நகரில் வாழச் சென்றார். அங்கு சூரிச் மாகாண நூல்நிலையத்தில் நூலெழுதும் வேலையைத் தொடர்ந்து செய்தார். நூற்றுக் கணக்கான அன்னிய நூல்கள், சஞ்சிகைகள், செய்தித் தாள்கள், புள்ளிவிவரத் தொகுப்புகள் ஆகியவைகளிலிருந்து லெனின் எடுத்து எழுதிய துண்டுகள், சுருக்கங்கள், குறிப்புகள், பட்டியல்கள் ஆகியவை நாற்பதுக்குமேல் அச்சு பாரங்கள் ஆகின்றன. ''ஏகாதிபத்தியத்தைப் பற்றிய குறிப்புப் புத்தகங்கள்'' என்ற தலைப்பின்கீழ் 1939ல் இந்த விவரங்கள் தனித் தொகுப்பாக வெளியிடப்பட்டன.

1916, ஜூன் 19ந் தேதி (ஜூலை 2), லெனின் இந்நூலை எழுதி, கையெழுத்துப் பிரதியை ''பாருஸ்'' பிரசுர கர்த்தர்களுக்கு அனுப்பினார். காவுட்ஸ்கி, ருஷ்ய மென்ஷெவிக்குகள் (மார்டொவும் மற்றவர்களும்) ஆகியவர்களின் சந்தர்ப்பவாதக் கொள்கைகளைப் பற்றிய கடுமையான விமர்சனங்களை, இந்தப் பிரசுராலயத்திலிருந்த மென்ஷெவிக் ஆட்கள் நீக்கி விட்டார்கள். லெனினுடைய வார்த்தையாகிய (முதலாளித்துவம், முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக அடைந்த) ''வளர்ச்சி'' என்பதற்குப் பதிலாக ''உருமாற்றம்'' என்ற வார்த்தையையும், (''அதி ஏகாதிபத்தியம்'' என்ற கொள்கையின்) ''பிற்போக்குத் தனமான தன்மை'' என்ற வார்த்தைக்குப் பதிலாகப் ''பின் தங்கிய தன்மை'' என்ற வார்த்தையையும், இன்னும் பலவற்றையும் மாற்றிப் போட்டார்கள். பெட்ரோகிரா

தில் 1917ன் தொடக்கத்திற்குள் ''முதளாளித்துவத்தின் நவீன கட்டமே ஏகாதிபத்தியம்'' என்ற தலைப்புடன் இந் நூல் ''பாருஸ்'' பிரசுரகர்த்தர்களால் அச்சிடப்பட்டது.

ருஷ்யாவுக்கு வந்ததும், லெனின் இந்நூலுக்கு ஒரு முகவுரை எழுதினார். 1917 நடுவில் இந்நூல் பிரசுரிக்கப் பட்டது.

தலைப்புப் பக்கம்

2 1921, அக்டோபரில் வெளியான ''கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனல்'' என்ற சஞ்சிகையின் எண். 18ல் ''ஏகாதிபத்திய மும் முதலாளித்துவமும்'' என்ற தலைப்பில் இந்த முக வுரை முதலாவதாகப் பிரசுரிக்கப்பட்டது.

பக்கம் 9

3 இந்தச் சமாதான உடன்படிக்கையில் சோவியத் ருஷ்யா வும் (ஜெர்மனி, ஆஸ்டிரியா-ஹங்கேரி, பல்கேரியா, துரு க்கி ஆகிய) நான்கு கூட்டாளி வல்லரசுகளும் பிரேஸ்ட்-லிட்டோவ்ஸ்க் நகரில் 1918 மார்ச் 3ல் கையொப்பமிட் டன; மார்ச் 15 தேதி சோவியத்துக்களின் விசேஷ அகில ருஷ்யக் காங்கிரஸால் அது ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. 1918 நவம்பர் 13 தேதி, முடியாட்சியைத் தூக்கி எறிந்த ஜெர்மன் புரட்சிக்குப் பிறகு, அகில ருஷ்ய மத்திய நிர் வாகக் கமிட்டி நாடு பிடிப்புத் தன்மையுள்ள இந்த பிரேஸ்ட்-லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையை ரத்தாக்கியது.

பக்கம் 12

4 வெர்சேல் உடன்படிக்கை—ஜெர்மனி, 1914-1918 ஆண்டு களில் நடைபெற்ற முதல் உலகப் போரில் தோற்கடிக் கப்பட்ட பிறகு அந்நாட்டின்மீது நேச வல்லரசுகள் திணித்த ஏகாதிபத்திய ஒப்பந்தம். அதில் வெர்சேல் நகரில் 1919 ஜூன் 28 தேதி கையொப்பமிடப்பட்டது.

பக்கம் 12

5 ''வில்சனிசம்''—இந்தச் சொல் (1913-21 ஆண்டுகளில்) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாகிய வூட் ரோ வில்சனின் பெயரிலிருந்து பிறந்தது. தமது ஆட்சிக்

காலத்தின் முதல் ஆண்டிலியே (வருவாய்களின்மீது படிப் படியான வரிமுறை பற்றிய சட்டம், ட்ரஸ்டு எதிர்ப்புச் சட்டம் முதலிய) பல சட்டங்களை அவர் இயற்றினார்; இவற்றைப் புதிய சுதந்திரத்தின் சகாப்தம் எனப் பறை சாற்றினார். வில்சன், பிலிஸ்டைன்கள், பசிபிஸ்டுகள் ஆகிய வர்களின் போலித் தெய்வமே என்றும் ''வில்சன் 'சமூக அமைதி'யைக் காப்பாற்றுவார், சுரண்டுபவர்களையும் சுரண்டப்படுபவர்களையும் சமரசப்படுத்துவார், சமூக சீர்த்திருத்தங்களை நிறைவேற்றுவார் என்று அவர்கள் நம்பினார்கள்'' எனவும் லெனின் எழுதினார் (நூல்திரட்டு, தொகுதி 31 (மாஸ்கோ, 1966, பக்கம் 223).

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியக் கொள் கையை மூடிமறைப்பதற்காக வில்சனும் அவரைப் பின் பற்றியவர்களும் ஏராளமாக வாய்வீச்சைப் பயன்படுத் தினர். ''வில்சனின் இலட்சிய ஜனநாயகக் குடியரசு, வெறி மிகுந்த ஏகாதிபத்தியம், பலவீனமான, சிறிய நாட்டினங்களின் வெட்கங்கெட்ட ஒடுக்குமுறையும் அடக்கு முறையும் ஆகியவற்றின் ஒரு வடிவமாக நடைமுறை யில் ருசுப்பிக்கப்பட்டது. (நூல்திரட்டு, தொகுதி 28, மாஸ்கோ 1965, பக்கம் 189).

சோவியத் ஆட்சி நிலவிய முதல் நாட்களிலிருந்தே சோவியத் ருஷ்யாவை எதிர்த்து அன்னியத் தலையீட் டைத் தூண்டியவர்களிலும் அதன் அமைப்பாளர்களிலும் ஒருவராக இருந்தவர் வில்சன். எல்லா நாடுகளின் மக் கள்மீதும் சோவியத் அரசாங்கத்தின் சமாதானபூர்வ மான கொள்கை செலுத்திய பரந்த செல்வாக்கை எதிர்ப் பதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள கொள்கைக்கு ஒரு வெளிப்பூச்சாக இருக்க வேண்டிய பதினான்கு பாயின்ட் ''சமாதானத் திட்டத்'' தை அவர் முன்வைத்தார். அமெரிக்க, ஐரோப்பிய பூர்ஷ் வாப் பத்திரிகைக்காரர்கள் அவர் ஒரு சமாதானப் போ ராட்டக்காரர் என்று புகழ் பாடினர். ஆனால் வில்சன், ''வில்சனிஸ்டுகள்'' ஆகியோர்களின் குட்டிபூர்ஷ்வா வாய் வீச்சில் நிறைந்துள்ள கபடம் உள்நாட்டில் அவர்க ளுடைய பிற்போக்குத்தனமான தொழிலாளர் எதிர்ப்புக்

கொள்கையினுலும் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள வெளி நாட்டுக் கொள்கையினுலும் அம்பலப்படுத்தப்பட்டது.

பக்கம் 12

6 இதில் குறிப்பிடப்பட்டிருக்கிற அறிக்கை இந்தப் பதிப்பில் பிரசுரிக்கப்படவில்லை.

பக்கம் 13

7 பெர்ன் நகரில் 1919 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற சோஷலிஸ்ட் கட்சிகளின் மகாநாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டாவது (பெர்ன்) இன்டர்நேஷனலை லெனின் இங்கே குறிப்பிடுகிருர். முதல் உலகப் போர் வெடித்தவுடன் கலைந்து போன இரண்டாவது இன்டர்நேஷனலுக்குப் பதிலாக அது மேற்கு ஐரோப்பிய சோஷலிஸ்ட் கட்சிகளின் தலைவர்களால் நிறுவப்பட்டது. பெர்ன் இன்டர்நேஷனல் சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்தின் கையில் ஒரு கருவியாக இருந்தது.

பக்கம் 14

8 **ஜெர்மானிய சுயேச்சை சோஷல்-டெமாக்ரடிக் கட்சி** — 1917 ஏப்ரலில் கோதா கட்சியமைப்புக் காங்கிரஸில் அமைக்கப்பட்ட ஒரு சென்ட்ரிஸ்ட் கட்சி. ருஷ்யாவில் நடந்தேறிய பிப்ரவரி பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியினுல் தீவிரப்படுத்தப்பட்ட புரட்சிகரமான ஊக்கம் கொந்தளித்துக் கொண்டிருந்த நிலைமையில் ஜெர்மனியின் சோஷல்-டெமாக்ரடிக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் இக்கட்சியின் சாதாரண அங்கத்தினர்களின் நம்பிக்கையை இழந்து கொண்டிருந்தனர். பொதுமக்களுடைய அதிருப்தியைச் சமாளிக்கவும் அவர்களைப் புரட்சிகாமான போராட்டத்திலிருந்து அப்பால் திருப்பவும் ஒரு புரட்சிகரமான கட்சி அமைப்பதைத் தடுக்கவும் பொது மக்கள்மீது தங்களுக்குள்ள கட்டுப்பாட்டைக் காத்துக்கொள்வதைச் சாத்தியப்படுத்தும் ஒரு கட்சியை அமைக்க சென்ட்ரிஸ்ட் தலைவர்கள் முயற்சித்தனர். இப்படிப்பட்ட ஒரு கட்சியாக சுயேச்சை சோஷல்-டெமாக்ரடிக் கட்சி அமைக்கப்பட்டது. சென்ட்ரிஸ்ட் வாய்வீச்சு என்ற முறை

யில் சுயேச்சைக்காரர்கள் சோஷல்-ஷோவினிஸ்டுகளுடன் ''ஐக்கியம்'' வேண்டும் என்று போதித்தார்கள், வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு விட வேண்டும் என்று கோரினார்கள். காவுட்ஸ்கிவாதிகளின் தொழிற் கூட்டுறவு என்ற ஸ்தாபனத்தின் உறுப்பினர் இக்கட்சியின் பெரும் பகுதியாக இருந்தார்கள்.

ஸ்பார்ட்டாகஸ் குழு இந்தக் கட்சியைச் சேர்ந்திருந்தது; ஆனால் அதே சமயம் இது தன்னுடைய ஒழுங்கமைப்பு, அரசியல் சுதந்திரத்தைக் காத்துக்கொண்டது; தன்னுடைய தலைமறைவான வேலையையும், பொதுமக்களின் மீது உள்ள சென்ட்ரிஸ்ட் தலைவர்களின் செல்வாக்கை நிர்மூலமாக்கவும் பொதுமக்களைத் தங்கள் பக்கம் திருப்பிக்கொள்ளவும் அது நடத்திவந்த இயக்கத்தையும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தது. 1918ல் ஸ்பார்ட்டாகஸ் லீக் சுயேச்சைக்காரர்களிடமிருந்து பிரிந்து சென்று ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தது.

1920 அக்டோபரில் ஹால் என்ற இடத்தில் நடந்த சுயேச்சை சோஷல்-டெமாக்ரடிக் கட்சியின் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. 1920 டிசம்பரில் இக்கட்சியின் கணிசமான பகுதி ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்தது. வலதுசாரியினர் ஒரு தனிக் கட்சியை அமைத்தார்கள். சுயேச்சை சோஷல்-டெமாக்ரடிக் கட்சி என்ற பழைய பெயரையே இது வைத்துக் கொண்டது. 1922 வரை இது இருந்தது.

பக்கம் 15

9 **ஸ்பார்ட்டாகிஸ்டுகள்** — ஜெர்மன் இடதுசாரி சோஷல்—டெமாக்ராட்டுகளின் ஒரு புரட்சிகரமான ஸ்தாபனத்தின் அங்கத்தினர்கள்; இந்த ஸ்தாபனம் 1906 ஜனவரியில் கார்ல் லீப்க்னெஹ்ட், ரோஸா லுக்ஸம்பர்க், பிரான்ட்ஸ் மேரிங், கிலாரா ட்ஸெட்கின், யூலியஸ் மார்ஹ்லேவ்ஸ்கி, எல். ஜோகிஷேஸ் (திஷ்கா), வில்ஹெல்ம் பீக் ஆகியவர்களின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டது. 1915 ஏப்ரலில் லுக்ஸம்பர்கும் மேரிங்கும் ''இன்டர்நேஷன''லை ஸ்தாபித்தனர்; இது ஜெர்மன் இடதுசாரி சோஷல்-

டெமாக்ராட்டுகளின் பிரதானக் குழுவை ஐக்கியப்படுத்தியது. 1915லிருந்து ''இன்டர்நேஷனல்'' குழு அரசியல் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது; அத்துடன்கூட 1916ல் இந்தக் குழுவினர் ஸ்பார்ட்டாகஸ் பெயரைக் கொண்ட அரசியல் கடிதங்களைத் தலைமறைவாகப் பிரசுரிக்கவும் பரப்புவும் தொடங்கினர்; (இந்த வேலை 1918 அக்டோபர் வரை முறையாக நடந்து கொண்டிருந்தது); ஸ்பார்ட்டாகஸ் லீக் என்ற பெயர் இப்படித்தான் தோன்றியது. அவர்கள் பொதுமக்களிடையில் புரட்சிப் பிரசாரம் நடத்தினர்கள்; பொதுமக்கள் ஈடுபாடுடன் போர் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் வேலை நிறுத்தங்களையும் ஏற்படுத்தினர்கள், உலகப் போரின் ஏகாதிபத்தியத் தன்மையையும் சர்ந்தர்ப்பவாத சோஷல்-டெமாக்ரடிக் கட்கியின் தலைவர்களுடைய துரோகத்தையும் அம்பலப்படுத்தினர்கள். ஆயினும் அவர்கள் முக்கியமான தத்துவார்த்த, அரசியல் தவறுகளைச் செய்தார்கள்; ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசீய விடுதலைப் போர்கள் அசாத்தியமானவை என்ற அவர்களின் நம்பிக்கை இந்தத் தவறுகளில் ஒன்ருகும்; இத்துடன்கூட அவர்கள் ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்ற வேண்டும் என்ற கோஷத்தின் விஷயத்தில் முரண்பாடுள்ள நிலைமையைக் கொண்டிருந்தனர்; தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்ற முறையில் பாட்டாளிக் கட்சியின் பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளி என்ற முறையில் விவசாயிகளின் பாத்திரத்தையும் அவர்கள் குறைத்து மதிப்பிட்டார்கள்; சந்தர்ப்பவாதிகளுடன் தொடர்புகளைக் கத்தரித்துக் கொள்ள அவர்கள் அஞ்சினர்கள். லெனின் அவர்களுடைய தவறுகளை மீண்டும் மீண்டும் விமர்சித்தார்.

1917 ஏப்ரலில் ஸ்பார்ட்டாகஸ் லீக் சென்ட்ரிஸ்ட் ஜெர்மானிய சுயேச்சை சோஷல்-டெமாக்ரடிக் கட்சியைச் சேர்ந்தது; ஆனல் ஒழுங்கமைப்பு ரீதியில் அது தன் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டது. 1918 நவம்பரில் ஜெர்மனியில் நடந்த புரட்சியின் போது ஸ்பார்ட்டாகிஸ்டுகள் (டிசம்பர் 14ல்) தங்களுடைய சொந்தச் செயல் திட்டத்தை வெளியிட்டு சுயேச்சைக்

காரர்களிடமிருந்து பிரிந்து சென்றனர். 1918 டிசம்பர் 30க்கும் 1919 ஜனவரி 1க்கும் இடையே அவர்கள் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தனர்.

பக்கம் 15

10 ''வெர்சேலர்கள்''—1871 ஆண்டின் பாரிஸ் கம்யூனின் ஜென்மப் பகைவர்கள்; பாரிஸ் கம்யூனின் வெற்றிக்குப் பிறகு வெர்சேல் நகரில் அமர்ந்திருந்த, தியேர் என்பவரின் தலைமையில் இருந்த பிரெஞ்சுப் புரட்சி எதிர்ப்பு பூர்ஷ்வா அரசாங்கத்தின் ஆதரவாளர்கள். அவர்கள் பாரிஸ் கம்யூனை நசுக்கிவிட்டனர்; கம்யூன்காரர்கள் என்றும் கேட்டிராத கொடுமை நிறைந்த அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு உட்பட்டனர். 1871க்குப் பிறகு ''வெர்சேலர்கள்'' என்ற சொல் வெறி கொண்ட புரட்சி எதிர்ப்பாளர்களுக்குரிய ஒரு பொதுச் சொல்லாக மாறிவிட்டது.

பக்கம் 17

11 ஆசிரியர் தந்த குறிப்புகளும் விளக்க உரைகளும் இப்பதிப்பில் அடிக் குறிப்புகளாகத் தரப்பட்டிருக்கின்றன.

பக்கம் 19

12 கார்ல் மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி III, மாஸ்கோ, 1959, பக்கம் 593 பார்க்க.

பக்கம் 54

13 பங்கு மாற்று நிலையத்தின் முறிவு—1873ன் தொடக்கத்தில் முதலில் ஆஸ்டிரியா-ஹங்கேரியிலும் பிறகு ஜெர்மனியிலும் மற்ற நாடுகளிலும் ஏற்பட்டது. 1870-1879 ஆண்டுகளின் ஆரம்பத்தில் பற்றுக் கடன் விஸ்தரித்தல், கம்பெனி முன்னேற்றம், பங்கு மாற்று நிலையத்தில் ஊக வாணிகம் முன்பே கேட்டிராத பெரிய அளவை அடைந்தது. தொழிலும் வாணிபமும் முன்னேறிவரும் உலகப் பொருளாதார நெருக்கடியின் அடையாளங்களை ஏற்கனவே பிரதிபலிக்கத் தொடங்கிய போது பின்சொன்னது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருந்தது. 1873 மே 9ல் வியன்னா பங்கு மாற்று நிலையத்

தில் இந்த முறிவு நடந்தது. ஒரே ஓர் இரவில் பங்குகள் பல கோடி மதிப்பு இழந்தன. திவாலானவர்களின் எண்ணிக்கை மிகவும் பெரிதாக இருந்தது. பங்கு மாற்ற நிலைய முறிவு ஜெர்மனியிலும் பரவியது. எங்கெல்ஸ் இதைப் பற்றி இப்படி எழுதினுர்: ''1867ல் பாரிஸில் எது நடைபெற்றதோ அடிக்கடி லண்டனிலும் நியூயார்க்கிலும் எது நடைபெற்றதோ அதுவே 1873ல் ஜெர்மனியில் எவ்விதத் தாமதமுமின்றி ஏற்பட்டது; ஏராளமான ஊக வாணிகச் செயல்கள் பொதுவான முறிவில் முடிவடைந்தன. நூற்றுக்கணக்கான கம்பெனிகள் முறிந்துபோயின. இன்னும் கடனைத் தீர்க்கக் கூடிய கம்பெனிகளின் பங்குகளை விற்பது அசாத்தியமாயிற்று. முறிவு எங்கும் முழுமையாக இருந்தது.'' எங்கெல்ஸ், "Der Sozialismus des Herrn Bismarck" *(திருவாளர் பிஸ்மார்க் அவர்களின் சோஷலிஸம்)* (Marx/Engels, *Werke*, Dietz Verlag, Berlin, 1962, Band 19).

பக்கம் 58

14 **கம்பெனி முன்னேற்றப் புரளிகள்** கடந்த நூற்றுண்டின் 70க்களின் தொடக்கத்தில் ஜெர்மனியில் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் தீவிரமாகத் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் நிகழ்ந்தன. இக்கம்பெனிகளின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து மோசடி நடவடிக்கைகளும், பூஸ்திதிகள், பத்திரங்கள் ஆகியவைகளில் வெறிகொண்ட ஊக வாணிகமும் நிகழ்ந்தன. மோசடி நடவடிக்கைகள் மூலமாக முதலாளித்துவத் தொழிலதிபர்கள் செல்வங்களைக் குவித்தார்கள்.

பக்கம் 58

15 **''பிராங்க்பர்ட்டர் ட்ஸைடுங்''** — பெரிய ஜெர்மன் வியாபாரிகளுக்குச் சொந்தமான, பங்கு மாற்ற நிலையத்தைப் பற்றிய தினச் செய்தித்தாள்; அது பிராங்க்பர்ட் ஆன் மாய்னில் 1856லிருந்து 1943வரை வெளிவந்தது. 1949ல் ''பிராங்க்பர்ட்டர் அல்கெமைனே ட்ஸைடுங்'' என்ற தலைப்புடன் அது புத்துயிர் பெற்றது. இந்தச்

செய்தித்தாள் மேற்கு ஜெர்மானிய ஏகபோகக்காரர் களின் நலன்களை வெளியிடுகிறது.

பக்கம் 60

16 இங்கே லெனின் கி. வ. பிளெகானவைக் குறிப்பிடுகிறார். ஏகாதிபத்தியத்தைப் பற்றிய பிளெகானவின் கருத்து கள் போரின் போது பெட்ரோகிராடில் பிரசுரிக்கப்பட்ட, ''யுத்தத்தைப் பற்றி'' என்ற தலைப்பிட்ட ஒரு கட்டு ரைத் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன.

பக்கம் 75

17 **பிரெஞ்சுப் பனமா**—பிரெஞ்சுப் பனமாக் கால்வாய் கம்பெனியால் லஞ்சங்கொடுத்துக் கைக்குள் போட்டுக் கொள்ளப்பட்ட அரசாங்க, அரசியல் தலைவர்கள், சிப்பந்திகள், செய்தித்தாள்கள் ஆகியவற்றின் பெருத்த மோசடியும் ஊழலும் பிரான்ஸில் 1892-1893 ஆண்டு களில் அம்பலப்படுத்தப்பட்டதன் தொடர்பாக இந்தச் சொற்றொடர் வழக்கத்துக்கு வந்தது.

பக்கம் 89

18 **பேபியன் சங்கம்**—இங்கிலாந்தில் 1884ல், பூர்ஷ்வா அறி ஞர் குழுவினர் அமைத்த ஒரு சீர்திருத்தவாத, தீவிர சந்தர்ப்பவாத சங்கம்.

பக்கம் 173

19 **ஸ்பெக்தாதொர்**—மென்ஷெவிக்காகிய எஸ். எம். நகீம் சொன்.

பக்கம் 178

20 கார்ல் மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி III, மாஸ் கோ 1959, பக்கங்கள் 117-18 பார்க்க.

பக்கம் 180

21 இங்கே லெனின் பீகிங் (கடைசியான) புரோட்டோக் கோலைக் குறிப்பிகிறார். 1901 செப்டெம்பர் 7ல், 1899 லிருந்து 1901வரை நடந்து வந்த பாக்ஸர் எழுச்சி நசுக்கப்பட்ட பிறகு, (பிரிட்டன், ஆஸ்டிரியா-ஹங்கேரி, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ருஷ்யா,

நெதர்லாந்து, ஸ்பெயின், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய) ஏகாதிபத்திய வல்லரசுகள் ஒரு பக்கமும் சீனா மறு பக்கமும் இதில் கையொப்பமிட்டன. இவ்விதமாக சீனாவைச் சுரண்டுவதற்கும் சூறையாடுவதற்கும் அன்னிய மூலதனம் புதிய வாய்ப்புகளைப் பெற்றது.

பக்கம் 188

22 **பாக்ஸர்** *(சரியாக இ ஹோ தூவான்)* **எழுச்சி**—*ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சீனாவில் நடைபெற்ற பொது மக்கள் எழுச்சி. 1899லிருந்து 1901 வரை நீடித்த இந்த எழுச்சியை இ ஹோ சுவான் (நியாயமான ஒத்திசைவு முட்டிகள்) கழகம் தூண்டியது. பிறகு இந்தக் கழகம் இ ஹோ தூவான் (நியாயமான ஒத்திசைவுக்கான கூட்டணி) என்ற பெயரால் அறியப்பட்டுள்ளது. இந்த எழச்சி, ஜெர்மானிய ஜெனரல் வால்டெர்ஸே தலைமையிலிருந்த, ஜெர்மன், ஜப்பானிய, பிரிட்டிஷ், அமெரிக்க, ருஷ்ய ஏகாதிபத்தியத் தண்டப் படைகளால் குரூரமாக நசுக்கப்பட்டது. பீகிங் (கடைசியான) புரோட்டோக்கோலைக் கையெழுத்திடுமாறு சீனா நிர்பந்திக்கப்பட்டது; இதன் விளைவாக சீனா அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் அரைக் காலனியாக மாறி விட்டது.*

பக்கம் 190

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசகநேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

## விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1 19/43, பெரிய கடைத் தெரு, கோயமுத்தூர்-1
சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8
பஸ் நிலையம், தஞ்சாவூர்